விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

தமிழ் 07 தந்தி 12 ஞாயிற்றுக்கிழமை 17.02.2019 Sunday 17th February 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தேர்தலுக்கானே அபிவிருத்தி மாயை

திருமலையில் தீர்வே முக்கியம்; அபிவிருத்தி முக்கியமல்ல என்று முழங்கினார் சம்பந்தன்

செல்வராஜா கஜேந்திரன் சீற்றம்

கிளிநொச்சியில் வெள்ள நிவாரணம் வழங்குவதாக உறுதியளித்தும் வழங்காதவர்கள் எப்படி அரசியல் தீர்வை தருவார்கள்?

தனது அந்தரங்க செயலாளராக இருந்த அலிசாஹிர் மௌலானா மூலம் கருணாவைப் பிரித்து விடுதலைப்போராட்டத்தை அழித்த ரணில் இனப்படுகொலை செய்த இராணுவத்தினரைப் பாதுகாக்க நடந்த படுகொலைகள் அனைத்தையும் மன்னித்து மறப்போம் என்று நாடகமாடுகிறார். இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும் துணைபோவதுதான் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப்புலிகளிலிருந்து கருணாவைப் பிரித்து போராடத்தை பலவீனப்படுத்திய ரணில் மாபெரும் தமிழின அழிப்பை மேற்கொண்ட இனப்படு

02 ஆம் பக்கம் பார்க்க

வடக்கில் அபிவிருத்திதான் முக்கியம் என்று முழங்குகிறார் சுமந்திரன்

கொலையாளி மகிந்த ராஜபக்ஷவைப் பாதுகாக்க போர்க்குற்றங்களை மறப்போம் மன்னிப்போம் என்று நாடகமாடுகிறார். அதுவும் பல களங்களையும், இழப்பையும் கண்ட கிளிநொச்சி நகரில் வைத்து தமிழ் மக்கள் முன்னால்

02 ஆம் பக்கம் பார்க்க

ஐ.நா.விடம் நீதிகோரி முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், வடக்கு, கிழக்கு தழுவிய வகையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐ.நாவிடம் கையளிக்க கையெழுத்துப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அந்தவகையில் நேற்று முல்லைத்தீவிலும் இந்த கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தொடங்க இருக்கும் 40 வது ஜெனிவா அமர்வில் தமக்கான நீதிகோரி தமிழ் உறவுகளிடம் 100,000. ஒரு இலட்சம் கையொப்பம் இடப்பட்ட மகஜரை சமர்ப்பித்து தமக்கான நீதிவேண்டும் என்ற நோக்

02 ஆம் பக்கம் பார்க்க

இருதரப்பும் யுத்தக்குற்றம் புரிந்துள்ளார்கள்; சூக்கா அறிக்கை சொல்கிறது; சுமந்திரன்

ஒரு அரசியல் அமைப்பின் மூலமாக எங்களுக்கு விடிவு வர வேண்டும். 49ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்கும் எங்கள் நிலைப்பாடு, அதற்கான பல வேலைகள் நடைபெற்றன. கடந்த மூன்று வருடங்களாக செயற்பாடுகள்

02 ஆம் பக்கம் பார்க்க

ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் இயற்றப்படும் தீர்மானம் மூலமே இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தலாம்

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஹக்கீம் அபூபக்கர்

உள்ளக விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட புதிய அரசியலமைப்பை கொண்டு வருவது தவிர்ந்த விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வழங்கிய கால அவகாசத்திற்குள் இலங்கை அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஹக்கீம் அபூபக்கர் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இப்படி முக்கியமான விடயங்களைத் தவிர ஏனையவற்றை செய்வதற்காகவே

02 ஆம் பக்கம் பார்க்க

இன்றும் மழை பெய்யும் சாத்தியம்

இன்று நாட்டில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் காலை வேளையிலும் மழை பெய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பலத்த மின்னல் தாக்கத்திற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னார் மனிதப்புதைகுழி காபன் பரிசோதனை அறிக்கை வெளியானது

கோப்புப்படம்

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது.

குறித்த அறிக்கை வெளியாகியுள்ளமையினை அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ உறுதிபடுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வு கூடத்தில் காபன் பரிசோதனைக்காக கடந்த மாதம் 25 ஆம் திகதி, மன்னார்

02 ஆம் பக்கம் பார்க்க

எந்தத் தேர்தலுக்கும் தயார்!

கயந்த கருணாதிலக

எந்த முறையிலும் தேர்தலுக்கு முகங்கொடுக்க ஐக்கிய தேசிய கட்சி தயாராக இருப்பதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக கூறினார். காலி பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசியல் செய்யும் போது எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்க தயாராக இருக்க வேண்டும் என்றும், மாகாண சபைத் தேர்தலுக்கு மாத்திரமன்றி ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் தாம் தயார் என்று அவர் கூறியுள்ளார்.

வவுணதீவில் கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் சகோதரிக்கு அரசதுறையில் வேலைவாய்ப்பு

க.விஜயரெத்தினம்

வவுணதீவில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தரின் சகோதரிக்கு அரசதுறையில் தொழில் வழங்கப்பட்டுள்ளது.

வவுணதீவில் படுகொலை செய்யப்பட்ட அம்பாறை பெரியநீலாவணை கிராமத்தைச் சேர்ந்த கணேஸ் தினேஸ் அவர்களின் மூத்த சகோதரிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அரசாங்க நூலக உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு வவுணதீவு காவலரணில் வைத்து இனம் தெரியாத ஆயுததாரிகளால் கணேஸ் தினேஸ் எனும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர்களது வீட்டுக்கு சென்ற மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், ஜனாதிபதியின் இணைப்பு செயலாளர் கோல்டன் பெர்னான்டோ, ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினர் சுரேந்திரன் ஆகியோர்கள் திடீர் விஜயம் மேற்கொண்டு தமது ஆறுதலை தெரிவித்ததுடன் ஜனாதிபதியின்

02 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் ஐ.தே.க.வுக்குள் குழப்பம்

ஐக்கிய தேசிய முன்னணிக்குள்ளா அல்லது ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தா என்பது தொடர்பில் குழப்பம்

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணிக்குள் இருந்தே வேட்பாளர் நியமிக்கப்பட வேண்டும் என முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஐக்கிய

02 ஆம் பக்கம் பார்க்க

மக்களுக்கு நன்மையிருந்தால் பட்ஜெட்டுக்கு ஆதரவு

மகிந்த அமரவீர தெரிவிப்பு

மக்களுக்கு சிறந்தது நடக்கும் வரவு செலவுத் திட்டமாக இருந்தால் மாத்திரமே ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார். ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மக்களை நசுக்கி பிழிந்தெடுக்கும் அல்லது மக்களுக்கு பாதிக்கு ஏற்படும் விடயங்கள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தால் அதற்கு ஆதரவளிப்பதில்லை என்று அவர் கூறியுள்ளார். சிறந்த வரவு செலவுத் திட்டம் ஒன்று முன் வைக்கப்படுமாக இருந்தால் பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் ஆதரவு வழங்குவார்கள் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இளைப்பாறும் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

சுஜீவன்

மலையகத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் அடிப்படை பிரச்சினைகளுடனேயே இயங்கி வருகின்றன. அவற்றை தீர்ப்பதற்கோ அபிவிருத்தி செய்வதற்கோ ஒரு சிலரே தன்னிச்சையாக முன் வருவதை காணக்கூடியதாகவுள்ளது. அத்தோடு நகரப் பகுதிகளிலிருக்கும் பிரபல பாடசாலைக்குள் உதவுவதில் அதிகமானோர் நாட்டம் காட்டுவதையும் விசேடமா குறிப்பிடலாம்.

அந்த வரிசையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயமும் சில குறைபாடுகளுடனேயே இயங்கி வருகின்றது. அதற்கமைய பாடசாலை முடிந்ததும் தத்தமது பிள்ளைகளை அழைத்து செல்வதற்காக தினமும் நூற்றுக்கணக்கா பெற்றோர்கள் பாடசாலைக்கு வருவதுண்டு. இவர்கள் கொட்டும் மழையிலும் வெயிலிலும் பாடசாலை நுழைவாயிலுக்கு வெளியே பல நிமிடங்கள் தரித்திருப்பர்.

இவர்களின் இக் கஷ்டங்களை போக்கும் முகமாக தலவாக்கலை த.ம.வி யின் பழைய மாணவரும் றுவரெலியா மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணிகளுள் ஒருவருமான தவயோகன் தனது சொந்த நிதியிலிருந்து பெற்றோர்கள் இளைப்பாறுவதற்கான ஒரு கட்டிடத்தை நிர்மாணித்து தருவதாக உறுதியளித்திருந்தார். அதற்கமைய இக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் கீ.கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி தவயோகன் கலந்து சிறப்பித்தார்.

வைத்திய சாலையில் வைத்தியர் இன்மையால் நோயாளிகள் கடும் அவதி

ஸ்ரீஹரன்

வைத்தியர்கள் பற்றாக்குறை, போதிய மருந்துகள் இன்மை, சீரற்ற அம்புலன்ஸ் சேவை ,தாதிமார் பற்றக்குறை போன்ற விடயங்கள் காணப்படுவதாகவும் இந்த கோரிக்கைகளை முன்வைத்து விரைவில் மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உள்ளதாகவும் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் சுபோகரன் தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலைக்கு அண்மித்த திருக்கோவில் ,பொத்துவில் ஆகிய வைத்தியசாலைகள் சுமார் 19 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள நிலையில் முற்றிலும் காடுகளினால் சூழப்பட்டுள்ள இப்பிரதேசத்தின் வைத்தியசாலையின் தரமுயர்த்தல் பற்றி அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போதியளவு வைத்திய சேவை இன்மையினால் பல உயிர்கள் காவு கொள்ளப்படுவதாகவும்அவர் சுட்டிக்காட்டினர்.

7 கிராமங்களின் 3000த்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வைத்திய சிகிச்சை பெறும் இவ்வைத்தியசாலையை அதிகாரிகளால் புறந்தள்ளப்பட்டு வருவதாகவும் காலையில் மருத்துவ சேவையினை பெறவந்த மக்கள் குற்றச் சாட்டினர்.

இது தொடர்பில் ஏற்கனவே ஜனாதிபதி சுகாதார அமைச்சர் பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களுக்கான மகஜர்களும் அனுப்பி வைக்கப்பட்டதாக்கவும் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் சுபோகரன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

வெருகல். பூமரத்தடிச்சேனை வீதியை செப்பனிடக்கோரிக்கை

தோப்பூர் நிருபர்

வெருகல் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பூமரத்தடிச்சேனை குறுக்கு வீதியானது நீண்டகாலமாக மிக மோசமாக சேதமடைந்திருப்பதால் மழை காலத்தில் இவ் வீதி சேறும் சகதியுமாக மாறுவதால் இவ் வீதியூடாக பயணிப்பதில் தாம் பெரிதும் சிரமப்படுவதாக. இங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

எனவே இவ் வீதியை புனரமைத்துத்தருமாறு இவ் வீதியால் பயணிக்கும் பொது மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விசேட கப்பலொன்றை இலங்கைக்கு வழங்க ஜப்பான் இணக்கம்

கடற்படையினருக்கு கரையோர பாதுகாப்பு பயிற்சிகளை வழங்க விசேட கப்பலொன்றை இலங்கைக்கு வழங்க ஜப்பான் இணக்கம்

கரையோர பாதுகாப்பு மற்றும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பில் இலங்கைக்கு ஜப்பான் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என ஜப்பானிய பிரதமரின் தேசிய பாதுகாப்பிற்கான ஆலோசகரான கென்டாரோ சொனோரா (தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகைதந்துள்ள அவர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இதனை தெரிவித்தார்.

கரையோர பாதுகாப்பு மற்றும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை மற்றும் ஜப்பானுக்குமிடையில் புதிய ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதேநேரம் சமுத்திர பாதுகாப்பு பிராந்திய கரையோர பாதுகாப்பு மாநாடு இவ்வருடம் இலங்கையில் நடைபெறவுள்ளதுடன், இது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் கடற்படையினருக்கு கரையோர பாதுகாப்பு பயிற்சிகளை வழங்கும் நவீன கப்பலொன்றை இலங்கைக்கு வழங்க இதன்போது கென்டாரோ சென ரேரா இணக்கம் தெரிவித்தார்.

ஜப்பான் இலங்கைக்கு வழங்கிவரும் தொடர்ச்சியான உதவிகளுக்கு நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் நிலக்கன்னி வெடிகளை அகற்றுவதற்கு வழங்கிய உதவிகளை பாராட்டினார். சில பிரதேசங்களில் மேலும் பல இடங்களில் கன்னிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் அதற்கு உதவுமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அபிவிருத்தி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூறுகின்றார். எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்குமானால் அவர் அதை கூறுகிறார். அதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் வக்காலாத்து வாங்குகின்றார்கள். கூட்டமைப்பு செய்யும் அருவெறுக்கத் தக்க செயற்பாடே இது. போர்க்குற்ற விசாரணைகளிலிந்து அரசாங்கத்தைக் காப்பாற்றும் முழுமுயற்சியில் இறங்கியுள்ள கூட்டமைப்பு, அதன் மூலம் மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக அபிவிருத்தி என்ற போர்வையில் ஆடப்படும் நாடகத்தை மக்கள் முன் அரங்கேற்றி வருகின்றது. கடந்த நான்காண்டுகளில் செய்யாத, செய்து முடிக்கமுடியாத, செய்ய விருப்பமில்லாத அபிவிருத்தியை இன்னும் சொற்ப மாதங்களே எஞ்சியிருக்கும் நிலையில் அதற்குள் அனைத்து அபிவிருத்திகளையும் செய்து விடுவதாக நாடகமாடும் ரணிலுக்கு சாமரம் வீசுகின்றார்கள். அதற்குரிய லஞ்சமாகத்தான் வடக்கில் அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளுக்கு கூட்டமைப்பினரை அழைத்து வந்து கூட்டமைப்பினருக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் ஏதோ புதியதாக அபிவிருத்திகள் வந்து குவியப்போகின்றது என்ற தோற்றப்பாடுகள் காட்டப்படுகின்றது.

இதில் மிகவும் கேவலமான விடயம், மக்களுடைய விடுதலைக்காக போராடி வீரமரணமடைந்த தளபதி பிரிகேடியர் தீபன் அவர்களுடைய தியாகத்தை கொச்சைப்படுத்தும் விதமாக கூட்டமைப்பினர் பாராளுமன்ற உறுப்பினர்ஸ்ரீதரன் அவர்கள், பேரினவாதிகளோடு கரங்கோர்த்து அபிவிருத்தி என்ற மாயைக்குள் தமிழ் மக்களை சிக்க வைத்து ஏமாற்றி இந்த இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களிலிருந்து ராஜபக்ஷவை காப்பாற்றுவதற்கு துணை போய்க் கொண்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

அபிவிருத்தி என்ற போர்வையில் இப்பொழுது காட்டப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் எங்களுடைய மக்களை ஏமாற்றி, தொடர்ச்சியாக வறுமைக்குள்ளும், பட்டினிக்குள்ளும் சிக்கவைத்த மக்களுக்கு கடைசிநேரத்தில் ஏதோ ஒன்று கிடைப்பதாக தோற்றப்பாட்டைக் காட்டி, மீண்டும் வரப்போகின்ற தேர்தல்களில் வாக்குகளைப் பெற்று தொடர்ந்தும் தமிழினத்தை பாதாளக்குழிக்குள் தள்ளுவதற்கான முயற்சியாகவே எங்களால் இது பார்க்கப்படுகின்றது.

மேலும் ஜெனீவாவில் ஏற்படக்கூடிய சர்வதேச விசாரணைகளிலிருந்து ராஜபக்ஷவையும், கோத்தாபய ராஜபக்ஷவையும் பாதுகாத்து மீண்டும் உள்ளக விசாரணைக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதும், அடுத்த தேர்தலிலே மீண்டும் வாக்குகளைப் பெற்று தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி தமிழினத்தின் இருப்பை அழித்து பேரினவாதம் தன்னுடைய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை விரிவுபடுத்துவதற்கு துணை புரிவதற்கும் இவர்கள் தமிழ் மக்களிடத்திலிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

கடந்த யுத்தத்திற்கு பிற்பாடு இந்த நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் யுஎஸ் எயிட் நிறுவனத்தினால் இலங்கைக்கு நூறு மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டிருந்தது வட,கிழக்கு அபிவிருத்திக்காக. அந்த நிதியை போரால் அழிந்த, பாதிக்கப்பட்ட வட,கிழக்கிலிருக்கும் தனிநபர்களுக்கு வழங்காமல் தென்னிலங்கையைச் சேர்ந்த கோர்ப்பரேட் நிறுவனங்களுக்கு வடக்கிலே ஆடைத் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், வேறு சில வேலைத்திட்டங்களுக்குமாக தென்னிலங்கையைச் சேர்ந்த பெருமுதலாளிகளுக்கு அந்த நிதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுதேசிகள் தங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. இவையெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற ஒரு நடவடிக்கையே தவிர வேறெதுவும் இல்லை. இதற்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பினரும் துணை போவதுதான் வேடிக்கையான விடயம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இருதரப்பும்....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

முன்னெடுக்கப்பட்டன. இடையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக இது நடக்குமா இல்லையா என்ற ஆதங்கம் இருக்கின்றது. இந்த ஒரு தடங்கலினால் இதனை நாங்கள் கைவிடப்போவதில்லை. கைவிட முடியாது. ஒருபோதும் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆனால் அதற்கான தீர்வு வருகின்ற போது அது எப்படியனது என்பதனை ஆராயாமல் நாங்கள் புறக்கணிக்கவும் மாட்டோம். தந்தை செல்வா பண்டாவுடன் ஒப்பந்தம் செய்த போது அதில் சமஷ்டி என்று எழுதியிருக்கவில்லை. தந்தை செல்வா டட்லியுடன் ஒப்பந்தம் செய்த போது அதில் சமஷ்டி என்று எழுதியிருக்கவில்லை.

யஸ்மின் சூக்கா அறிக்கை பாருங்கள் சொல்லுவார்கள். ஓ.எஸ்.எல்.ரிப்போர்ட் இருக்கின்றது என்று சொல்லுவார்கள். அதில் என்ன இருக்கின்றது. போரில் ஈடுபட்ட மற்ற தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் யுத்த குற்றங்கள் இழைத்தார்கள் என்பதற்கு முழுமையான சாட்சியங்கள் இருக்கின்றன என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளன. அந்த இரண்டு அறிக்கைகள்தான் நாங்கள் முன்மாதிரியாக வைத்து மேற்கோள் காட்டி ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பொறிமுறையை கேட்டு நிற்கின்றோம். ஊடகங்கள் இன்னும் மோசம். அரைவாசியை தான் சொல்லுவார்கள். இன்றைக்கு நான் இதனைச் சொன்னவுடன் மற்ற அரைவாசியை மட்டும்தான் சொல்லுவார்கள். நாளைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் குற்றம் இழைத்ததாக சுமந்திரன் சொன்னார் என்றதை மட்டும்தான் நாளைக்கு போடுவார்கள். யுத்தக் குற்றங்கள் இழைக்காமல் உலகில் எந்தப் போரும் இடம்பெறுவதில்லை. சுத்தமான போர் என்பது ஒரு காலமும் ஒருபோதும் சரித்திரத்தில் எங்கேயும் நடைபெறுவதில்லை. அதுமட்டுமல்ல போரில் ஒரு தரப்பு மாத்திரம் குற்றம் இழைக்கின்ற போர் எங்கேயும் இடம்பெறுவதில்லை.

வவுண....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இரங்கல் செய்தியையும் வழங்கி வைத்தார்கள்.

இவ்விடயமாக பாராளுமன்ற உறுப்பினர் வியாளேந்திரன் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தரின் சகோதரிக்கு வேலை இல்லாப் பிரச்சினையை ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளருக்கு சுட்டிக்காட்டியிருந்தார். இதனை அறிந்து கொண்ட ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கவனத்திற்கு எட்டிவைத்தார்.

தெஹியத்தகண்டிய, நுவரகல மகா வித்தியாலய விளையாட்டரங்கில் இடம் பெற்ற மகாவலி காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் மகாவலி விவசாய பாராட்டு, பரிசளிப்பு விழாவில் வைத்து இந்த நியமனம் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனதீவில் கடமையில் இருந்த போது கொலைசெய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி இந்திக்க பிரசன்னவின் குடும்ப நலன்பேணலுக்காகவும் ஜனாதிபதியினால் இதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் அதனை ஏற்றுள்ளனர். ஆனால் கட்சியின் இளைய உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் பங்காளிக் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளில் தலையிடக் கூடாது எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக இரகசிய சந்திப்புகளை நடத்தி வருகின்றனர்.

இதனால் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் இருப்பதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் பின்வரிசை உறுப்பினர்கள் குழுவாகப் பிரிந்து கலந்துரையாடுவதன் நோக்கம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

17 பேரும் குழுவாகப் பிரிந்து செயற்படுவதன் பின்னணியில் யார் செயற்படுகின்றனர் என்பது குறித்து அறியுமாறும் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்கு பணித்துள்ளதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஆனாலும் குறித்த 17 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் குறித்து உரையாடியதாக கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் கூறியுள்ளனர்.

குறிப்பாக தேசிய அரசாங்கம் தேவை இல்லையென்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தே வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் பங்காளிக் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளில் தலையிடக் கூடாது எனவும் 17 உறுப்பினர்களும் முடிவு எடுத்ததாக கூறியுள்ளனர்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி பல கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு தற்போது ஐக்கிய தேசிய முன்னணியாகச் செயற்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் ஜனநாயகத் தேசிய முன்னணியாகவே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படும் எனவும் கட்சியின் பிரதித்த தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச குடும்பம் ஜனநாயகத் தேசிய முன்னணிக்கு சவால் அல்ல எனவும் அந்தக் குடும்பத்தில் இருந்து கோட்டாபயவோ, பஸிலோ எவர் போட்டியிட்டாலும் ஜனநாயகத் தேசிய முன்னணி தோற்கடிக்கும் என்றும் சஜித் பிரேமதாச கொழும்பில் கூறியுள்ளார்.

ஐ.நா....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இலங்கை அரசாங்கம் கால அவகாசத்தைக் கோரியுள்ளது. அதனால் கடந்த ஐக்கிய நாடுள் மனித உரிமை பேரவை அமர்வின்போது இரண்டு வருடம் கால அவகாசம் கொடுக்கப்பட்டது.

எதிர்வரும் மார்ச்சில் இலங்கை என்ன கோரிக்கையை முன்வைக்கவுள்ளது என்பதும் சர்வதேசம் அதற்கு எத்தகைய பதிலைக் கொடுக்கப்போகின்றது என்பதும் பொருத்திற்றுந்த பாரக்க வேண்டும்.

இலங்கையை நேரடியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது கடினம். ஏனென்றால் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான சர்வதேச சட்டத்தை ஏற்கங்கீகரிக்கவில்லை. அதனால் இலங்கைக்கு எதிராக நேரடியாக சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் எவரும் வழக்குத் தொடர முடியாது.

அதேநேரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரிவையில் இலங்கை இணை அனுசரணை வழங்கிய தீர்மானம் ஆய்வில் இருக்கும் பொழுது, சர்வதேச முறைமையின் கீழ் மற்றொரு அமைப்பில் விசாரணை அல்லது வழக்கு நடவடிக்கையை தொடர்வது சாத்தியமற்றதாகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஓர் இறுதி முடிவு எட்டப்பட்டதன் பின்னரே அடுத்த நகர்வு பற்றி சர்வதேசம் ஆராயும்.

மேலும் 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இலங்கையும் இணை அனுசரணையாளராக இருப்பதால், இலங்கை அரசு தன்னுடைய விருப்பத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டியுள்ளதுது.

அதாவது அந்தத் தீர்மானத்திலுள்ளவிடயங்களில் தேசிய ரீதியான விசாரணை பொறிமுறைமை ஒன்றுக்கு இலங்கை தன்னுடைய விருப்பை வெளிப்படுத்தியிருக்கிறதுது.

ஆகவே சர்வதேச சட்டம் கூட என்ன சொல்கின்றது என்றால் முதலில் உள் நாட்டு பொறிமுறையைப் பயன்படுத்தி தீர்வு காண்பதற்குத்தான் முதலில் வாய்ப்பாளிக்கும்.

அதற்குரிய நடைமுறைகளை செயற்படுத்தாமல் இலங்கை அரசு காலம் தாழ்த்துமேயானால் சர்வதேசத்திற்கு அது ஏமாற்றத்தைக் கொடுக்கும்.

இருப்பினும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு உள்ள ஒரேயொரு வாய்ப்பு என்னவென்றால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையால் அவ்வாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அந்தத் தீர்மானத்திற்கு பாதுகாப்பு பேரவையின் 15 உறுப்பினர்களில் 9 பேர் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். குறிப்பாக அந்த ஒன்பது பேரில் ஐந்து வல்லரசு நாடுகள் முரண்பட்ட நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் அமர்வில் இலங்கை அரசுக்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான பிரதிநிதிகள் முன்னெடுக்கலாம். அத்தகைய பிரதிநிதிகளுக்கு அந்த அமர்வு நடைபெறும் காலப்பகுதியில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான பிரதிநிதிகளுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், சர்வதேச ஆர்வலர்களுக்கும் மனித உரிமைகள் அமர்வில் பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படும். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தங்களை அவர்கள் கொடுக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார்....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் கையளிக்கப்பட்டன.

மனித எச்சங்களின் 6 மாதிரிகள் மீதான காபன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் 5 மாதிரிகளின் அறிக்கைகள் நேற்று சனிக்கிழமை (16) அதிகாலை பீட்டா இணையத்தளத்தில் பிரவேசித்து ஆய்வறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்ட அறிக்கை, எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்படும் என்று சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியின் அகழ்வு பணிகள் மீண்டும் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த மனித புதைகுழியில் தொடர்ச்சியாகவும் மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது வரை 146 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது 323 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றில் 314 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 28 சிறுவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.விடம்....

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கத்துக்காக கையொப்பபோராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்றும் அம்பாறையில் தொடங்கி யாழ்ப்பாணம் வரைக்கும் எமது கையொப்ப போராட்டம் தொடருமென்றும் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இணைப்பாளர் திருமதி மரியசுரேஷ் ஈஷ்வரி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத் தொண்டராசிரியர்களுக்கு இதுவரையும் நிரந்தர நியமனம் வழங்காமல் இழுத்தடிப்பு!

சேனையூர் நிருபர்

கிழக்கு மாகாண தமிழர் தொண்டராசிரியர் சங்கத்தின் தலைவர் நா. அன்பழகன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி. ஜெயராஜாவுக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர் விடயமாக மகஜர் ஒன்றினைக் கையளித்தார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயம் வருமாறு.

கிழக்கு மாகாணத்தில் 445 தொண்டராசிரியர்களின் பெயர்ப் பட்டியல் மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அமைச்சரவை அங்கிகாரம் வடமாகாண தொண்டராசிரியர்களோடு சேர்த்து கிடைக்கப்பெற்றது.

ஆனால் வடமாகாண தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி ஒரு வருடத்திற்கு மேலாகியும், கிழக்கு மாகாணத் தொண்டராசிரியர்களுக்கு இதுவரையும் நிரந்தர நியமனம் வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர்.

09-03-2018 ஆம் திகதி மத்திய கல்வி அமைச்சினால் அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்த 445 பேருடைய பெயர் பட்டியலை அனுப்பி வைக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது .

இக்கடிதத்தின் பிரகாரம் 445 பேருடைய பெயர்ப்பட்டியலை அனுப்பாமல் மாகாணக் கல்வி அமைச்சில் முறைகேடான நேர்முகத் தேர்வை நடத்தி அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்த 445 பேரில் 111 பேர்வரை நீக்கிவிட்டு சம்மந்தமே இல்லாத புதியவர்களை உள்வாங்கி 456 பேர் கொண்ட பெயர்ப்பட்டியலை வெளியீட்டு மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர்.

இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளைச் சந்தித்தும் தீர்வு கிடைக்கவில்லை.

எங்களுடைய பிரச்சினைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு, திருகோணமலை மேல் நீதிமன்றம் வரைசென்று நீதி கேட்டோம் அதற்கு அமைவாக அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்த 445 பேருக்கும் மத்திய கல்வி அமைச்சினால் நேர்முகத் தேர்வுக்கு 12-11-2018 ம் திகதி வருமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டது.

445 பேரும் நேர்முகத் தேர்வுக்கு தயாராகிய போதும் மறு அறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாக 05-11-2018 ம் திகதி கடிதங்கள் அனுப்பப்பட்டது.

எனவே இதுவரைக்கும் மீண்டும் இந்த நேர்முகத்தேர்வுக்கான எந்த வொரு முன் ஏற்பாடுகளையும் காணவில்லை ஆகவே இவ்வாறு அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்த இந்த 445 பேருக்கும் முதல் கட்டமாக நேர்முகத் தேர்வை நடத்தி நிரந்தர நியமனம் கிடைப்பதற்கு ஆவாண செய்து தருமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினை கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொட்டகலையில் ஐந்தடி நீள சிறுத்தை சடலமாக மீட்பு

க.கிஷாந்தன்

திம்புள்ள பத்தனை பிரிவிற்குட்பட்ட கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்டத்தில் சுமார் ஐந்து அடி நீளமான சிறுத்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நிலையில் சிறுத்தை கிடப்பதை பொது மக்கள் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து மேற்படி சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக ஸ்டோனிகிளிப் தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் காணப்பட்ட நிலையில் 16.02.2019 அன்று அதிகாலை இந்த சிறுத்தை நபர் ஒருவரின் வீட்டுதோட்டத்தில் பன்றிக்கு போடப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி உயிரிழந்துள்ளது.

தற்போது வீடுகளுக்கு அருகில் இந்த சிறுத்தைகளின் நடமாட்டம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சிறுத்தைகளின் அட்டகாசத்தினால் தேயிலை மலைகளில் தொழிலில் ஈடுப்பட்டிருந்த தொழிலாளர்கள் தாக்குதலுக்குள்ளாகியிருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

குறித்த சிறுத்தையின் உடல் நல்லதண்ணியில் உள்ள வனஜீவராசி தினைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மாணவர்களுக்கு மந்தபோசனமற்ற உணவுகள்

மஸ்கெலியா நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை சிறுவர்களுக்கு, பகல் உணவு வழங்கும்போது மந்தபோசனம் அற்ற உணவகளை வழங்க அரசு முன்வந்துள்ளது.

அதன்படி ஹங்குராங்கெத்த வலயத்திற்குற்பட்ட 72 பாடசாலைகளுக்கு வைபவ ரீதியாக காலை உணவிற்கு வாரத்தில் 2 முறைடின் மீனுடன் உணவு வழங்கப்பட உள்ளதாக வலய பணிப்பாளரினால், வித்தியாளய அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. ஏன ஹங்குராங்கெத்த வலய பணிப்பாளர் சரத் கருணாரத்ன அவர்கள் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் ஏனைய பகுதிக்கும் இவ்வாறான டின் மீன்கள் வழங்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சுகாதார பாதுகாப்பு குறித்து வலுவான சட்டம் நடைமுறைபடுத்தப்படும்!

இரத்தினபுரி நிருபர்

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலை, அலுவலகத்தின் சுத்தம் மற்றும் மலசலகூடம் என்பவற்றில் சுகாதாரத்தை பாதுகாப்பது வலுவான சட்டம் நடைமுறைபடுத்தப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் சுகாதார பரிசோதகர்களுக்கு தெளிவு படுத்தும் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம்(13) சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதயில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சப்ரகமுவ மாகாண சபை உட்பட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களில் சிற்றுண்டிச்சாலை, அலுவலகத்தின் சுத்தம் மற்றும் மலசலகூடம் என்பவற்றின் சுகாதாரம் குறித்து சுகாதார பரிசோதகர் கூடிய கவணம் செலுத்த வேண்டும்.

அத்தோடு கடைகள் மற்றும் ஹோட்டல்கள், சிற்றுண்டிசாலைகள் உட்பட வேறு நிறுவனங்களில் சுகாதாரம் குறித்து அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். அது குறித்தும் கவணம் செலுத்தபட வேண்டும்.

சப்ரகமுவ மாகாணத்தில் சுகாதார பரிசோதர்களின் சேவை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களை கௌரவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

மஸ்கெலியா நிருபர்

உலக முடிவின் கிரிகெட்டி ஓயா பிரதேசத்தில் மாணிக்ககற்கள் அகழ்வில் ஈடுபட்டமை, வனப்பகுதியை அழித்தமை, மற்றும் மரங்களை வெட்டி இல்லம் அமைத்தமை போன்ற குற்றச்செயல்களில் ஈடபட்டு, குற்றத்தை ஒப்பு கொண்ட பலாங்கொடையை சேர்ந்த 5 பேருக்கு 8 லட்சம் ரூபா தண்டபணம் செலுத்துமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் பி. பிரமோத ஜயசேகர உத்தரவிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் ஐவரையும் கைது செய்வதற்கு, உலகமுடிவு பகுதியில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளான எம். பிரதீப்குமார் மற்றும் பி. அபயவர்தன, எஸ் ருக்சான், கே.லக்ஸ்மன் ஆகியோர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை தொடர்ந்து நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என உலக முடிவின், வன பாதுகாப்பு உயர் அதிகாரி பி.கே.பி. பிரதீப் குமார் தெரிவித்தார்.

திருகோணமலையில் இரவு 07 மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுமதி மறுப்பு

சேனையூர் நிருபர்

திருகோணமலை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இரவு 7 மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக, திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் நா.இராஜநாயகம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடரபாக, பெற்றோர்களாலும் சமூக நலன் விரும்பிகளாலும் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில், நகராட்சி மன்ற விசேட அமர்வின் போது, இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரவு வேளைகளில், மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் போது, சில பிழையான வழிகளுக்கு அவர்கள் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளனவெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு, நகராட்சி மன்றப் பகுதிக்குள் நடைபெறும் இரவு நேர வகுப்புகளை, ஏனைய உள்ளூராட்சி சபைகளில் நிறுத்தியது போல இங்கும் நிறுத்தப்பட வேண்டுமென, திருகோணமலை நகராட்சி மன்றத்தில் நடைபெற்ற விசேட சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தலைவர் தெரிவித்தார்.

இது குறித்து பிரத்தியேக வகுப்புகளை நடத்தும் சகல ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இதை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புரோட்லேன்ட் நீர் மின் உற்பத்தி நிலைய காரியாலயத்திற்கு முன்பாக பொல்பிட்டிய பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

க.கிஷாந்தன்

புரோட்லேன்ட் நீர் மின் உற்பத்தி நிலைய காரியாலயத்திற்கு முன்பாக பொல்பிட்டிய பிரதேச மக்கள் 50ற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் புரோட்லேன்ட் நீர் மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது.

புரோட்லேன்ட் நீர் மின் உற்பத்தியினால் பாதிக்கப்பட்ட 37 குடும்பங்களில் 4 குடும்பங்களுக்கு மாத்திரமே நஷ்டஈடு தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனையவர்களுக்கு இன்னும் நஷ்டஈடு தொகை வழங்கவில்லை என தெரிவித்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

நீர் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள பொல்பிட்டிய பகுதியில் வசித்து வந்த மக்கள் மின் உற்பத்தி நிலையத்தின் வேலைத்திட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பல வருட காலமாக முகங்கொடுத்து வந்துள்ளனர்.

33 குடும்பங்களை சேர்ந்த 50ற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு வந்துள்ள நிலையில் அவர்களின் குடியிருப்புகளும் அங்கு வெட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதையினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

எமது குடியிருப்புகள் பாதிப்புகளுக்கு புரோட்லேன்ட் நீர்மின் உற்பத்தி நிலையம் வீடுகளை கட்டுவதற்கு நஷ்டஈடுகளை தரும்படி இதன்போது வலியுறுத்தப்பட்டது. கடந்த காலங்களில் இவர்களுடைய போராட்டம் நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை தமக்கான நஷ்டஈட்டு தொகையை வழங்கு என ஆக்ரோஷத்துடன் ஆர்பாட்டகாரர்கள் தெரிவித்தமை குறிப்பிடதக்கது.

வான்எல டோசர் வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

கந்தளாய் நிருபர்

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட வான்எல டோசர் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாதால் பள்ளமும் படுகுழியும் சேரும் சதியியுமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக் காலங்களில் இவ்வீதியில் பிரயாணம் செய்வதில் பல அசோகங்களுக்கு முகம்கொடுப்பதாகவும் அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் அவ்வீதியை பயன்படுத்துவதில் பல கஷ்டங்களை மேற்கொள்வதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வீதி சுமார் ஒன்றரை கிலோமீட்டர் வரை மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுவதாகவும்,வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் கூட முடியாதுள்ளதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வீதியை கூடிய விரைவில் புனரமைத்துத் தருமாறு அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுகின்றனர்.

உலக யூனானி தின நிகழ்வு இலங்கையில் முதற் தடவையாக கிழக்கு மாகாணத்தில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் ஏற்பாட்டின் கீழ் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், ஆயுர்வேத வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி கே.எம்.அஸ்லம் தலைமையில் அன்மையில் நடைபெற்றது. இலங்கையில் முதல் முறையாக SRI LAN-KA UNANI FOUNDATION - SLUF வைபவ ரீதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.எல்.அலாவுதீன், கல்முனை மாநகர சபையின் செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் உள்ளிட்ட வைத்திய குழுவினரால் ஆரம்பித்து வைப்பதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் மற்றும் யூனானி மருத்துவ சேவையில் 10 வருடங்கள் சேவையாற்றிய வைத்தியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் கலந்துகொண்ட வைத்தியர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்: பைஷல் இஸ்மாயில்

பிரதமர் மோடி தொடங்கி வைத்த அதிவேக 'வந்தே பாரத் ரயில்' பாதி வழியில் நின்றது

பிரதமர் மோடியால் நேற்று தொடங்கி வைக்கப்பட்ட நாட்டின் அதிவேக ரயிலான 'வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்'பாதியில் வழியில் இன்று நின்றது. இதனால், பயணிகள் இறக்கி விடப்பட்டு வேறு ரயிலில் அனுப்பப்பட்டனர்.

பயணிகளின் பயண நேரத்தைக் குறைக்கும் நோக்கில், மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய ரயிலை சென்னை ஐசிஎஃப் தொழிற்சாலை தயாரித்தது. ரயிலில் இன்ஜின் இல்லாமல் அதிவேகமாக இயங்கக்கூடிய இந்த ரயிலுக்கு வந்தே பாரத் எனப் பெயரிபட்டது.

டெல்லியில் நடந்த விழாவில் பிரதமர் மோடி வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலைக் கொடியசைத்து தொடங்கி வைத்தார். டெல்லியிலிருந்து உத்தரப் பிரதேசத்தின் வாராணசி வரையிலான தனது முதல் பயணத்தை வந்தே பாரத் ரயில் நேற்று தொடங்கியது. முழுவதும் ஏசி வசதி செய்யப்பட்டு 16 பெட்டிகளைக் கொண்டு வந்தே பாரத் ரயில் அமைக்கப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகள் அனைத்திலும் தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களின் வருகை குறித்து தகவல் தெரிவிக்கும் வசதியும், வை-பை வசதியும் இந்த ரயிலில் உள்ளன. நவீன தொழில்நுட்பத்திலான கழிப்பறை, ஒவ்வொரு இருக்கைக்குக்கும் தனித்தனி மின் விளக்கு வசதி, ஒவ்வொரு பெட்டியிலும் குளிர்பான வசதிகள் என ரயில் முழுவதும் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன.

டெல்லியில் இருந்து புறப்பட்ட வந்தே பாரத் ரயில் வெற்றிகரமாக வாரணாசி சென்றடைந்த நிலையில், வாரணாசியில் இருந்து புறப்பட்டு டெல்லிக்கு வந்தது. அப்போது, டெல்லிக்கு முன்பாக 200 கி.மீ. தொலைவில் டுன்ட்லா எனும் இடத்தில் ரயில் பழுதடைந்து நின்றது. இந்தப் பழுதுக்கான காரணம் என்ன என்று உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. ரயிலை 40 கி.மீ. வேகத்துக்கு மேல் இயக்க முடியாமல் நின்றது. மேலும், பெட்டிகளில் மின்சாரம் செல்வதிலும் தடை ஏற்பட்டது.

இது குறித்து ரயில்வே துறை அதிகாரிகள் தரப்பில் கூறுகையில், வந்தே பாரத் ரயில் டெல்லிக்கு முன்பாக 200 கி.மீ. தொலைவில் டுன்ட்லா எனும் இடத்தில் வந்தபோது, பழுது ஏற்பட்டு நின்றது. இன்று அதிகாலை 5 மணி அளவில் ரயிலில் உள்ள சில பெட்டிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அதன்பின் சாம்ரோலா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. ரயிலை 40 கி.மீ. வேகத்துக்கு மேல் இயக்க முடியவில்லை. இதனால் 10 கி.மீ. வேகத்தில் ரயில் மெதுவாக இயக்கப்பட்டு ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ரயிலில் இருந்து புகையும், கருகிய நெடியும் வந்தது. பிரேக் சிஸ்டம் பழுதடைந்து இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது. இதையடுத்து, அனைத்துப் பயணிகளும் வேறு ரயில் மூலம் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ரயிலின் வேகத்தை அதிகரிக்கும் போது, ரயிலில் இருந்து பலத்த சத்தம் எழுந்ததால், இது பிரேக் பழுது என்று முதல்கட்ட ஆய்வில் தெரியவந்தது எனத் தெரிவித்தனர்.

தம்பிதுரை கருத்துகள் அதிமுக கருத்துகள் அல்ல: அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தகவல்

மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரையின் கருத்துகள் அதிமுக-வின் கருத்துகள் அல்ல என தருமபுரியில் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.

தருமபுரி கடைவீதி முத்து காமாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள, தமிழக பால்வளத் துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி நேற்று தருமபுரி வந்தார். முன்னதாக அவர் செய்தியாளர்களிடம் பேசியது:

வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக தலைமையில் வலிமை மிக்க கூட்டணி அமைய உள்ளது. தற்போது அதிமுக அமைக்கும் கூட்டணியைக் கண்டு எதிர்க்கட்சியினர் மிரளப் போகின்றனர். மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை மத்திய அரசை விமர்சித்து கூறி வரும் கருத்துகள் பற்றி கேட்கிறீர்கள். அது அவரது தனிப்பட்ட கருத்து, அதிமுக-வின் கருத்து அல்ல.

கூட்டணி குறித்து முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் கூறுவது தான் அதிமுகவின் கருத்து. அவர்களது கருத்தை ஒன்றரை கோடி அதிமுக தொண்டர்களும் ஏற்றுக் கொள்வர். அதிமுக கூட்டணியில் அமமுக சேர்வதற்கு வாய்ப்பு இல்லை. காஷ்மீர் தாக்குதல் சம்பவம் கண்டனத்துக்குரியது. தாக்குதலில் உயிரிழந்த தமிழக வீரர்கள் குடும்பத்துக்கு தமிழக முதல்வர் ரூ.20 லட்சம் அறிவித்துள்ளார்.

மேலும், அவர்கள் குடும்பத்துக்கு முதல்வர் உதவிகளை செய்வார். தீவிரவாதம் வேரோடு அழிக்கப்பட வேண்டும். அதற்கு, மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும்.

தமிழக ஆவின் பால் தாய்ப்பாலுக்கு நிகரான தரம் கொண்டது. நம் தரத்தை பார்த்து இந்தியா மட்டுமன்றி ஹாங்காங், சிங்கப்பூர், மலேசியா, ஆப்ரிக்கா உள்ளிட்ட நாடுகளின் முகவர்கள், இறக்குமதியாளர்கள் கேட்டு வருகின்றனர். தலைநகர் டெல்லியில் ஹைடெக் ஆவின் பார்லர் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பதி தேவஸ்தான லட்டு தயாரிப்புக்கு ஆவின் நெய் வழங்க ரூ.23 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின்போது, தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மீண்டும் நிதியமைச்சரானார் அருண் ஜேட்லி

மத்திய நிதித்துறை அமைச்சராக அருண் ஜேட்லி மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெறுவதற்கு கடந்த மாதம் அமெரிக்கா சென்றார். இதைத் தொடர்ந்து அவர் கவனித்து வந்த நிதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் துறை பொறுப்பு ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயலுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டது. சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டை பியூஷ் கோயல்தான் தாக்கல் செய்தார்.

இரண்டு நாட்களுக்கு முன் அருண் ஜேட்லி நாடு திரும்பினார். இதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியின் பரிந்துரைப்படி அருண் ஜேட்லிக்கு நிதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் துறையை ஒதுக்கி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டார். இதையடுத்து, நிதி அமைச்சராக அருண் ஜேட்லி மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சொந்தக் குடும்பத்தினரையே தீவிரவாத தாக்குதலுக்கு பயன்படுத்தும் பாக். பயங்கரவாதி மசூத் அசார்

தன் குடும்ப உறுப்பினர்களையும் தீவிரவாத தாக்குதல்களில் தொடர்ந்து பயன்படுத்தும் பயங்கரவாதியாக மசூத் அசார் உள்ளார். இவர், பாகிஸ்தான் ஆதரவுடன் செயல்படும் ஜெய்ஷ்-எ-முகம்மது எனும் பெயரிலான தீவிரவாத இயக்கத்தை துவக்கி நடத்தி வருபவர்.

ஹிஜ்புல் முஜாகித்தீன், லஷ்கர்-எ-தொய்பா மற்றும் ஜெய்ஷ்-எ-முகம்மது ஆகிய மூன்றும் பாகிஸ்தானில் இருந்து அந்நாட்டு நிதி மற்றும் ஆயுதங்கள் உதவியுடன் செயல்படும் தீவிரவாத இயக்கங்கள். இவர்களில் எந்த அமைப்பு பெரியது என்பது இதுவரையிலும் அடையாளம் காண முடியாமல் உள்ளது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கண்ட மூன்று தீவிரவாத அமைப்புகளும் இந்தியாவில் அவ்வப்போது தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவர்களில் ஜெய்ஷ்-எ-முகம்மது அமைப்பு ஹுஜ்புல் முஜாஹித்தீன் உதவி மற்றும் உத்தரவின் பேரில் கடந்த காலங்களில் தாக்குதல் நடத்தியது.

மேற்கண்ட மூன்று அமைப்புகளிலும் மசூத் அசார் அதிக தீவிரம் காட்டுபவர். தன் அமைப்பின் தீவிரவாத தாக்குதலுக்காக தன்னுடைய குடும்பத்தினரையும் ஒருவர் பின் ஒருவராகப் பயன்படுத்தும் தகவல் வெளியாகியுள்ளது. இதில் முதல் சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்ட மசூத் அசாரின் சகோதரி மகனான தலா ராஷீத்தை இந்திய ராணுவம் காஷ்மீரில் என்கவுண்டர் செய்திருந்தது.

அடுத்து மற்றொரு சகோதரியின் மகனான முகம்மது உஸ்மானும் தீவிரவாத தாக்குதலுக்கு முயன்றபோது இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டார். மூன்றாவதாகவும் மசூத் அசார் தன் சகோதரரான அப்துல் ரவுப் அஸ்கர் என்பவரை தீவிரவாத நடவடிக்கைக்கு பயன்படுத்தி வருகிறார்.

கடந்த 2016-ல் நடைபெற்ற நாக்ரோட்டா தாக்குதலில் ரவுப் அஸ்கர் பெரும்பங்கு வகித்தார். இதற்காக தேசிய புலனாய்வு அமைப்பினர்

வழக்குப்பதிவு செய்து அப்துல் ரவுப்பை தேடி வருகின்றனர்.

அப்சல் குருவின் உயிரிழப்புக்கு பழி வாங்கல்

தற்போது புல்வானாவில் நடைபெற்ற தாக்குதலுக்கு சற்று முன்பாக பாகிஸ்தானின் பஞ்சாபில் பேசிய அசாரின் சகோதரர் ரவுப், இந்திய நீதிமன்றத் தீர்ப்பால் தூக்கிலிடப்பட்ட அப்சல் குருவின் தியாகத்திற்கு பழி வாங்குவோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நாடுகளின் வற்புறுத்தல்

இதனிடையில், சர்வதேச நாடுகளின் வற்புறுத்தலால் மசூத் அசார் 2004-ல் தனது நடவடிக்கைகளை முடக்க வேண்டியதாயிற்று. எனினும், அப்போது தன் இயக்கத்தை 'பாகிஸ்தானின் தாலீபான்' மற்றும் 'தெய்ரீக்-ஏ-தாலீபான்' எனும் இரண்டு பெயர்களில் மாற்றி செயல்படுத்தி வந்தார்.

சீனாவின் மறுப்பு

பிறகு மீண்டும் மசூத் அசாருக்கு பாகிஸ்தானுடன் சேர்த்து சீனாவின் ஆதரவும் கிடைத்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதனால், இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வற்புறுத்தியும் அசாரை தனது கறுப்பு பட்டியலில் சேர்க்க சீனா மறுத்திருந்தது.

ராமர் கோயிலுக்கு மிரட்டல்

இதற்காக, அயோத்தியில் ராமர் கோயில் கட்டினால் கடும் விளைவுகள் ஏற்படும் என பிரதமர் நரேந்திர மோடியை எச்சரித்திருந்தார். தொடர்ந்து பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐயின் ஆதரவும் மசூத் அசாருக்கு கிடைத்து வருகிறது.

மயிரிழையில் தப்பித்த மைக்கேல் ஜாக்சன்

மறைந்த பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் அமெரிக்காவில் ட்வின் டவர் மீதான 9/11 தாக்குதல் விபத்தில் சிக்காமல் தப்பித்த சம்பவத்தைப் பற்றிய செய்தி சமீபத்தில் வெளியாகியுள்ளது.

2001ல் செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவில் ட்வின் டவர் நடுவே பாய்ந்து விமானத் தாக்குதல் நடந்தது. இதில் 3, 000 பேர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நடந்த அன்று ட்வின் டவர் கட்டிடத்தில் மறைந்த பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கும் ஒரு வேலை இருந்ததாகவும் அதிலிருந்து அவர் எவ்வாறு தப்பித்தார் என்பதைக்குறித்தும் மைக்கேல் ஜாக்சனின் சகோதரர் ஜெர்மய்ன் ஜாக்சன் எழுதி வெளியிட்டுள்ள தனது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்,

இந்த சுயசரிதை நூலுக்கு 'நீ தனியாக இல்லை: மைக்கேல்: ஒரு சகோதரனின் கண்கள் வழியாக' என்ற பெரியடப்பட்டுள்ள இந்நூலில் அவர் தெரிவித்துள்ள விவரம் குறித்து மிர்ரர்.கோ.யுகே இணையதளம் வெளியிட்ட தகவல் வருமாறு:

அதிர்ஷ்டவசமாக, இரட்டை கோபுரத்தின் உச்சியில் இருந்த ஒரு அடுக்கத்தில் அன்று காலை நடக்க இருந்த ஒரு கூட்டத்திற்கு மைக்கேல் ஜாக்சன் செல்லவில்லை.

அன்று இரவு அவர் தன் தாயிடம் பேசியதாவது: மைக்கேல் ஜாக்சன்,அம்மா, நான் நல்லாயிருக்கேன். உங்களுக்குதான் நன்றி சொல்லணும். ஏன் தெரியுமா? நேற்றிவு நீண்டநேரம் என்னை தூங்கவிடாமல் பேசிக்கொண்டிருந்ததால் நான் இன்று எழுந்திருக்க நிறைய நேரம் ஆகிவிட்டது. அதனால் அந்த அப்பாயிண்மென்ட்டை தவறவிட்டேன். என்றார் ஆச்சரியமாக

இவ்வாறு சுயசரிதையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரிய அளவிலான அந்த தாக்குதலிலிருந்து தப்பித்து உயிர்பிழைத்தபோதும், அந்த புகழ்பெற்ற பாடகரை 8 ஆண்டுகள் கடந்தபிறகு மாரடைப்புநோய் அவரை பலிவாங்கியது.

திருடிச் சென்றவரிடம் வினோத கோரிக்கை

தன்னுடைய தோட்டத்தில் இருந்து விலையுயர்ந்த போன்சாய் மரங்களைத் திருடிச் சென்றவர்களிடம் அவற்றைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு அதன் உரிமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜப்பானில், டோக்கியோ நகரத்தின் வடக்குப் பகுதியில் உள்ளது கவாகுச்சி. இங்கு போன்சாய் வளர்ப்பில் ஐந்தாம் தலைமுறையாக ஈடுபட்டு வருகிறார் செய்ஜி இமுரா. தன்னுடைய போன்சாய் மரங்கள் களவுபோனது குறித்துப் பேசும் அவர், காணாமல் போன 7 போன்சாய்களும் எங்கள் குடும்பச் சொத்து. அவற்றை லட்சக்கணக்கான டாலர்களைக் கொடுத்தாலும் விற்றிருக்க மாட்டேன்.

அவற்றைத் திருடிச் சென்றவர்களை வெறுக்கிறேன். இருந்தாலும் அவனுக்கோ அவளுக்கோ ஒன்று சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றி, பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவை இறந்துவிட்டால் மிகுந்த வருத்தப்படுவேன். 400 ஆண்டு காலப் பழமைவாய்ந்த மரங்கள் அவை என்று தெரிவித்தார்.

அவரின் மனைவி ஃபியூமி, 'மரங்களை எங்களின் குழந்தைகள் போல வளர்த்தோம். அவற்றை இழந்ததால் சோகமும் நெஞ்சுவலியும் என்னை ஆட்கொண்டுவிட்டது' என்று தனது ஃபேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார்.

5000 சதுர அடி கொண்ட இடத்தில் தோட்டத்தை அமைத்திருக்கும் இமுரா, 3000 போன்சாய் மரங்களை கண்காட்சிக்காக வைத்திருக்கிறார். அவற்றில் சில திருடு போனதும் சிசிடிவி கேமராக்களைப் பொருத்தி இருக்கிறார்.

போன்சாய் என்பது சிறியரக மரங்களை உருவாக்கும் ஆசியக் கலை ஆகும். ஜப்பானில் இதற்கு வரவேற்பு அதிகம் உள்ளதால், ஏராளமானோர் இதை வளர்த்து வருகின்றனர்.

சீனாவுக்கு செல்லும் சவுதி இளவரசர்

சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் அடுத்த வாரம் சீனாவுக்கு அரசியல் ரீதியாக சுற்றுப் பயணம் செல்ல இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சகம் தரப்பில், சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் அடுத்தவாரம் சீனாவுக்கு வர இருக்கிறார். இளவரசர் சல்மான் வியாழக்கிழமை சவுதி வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் சந்திப்பில் சல்மான் சீன அதிபர் ஜி ஜின்பிங்கையும், துணை அதிபர் ஹான் சிங்கையும் சந்திக்க உள்ளார்.

மெக்சிகோ எல்லையில்சுவர்: அமெரிக்காவில் அவசரநிலையை அறிவித்தார் அதிபர் ட்ரம்ப்

நாடாளுமன்றத்தில் இந்த சுவர் எழுப்பும் திட்டத்துக்கு அதிபர் ட்ரம்ப் கேட்கும் தொகைக்கும் குறைவாக நிதி ஒதுக்க எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சியினர் சம்மதித்தனர். இதனால், பொறுமை இழந்த அதிபர் ட்ரம்ப் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே நிதிபெறுவதற்காக அவசர நிலையை அறிவித்தார்.

ஆளும் குடியரசு கட்சி, எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே சமீபத்தில் எல்லையில் தடுப்புச் சுவர் எழுப்புவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து பேச்சு நடந்தது. எல்லைச் சுவருக்காக அதிபர் ட்ரம்ப் 570 கோடி டாலர் (சுமார் ரூ.40,300 கோடி) கோரினார். ஆனால், அதில், 137.5 கோடி டாலர் நிதி ஒதுக்கீடு செய்ய மட்டுமே ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் ஒப்புக் கொண்டனர்.

ட்ரம்ப் வலியுறுத்தி வந்தபடி கான்க்ரீட் சுவர்களை எழுப்ப ஜனநாயக கட்சியினர் ஒப்புதல் வழங்கவில்லை இதனால், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலேயே நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் அவசர நிலையை அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

அதிபர் ட்ரம்ப் தனக்கு இருக்கும் அரசமைப்பு அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகிறார் என்று மனித உரிமை ஆர்வலர்களும், ஜனநாயகக் கட்சி எம்.பி.க்களும் கண்டித்துள்ளனர்.

ரோஸ்கார்டன் இல்லத்தில் இருந்து அதிபர் ட்ரம்ப் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் அகதிகள், போதை மருந்து கடத்தல்காரர்கள், கிரிமினல் குற்றவாளிகள் ஆகியோரைத் தடுக்க இந்தச் சுவர் மிகவும் அவசியமானதாகும். இந்தத் திட்டம் மிகப்பெரியது, சிறப்பு வாய்ந்தது. நிதிஒதுக்கீடு மூலம் இந்தத் திட்டத்தை நான் விரைந்து முடிப்பேன். இந்தத் திட்டத்தை நீண்டநாட்கள் கொண்டு செல்லமாட்டேன். எனக்கு முன் ஆட்சியில் இருந்த அதிபர்கள் பலர் இதற்கு முன் அவரசரநிலையை பிரகடனம் செய்திருக்கிறார்கள். ஆனால், அவசரநிலையை அறிவித்துள்ளது, மிகவும் முக்கியத்துவம் குறைவானதற்குத்தான் எனத் தெரிவித்தார்.

கடந்த 1976-ம் ஆண்டில் இருந்து அமெரிக்காவில் இதுவரை 60 முறை தேசிய அளவில் அவசர நிலை அமல்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மற்றும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, தடுப்புச் சுவர் திட்டத்துக்குத் தேவையான நிதியை டிரம்ப் ஒதுக்க

தவறு செய்தவர்களிடம் இருந்து அபராதமாக விதிக்கப்பட்ட பணம், ராணுவ கட்டுமானப் பணிகளுக்கான நிதி, போதைப் பொருள் தடுப்பு ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அதிபர் ட்ரம்ப் சுவர் எழுப்ப ஒதுக்குவார் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி, ஜனநாயகக் கட்சியின் செனட் தலைவர் ஜக் ஸ்குமர் ஆகியோர் கூட்டாக அளித்த பேட்டியில், அமெரிக்காவில் அதிபர் ட்ரம்ப் அவசரநிலையை அறிவித்தது சட்டவிரோதம். அரசமைப்புச் சட்டத்துக்கு ஏற்பட்ட மிகப்பெரிய வன்முறை எனத் தெரிவித்தனர். மேலும், அதிபர் ட்ரம்பின் அறிவிப்புக்கு குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் சிலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 17.02.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமா?

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்று கொண்டு வருவது சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் மீண்டுமொருமுறை ஆரம்பமாகியுள்ளது. புதிய அரசியல் அமைப்பு நாட்டை இன அடிப்படையில் கூறுபோடப் போகின்றது என எதிர்க்கட்சியினரும், இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டப் போகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புதிய அரசியல் அமைப்பில் புதிதாக எதுவும் இல்லை, ஒற்றையாட்சியும் பௌத்த மதத்துக்கான முன்னுரிமையும் அப்படியே இருக்கும் என அரசாங்க தரப்பும் கூறி வருகின்றன. இந்த முத்தரப்பினரின் பிரச்சாரங ;களுக்கு மத்தியில் வரப்போகும் புதிய அரசியல் அமைப்பில் என்னதான் இருக்கப் போகின்றது என்ற தெளிவில்லாத குழப்பத்தில் மக்களும் இருக்கின்றனர். அண்மையில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை புதிய அரசியலமைப்புக்கான வரைபு என்ற அடிப்படையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் சமள்ப்பிக்கட்டது அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே என அரசாங்கத் தரப்பில் விளக்கம் அளிக்கப்படுகின்றது. வெளிப் பார்வைக்கு அரசாங்கமும் அதன் பங்காளிக் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புதிய அரசியல் அமைப்பை முற்றுமுழுதாக ஆதரிப்பது போலவும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிர் க் கட்சி அதை இனவாத அடிப்படையில் எதிர்ப்பது போலவும் பெரும் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது

, புதிய அரசியலமைப்பு எப்படியும் வரும் என்றும், அதன் மூலம் தமிழர்களின் பிரச்சினை தீரும் எனவும் உறுதிபடப் பிரச்சாரம் செய்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரையிலும் அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ இந்த புதிய அரசியல் அமைப்பை நிராகரித்துள்ளது. இந்த நிலையில், புதிய அரசியல் அமைப்பு ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு, பின்னர் பொதுமக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்பதை ஒரு சிறுபிள்ளை தன்னும் நம்புமா? இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்த புதிய அரசியல் அமைப்பை ஐ.தே.க. அரசாங்கம் என்ன நோக்கத்துக்காக கொண்டு வருகின்றது என்பது முக்கியமாகும். தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் 1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதாகும். ; அது ஜனநாயக விரோதமானது, எதேச்சாதிகாரமானது எனக் கூறி, அதை நீக்கும்படி அன்றிலிருந்து பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பிய போதிலும் ஐ.தே.க. அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் ஐ.தே.க. அதை மாற்றுவதற்கு ஆர்வமாக இருப்பது என்ன காரணத்திற்காக? 1990 ஆம் ஆண்டு ஐ.தே.கவைச் சேர்ந்த ஆர்.பிரேமதாச புலிகளால் படுகொலை செய்யப்பட்ட பின்பு, கடந்த 29 வருட காலத்தில் அக்கட்சியைச் சேர்ந்த எவராலும் ஜனாதிபதியாக வர முடியவில்லை. இனிமேலும் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் தப்பித்தவறி வெற்றி பெற்றாலும், இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கும்வரை ஐ.தே.க. அரசால் தான் நினைத்ததைச் செய்ய முடியாத நிலை தான் இருக்கும். எனவே, புதிய அரசியல் அமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கி நாடாளுமன்றத்துக்கு அந்த அதிகாரங்களை வழங்குவதன் மூலம், ஐ.தே.க. தான் நினைத்ததை நாடாளுமன்றத்தின் மூலம் சாதித்துக் கொள்ள முடியும் என நினைக்கிறது. அது அப்படி நினைப்பதற்கு காரணமும் இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது போனால், ஐ.தே.க. 1965இல் செய்தது போல அல்லது சமீபத்தில் செய்தது போல, தன்னையொத்த அரசியல் கருத்துள்ள, தன்னுடன் எப்பொழுதும் கூட்டு வைத்துள்ள, வலதுசாரித்தனமான தமிழ் - முஸ்லீம் - மலையக கட்சிகளின் ஆதரவுடன் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்துவிட முடியும் என ஐ.தே.க. திடமாக நம்புகிறது ஐ.தே.க. கொள்கைகள் என்னவென்பது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்தவை தான். அதாவது, நாட்டு நலனையோ மக்களின் நலனையோ அல்லது ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களின் நலன்களையோ அடிப்படையாகக் கொண்டவையாக ஐ.தே.கவின் கொள்கைகள் ஒருபோதும் இருந்ததில்லை. ஐ.தே.க. பதவியில் இருந்த காலங்களில் எல்லாம் நாட்டின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றை பாதிப்புக்குள்ளாக்கும் நவடிக்கைகளையே எடுத்து வந்திருக்கிறது. அதாவது, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களுக்காகவே ஐ.தே.க. அரசுகள் செயல்பட்டு வந்திருக்கின்றன. மறுபக்கத்தில் ஐ.தே.க. அரசுகள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக ஏகாதிபத்திய வட்டிக் கடைக்காரர்களின் உத்தரவுப்படி செயல்பட்டு நாட்டு மக்களின் மேல் ஏராளமான பொருளாதாரச் சுமைகளையும் ஏற்றி வந்திருக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைநத் உடனேயே மலையகத் தமிழ் மக்களின் பிராஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதும் ஐ.தே.க.தான். வடக்கு கிழக்கில் தமிழ் - முஸ்லீம் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்ததும் ஐ.தே.கதான். அதுமாத்திரமின்றி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளால் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகளாக 1957இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 2000 ஆண்டில் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்ததும் ஐ.தே.கதான். எனவே இத்தகைய ஐ.தே.கவினால் தலைமை தாங்கப்படுகின்ற ஒரு அரசு கொண்டு வருகின்ற ஒரு புதிய அரசியல் அமைப்பினால் நாட்டினதும், மக்களினதும். சிறுபான்மை இனங்களினதும் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று யாராவது நம்ப முடியுமா? உண்மை என்னவெனில், தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்பொன்று நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, அப்படியொரு அரசியல் அமைப்பால் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதும் சாத்தியமில்லை. தற்போதைய ஐ.தே.க. அரசால் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பென்பது 1978 அரசியல் அமைப்பின் இன்னொரு நகலே தவிர வேறொன்றுமல

2015ஆம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரை தற்போது மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது

வடமாகாண முதல்வரின் அக்னிப்பிரவேசம்

இதயச்சந்திரன்

2015ஆம் ஆண்டு எழுதப்பட்டது இன்றைய நிலைக்கும் பொருந்திப்போகின்றது

சிவாஜிலிங்கத்தால் முன்மொழியப்பட்டு, செங்கோல் உடைப்போடு சில மாதங்களாக கிடப்பில் போடப்பட்டதீர்மானமொன்று முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களால் வடமாகாண சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான தருணத்தில் நிறைவேற்றப்பட்ட சரியான தீர்மானம்.

60 வருட கால தமிழின அழிப்பினை சுருக்கமாகவும், தெளிவாகவும், அதுவும் ஐ.நா.வின் இனப்படுகொலைகுறித்தான சாசனத்திலுள்ள பிரிவுகளை வைத்து விளக்கியுள்ளார் முதலமைச்சர் .

ஆட்சி மாற்றத்தின் முதலாம் அத்தியாயம் முடிந்த கையோடு தமிழ் மக்களின் பிரச்சினையை மூடி மறைக்கஒரு அனைத்துலக வலைப் பின்னல் உருவாக்கப்பட்டது.

இனி வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலோடு ,அதாவது ஆட்சி மாற்றத்தின் இரண்டாம் அத்தியாயத்தோடுஒட்டுமொத்தமாக அவை மறைக்கப்படவிருந்த வேளையில், வடமாகாணசபையில் இன அழிப்பிற்கு சர்வதேசவிசாரணை வேண்டும் என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வாலின் வருகை, பூகோள அரசியலின்சுயநலமிக்க பக்கங்களை முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களுக்கு காட்டியுள்ளது போல் தென்படுகிறது.

அதுமட்டுமல்லாது, இரணிலின் ஆதரவு பெற்ற பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்துஇராணுவம் வெளியேறாது என்று தெரிவித்த 'பழைய குருடி கதவைத் திறவடி' கதையும் முதல்வரைவிசனத்திற்குள்ளாக்கி இருக்க வேண்டும்.

இத் தீர்மானமானது தமிழினத்தின் சார்பாக சர்வதேசத்திற்கு ஒரு முக்கிய வேண்டுகோளை விடுக்கின்றது.

அதாவது மார்ச் ஐ.நா.மனித உரிமைப்பேரவையில் எல்லோராலும் எதிர்பார்க்கப்படும் 'அந்த'அறிக்கைசமர்ப்பிக்கப்பட வேண்டும், அத்தோடு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐ.நா.சபையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் செப்டம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டால், வடமாகாணசபைஇன்னுமொரு தீர்மானத்தை நிறைவேற்றுமா? அல்லது மாவை சேனாதிராஜா சென்ற வருடம் கூறியது போன்றுமக்களை அணிதிரட்டி ஆக்கிரமிற்பிற்கு எதிராக போராட்டங்களை நிகழ்த்துமா?.

தமிழக சட்டசபை போல அடுக்கடுக்காக தீர்மானங்களை நிறைவேற்றலாம். ஆனால் அதனை செவிமடுக்கபிராந்திய- மேற்குலக வல்லரசுகள் விரும்பாத போது, மாற்றுவழி குறித்து சிந்திப்பதே பொருத்தமானது.

இருப்பினும் இக்கோரிக்கையை, ஆட்சி மாற்றத்தை விரும்பிய அமெரிக்கா எவ்வாறு உள்வாங்கிக் கொள்ளும்என்பதை முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் நிஷா பிஸ்வாலுடன் பேசும் போது புரிந்து கொண்டிருப்பார்.

அவர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடலை, அரசியல் நாகரீகம் கருதி முழுமையாக வெளிப்படுத்த முதல்வர்விரும்பாவிட்டாலும், இக்காட்டமான தீர்மானம் பல செய்திகளை எமக்கு உணர்த்துகிறது.

இத்தீர்மானமானது, ஆட்சி மாற்றத்திற்கு முன்பாக ஏன் கொண்டுவரப்படவில்லை என்கிற கேள்வி, மாற்றுச்சிந்தனையாளரிடம் உண்டு. அதற்கான பதிலைத் தேடினால், பூகோள அரசியலின் மூலோபாயங்களைதெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

சுதந்திரம் பெற்ற (?)காலம் தொட்டு பெருந்தேசிய இனவாத அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படும்இனவழிப்பு குறித்து , படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ், தராகி சிவராம் போன்றோர் சிங்கள சகோதர-சகோதரிகளிடம் எடுத்து விளக்கியுள்ளனர். அதன் தொடர் முயற்சியாக முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்களின்இத் தீர்மானத்தையும் பார்க்கலாம்.

ஆனால் இத் தீர்மானம், பிராந்திய நலனை முதன்மைப்படுத்தும் வல்லரசாளர்களின் ஆட்சி மாற்ற நிகழ்ச்சிநிரலுக்கு சவாலாக இருப்பது போல் தெரிகிறது. அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த குழுவின்வாக்குப்பலத்தினை இதுபோன்ற தீர்மானங்கள் அதிகரித்துவிடலாம் என்கிற அச்சம் அமெரிக்காவிற்குஏற்படும்.

அதேவேளை ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் சிறப்பு போர்க்குற்ற விசாரணை அறிக்கை மார்ச் மாதஜெனிவா கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வடமாகாணசபையில் கொண்டுவரப்பட்ட 'இனஅழிப்பு' தீர்மானம், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் புதிய இராஜதந்திரச் சிக்கல்களைத்தோற்றுவிக்குமெனக் கருதப்படுகிறது.

இலங்கையில் ஆட்சிமாற்றம் முழுமை பெறும்வரை, மைத்திரி- இரணில் அணிக்குப் பிரச்சினைகளைஉருவாக்கும்வகையில், தமிழர் தரப்பிலிருந்து 'கோரிக்கைகள்' என்கிற பெயரில் நெருக்கடிகள் வருவதை நிஷாதேசாய் விரும்பவில்லை என்பதனை, தமிழ் தலைமை வெளியில் சொல்லாமல் தவிர்க்க முயற்சிக்கிறது என்பது நிஜம்.

ஆனால் தமிழகத்திற்குச் சென்றபோது பல விமர்சனத்திற்குரிய அரசியல் கருத்துக்களைத் தெரிவித்தவிக்கினேஸ்வரன் அவர்களின் இப்போதைய நிலைமாற்றம், பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.மந்திரிசபைப் பேச்சாளர் ராஜித சேனாரெட்னாவும், இந்தியப்பெரு ஊடகங்களும் இத் தீர்மானத்தினைகடுமையாக விமர்சித்திருக்கின்றன.

நல்லிணக்க முயற்சியில் மைத்திரி அரசு ஈடுபடும்போது, தாழி உடைந்த கதையாகி விட்டது வடக்கின்தீர்மானம் என்று 'தி ஹிந்து' அழுது வடிகிறது. 'அவர் சொன்னார்', 'இவர் சொன்னார்' என்று, தமது கருத்தினை வாழைப்பழத்தில் ஏற்றும் ஊசி வித்தை ஹிந்துவிற்கு நன்றாகத் தெரியும்.

மகிந்தருக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் செய்த, இப்போதுதான் ஜனநாயக் காற்றினை தமிழ் மக்கள்சுவாசிக்கின்றார்கள் என்று கூறிய, மாகாணசபை ஊடாக மக்களின் இயல்பு வாழ்வினை மீட்டெடுப்போம்என்ற முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்கள், ஆட்சிமாற்றத்தின் முக்கிய காலகட்டத்தில் 'பெர்லின் நிரந்தரமக்கள் தீர்ப்பாயம்' (Pemanent Peoples' Tribunal) போன்று ஒரு அறிக்கையைத் தீர்மானமாக, அதுவும் மக்களால்ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அவையில் முன்வைப்பார் என்று இந்திய தென் வளாகமும்,அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களமும் எதிர்பார்த்திருக்காது.

வாக்களித்த மக்கள் சொந்த இடத்திற்கு திரும்பமுடியாமல் இராணுவம் தடுக்கும் போது, எவ்வாறுமாகாணசபையை நடாத்தமுடியும்?. அதிகாரத்தைதந்த மக்கள் அகதிகளாக வாழும்போது, இந்தப் பதவிகளைவைத்து என்ன செய்ய முடியும்?. ஆகவே இத்தீர்மானத்தை, பெரும்பான்மை இன மக்களிடம் வரலாற்றுபூர்வஆதாரங்களுடன் முன்வைப்பதைத்தவிர வேறு வழி இல்லையென்கிற முடிவுற்கு முதல்வர் வந்திருக்கிறார்.

ஈழத் தமிழின வரலாற்றின் இருண்ட அரசியல் பக்கங்களை சட்டபூர்வ சான்றுகளோடும், ஐ.நா.நிபுணர் குழு மற்றும் அறிவார்ந்த உலகப்பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின்அறிக்கைகளோடும், யாஸ்மின் சூக்காவின் பிரத்தியேக பார்வையையும் தாங்கிவந்துள்ள இத்தீர்மானமானது,கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் (structural genocide) முக்கிய பகுதியான நில ஆக்கிரமிப்பின் வரலாற்றினைமுன்வைத்திருந்தால், இன்னும் கனதியாக இருந்திருக்கும்.

இறைமையுள்ள ஓர் பூர்வீக தேசியஇனத்தினை ஐ.நா.வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசொன்று படுகொலைசெய்யும்போது , அதனை மனித உரிமை மீறல் -மானுடத்திற்கு எதிரான குற்றம் என்று விளக்கம் கொடுக்கும் வல்லரசுகள், அத்தேசிய இனத்தின் வாழ்விடங்களை வேறொரு இனம் அடாத்தாகக் கையகப்படுத்துதலைஎந்த வரையறைக்குள் வைத்துப்பார்க்கும்?.

எமது பிரச்சினைகளை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்கிற முதல்வரின் நோக்கம்முற்போக்கானது. பேரினவாதத்தின் பிரமாண்டமான ஊடகங்களை ஊடறுத்து, எவ்வாறு சிங்கள மக்களிடம்இச்செய்தியைக் கொண்டு செல்ல முடியும் என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இதனை முன்வைத்து சிங்கள மக்கள் மத்தியில் ஓர் ஆழமான விவாதத்தினை ஏற்படுத்த முயன்றால், 'நமட்டுச்சிரிப்புச் சிரித்த' இரணில் விக்கிரமசிங்காவும், சிந்தனைத் தடைபோடும் 'வீட்டோ' அதிகாரத்தைக் கையில்வைத்திருக்கும் மாநாயக்க தேரர்களும் இதனை அனுமதிப்பார்களா?.

மும்மொழி பேசும் ரவிராஜ் போன்றவர்களின் இருப்பினையே அனுமதிக்காத பெருந்தேசிய இனஅதிகாரவாசிகள், அந்த இனவாதச் சுவரினை 'பெர்லின் சுவர்' போல் இலகுவில் உடைக்க விடுவார்களா?.

இதனை, இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு (JDS) சிங்களத்தில் மொழியாக்கம்செய்து வெளியிட்டுள்ளார்கள் என்பதைத் தவிர வேறு தளங்களில் இம்முயற்சி நடைபெறுகிறதா என்றுதெரியவில்லை.

'அழிப்பிற்கு மகிந்த இராஜபக்ச- அழித்தவர்களைக் காப்பதற்கு மைத்திரி' என்று சுழலும் பேரினவாத அதிகார அச்சு, தனது இயக்கத்தையும், இயங்குதளத்தையும் மாற்றப் போவதில்லை என்பதனை முதல்வரின் தீர்மானம்மிகப் பூடகமாக வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால் தீர்மானத்தை நிறைவேற்றிய மாகாணசபை, அடுத்து என்ன செய்யப்போகிறது?

அடுத்ததாக, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பில் மிக மோசமாக பாதிப்புற்ற கிழக்கில் இருக்கும்மாகாணசபையில், இதே போன்றதொரு இன அழிப்பிற்கு நீதி கோரும் சுயாதீன சர்வதேச விசாரணைக்கான தீர்மானத்தினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவருமா?.

ஏனெனில் இது வடக்கின் பிரச்சினை மட்டுமல்ல, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் பொதுப்பிரச்சினை.

தமிழ்த்தலைமைகளால் வறவிடப்பட்ட மிழர் அபிலாஷைகள்

தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கியதற்குக் காரணம், சாதாரண பிரச்சினைகளான காணிவிடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி, சிறைக்கைதிகளுடைய விடுதலை, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே ஆகும். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நான்கு வருடங்களாகின்ற போதிலும் மேற்கூறிய விடயங்களில் ஒரு விடயத்தில் கூட இந்த அரசாங்கம் நியாயபூர்வமாக தீர்வுகளை வழங்குவதில் இழுத்தடிப்புகளையே மேற்கொள்கின்றது

வட கிழக்கில் போரின் அழிவுகளிலிருந்து மீண்ட எச்ச சொச்ச தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய நிலையேற்பட்டும் கூட இன்றுவரையும் தம் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியாதவர்களாகவே நல்லாட்சி அரசிலும் தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாக நல்லாட்சியாளர்களே காணப்படுகின்றார்கள். எனவே இலங்கையில் கடந்த ஆட்சிக்காலங்களில் நடைபெறாத பல விடயங்கள் இக்காலகட்டத்தில் ஆட்சிமாற்றம் என்ற ஒன்று இந்த நாட்டில் ஏற்பட்டால் நிச்சயம் நடைபெறும் என்ற தீவிரமான நம்பிக்கை கொண்டுதான் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அரசியல் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற விடயத்துக்கு அப்பால் தங்களுடைய சாதாரண பிரச்சினைகளான காணி விடுவிப்பு, கைதிகளின் விடுதலை, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான நீதி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களிலாவது ஆட்சி மாற்றம் ஒரு சாதகமான தீர்வை பெற்றுத்தரும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். ஆனால் இந்த ஆட்சி மாற்றம் தமிழ்மக்களுக்கு எந்தவொரு விடயத்திலும் முழுமையான தீர்வை பெற்றுத்தரவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு போதியளவு வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அதற்கான வாய்ப்பை நழுவவிடும் சந்தர்ப்பங்களையே அதிகம் பிரயோகித்துவருவதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் புதிய அரசியல் யாப்பு வழிநடத்தல் குழுக்கள் மூலம் இயங்கும் அரசியல் யாப்பு முன்னெடுப்பு இன்று ஒரு தேக்க நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகிறது. மகாநாயக்க தேரர்களுடைய குரல், சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஐக்கிய தேசிய கட்சிகளிடையே காணப்படுகின்ற சில விடயங்கள் தொடர்பான முரண்பாடுகள், முக்கியமாக ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தயங்குவது போன்ற விடயங்களை அவதானிக்கும் பொழுது அரசியல் யாப்பு முன்னெடுப்பு பின்னடைவை அமைந்திருப்பதாகவே தோன்றுகிறது.

நக்கீரர்

இந்நிலைப்பாடு குறித்து த. தே. கூட்டமைப்பிடம் வினவும் போது, முழுமையாக நம்பிக்கையில்லாவிட்டாலும் நாங்கள் எங்களுடைய முயற்சிகளை கைவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தான் இந்தப் பயணத்தில் எங்களை இணைத்துக் கொண்டோம் இன்றைய சூழ்நிலையில் எங்களுக்கு இருக்கும் ஒரேவழி இதுதான். இந்த செயற்பாட்டிலிருந்து நாங்கள் வெளியே வந்தால் அடுத்தது என்ன? என்ற கேள்விக்கு சரியான விடையை எங்களால் காணமுடியாத நிலைமையொன்று இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இந்த செயற்றிட்டத்தில் நாங்கள் பங்குபற்றினோம் என கூட்டமைப்பின் பிரதானிகள் சிலர் கூறிவருகின்றனர்.

இந்நிலையில், தமிழ் மக்கள் குறித்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிய தீர்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் அவை முற்றுப் பெறாத முடிவாகவே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடத்திவரும் பேச்சுவாடத்தைகளுக்கு செவி சாய்ப்பதுடன், இதனைப் பொறுப்பேற்று உடன் தீர்த்துவைப்பது இன்றைய அரசின் கையில் தங்கியுள்ளது. உடனடித் தீர்வைப் பெறுவதே அவர்களது இன்றைய ஆட்சிமாற்றத்தின் பிரதான தேவையாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் அரசியல் யாப்பு செயற்பாட்டிலிருந்து, கூட்டமைப்பு வெளியேறுமாக இருந்தால் அதனை கூட்டமைப்பு தான் குழப்பிவிட்டது என்ற பார்வையை சர்வதேசத்திற்கு காட்டும் முயற்சிகள் நடைபெறவும் வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் சர்வதேசம் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள கரிசனை இல்லாமல் போய்விடும். இவ்வாறான விடயங்களை அடிப்படையாக வைத்துத்தான் (கூட்டமைப்பில் சிலர்)நாங்கள் இந்த பயணத்தில் பொறுமை காத்து பயணித்து வருகின்றோம் எனவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துவருகின்றனர்.

அதுமட்டுமின்றி இன்று தென்னிலங்கை அரசியல் மேடையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களை பார்க்கும் பொழுது, முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் யாப்பு விவகாரமும் கடந்த காலங்களைப் போன்று தமிழ் மக்களை ஏமாற்றிவிடும் என்ற நிலைமையை தோற்றுவித்திருக்கின்றதாக அரசியல்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகக் கொண்டுவருவதற்கு தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கியதற்கு காரணம், சாதாரண பிரச்சினைகளான காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி, சிறைக் கைதிகளுடைய விடுதலை, வேலை வாய்ப்பு போன்ற விடயங்களில் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற அடிப்படையில் தான். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்களாகின்ற போதிலும் மேற்கூறிய விடயங்களில் ஒரு விடயத்தில் கூட இந்த அரசாங்கம் நியாயபூர்வமாக தீர்வுகளை வழங்குவதில் இழுத்தடிப்புக்களையே மேற்கொள்கின்றது என்றே கூறலாம்.

இன்று நாட்டில் இளைஞர்களுக்கான மற்றும் வட கிழக்கு பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு விடயத்தில் கூட மைத்திரி அரசாங்கம் நியாயமாக நடக்கவில்லை. சிற்றூழியர்களை கூட தென்னிலங்கையிலிருந்து தெரிவுசெய்து வட - கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பும் நிலைமையே இன்றும் நடைபெற்று வருகிறது. இது விடயமாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு கூட்டமைப்பு முறைப்பாடுகளை செய்திருக்கிறது. ஆனால், இதுவரை அவை தொடர்பில், அரசாங்கம் கவனம் செலுத்தியதாக இல்லை. தொடர்ந்தும் அந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என அவ்வப்போது கருத்து வெளியிடும் சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பினர் கூறி மறைகின்றனர். மேற்கூறிய சிறிய விடயங்களிலாவது முன்னேற்றம் ஏற்படும் என

14 ஆம் பக்கம் பார்க்க....

தமிழ் மக்களின் விடயங்களில் இழுத்தடிப்பு!

மறப்போம் மன்னிப்போம் சாத்தியமா?

இலங்கை நாட்டிலே மூன்று தசாப்த யுத்தம் நடைபெற்று 2009ம் ஆண்டு மௌனிக்கச்செய்யப்பட்டது. யுத்தத்தில் கொல்லப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்கு நீதிகோரி ஒரு தசாப்தம் நிறைவுபெறவிருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் யுத்தமும், நீதியுமென்று நான்கு தசாப்தம் நிறைவுபெறப்போகின்றது. ஆனால் இன்றுவரை தமிழ்மக்களுக்கு எவ்விதமான நியாயங்களும் கிடைக்கப்பெறவில்லை. 40வருட காலத்தில் இழந்தவைகளே அதிகமாக உள்ளன. யுத்தத்தின் போது, பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் போன்ற பல துறைகளுடன் உயிர்களும் அழிக்கப்பட்டன. ஒருசமுகம் அழிக்கப்பட்டதன் விளைவினால் அச்சமுகம் நாட்டிலே இரண்டாம்தரப்பிரஜைகளாக மாறும் நிலையை அடைந்துள்ளனர். இலங்கை நாட்டின் ஆரம்பகுடிகள் தமிழ் மக்களே என்று கூறிக்கொண்டாலும், இருப்பதற்கு கூட நிலமின்றி போராடி பெறவேண்டிய நிலையிலே உள்ளனர். யுத்தத்தின் பின்னரான காலப்பகுதி ஆரம்பம் தொடக்கம் இற்றைவரை நியாயங்களை கேட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எப்போது கிடைக்கப்பெறுவார்கள், அரசியல் கைதிகள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்ற ஏக்க உணர்வுடன் மனநிம்மதியை இழந்து நிற்கின்றனர்.

முனையூரான்

இறுதி யுத்தத்திலே இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதி வேண்டுமென்று சர்வதேசத்திற்கும் தமிழ் மக்கள் சென்றுள்ளனர். இன்னமும் நீதி வழங்கப்படாத நிலையில், ஐநா சபையின் பரிந்துரைகளை யேற்று இலங்கை அரசாங்கமும் காலக்கெடுவினை வேண்டியுள்ளனர். அதேவேளை அப்பரிந்துரைகளை ஏற்ற இலங்கை அரசாங்கம் அவற்றினை நிறைவேற்றி வருகின்றதா? என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். ஐநா கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இலங்கை அரசாங்கம் குரைத்துவரும் நாய்க்கு எலும்புத்துண்டினை காட்டுவதுபோன்று தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அதிகம் அக்கறை கொள்வதுபோன்று தமது திறமையினை வெளிப்படுத்தி வருகின்றனர். இறுதியுத்தத்தில் யுத்தக்குற்ற மீறல்கள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வலையில் இராணுவத்தினர் சிக்கியிருக்கின்றனர். இவர்களை இவ்வலையில் இருந்து மீட்க வேண்டும் என்பதில் இலங்கை அரசு அதிகம் கவனம் செலுத்தி வருகின்றது. இதனால்தான் நாட்டின் தலைவரும் கூட, யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமாயின் யுத்தக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டு சிறைகளில் உள்ள இராணுவ வீரர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுடன், இராணுவ வீரர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும் என கூறிவருகின்றார்.

இராணுவத்தினரை காப்பற்ற வேண்டும் என்பதில் இலங்கை அரசு மிகவும் அவதானமாகவிருக்கின்றது. இதனை தொடர்ந்து வரும் பேச்சுக்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. ஆனால் வடக்கு, கிழக்கிலே ஒரு தசாப்த காலமாக மக்களின் காணிகளில் இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர், அடர்த்தாக பிடித்துள்ளனர் இவையனைத்தும் முற்றுமுழுதாக விடுவிக்கப்படவில்லை. இதற்காக நாட்களை, மாதங்களை, வருடங்களை கடந்து பொதுமக்கள் நிலமீட்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக இராணுவ வசமுள்ள தமது சொந்த நிலங்களை கோரி தொடர் போராட்டம் நடாத்தி வரும் கேப்பாப்புலவு மக்கள், இலங்கையின் சுதந்திர தினத்தில், சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது சொந்த நிலங்களை விடுவிக்க கோரி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு, கறுப்பு ஆடைகளை அணிந்து தமது எதிர்ப்பினை வெளிக்காட்டும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பதிலை இன்னமும் கூறாத நிலையில், இராணுவமுகாம்களில் மனித புதைகுழிகள் இருப்பதான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சரான திருமதி அனந்தி சசிதரன் குறிப்பிடுகின்ற போது, மண்டைதீவு உட்பட வடபுலத்தில் இராணுவம் நிலை கொண்டிருந்த அனைத்து இடங்களிலும் மனித புதைகுழிகள் உள்ளன. இராணுவம் நிலைகொண்டிருந்த அனைத்து இடங்களிலும் சர்வதேச கண்காணிப்புடன் மனித புதை குழி தொடர்பான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மிக நீண்ட வரலாறு இந்த மண்ணிற்கு உண்டு. மன்னார் புதைகுழி என்பது மனித குலத்திற்கு ஏதிரான மனங்களை உலுக்குகின்ற சம்பவமாக உள்ளது. குறிப்பாக 26 ற்கு மேற்பட்ட குழந்தைகளுடைய எலும்புக் கூடுகள் அங்கு மீட்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்ல இரும்பு சங்கிலியால் கட்டப்பட்ட எலும்புக் கூடுகளும் அங்கு மீட்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுக்கு சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும். ஏனெனில் இலங்கை அரசில் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் நிலை கொண்டிருந்த அனைத்து பகுதிகளிலும் மனித புதைகுழிகள் உள்ளன. எனவே இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதிகளிலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். சர்வதேச நாடுகளின் உதவிகளை நாட வேண்டிய நிலையில் தமிழர்கள் உள்ளார்கள். ஏனெனில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் காணாமல் போன தமது உறவுகளில் எச்சங்களாக இருக்கலாம் என்று



அஞ்சுகின்றார்கள் என்ற விடயத்தினை குறிப்பிட்டிருந்தார். இதற்கான தக்க பதிலை அரசு அளிக்க வேண்டியதும் மிக முக்கியமானதே.

இராணுத்தினை காப்பற்ற வேண்டுமென்ற வகையில், நாட்டின் பெரும்பான்மையினத்தினர் குறியாகவுள்ளனர். என்பதனை கீழ்வரும் கருத்துக்கள் வலுப்படுத்தி நிற்கின்றன. தேசிய சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜயன்த சமரவீர கூறுகின்றபோது, யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவ வீரர்களை மனித உரிமை பேரவை கூட்டத்தொடருக்கு முன்னர் கைதுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பாகின்றது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த, 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற மனித உரிமை பேரவையில் இராணுவத்தினரால் யுத்தக்குற்றம் இடம்பெற்றதாக அன்று வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஏற்றுக் கொண்டிருந்தார். அதன் பிரகாரம் யுத்தக்குற்றத்துடன் தொடர்புபட்ட இராணுவ வீரர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்க மனித உரிமை பேரவை கால அவகாசம் வழங்கியிருந்தது. அதனடிப்படையில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடருடன் குறித்த கால அவகாசம் நிறைவடைகின்றது. அதனால் இராணுவ வீரர்களை கைதுசெய்து சிறையில் அடைக்கும் பட்டியலில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரண்ணாகொடவை கைதுசெய்ய அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. என்ற கருத்தினை வெளியிட்டிருந்தார்.

அதேபோன்று,எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச குறிப்பிடுகின்ற போது, மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னர் சர்வதேச

08 ஆம் பக்கம் பார்க்க....

வடக்கு தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு காரணம் என்ன?

அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

நாட்டில் உயர் பதவிகளில் ஒரு காலத்தில் தமிழர்கள் நாற்பது வீதமாக காணப்பட்டனர் என வடபகுதி இராணுவ அதிகாரி ஹெட்டியாராய்ச்சி அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கூறியுள்ளார். இன்று சுங்கப்பணிப்பாளர் ஒரு தமிழ் பெண். அவரையும் பதவி விலக்க நடவடிக்கை எடுத்தனர். இவரைப்போலவே பல தமிழ் அதிகாரிகள் முன்னர் பணிபுரிந்தனர். இராணுவத் தளபதியாக சேர் அன்ரன் முத்துக்குமார் கடமையாற்றினார். பொலிஸ் மா அதிபர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர்கள், கடற்படை தளபதி, சட்ட மா அதிபர், மேல் மாகாண ஆளுநர்கள் உட்பட பல்வேறு உயர் பதவிகளில் தமிழர்கள் பணியாற்றினர். இதற்கு காரணம் அவர்களின் சிறந்த கல்வி அறிவே. இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் மீண்டும் வருமா என்பது கேள்விக்குறி.

பிரேமதாச ஆட்சியில் உயர் கல்வி அமைச்சரான லலித் அத்துலத் முதலி, கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பேசும்போது, 'வடக்கில் யுத்த சூழலிலும் அங்கு மின்சாரம் மற்றும் பல வசதிகள் இல்லாத அந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்கள் விடாமுயற்சியுடன் கல்வி கற்றதை, தெற்கில் வாழுகின்ற மாணவர்களும், பெற்றோரும் சிந்திக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சியில் யுத்தத்தை நடாத்திய தேசிய பந்தோபஸ்து அமைச்சராக அவர் பணியாற்றினார். வடக்கின் கல்வி நிலைமை எப்படி உள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் ஒக்ஸ்போர்ட் பட்டதாரி மட்டுமல்ல பல்கலைக்கழக புலமைப்பரிசில் திட்டத்தையும் கொண்டுவந்தவர்.

சிங்கள அரசியல்வாதிகள் வடக்கில் கல்வி கற்றனர். இவை மட்டுமா ஒரு காலத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றுள்ளனர் என்பது பலருக்கு இன்று தெரியாது. உதாரணமாக அமைச்சர் கே.பி.ரட்நாயக்கா (அனுராதபுரம் எம்.பி,பருத்தித்துறை ஹாட்லி), அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா (மதவாச்சி எம்.பி, யாழ்.சென்.ஜோண்ஸ்), அமைச்சர் ஈ.எல்.பி.ஹுருல்ல (ஹொரவப்பொத்தான எம்.பி, யாழ்.சென் பற்றிக்ஸ்), ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் செயலர் டபிள்யூ.எம்.பி.மெனிக்திவெல (யாழ்.சென்.பற்றிக்ஸ்). இதேபோல மேலும் பல தென்பகுதி மாணவர்கள் அக்காலத்தில் யாழ்.கல்லூரிகளில்கற்றுள்ளனர் என்பது வரலாற்று உண்மைகள்.

யாழ்ப்பாணத்தில் ஒழுக்கம், பண்பாடு, ஆங்கில கல்வி வளர்ச்சி என்பனவே தாம் இங்கு கல்வி கற்க காரணம் எனவும், தமது பெற்றோர்களும் அதனையே விரும்பினார்கள் எனவும் இவர்கள் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளனர். அப்போது இனவாதம், தனிச்சிங்கள அரச கரும மொழி காணப்படவில்லை. அதுமட்டுமன்றி பாடசாலைகளையும் அரசாங்கம் சுவீகரிக்கவில்லை. அதனால், அரசியல் தலையீடுகள் போன்ற நெருக்கடிகளும் கல்வித்துறையில் காணப்படவில்லை என்பதும் இவர்கள் இங்கு கற்க முக்கிய காரணமாகும்.

வடக்கின் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந்து வருவதை அண்மைக்கால பரீட்சைகளின் முடிவுகள் மூலம் தெரியவருகிறது. குறிப்பாக யாழ்.மாவட்ட கல்வி நிலைமை பாதிக்கப்பட்டு வருவதாக பேராசிரியர்கள், ஓய்வுபெற்ற கல்வி அதிகாரிகள், கல்விமான்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதற்குரிய பல காரணங்களை அவர்கள் முன்வைக்கின்றனர். யுத்தம் முடிவடைந்து இயல்பு நிலை வழமைக்கு திரும்பியுள்ளதாக அரசும், அரசியல்வாதிகள் பலரும் தெற்கில் கூறிவருகின்றனர். அத்துடன் வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வித்துறையிலும் முன்னேற்றம் காணப்படுவதாகவும், கல்விக்காக பெருமளவு நிதி வழங்கப்படுவதாகவும் அடிக்கடி குறிப்பிடுவதுடன், வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கப்படுவதாகவும் கூறுகின்றனர்.

யுத்த சூழலால் வடக்கின் கல்வி பாதிப்பு

வடக்கு,கிழக்கின் இறுதி யுத்த அழிவுகளில், வடக்கிலேயே அதிகம் இடம்பெற்றன. வடக்கில் வன்னி மாவட்டம் மட்டுமல்ல யாழ்.மாவட்டமும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. யாழ்.குடாநாட்டை படையினர் சுற்றி வளைத்த காலம், ஏ-9 தரை வழிப்பாதை இல்லை. குடாநாட்டில் பரவலாக எறிகணை வீச்சு விமானத்தாக்குதல்கள். பல பாடசாலைகளையும் விட்டுவைக்கவில்லை. உதாரணமாக வடமராட்சி கிழக்கில்- நாகர்கோயில் மகாவித்தியாலம் மீதான தாக்குதலின்போது பல மாணவர்கள் பலியானார்கள். பலர் காயமடைந்தனர். யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி என்பன கோட்டையில் இராணுவம் முகாம் இயங்கிய போது மிக மோசமாக பாதிக்கப்பட்டன. மத்திய கல்லூரியிலும் ஒரு மாணவன் பலி. பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலிகாமம் வடக்கில் பல பாடசாலைகள் சேதமாக்கப்பட்டன, அழிக்கப்பட்டன.

யுத்த காலத்தில் வடக்கில் பொருளாதாரத்தடைகள் விதிக்கப்பட்டபோது மாணவர்களுக்கு சீருடை, பாடசாலை நூல்கள், உபகரணங்கள் போன்றவை கிடைப்பதில் பெரிய பிரச்சினைகள். வேண்டுமென்றே, சிங்கள புத்தகங்களை அனுப்புவார்கள். பரீட்சை நேரத்தில் விமானத்தாக்குதல், எறிகணைத்தாக்குதல்கள் போன்றவை நடாத்தப்பட்டு குழப்புவார்கள். மின்சாரம் இன்றி, மண்ணெண்ணெய் விளக்கில் படித்தனர். 30 வருட காலம் இந்த நிலைமையே. இவை எல்லாமே அரசுக்கு நன்கு தெரியும். தெற்கில் உள்ள கல்விமான்களும் இவற்றை அறிவார்கள். இன்று வடக்கில் கல்வி அபிவிருத்தி என்கின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல்

1971 இல் அன்றை சுதந்திரக்கட்சி அரசு கொண்டுவந்த பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறையும் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை பெரிதும் பாதித்துள்ளது. அதுவும் வடக்கில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு திறமையான புள்ளிகளைப்பெற்று செல்லும்மாணவர்களுக்கு இந்த தரப்படுத்தலால் தடையாக அமைவதாக தெரிவிக்கப்பட்டதுடன் ஒரு சில மாற்றங்களை இதில் செயற்படுத்துமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டிருந்து. ஆனால்அவற்றை அதிகாரிகள் ஏற்கவில்லை. யாழ்.நூலகம் எரிப்பும் கல்வியை பாதித்தது. இதற்கு பின்னர் 1981 இல் யாழ்.பொது நூலகம் அன்றைய ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் குண்டர்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டது. ஏனெனில் இந்த நூலகம்தான் தமிழர்கள் கல்வி அறிவில் வளர மூல காரணம் என்பதே. இதனைக்கட்ட அயராது உழைத்த யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்.தந்தை.ரீ.எம்.எவ்.லோங் அடிகளார், யாழ்ப்பாண மக்களின் மூளை இங்குதான் உள்ளது எனக்கூறியுள்ளார். அந்தளவுக்கு பேரினவாதிகளுக்கு இந்த நூலகத்தின் மீது கோபம். பல ஆயிரக்கணக்கான பெறுமதியான நூல்கள் இங்கு எரிந்து சாம்பராகின. இதனால் தமிழர்களின் கல்வியை சீரழித்து விடலாம் என எண்ணினர்.

வடமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், 'மாகாண கல்வி அமைச்சுக்கும்,மத்திய அரசின் கல்வி அமைச்சுக்கும் இடையேயான பிரச்சினைகள், அதிகாரங்களை அடிக்கடி தெளிவுபடுத்துவார்'. மாகாண சபை கேட்கும் நிதியை தராமல் மத்திய அரசு குறைவாகவே வழங்குவதால் பல அபிவிருத்தி பணிகளை மாகாண அமைச்சினால் செய்யமுடியவில்லை. மத்திய அரசே மாவட்டங்களையும் தெரிவு செய்தும் அவற்றுக்கான நிதியையும் ஒதுக்கி அனுப்புகிறது என்கிறார்.

14 ஆம் பக்கம் பார்க்க....

காலத்தின் தேவையும் மக்களுக்கான சேவையும்

உலக வாழ் தமிழர்கள் மத்தியிலும் சரி, இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியலும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளையும் தமிழ் மக்கள் படும் இன்னல்களையும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் உலக அரங்கு வரை சென்று தட்டிக் கேட்கக் கூடியவர்களாக இருப்பவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே என்று நம்பியிருந்த மக்களுக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் இன்று மக்களுக்கான தீர்வு வரைவில் இழுத்தடிப்புச் செய்வதே இன்றைய நிலைப்பாடகவுள்ளது

சரணியா சுப்ரமணியம்

காலத்தின் தேவை என்னவோ மக்களுக்கான சேவை எதுவோ: நாட்டின் அமைதிக்கு எது அடிப்படையோ: அவை எவை என்பதை ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும், குறிப்பாக உரிய அதிகாரிகளும் சேவையை உணர்ந்து தேவையை நிறைவேற்ற முன்வராத நிலையில் நீடித்துக் கொண்டே செல்லும் இந்த தமிழர் போராட்டங்களும் என் பதில் எந்த மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

தங்கள் சொந்த அரசியல் லாபத்திற் காக எம் பி ஆசனத்திற்காக தமிழ் தேசி யத்தை அழுங்குப் பிடியில் வைத்துள்ள தமிழ் அரசியல் தலைமைகள் இன்று மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கத் தவறிவருகின்றனர்.

இலங்கை வரலாற்றிலே அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே வடகிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒருமித்த குரலாய் ஒலித்தன் பலனாய் சர்வதேசம் வியந்து பார்க்குமளவுக்கு தமிழ் மக்க ளின் வாக்குகளினால் அதிமேதகு ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக முடிசூடிக் கொண்டார்.

அந்தவகையில் இன்றைய ரணில் மைத்திரி அரசாங்கமானது சிறுபான்மை யினரின் முழுத்தேவைகளிலும் பூரண மான தீர்வினை வழங்குவதிலேயே தமது முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டிய கடமைப்பாட்டில் இருந்தது. ஆனால் தேசிய அரசாங்கம் அமைத்து மூன்று வரு டங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கடமைப்பாட்டை முழுமையாக நிறை வேற்றுவதில் நல்லாட்சி அரசாங்கம் தொடர்ந்தும் இழுபறியிலேயே நகர்ந்து கொண்டு செல்கின்றது.

அந்தவகையில் இலங்கை நாட்டின் அரசியலிலும் நாளுக்கு நாள் பல மாற் றங்கள் கணப்பொழுதில் நிகழ்ந்த வண் ணமே உள்ளன. எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் 30 வருடகால ஆயுத்தம் ஏந்திப் போராடிய யுத்தம் அவற்றினால் நம் தமிழச்சமூகம் அனுபவிக்கும் துன் பங்கள் இன்றும் நம்மவர் மனங்களில் மாறாத வடுவாகவே நிலைத்திருக்கிறது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக அகிம்சை போராட்டம், ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு யாவும் நிறைவுற்று இன்று அர சியல் போராட்டம் தொடர்ந்து கொண்டி ருக்கிறது.

இலங்கையின் கிழக்கு கரையோ ரத்தில் அமைந்துள்ள முக்கிய நகரமா கவும் தமிழர்களின் கலை கலாசாரப் பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட முக்கிய மாவட்டமாகவும் மட்டக்களப்பு நகர் விளங்குகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையாக 385,000(74மூ) ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களும், 133,000(24மூ) மேற்பட்ட முஸ்லிம் மக் களும், 6000 சிங்கள மக்களுமாக மொத் தமாக 525,000 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இங்குள்ள மக்களின் பிரதான ஜீவனோ பாயமாக விவசாயம், மீன்பிடி, கால் நடைவளர்ப்பு, வர்த்தகம் ஆகியன அமைகின்றன. இருந்தும் இங்குள்ள மக்களின் பல அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் இருப் பது கவலைக்குரியதே! கடந்த கால யுத்த சூழ்நிலைகள் தொடக்கம் 78களில் கொடூர சூறாவளி, 2006இல் சுனாமி, தொடர்ந்து யுத்தம் போன்ற அகோரப் பிடிகளில் இருந்து மீண்டெழுந்து வாழும் இம் மக்களின் தற்போதைய நிலை கவலைக்குரியதே! அதுமட்டு மின்றி, கிழக்கில் கடந்த கால யுத்தத்தில் பங்குகொண்ட பல கிழக்குப் போரா ளிகள் இன்று தமது அவயவங்களை இழந்து இன்னொருவரிடம் கையேந்தும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எத்த னையோ இளம் சிறார்கள் தாய் தந்தை யரைச் சொந்தங்களை இழந்து ஒரு நேர உணவிற்குகூட உணவின்றி அனாதை களாக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலே பல சி றுவர்கள் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் உடலை வருத்திக் கூலி வேலை செய்து வருகின்றனர். இவர்களின் எதிர் காலம் என்ன என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். இவ்வாறு சென்றால் எமது மக்களின் கல்விநிலை எதிர்காலம் பற்றிக் கண்ட கனவுகள் காணல் நீராகிப்போய் விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கிழக்கு மாகாணத்திலே மட்டக் களப்பு மாவட்டத்தில் நாற்பதாயி ரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் இருக்கின்றனர். இந்நிலைமை எதனால் ஏற்பட்டது கடந்தகாலத் தமிழ் தலைவர் கள் அடைய முடியாத இலக்கு நோக்கிய தமது பயணத்தில் மக்களையும் இணைத் துக் கொள்ள முற்பட்டதன் விழைவுதான் இந்த அவல நிலைக்கு காரணம் என்றே கூறலாம்.

எது எவ்வாறிருந்தும் இன்று வரை தமிழர்களுக்கு இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை மாறி மாறி வரும் பெரும்பான்மை இனத் தலைவர்கள் பெற்றுத் கொடுப்பதகாவும் இல்லை அதில் கவனம் செலுத்துவதாகவும் இல் லை. அரசியல் ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் நம் தமிழ்களின் நெஞ்ச ங்களில் இலங்கையின் பெருமான்பான் மையின தலைவர்களுடனான கூட்டு, ஒற்றுமை என்பன பின்தங்கியதாகவே காணப்படுகிறது.

இதற்கு அந்த தலைவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் காரண மாகவே அமைகிறது என்பதை எவ ராலும் மறுக்கவே முடியாது. நாட்கள் கடந்து செல்லும் நிலையில் மாறிமாறி வரும் அரசியல் தலைவர்களினால் தமிழ் மக்களுக்கான தீர்வு பெற்றுக் கொடுக் கப்படுவதாக இல்லை இருந்தும் தமிழ் மக்கள் சிந்திப்பது போன்று தேசிய அரசி ல் மாற்றங்கள் நிகழ்வதாகவும் இல்லை.

தமிழர் நலன் பற்றி செவிசாய்க்காத மகிந்த ராஜபக் அவர்களினை கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் சரி, ஜனாதிபதித் தேர்தலிலும் சரி தமி ழர்கள் படுதோல்வியடையச் செய்தது யாவரும் அறிந்ததே! ஜனாதிபதித் தேர்தலுக்கு பின் ஒரு சில சுமூகமான மாற்றங்கள் நடைபெற்றாலும் தமிழர்க ளின் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு பற்றி இதுவரை சுமுகமான பதில்கள் கிடைத் ததாக இல்லை எனவே கடந்த வருடம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே தமிழர் பிரதிநிதித்துவங்கள் தேசிய அரசி ல் பேரம் பேசும் சக்தியாக அமைய வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பா கவும் இருந்தது.

அவ்வகையில், தமிழர்களின் 30 வருடகால ஆயுதப் போராட்டம் நிறை வுற்றுள்ள நிலையில் இப் போராட்டத் தில் தம்மை அர்ப்பணித்தவர்களில் மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்கள் பெரும் பங்கு வகித்தமையினை வரும் மறுக்க முடியாது. தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், அதிகாரப்ப பரவலாக்கம் என்ற அடிப்படைக் கொள்கைகளுடன் வடகிழக்கு வாழ் தமிழர்களின் ஏக பிரதி நிதியாக கடந்த 2004ம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கை அரசியலிலும் சரி உலக நாடுகளிடையேயும் சரி தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட் டுமே காணப்படுகின்றனர். அவ்வாறே தமிழ் மக்களும் காலத்துக்கு காலம் தமிழ் தலைமைகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தங்கள் பூரண ஆதரவினை வழங்கி வருகின் றமை யாவரும் அறிந்ததே!

கடந்த ஆட்சியாளர்களின் குடும்ப ஆட்சி ஒழிக்கப்பட காரண கர்த்தாக் களாக இருந்த வட கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் இன்று தமக்காக தம் பிரச் சினைகளை பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்யக்கூடியவர்களை தங்கள் வாக்குப் பலத்தினால் பாராளுமன்றமும் அனுப்பி யுள்ளார்கள்.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதான மாகாணங்களான வடக்கு கிழக்கு ஆகிய மாகாணங்களைப் பொறுத்தவரையில் மக்கள் தங்களுடைய வாக்குகளை எந்த கட்சிக்கோ, எந்த வேட்பாளர்களுக்கோ வழங்கினாலும் தெரிவாகப்போவது நாவினால் தமிழினை உச்சரிக்கும் தமிழ் உறவுகளே. அவர்களாலேயே எமது பிரச்சினைகள் பாராளுமன்றம் வரை சென்று தீர்க்கப்படும் என நம்பியிருந்த பாதிக்;கப்பட்ட தமிழ் மக்களுக்கு எஞ்சியுள்ளது கவலையும் சந்தேகங்களுமே என்றால் அதனை மறுப்பதிற்கில்லை.

அவை ஒரு புறமிருக்க, உலகவாழ் தமிழர்கள் மத்தியிலும் சரி இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியிலும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளையும் தமிழ் மக்கள் படும் இன்னல்களையும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீ திகளையும் உலக அரங்கு வரை செ ன்று தட்டிக் கேட்கக் கூடியவர்களாக இருப்பவர்கள் தமிழ்தேசியக் கூட்ட மைப்பு மட்டுமே என்று நம்பியிருந்த மக்களுக்கு தமிழ் பிரதிநிதிகள் இன்று மக்களுக்கான தீர்வுவரைவில் இழுத்த டிப்புச் செய்வதே இன்றைய நிலைப் பாடாகவுள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது இலங்கையில் இடம்பெறும் காலத் துக்கேற்ற அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டு இன்றைய பாராளுமன்றத்திற்கு தமி ழர்கள் செல்ல வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளதா என எண்ணத்தோன் றுகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட் டத்தின் இன்றைய நிலையினை உற்று நோக்குமிடத்து பல்வேறு அபிவி ருத்தித் திட்டங்கள் நல்லாட்சியில் முன்னெடுக்கப்பட்டுவருவதாக கூறப் பட்டுவந்தாலும் கிழக்கில் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் சில பிரதிநிதிக ளின் அசமந்தப்போக்கினால் இடைநிறுத் தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கதாகும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறிப்பிட்ட கிராமத்தின் அபிவிருத்தியில் அரசியல் வாதிகளி னுடைய, அரச அதிகாரிகளினுடைய பார்வையும், அபிவிருத்தி திட்டங்களும் கிட்டுவது என்பது அபூர்வம். அத்தி பூத் தது போல் கிடைக்கும் அபிவிருத்தி திட் டங்களும் முற்றுப் பெறாமால் இடைநடு வில் முடங்கிப் போகின்றன.

நீண்ட காலமாக பாரியளவில் மேசமடைந்து காணப்பட்ட பல்வேறு பிரதேச வீதிகள் பல வருட காத்திருப் புக்களுக்கும் முயற்சிகளுக்கும் மத்தியில் கெங்கிறிட் இடப்பட்டு புனரமைப்பதற் கான வேலைகள் அண்மையில் ஆரம்பிக் கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட வேலை கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போனமைக்கான காரணம் அறிய முடியாது உள்ளது.

தமிழ் மக்கள் தங்களுடைய பிரச்ச னைகளை உலக அரங்கு வரை கொண்டு சென்றிருக்கும் தமிழ் தேசியக் கூட்ட மைப்புக்கு வாக்களிப்பதன் ஊடாக தங்களுடைய பிரதிநிதிகள் தேசிய அரசி ல் பேரம் பேசும் சக்தியாக மாற்றம டைவதற்கு வழிவகைகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு மக்கள் தயாராகவுள்ள னர். ஜனநாயக தெரிவுக்கு ஏற்ப தற்கால அரசியல் சூழ் நிலைகளைப் புரிந்து கொண்டு தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுப்பது பிரதிநிதிகளின் பாரிய பொறுப்பாகும்.

தமிழ்..

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

தேவைகளை நிறைவேற்றவும் எமது இராணு வத்தை சர்வதேச கூண்டில் நிறுத்தவும் ஏதுவான சூழலை உருவாக்கவே இந்த அரசாங்கம் முயற்சி த்து வருகின்றது. இராணுவத்தை சர்வதேசத்திற்கு கொண்டு சென்று தண்டிக்கவே முயற்சித்து வருகின் றனர்.

அதேபோல, எதிர்க்கட்சி உறுப்பினர் நாமல் ராஜ பக்ஸ கூறுகின்ற போது, இலங்கையில் யுத்த குற்றம் இடம்பெற்றதாகவும், இராணுவமே போர்க்குற்றங் களை செய்தது என சர்வதேசத்திடம் முறையிட்ட வர்கள், சாட்சியங்களை உருவாக்கிக்கொடுத்தவர்கள் இன்று தாம் இராணுவத்தை காப்பாற்றிவிட்டதாக மார்தட்டிக்கொள்கின்றனர். என்றுகூறி தற்போதைய அரசின் மீது பழியைப்போட்டுவிடுகின்றனர். இதன டிப்படையில் எதிர்கட்சி உறுப்பினர்கள் இராணுவத் தினரை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதில் குறியாகவிருப்பதனை உணரமுடிகின்றது.

யுத்தத்தின் போது குற்றங்கள் இழைக்கப்படாமல் அல்லது இராணுவத்தினர் எவ்விதமான குற்றச்செ யல்களிலும் ஈடுபடவில்லை என சில நேரங்களில் வார்த்தைகளால் ஜாலமிடும் அரசு நீதியின் மூலமாக தீர்ப்பதற்கு அஞ்சிநிற்பது, குற்றத்தினை ஒப்புக் கொள்கின்றனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது என விமர்சகர்கள் கூறிகின்றனர்.

ஜெனிவா கூட்டத்தொடர் நெருங்கிவரும் நிலையில், இராணுவம் தொடர்பில் இவ்வருடத் தில் அதிகம் பேசப்படுகின்றது. அண்மையில் கூட யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த பிரதமரும் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தினை வெளியிட்டிருந்தார்.குறிப்பாக விடுதலைப்புலிகள் மற்றும் யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் ஆகி யோருக்கு எதிராக வழக்குகள் காணப்படுகின்றன. இவை அனைத்துமே 2015 ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட அரசாங்கத்தினாலேயே முன்னெடுக் கப்பட்டது. இவ்வாறான வழக்குகளை தொடர்ந்து கொண்டிருக்க முடியாது. நாம் உண்மையை பேசி, கவலையைத் தெரிவித்து மன்னிப்பு கோரி ஏனைய விடயங்களை முன்னெடுக்க வேண்டும். தொடரப் பட வேண்டிய வழக்குகள் அனைத்தும் இரு தரப்பி லும் தொடரப்பட்டுள்ளன. தற்போது உண்மையைக் கூறி மன்னிப்புக் கோரி அவற்றை நிறைவு செய் வதே வெற்றியாகும். கடந்த பத்து வருடங்களுக்கு முன்னரும் பாதுகாப்பு துறையினரே அனைத்து சே வைகளிலும் ஈடுபட்டிருந்தனர். எதிர்வரும் பத்து வருடங்களுக்குள் இந்த பிரச்சினைகள் அனைத்தும் நிறைவுக்கு வரும். இரு தரப்பினருக்கும் என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்படும். அனைத்தையும் மன்னித்து ஏற்று நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாட்டை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. தமிழ், சிங்களம் முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தினை கூறிவருகின்றனர்.

இலங்கை நாட்டிலே அதிகம் பாதிக்கப்பட்ட சமுகமாக தமிழ்மக்கள் இருந்து கொண்டிருக் கின்றனர். ஆனால் தமக்கான தீர்வுவிடயத்தினை இன்னமும் கைவிடாத சமுகமாகவும் இருந்து கொண்டிருக்கின்றனர். மாறிவந்த அரசாங்கங்கள் ஒவ்வொருவரும் தீர்வுகளை வழங்காது இழுத்தடிப்பு செய்துவந்தமையே இந்த நாட்டில் பாரியதொரு இனப்பிரச்சினையும், யுத்தமும் நடைபெற்றமைக்கு காரணமாகும். இந்நிலையில், தமது பக்கத்தில் உள்ள இராணுவத்தினரை காப்பாற்றிக்கொள்ள வேண் டும் என நினைக்கின்ற அரசாங்கம், தமிழ் குறித்து விரைவான தீர்வுகளை எடுக்காமை கவலையளிக் கின்ற அதேவேளை அனைத்தையும் போராடியே பெறவேண்டியுள்ளன. இத்தருணத்தில் மறப்போம் மன்னிப்போம் ஏற்றுக்கொள்ளகூடியதொன்றா என் பதனை அரசு சிந்திக்க வேண்டும். தமிழ் மக்களின் நியாயங்களுக்கும், தீர்வுகளுக்கும் உடனடி பதில்கள் கிடைக்கின்ற போது சில நேரங்களில் மறப்போம் மனிப்போம் சாத்தியமாகலாம் என்பதே நிதர்சனம்.

எத்தனை காலம்தான் தமிழ் மக்களை ஏமாற்றுவர் இந்த நாட்டிலே?

பண்டாரவன்னியன்

யுத்தம் முடிந்த பின்னரும் இலங்கையிலிருந்து புலம்பெயரும் தமிழ் மக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறதே அன்றி குறைந்தபாடில்லை. ஏன் மக்கள் இலங்கையிலிருந்த இடம்பெயரும் முடிவில் இருக்கிறார்கள்? யார் இதற்கு காரணம்? இதன் தாக்கம் என்ன? என்பவற்றின் பார்வையாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

80 களில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக வலிபெறத் தொடங்கிய நிலையில் 1979 இல் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜேயவர்தனவினால் கொண்டு வரப்பட்ட அதிபயங்கர மனித உரிமை மீறல் சட்டமான பயங்கரவாத தடுப்புச் சட்டம், வகைதொகையின்றி தமிழ் இளைஞர்களைப் பாதித்தது.

திடீர் கைதுகள், காணாமல் போதல், கொலை, கடத்தல், கால அளவற்ற சிறைய டைப்பு என பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு தமிழ் இளைஞர்கள் முகம்கொடுக்கத் தொடங்கினர். இதனால் தாயகத்தில் வசிப்பதற்கு அச்சம் ஏற்படவே தமிழகத்தில் தஞ்சம் புகுந்தவர்கள் பின்னர் ஐரோப்பிய நாடுகள், அவுஸ்ரேலியா, கனடா, போன்ற நாடுகளில் தஞ்சம் புகத்தொடங்கியிருந்தனர்.

நான்காம் கட்ட ஈழப் போராட்;டம் 2006 இல் தொடங்கிய போது வடக்கு கிழக்கில் இருந்து பாரியளவான புலம்பெயர்வு இடம்பெற்றிருந்தது. இருந்த போதிலும் விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக மௌனித்த நிலையில் இன்றும் புலம்பெயர்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

கடந்த ஜனவரி மாதம் ஆபத்து நிறைந்த கடல் பயணத்தை மேற்கொண்டு சுமார் 72 பேர் மீன்பிடி படகு மூலம் பிரான்ஸிற்கு சொந்தமான ரீயூனியன் தீவிற்குச் சென்றிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை 64 பேர் நாடுகடத்தப்பட்ட நிலையில் இலங்கை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உண்மையில் தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பிரதான காரணமாக பொருளாதார வசதி வாய்ப்புக்கள் காணப்படுவதுடன் அடுத்ததாக அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையும் காணப்படுகின்றது.

படித்த இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் கல்வித் தகமைக்கு ஏற்ப வேலைவாய்ப்பு இல்லை. இதனால் பல குடும்பங்களுக்கு நாளாந்த வருமானம் பெரும்பாடாகவுள்ளது. தொழில் வாய்ப்பு இல்லாத காரணங்களினால் இளைஞர்கள் வீடுகளிலும், வேறுபகுதிகளிலும் நேரத்தை போக்குவதினால் பல்வேறு சமூக சீரழிவுகள் ஏற்படுகின்றது.

முறையான தொழில் இல்லாத காரணத்தினால் திருமண வயதினை அடைந்த இளைஞர்களுக்கு பெண் தேடுவது பாரிய சிக்கல் நிலை ஏற்படுகின்றது. இதேவேளை பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களில் வேறுவிதமான பிரச்சனைகள் நிலவுகின்றன.

இந்த நிலையில் பெற்றோர் தமது பிள்ளைகளை காணி, வீடுகளை விற்று வெளிநாடுகளுக்கு அனுப்ப முற்படுகின்றனர். பெண்பிள்ளைகளை வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு திருமணத்திற்காக அனுப்புகின்றனர்.

இதேவேளை நாட்டில் எந்தவித சமூக நல்லிணக்கச் செயற்பாடுகளும் இடம்பெறாத நிலையில் தமிழ் மக்கள் மீதான ஆதிக்கத்தில் தென்னிலங்கை உறுதியாக இருக்கின்றது. இராணுவ பலம் தமிழ் மக்களின் குடியருப்புக்களுடன் இருப்பதினால் எந்த நேரமும் தமது பிள்ளைகளுக்கு ஆபத்துக்கள் வரலாம் என்ற அச்சத்திலும் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு பெற்றோர் அனுப்பி வருகின்றனர்.

இவ்வாறு தமிழினம் தாய் நிலத்தைவிட்டு, வெளியேறுவதானது மிகவும் ஆபத்தானது. தமிழர் சனத்தொகை யுத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், புலம்பெயர்வுகள், அதிகரித்துள்ள விதவைகள் காரணமாக குறைவடைந்துள்ளது. மேலும் மக்கள் வெளியேறி முற்படும் போது தொடர்ச்சியாக தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்து அது இனத்துவ அடிப்படையில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தி சிறுபான்மையிலும் சிறுபான்மை என்ற நிலையை எட்டிவிடக் கூடிய ஆபத்து நிலை உள்ளது.

தமிழ் மக்களின் வெளியேற்றத்தினை தென்னிலங்கை வெளிப்படையாக வரவேற்காது விட்டாலும், தமிழ் மக்களின் வெளியேற்றமானது அவர்களின் பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்ற நிகழ்ச்சி நிரலுக்கு வாய்ப்பாக அமையும். இதனால் அவர்கள் தமிழ் மக்களின் வெளியேற்றம் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

அடுத்த பக்கத்தில் பார்த்தால், தமிழ் மக்களின் நாட்டை விட்டு வெளியேறும் செயற்பாடானது அரசியல் பேரம் பேசும் சக்தியின் வலுவினை இழக்கச் செய்வதுடன், நாடாளுமன்றத்தில் உள்ள மக்களின் பிரதிநிதித்துவத்திலும் பாதிப்பைக் கொண்டுவரும். இவ்வாறு அரசியல் பேசும் சக்தி வலுக்குறையும் போது இயல்பாக பொருளாதார முன்னேற்றம் பாதிப்படையும். இது தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வையே பாதிக்கச் செய்துவிடும்.

புலம்பெயர்ந்து செல்வர்கள் இன்றைய காலகட்டத்தில் புலம்பெயர்ந்து செல்லும் நாடுகளில் பாரிய நெருக்கடிகளை சந்தித்துவருகின்றனர்.. யுத்தம் இல்லாத காரணத்தினால் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு குடியுரிமை வழங்குவது மிகவும் கடினமாகக்ப்பட்டுள்ளது. அத்துடன் அரசியல் தஞ்சம் கோருபர்கள் உடனடியாக நாடு கடத்துக்கின்ற நிலைமையும் உள்ளது. இதனால் பல இலட்சம் ரூபாக்களை செலவு செய்து போனவர்கள், திரும்ப நாடு கடத்தலுக்கு உள்ளாகின்ற போது பாரிய கடனுக்குள் தள்ளப்படுவதுடன், இலங்கை அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற வழக்குகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த விடயம் உண்மையில் அரசியல் சார்ந்த பிரச்சனை. இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடமையாற்றத் தவறிவிட்டது. தென்னிலங்கையின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக, ஆட்சிக்கு முண்டுகொடுக்கின்ற சக்தியாக இருந்து கொண்டு, தமிழ் மக்களின் பொருளாதார பிரச்சனைக்கு தீர்வு காணப்பதற்கு முயற்சி செய்யாமல் இருப்பதானது வில்லங்கத்தனமானது.

இளைஞர்கள் இன்று சமூக சீரழிவுகளுக்குள் உள்ளாகின்றார்கள் என்றால் அதற்கு அவர்களின் பிரதிநிதிகளே காரணம். விதவைகளுக்கு தையல் இந்திரமும், கோழிக்குஞ்சும் வழங்கி விட்டு பொருளாதார முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள் என்றால் எவ்வாறு முடியும். எல்லாமே ஏமாற்று வேலை தான். வாக்கு வங்கிகளுக்கான பலமாகவே தமிழ் மக்கள் பார்க்கப்படுகின்றார்களே அன்றி, அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும், அவர்கள் நிம்மதியாக தாயக நிலத்தில் வாழ்வதற்கு வழிமுறைகளை ஏற்படுத்தும் செயற்திட்டம் கூட்டமைப்பிடம் இல்லை என்பதே தமிழ் மக்களின் கொதிநிலை.

உண்மையில் தமிழ் மக்களுக்கான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு வடக்கு கிழக்கில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கப்படல் வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிக்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும், விவசாய உற்த்திகளை அதிகரிப்பதற்கும், உற்பத்தி நிலங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் பண்ணை உற்பத்திகள், மற்றும் கைத்ததொழில் ஊக்குவிப்புகளை மேற்கொள்வதன் ஊடாக தமிழ் இளைஞர்களின் புலம்பெயர்வை கட்டுப்படுத்துவதுடன், அவர்களின் பொருளாதார வளர்ச்சியினை தாயகத்திலே மேற்கொள்ள முடியும். இந்த விடயத்தில் கூட்டமைப்பு அக்கறையுடன் பணியாற்ற வேண்டும் என்பதே இந்த கட்டுரையும் பிரதான நோக்கமாகும்.

கல்முனையில் மூடப்படுகின்ற அரச நிறுவனங்கள்

தந்திமகன்

கல்முனை கிழக்கின் முகவெற்றிலை என்பார்கள். கல்முனைப் பிராந்தியம் தென்கிழக்கின் முகமாகவும், கிழக்கின் மிகப்பெரிய வர்த்தக பிரதேசமாகவும், கரையோரப் பிரதேசத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தின் முக்கியத்துவம் கருதி கல்வி மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்ற போது கல்முனைக் கல்விமாவட்டம் எனும் பெயருடன் இன்றும் நிலைத்திருப்பதையும் காணலாம். அதுமாத்திரமன்றி கல்முனை பழைமையான பட்டணமாகவும், மூவினத்தாரும் சிறந்த முறையில் வாழ்ந்து வருவதுடன் குறிப்பாக முஸ்லிம்களின் தனித்துவ அடையாளங்களுடன் தமிழர்களும், சிறியளவு சிங்கள சகோதரர்களும் வாழ்ந்து வரும் இந்நகரில் பிரதேச எல்லையை வரையறை செய்கின்றபோது இங்கு பல அரச நிறுவனங்களையும் கொண்டிருக்க வேண்டிய கட்டாயமும், அவசியமும் காணப்படுகின்றன. ஆனால் அண்மையக் காலங்களில் அங்குள்ள அரசியல்வாதிகளின் அனுமதியின்றி அரசாங்கம் திடீர் திடீரென அரச நிறுவங்கள் காணாமல்போவது மன வேதனையை அளிப்பதாக அப்பிராந்திய மக்கள் கூறுகின்றனர்.

கல்முனை மாநகரமாக உயர்த்துவதில் முன்னாள் அமைச்சரும் கல்முனையைச் சேர்ந்தவருமான முஸ்லிம் காங்கிரஸின் வீரத்தளபதியுமான அல்ஹாஸ் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் ஆகியோர் மிகவும் பாடுபட்டுழைத்திருந்தனர். இவர்கள் இருவரும் கல்முனையை மிகவும் உன்னதமான நகரமாகவும் மாற்றியமைத்திருந்தனர். அப்போதிருந்தே கரையோர மாவட்டம் ஒன்றை அரசு தருமாக இருந்தால் அது கல்முனையை மையப்படுத்தியதாக அமையவேண்டும் என்கிற வேகத்தில் முன்னாள் அமைச்சர் மன்சூர் நகரை திட்டமிட்டு அரச யாக்கங்களுக்கு ஏற்றவிதமாக அமைத்திருந்தார். அந்த அமைவிடங்களில் இன்றும் அரச நிறுவனங்கள் பல இயங்கிவருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். அந்த இடத்தை முன்னாள் அமைச்சர் அஸ்ரப் அவர்கள் நிறைவேற்றி கல்முனையை மாநகரசபையாக்கினார். கல்முனை ஒரு வர்த்தக நகரமாகியதுடன், கிழக்கின் முழுவதும் அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகப் பெறுகின்ற ஒரு இடமாகவும் மாற்றியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால்தான் அன்று அமைச்சர் அஸ்ரப் அவர்கள் ஒலுவிலில் ஒரு துறைமுகத்தை அமைப்பதன் ஊடாக கிழக்கு மக்களுக்கு மேலும் இலகுவான முறையி;ல் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்கிற நோக்கிலும் அதனை அமைப்பதற்கு முயற்சித்திருந்தார். ஒலுவில் தென்கிழக்கின் தலைநகரமாகவும், கல்முனை தென்கிழக்கின் முகமாகவும் மாற்றுவதற்கான பல எத்தனங்களை அஸ்ரப் எடுத்திருந்தார். காலன் முந்திக் கொண்டதால் அவற்றில் பல முடியாமல் போய்விட்டது.

ஆனால் அந்த இடத்தை முஸ்லிம்காங்கிரஸின் பிரதித் தலைவர்களில் ஒருவரான தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் அலங்கரித்துக்கொண்டிருக்கின்றார். முஸ்லிம்காங்கிரஸின் கோட்டை என வர்ணிக்கப்படுகின்ற கல்முனையில் அமைந்திருக்கின்ற பல அரச நிறுவனங்கள் இரவோடு இரவாக அம்பாரை நகருக்கு நகர்த்தப்படுவதன் மர்மம்தான் என்ன? என்கிற கேள்விகளை மக்கள் இப்போது பாராளுமன்ற உறுப்பினரான பிரதியமைச்சர் கௌரவ ஹரீசிடம் கேட்கிறார்கள். அந்த வகையில் பல ஆண்டுகளாக இருந்து வந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிராந்தியப் பணியம் சில ஆண்டுகளுக்கு முன்னர் யாருக்கும் தெரியாமல் மூடப்பட்டது. இது தொடர்பாக முஸ்லிம் அமைச்சர்கள் அது மூடப்படாது என்கிற அறிவிப்பினை விடுத்திருந்த போதிலும் அது அவர்களது சொற்களைக் கேளாமல் அம்பாரைக்கு நகர்ந்து விட்டது.

அப்போது இதே பிரதியமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் இவ்வாறு கூறியிருந்தார் அதாவது கல்முனையில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினை இடமாற்றும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இக்காரியாலயம் தொடர்ந்தும் கல்முனையில் இயங்கும். இவ்விடயம் சம்பந்தமாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை. கல்முனையில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினை இடமாற்றுவது சம்பந்தமாக அம்பாறை மாவட்டத்தில் பெருன்பான்மை அரசியல் பலம் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கலந்தாலோசிக்கமால் இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொண்டதையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்களது கண்டனத்தை தெரிவித்ததுடன் இதனை உடனடியாக தடுத்து நிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இவ்வாறான இனரீதியான சிந்தனையினால் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள அரச காரியாலயங்களை இடமாற்றுவது அல்லது மூடுவது போன்ற நடவடிக்கையினால் மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசின் மீதுள்ள நம்பிக்கை எதிர்காலத்தில் இல்லாமல் போய் விடும். கல்முனை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகக் காரியாலயத்தில் நாளாந்தம் அதிகமானோர் பயிற்சிகளை பெற்று வெளியேறுகின்றனர். இதனால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு இலங்கையில் கூடுதல் வருமானம் உழைக்கின்ற மற்றும் கூடுதலான பயிற்சியாளர்களைக் கொண்டு இயங்குகின்ற காரியாலயங்களில் கல்முனைக் காரியாலயமும் ஒன்றாகும்.

இவ்வாறான காரியாலயத்தை இடமாற்றுவதன் மூலம் இதில் பயிற்சிகளை மேற்கொள்கின்ற இளைஞர்களும், யுவதிகளும் பெருமளவு பாதிக்கப்படுவர் என்கிற விடயங்களை அப்போது முஸ்லிம் காங்கிரஸ் குழுவினரால் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த நியாயங்களை அமைச்சராக இருந்த தலதா அத்துகொரள, ஏற்றுக்கொண்டதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால் சில மாதங்களுக்குள் அது அம்பாரைக்குச் சென்றுவிட்டது. இதுபோன்றொரு அரச நிறுவனமாக இருந்த பிராந்திய நீர்ப்பாசன திணைக்களம் போன்றனவும் அம்பாரைக்குச் சென்றுவிட்டன. அதே பிரச்சினை இப்போது அமைச்சர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்தியக் கிளை கல்முனையில் இருந்து நகரப்போகிறது என்கிற அறிகுறிகள் தெரிகின்றன. இவ்வாறு அரசியல் அதிகாரங்கள் இருக்கின்றபோது இவ்வாறு ஒவ்வொரு திணைக்களங்களும் நகருமாக இருந்தால் பிரதேச மக்கள் அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் வாக்களிப்பது எதற்காக எனவும் கேட்கின்றனர்.

அதாவது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை மூடிவிட்டு அதனை அம்பாறை நகரக் காரியாலயத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு, அதனை கல்முனை மாநகர சபையில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவிக்கின்றார். தனது வேண்டுகோளின் பேரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் ஆகியோர் எடுத்துக் கொண்ட அவசர நடவடிக்கையின் பயனாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

கடந்த பல வருடங்களாக தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருகின்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்திற்கு சொந்தக் கட்டிடம் இல்லாத விடயத்தையும் வாடகைப் பணம் அதிகம் செலுத்தப்படுவதாகவும் காரணம் காட்டி கடந்த வாரம் அதனை மூடிவிடுவதற்கான உத்தாவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விவகாரம் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை தொடர்ந்தும் கல்முனையில் இயங்க வைக்கும் பொருட்டு அக்காரியாலயத்திற்கு கல்முனை மாநகர சபையில் இடமளிப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டதுடன் அதற்கான இணக்கத்தைத் தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்திற்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்ததாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் துரிதமாக செயற்பட்டதன் பயனாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் கலாநிதி ஜகத் முனசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை இதற்கான அங்கீகாரக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். இதன் பிரகாரம் அடுத்த ஒரு சில தினங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை கல்முனை மாநகர சபை கட்டடமொன்றுக்கு இடமாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்தார்.

நல்ல விடயமாக இதனைப் பார்த்தாலும் இது யாருக்கும் தெரியால் ஏலவே சென்ற காரியாலங்களைப் போல இதுவும் போவதற்கான அறிகுறிகள் தெரிவிக்கப்படுகின்றன என்பதையே மக்கள் கூறுகின்றனர். மக்கள் காலடியில் அரச நிறுவனங்களை கொண்டுசென்று சேவையை மேற்கொள்ள வேண்டும் என்கிற நிலையை அன்று ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாஸ அவர்கள் மேற்கொண்டிருந்த சேவைகள் இப்போது மழுங்கடிக்கப்பட்டு அனைத்தையும் கரையோரப் பிரதேசங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போது அதேஅரசில் அங்கத்துவம் வகிக்கின்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஏன் வாய் மூடி மௌனியாகின்றனர். வாக்குக் கேட்கும்போது கரையோரத்தை மாவட்டமாக்குவேன் என்பார்கள். தேர்தல் முடிந்த கையுடன் அதனை மறந்து விடுவார்கள். கல்முனை அல்லது தென்கிழக்கு கரையோர தனித்துவமான மாவட்டக் கோரிக்கை இன்றும் கிடப்பில் இருக்கின்றது.

சாய்ந்தமருதுக்குரிய பிரதேச சபையை வெற்றிகொள்ள முடியாமல் திணறுகின்றவர்களிடம் மாவட்டத்தை எப்படிசார் எதிர்பார்ப்பது. உண்மையில் சிறியதொரு சாய்ந்தமருது பிரதேசசபை பிரச்சினை, கல்முனை தரவக் கோயில் அதாவது கடற்கடரைப் பள்ளி வீதி பெயரிடுதல், சந்தை விவகாரம் போன்றவை இன்னும் முடிவுறாமலே வருடங்கள் பல சென்றுவிட்டன. ஆனால் அதே அரசியல்வாதிகளுக்கு மீண்டும் மீண்டும் வாக்குகளை அளித்து அவர்களை உயர்த்;திவிடுகின்ற கைங்கரியத்தில்தான் மக்கள் இருக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும். புதியவர்கள் புதிய உத்வேகத்துடன் வெளியாக வேண்டும். மக்களுக்கு புதிய சேவைகளை மேற்கொள்ள வேண்டும்.

அண்மையில் நியமிக்கப்பட்ட கிழக்கின் ஆளுநர் கௌரவ எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அவர்கள் தினந்தோறும் பல்வேறு வேலைத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி மக்களுக்கு முன் சேவையாற்றி வருகின்றார். தனக்கு மாலைகள், தோறணங்கள் எதுவும் தேவையில்லை. மக்களுக்கு சரியான போய்ச் சேரவேண்டும் என்பதற்காக பல வீண்விரயங்களைத் தவிர்த்து வரும் ஆளுநரைப் பாராட்ட வேண்டும். ஆனால் பலர் அந்த மாலைகளையும், பொன்னாடைகளையும் பெறுவதற்காக பல லட்சங்களை செலவுசெய்கின்றனர். இவ்வாறு மாலைகள் விழுகின்றபோது பிராந்தியத்தின் அரச நிறுவனங்கள் வெளியேற்றப்படுகின்ற அவலை நிலை மாற வேண்டும். கல்முனை அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் அனைத்துவிதமான அரச நிறுவனங்களின் பிராந்தியக் காரியாலயங்கள் அமைகின்றபோது மக்கள் இலகுவாக அதன் பலனை அடைவார்கள். இல்லையேல் மொழிப் பிரச்சினைகளுடன், பல ஆயிரங்களை செலவு செய்து அம்பாரைக்கு ஏறி இறங்குவது என்பது கஸ்டமான காரியமாகும். அரசியல்வாதிகள் இதனை உணர்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும்.

மாணவர்களின் கல்வியை பாழாக்கும் கையடக்கத் தொலைபேசி கலாசாரம்

சத்தார் எம் ஜாவித்

உலகில் மனிதன் அறிவியல் ரீதியாக முன்னேறுவதில் எந்தவித தவறும் இல்லை. மனிதன் என்ற வகையில் அவன் முன்னேறவும், புதிய புதிய கண்டு பிடிப்புக்களையும் நோக்கி அவர் நகர வேண்டிய தேவையும் உள்ளது. மனிதனின் குணங்களுடனும், வாழ்வியல் அடிப்படைகளிலும் ஒன்றானவனாகவே வாழ்கின்றான்.

இந்த முன்னேற்றங்கள் அவனின் ஆதிகால செயற்பாடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு ஒரு பூரண அறிவுள்ள மனிதனாக வளர்ச்சியடைந்து மானிட வர்க்கத்திற்கு தேவையான பல்வேறு கண்டு பிடிப்புக்களையும், உற்பத்திகளையும் மேற்கொண்டு மனிதனை இயல்லான நிலையில் இருந்து ஒருவகையான இயந்திர வாழ்க்கைக்குள் ஈர்த்து சில கண்டுபிடிப்பு முன்னேற்றங்களின் காரணமாக மனிதனை மனிதன் அழித்துக் கொள்ளும் அளவிற்கு அவனது கண்டு பிடிப்புக்களும், அவற்றின் உற்பத்திகளும் இன்று முன்னேற்றம் கண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக மனித முன்னேற்றத்தின் மற்றொரு செயற்பாடுதான் ஆயுத கண்டு பிடிப்புக்களாகும். இது இன்று உலகை ஆட்டிப்படைத்து முழு மனித சமுகத்தினையும் அச்சத்திற்கு உள்ளாக்கி இருப்பதுடன் மனிதனின் அழிவுக்கு ஒவ்வொரு கணப் பொழுதிலும் சாவு மணி அடித்துக் கொண்டிருப்பதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் நிம்மதியற்ற நிலையில் ஒவ்வொரு நிமிடமும் அச்சத்தில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகளை உருவாக்கியுள்ளது எனலாம்.

இந்த விடயங்களுக்கு அப்பால் இன்று நவீன கண்டு பிடிப்புக்களில் ஒன்றாக திகழ்வது கையடக்கத் தொலை பேசிகளாகும். இவை இன்று உச்சக்கட்ட தொழிநுட்பங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கும், கவர்ச்சிக்கும் ஏற்ற வகையில் சர்வதேச ரீதியில் சந்தைகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. மனிதனின் முன்னேற்றத்தின் ஒரு அங்கமாக இதனை ஏற்றுக் கொண்டாலும் இதன் மூலம் மக்களுக்கு சாதக மற்றும் பாதக தன்மைகளைக் கொண்டதாக இருக்கின்றன. என்றாலும் இவற்றின் பாவனை விடயத்தில் மனிதன் பாதக சந்தர்ப்பங்களின் பக்கமே அதிகம் ஈர்க்கப்பட்டுக் கொண்டு செல்கின்றான் என்ற கவலையான செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

குறிப்பாக இன்று அதிநவீன கையடக் தொலை பேசிகள் மனித தொகைக்கு மேலாக பண்டமங்கு தொகையில் பாவனையில் இருப்பதை புள்ளி விபரங்கள் தெளிவுபடுத்துவதுடன் அதன் மூலம் பல பாதகமான செயற்பாடுகளும், பிரச்சினைகளும் ஏற்படுவதையும் இந்த புள்ளி விபரங்கள் மறுக்கவில்லை. அதிகமாக இன்று இந்த கையடக்கத் தொலைபேசிப் பாவனை என்பது இளைஞர்கள் மத்தியில் இன்று அதிகரித்து அவர்கள் கையடக்கத் தொலைபேசி இல்லாமல் வாழ முடியாது என்ற ஒரு வகையான ஈர்ப்பு சக்திக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இன்று சிறு பிள்ளைகளும், பாடசாலை மாணவர்களும் இந்த கையடக் தொலைபேசி கலாசாரத்தில் முற்றிலும் மூழ்கியவர்களாக அதிலிருந்து அவர்களை பிரிக்க முடியாதளவு அவற்றின் ஆக்கரமிப்புக்களும், தாக்கமும் அதிகரித்துள்ளது. இது பெற்றோர்கள் மத்தியில் பாரிய சவாலான விடயமாக இருந்தாலும் இதற்கு காரணமானவர்களும் பெற்றோர்கள் என்றால் அதற்கு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை எனலாம். காரணம் பிள்ளைகள் கேட்டுச் சண்டை பிடித்தவுடன் பெரும்பாலான பெற்றோர்கள் அதனை வாங்கிக் கொடுத்து

II ஆம் பக்கம் பார்க்க....

புதிய யாப்பு

நிறைவேறுவது சாத்தியமாகுமா?

சட்ட முதுமாணி வை.எல்.எஸ்.ஹமீட்

கல்முனை நிருபர்

புதிய அரசியலமைப்பிற்கான வரைபு அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு முஸ்லிம் அதனை படித்து அதன் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வானானால் அதில் முஸ்லிம்களுக்குள்ள ஆபத்தை விளங்கிக்கொள்வானானால் அவனால் நிம்மதியாகத் தூங்கமுடியாது.

இந்த யாப்பு வரைபு கடந்த மூன்றாண்டுகளுக்குமேலான முஸ்லிம் கட்சித்தலைவர்களும் உள்வாங்கப்பட்ட கலந்துரையாடலுக்குப்பின்தான் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நகல் யாப்பைத் தயாரிக்க சம்மதமளித்துவிட்டு அல்லது அதில் முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான காப்பீடுகள் எதுவும் உள்வாங்கப்படாத நிலையில் இந்த யாப்பு நிறைவேறாது; என்று ஒற்றை வசனத்தில் முஸ்லிம்களின் கண்களில் மண்தூவப்படுகிறது.

அவ்வாறு நிறைவேறாது என்று வைத்துக்கொண்டாலும் அதற்காக ஒரு யாப்புவரைபில் முஸ்லிம்களின் நலன் உள்வாங்கப்படத்தேவையில்லை; என்பது நியாயமான வாதமா? என்ற கேள்வி ஒரு புறமிருக்க; இதன் நடைமுறைச் சாத்தியம்பற்றி ஆராய்வோம்.

இந்த யாப்பு நிறைவேறாது என்பவர்கள் நாங்கள் வாக்களிக்க மாட்டோம்; அதனால் அது நிறைவேறாது என்ற அர்த்தத்திலோ அல்லது இதை நாங்கள் நிறைவேற்ற விடமாட்டோம்; என்ற அர்த்தத்திலோ, இது நிறைவேறாது; என்று கூறவில்லை. ஏனெனில் அவர்களது பாராளுமன்ற உரைகள் உட்பட அவர்களது தொடர்ச்சியான கருத்துக்கள் இந்த நகல் யாப்பை ஆதரிப்பதாகவே இருக்கின்றது.

அவர்கள் ‘இந்த யாப்பு நிறைவேறாது’ என்பதற்கான காரணம் ஒன்றில் மக்களைத் தாக்காட்டுவதாக இருக்க வேண்டும் அல்லது பிரதான எதிரணியான மஹிந்த தரப்பு இதனை எதிர்க்கின்றது. எனவே அரசு 2/3 ஐப் பெற்றுக்கொள்ளாது; என்பதாக இருக்க வேண்டும்.

வெளித்தோற்றத்தில் இது நிறைவேறாது; போன்றே தோன்றுகிறது. ஆனாலும் யதார்த்தநிலை சாத்தியப்பாடுகள் என்ன?

இந்த நாட்டு அரசியலில் கொள்கை, இலட்சியம், தேசியப்பார்வை என்கின்ற எதுவும் கிடையாது. அவை மேடைகளுக்கான ஆபரண பேச்சுக்கள் மாத்திரமே. ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்த 1920 களின் நடுப்பகுதியில் சமஷ்டியைப் பிரேரித்த பண்டாரநாயகதான் டட்லி- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்ததும் தனிச்சிங்கள சட்டத்தைக் கொண்டுவந்ததுமாகும்.

அதேபோன்றுதான் சகல இனங்களும் சேர்ந்து உருவாக்கிய ஐ தே கட்சிதான் பண்டா- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தது. எனவே, இந்நாட்டில் அனைத்துக்கட்சிகளினதும் கொள்கை, இலட்சியம் அனைத்தும் வெறும் அரசியல் சந்தர்ப்பவாதம்தான். அதில் அனைத்துக் கட்சிகளிடமும் ஒற்றுமை இருக்கின்றது.

இந்தப்பின்னணியில்தான் மஹிந்தவின் நிலைப்பாடு பார்க்கப்பட வேண்டும். இன்று மஹிந்தவினால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. தனது சொல் கேட்கக்கூடிய ஒருவரை ஜனாதிபதியாக்கி சட்டத்தைத் திருத்தி அக்கதிரைக்கு தான் மீண்டும் வந்துவிடவேண்டும்; என்பது அவரது இலக்கு.

இந்த விடயத்தில் தனது சகோதரர்களை நம்ப அவர் தயாரில்லை. சிராந்தியை இறக்கமுடியுமா? என ஆலோசிக்கின்றார். அவர் வெற்றிபெறுவாரா? கூட்டுக்கட்சிகள் உடன்படுமா? என்ற கேள்விகள் இருக்கின்றன. இந்தக் கேள்விக்கு அவர் காணப்போகின்றவிடை அல்லது அதற்கு மாற்றீடாக இன்னொருவரை அடையாளம் காணமுடியுமா? என்பதில் அவர் காணப்போகின்றவிடை அவருடைய யாப்புத்தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழித்துவிடுவதே சிறந்தது இன்னுமொருவரின்கீழ் பிரதமராக இருப்பதை விட; என்ற நிலைப்பாட்டிற்கு அவர் வரவேண்டிவரலாம். அவ்வாறான ஒரு நிலை தோன்றுமானால் சிலவேளை ஒரு சில திருத்தங்களுடன் இந்த யாப்பு இலகுவாக நிறைவேற்றப்படலாம்.

அவ்வாறு நடக்காது; என்று வைத்துக்கொள்வோம். அண்மையில் மஹிந்தவுடன் குஃகக இல் இணைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமார் ஐம்பது பேர். இதன்பொருள் வெளியில் அண்ணளவாக 175 பேர் இருக்கிறார்கள் என்பதாகும். தேவை 150 மாத்திரம் தான்.

ஒரு புறம் டயஸ்போராக்களின் பணபலம். இன்னொருபுறம் மேற்கத்தைய நாடுகள் வரிந்துகட்டிக்கொண்டு இதனைச் சாத்தியப்படுத்த வாரியிறைக்கும் வள்ளல் தன்மையோடு காத்திருப்பு. அடுத்தபுறம் மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களில் இலங்கைக்கு கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அழுத்தம். மறுபுறம் அதிகாரப்பகிர்வுக்கு முழுமையான ஆதரவு வழங்கும் சந்திரிக்கா, குஃஊக பா உ க்கள் பலருடன் ஐ தே க க்கு ஆதரவு வழங்க எடுக்கும் முயற்சி. இந்தப் பின்னணியில் 150 நிச்சயமாக தூரத்துப் பச்சை என்று கூறமுடியுமா?

இதற்கு இன்னொரு பக்கம் இருக்கின்றது. கோட்டாவுக்கு அமெரிக்க பிரஜாஉரிமையை நீக்க முடியாது போகும்; எனவே தனக்குத்தான் போட்டியிட மஹிந்த சந்தர்ப்பம் வழங்குவார்; என மனப்பால் குடிக்கின் றார்; மைத்திரி. அது பகல்கனவு என்பது புரிந்ததும் தனக்கு மீண்டும் கிடைக்காத ஜனாதிபதிப் பதவி இருக்கவே கூடாது; என எண்ணி சில திருத்தங்களுடன் அவர் ஆதரவளிக்கமாட்டார்; என்பதற்கு உத்தரவாதமில்லை.

இன்னொரு மூலையில் கோட்டா வேட்பாளராக வருவதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமில்லாத நிலையில் குமார்வெல்கம போன்ற பலர் இருக்கிறார்கள். அவர்கள் சந்திரிக்காவுடனும் பேசுவதாகக் கூறப்படுகிறது. அவர்கள் புதிய யாப்புக்கெதிரான தங்களது நிலைப்பாட்டை மாற்றமாட்டார்கள் என்பதற்கும் உத்தரவாதமில்லை.

இவை எல்லாவற்றிற்குமேலாக, நகல் யாப்பில் புதிய தேர்தல்முறை பிரேரிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக எல்லை நிர்ணயக்குழு அமைக்க பிரேரிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தமுறை வெற்றிபெற மாட்டோம்; என்கின்ற அச்சத்தில் உள்ள பா உ க்கள் எதிரணியில் இல்லாமலில்லை.

புதிய யாப்பை நிறைவேற்றி புதிய தேர்தல்முறைக்காக எல்லை நிர்ணயம் செய்வதற்காக பாராளுமன்றத் தேர்தலை ஒரு வருடமோ, இரு வருடமோ ஒத்திப்போட அதை மறைமுகமாகவோ, நேரடியாகவோ செய்வதற்கான சரத்தை கொண்டுவருவருவது சாத்திமற்றதல்ல.

மீள்பரிசீலனைக்கு மூன்று மாதங்கள் மட்டுமே வழங்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் எல்லை அறிக்கை கால வரையின்றி சென்றுகொண்டிருப்பதைக் கவனத்திற்கொள்க. சர்வஜன வாக்கெடுப்புக்குட்படுத்துவதால் தேர்தலை ஒத்திப்போடுவதில் சட்டப்பிரச்சினை எழாது. இந்நிலையில் இதற்கு ஆசைப்பட்டு வெற்றியில் நம்பிக்கையில்லாத பா உ க்கள் கை உயர்த்தமாட்டார்களா?

எனவே, ஒரே வசனத்தில் நிறைவேறாது என்று நாம் வாழாவிருப்பது அறிவுடமையாகுமா? சிலவேளை நிறைவேறாமலே போகலாம். நிறைவேறினால் .....என்ன செய்வது? நாம் இந்த நாட்டில் அடிமையாக மாறுவதா?

நிறைவேறுமோ! நிறைவேறாதோ! ஒரு யாப்பு வரையப்படும்போது எமது நலன்கள், நமது பாதுகாப்புக் காப்பீடுகள் அதற்குள் உள்வாங்கப்படத் தேவையில்லையா? ஏன் நாம் இந்த நாட்டில் இரண்டாம் தரப்பிரஜைகளா? நாம் வாய்பேசா ஊமைகளா?

மலையகத்தலைவர்கள் மலையகமக்களின் ஒரு சம்பளப் பிரச்சினைக்காக எப்படிப்போராடுகிறார்கள்! தமிழ்த் தலைவர்கள் அவர்களது பிரச்சினைகளுக்குக் எப்படிப்படிப் போராடுகிறார்கள்! நமக்குத் தலைவர்கள் இல்லையா? பிரதிநிதிகள் இல்லையா? எதற்காகவாவது போராடியிருக்கிறார்களா? போராடி எதையாவது பெற்றுத் தந்திருக்கிறார்களா?

நல்லாட்சி அரசுக்கு மறுவாழ்வு கொடுத்துவிட்டு பறிக்கப்பட்ட ஒரு அலுவலகத்தைக்கூட, பறிக்கப்பட்ட ஒரு ஏக்கர் காணியைக்கூட மீட்கமுடியாத ஓர் அபலைச்சமூகம் நாம். இந்நிலையில் இந்த நகல் யாப்பில் நமக்கு அடிமைச் சாசனம் எழுதிவைத்திருக்கின்றார்களே! யாராவது கவலைப்படுகின்றோமா? இந்த தலைவர்களை, இந்தப் பிரதிநிதிகளை அழைத்து இதில் என்ன இருக்கிறது? ஏன் இது எங்களைக் கண்டுகொள்ளவில்லை? என்றாவது கேட்டிருக்கின்றோமா?

அவர்களுக்கும் அதில் என்ன இருக்கின்றது என்று தெரியாது. நமக்கும் அதில் என்ன இருக்கின்றதென்று தெரியாது. அவர்களுக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை. நமக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை. என்ன சமூகம் நாம்?

அடிவிழுந்தால் ஒரு வாரம் முகநூலில் முழங்குவோம். அடுத்தமுறை அடிவிழும்வரை எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளமாட்டோம். அவர்களும் நம்மை நன்றாகவே புரிந்துவைத்திருக்கிறார்கள். அடுத்த தேர்தலுக்கு நமக்குத்தான் வோட்டுப்போடுவார்கள்; என்ற அசையாத நம்பிக்கை அவர்களுக்கு.

நம் தலைவிதியை மாற்றுவதெப்போது?

மாணவர்களின்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

விடுகின்றனர். மற்றுமொரு சாரார் தமது பெருமைக்காக வாங்கிக் கொடுத்து விடுகின்றனர் ஒட்டு மொத்தத்தில் பிள்ளைகளின் கல்வியும், எதிர் காலமும் முற்றிலும் பாலாகுமளவிற்கு இவற்றின் தாக்கம் அவர்களை அடிமைகளாக்கி விட்டது எனலாம்.

கல்வி என்பது ஒரு மனிதனின் அடிப்படையாகும். இதனை அவன் உரிய காலத்தில் கற்றுக் கொள்ளா விட்டால் பின்னர் அதனை பெற்றுக் கொள்ளவோ அல்லது கற்றுக் கொள்ளவோ முடியாது காரணம் ஒரு மனிதனுக்கு வயது செல்லச் செல்ல அவனின் ஞாபக சிந்தனைகளும், திடகாத்திரமும் குறைவடைந்து சென்று விடும் அதன் பின்னர் அவனுக்கு கல்வியில் ஆற்றல் அற்ற நிலைமைகளே தோன்றும் எனலாம். இதன் காரணமாகத்தான் இளமையில் கற்கும்படி கூறப்படுகின்றது. குறிப்பாக சமயங்கள்கூட கல்வியின் அவசியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் வழியுறுத்தி வருகின்றது. இந்த வடியில் ஒருவன் பூரணமானவனாக சமுகத்தில் மதிக்கத்தக்கவனாக வாழ வேண்டுமானால் அவன் சிறந்த கல்வி, ஞானம் கொண்டவனாக மற்றவர்களுக்கு நல்ல வழிமுறைகளை போதிப்பவனாக இருக்க வேண்டும். அதன் மூலமே அவன் சமுகத்தில் சிறந்தவனாக மதிக்கப்படுவான்.

இந்த வடியில் மனிதன் அறிவு மற்றும் கற்றல் விடயங்களில் தம்மை மாற்றிக் கொள்ளாத வரையில் சமுகத்தில் மாற்றத்தை கண்டு கொள்ளவோ அல்லது மாற்றத்தை ஏற்படுத்தி விடவோ முடியாது எனலாம். குறிப்பாக ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒழுக்க விடயங்களில் மிக அவதானமாக இருக்க வேண்டும். கல்வி பயிலும் எந்த ஒரு

மாணவருக்கும் தேவையற்ற வகையில் கையடக் தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கவோ அல்லது அவற்றைப் பாவிக்க அனுமதிப்பதோ ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல.

ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயமாக இந்த விடயத்தில் கட்டுப்பாடுகளுடன் இருந்து அவர்களை கண்காணிக்க வேண்டும். அவர்களின் கல்வி முடியும் வரை அவர்கள் விடயத்தில் சிரத்தையுடன் இருந்து அவர்களை சமுகத்தில் சிறந்தவர்களாக உயர் கல்விகளை சிறப்பாக கற்கக் கூடியவர்களாக மாறுவதற்கு தேவையான உதவிகளை பெற்றோர்கள் வழங்க வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்.

தற்போதைய காலத்தில் நவீன கையடக்கத் தொலைபேசிகளின் ஆக்கிரமிப்புக்கள் பல மாணவர்களின் கல்வியை இல்லாது செய்துள்ளதுடன் அவர்களை பலவாறான பாரிய பிரச்சினைகளுக்கும் உள்ளாக்கி இருக்கின்றது. குறிப்பாக பலருக்கு எவ்வாறு எந்தத் தேவைக்கு எப்படிப் பாவிப்பது என்பது தெரியாது ஒரு வகையான சந்தோசக் களிப்பில் அவர்கள் தம்மை அறியாமலேயே அவற்றின் மூலம் தேவையற்ற வகையில் பாவித்து பிரச்சினைகளை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளின்றனர்.

பல மாணவர்கள் தவறான விடயங்களுக்கும், தவறான காட்சிகளை எடுப்பதற்கும், அவற்றைப் பாவிப்பதற்கும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர். இது சமுகத்தில் பாரிய சமுக மற்றும் இனப்பிரச்சினைகளைக்கூட தோற்று வித்து வருகின்றது. குறிப்பாக சில தவிர்க்க வேண்டிய விடயங்களில் மனித நாகரீகத்திற்கு அப்பால்பட்ட வகையில் அவற்றினை பயன்படுத்திப் பல சிக்கல்களையும், சண்டைகளையும்கூட ஏற்படுத்தி விடுகின்றனர்.

அண்மையில் கிரலாகல தூபி மீதேறிய பல்கலைக்கழக மாணவர்கள் படமெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பல சிரமங்கள், பிரயத்தனங்களின் மத்தியில் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட விடயம்கூட இந்தக் கையடக்கத் தொலைபேசிகளின் அதிகபட்ச பாவனையின் காரணமாக ஏற்பட்ட விபரீதங்கள் எனலாம். இந்த விடயத்தின் சம்பவங்கள் நடந்தேறி முடிவடைந்து ஒருவார காலத்திற்குள் திஹாரியிலுள்ள ஒரு அரபுக் கல்லூரியின் இரு மாணவர்கள் தாது கோபுரத்தில் படமெடுத்தார்கள் என்ற சந்தேகத்தில் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளமை முழு முஸ்லிம் சமுகத்தினையும் கவலை கொள்ள வைத்துள்ளது.

முன்னைய சம்பவம் ஏதோ ஒரு வகையில் தெரியாத்தனமாக இடம் பெற்றது என்றும் அது ஒரு வருடத்திற்கு முன் இடம் பெற்ற சம்பவம் என்ற வகையில் அந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பலமான பிரயத்தனங்களின் மத்தியில் விடுதலை செய்யப்பட விடயம் இலங்கை வாழ் சகல மக்களுக்கும் தெரிந்த விடயமாக இருக்கின்ற நிலையில் இரண்டாவது சம்பவம் தெரிந்து கொண்டு செய்த ஒரு சம்பவமாகவே இதனை நோக்க வெண்டியுள்ளது. நாம் என்னதான் பெறுமதியான கையடக்கத்தக்க தொலைபேசிகளை வைத்திருந்தாலும் அவற்றை எதற்குப் பாவிக்க வேண்டும் என்ற விடயத்தை முதலில் கவனத்திற் கொள்ள வேண்டும். அடுத்ததாக பொது இடங்களில் அவற்றின் மூலம் படங்களை எடுக்கும்போது நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குகளை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் நடந்து கொள்ள வேண்டிய விடமும் இருக்கின்றது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிக் கொடுப்பதை தவிர்த்து அவர்களுக்கு நல்ல கல்வி அறிவுள்ள புத்தகங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் நல்ல சிந்தனை உள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும் மாறுவதற்கு அது வழி சமைக்கும். மாறாக படிக்க வேண்டிய நேரத்தில் அவர்கள் நவீன கையடக்க தொலைபேசிகளின் பக்கம் அவர்கள் தமது சிந்தனைகளை கொண்டு செல்வார்களானால் அவர்களின் கல்விக்காக பெற்றோர்கள் செலவழிக்கும் பணம் வீணானதாகவே அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

இன்று பல பிள்ளைகளைப் பார்த்தால் பெற்றோர்களின் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்து பாவிப்பதும், கார்ட்டூன் படங்களைப் பார்ப்பதாலும் அவர்கள் ஒரு வகையான ஈர்ப்பு சக்திக்குள் உள்வாங்கப்பட்டு அதனைப் பாவிக்கா விட்டால் ஒரு வகையான குழப்பமடைந்த மன நிலையில் பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களாகவும், பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களின் சொல்லைக் கேட்காதவர்களாகவும் மாறுவதை அவதானிக்க முடியும். இதன் மூலம் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இழக்கும் சந்தர்ப்பங்களையே ஏற்படுத்தி விடுகின்றது.

எனவே தமது அழிவிற்கு வித்திடும் கையடக்கத் தொலைபேசி பாவனையிலிருந்து சிறு பிள்ளைகளையும், பாடசாலை மாணவர்களையும் பாதுகாத்துக் கொள்ள பெற்றோர்கள் அதீத கவனத்துடன் அவர்களின் பிடிவாதங்களுக்கு இடமளிக்காது அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பதுடன் கையடக்க தொலைபேசி பாவனையின் விபரீதங்கள் பற்றியும் அதன் மூலம் கல்வி செயழிழந்து செல்வதையும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பும் கடப்படும் சகல பெற்றோர்களுக்கும், பிள்ளைகளின் பாதுகாவலர்களுக்கும் உள்ள பொறுப்பாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு

கிழக்குத் தமிழர்களின் எதிர்காலம் பற்றி சிந்திக்குமா?

க.விஜயரெத்தினம்

தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்துக்கொண்டு பாராளுமன்ற நாற்காலியை மட்டுமே சூடாக்கி கொண்டு திரிகின்ற தமிழ் அரசியல் தலைமைகள் முதலில் உங்களது DNA பரிசோதனை செய்வதை தவிர்த்து கொள்ளவேண்டும். எமது சகோதர இனத்தின் பல்துறை சார்ந்த வளர்ச்சியையும்,அவர்களின் தூரநோக்கு சிந்தனையையும்,மற்றும் கல்வி,பொருளாதார இலக்குகள் பற்றி ஆழப்பார்வை செலுத்தியும் தமிழ் இனத்தினுடைய வாழ்வாதாரம்,பொருளாதாரம், கல்வி,கலை,கலாசாரம்,விளையாட்டு அதன்பால் பல்துறை சார் வளர்ச்சி போன்ற பல துறைகளில் எமது இனத்தின் வளர்ச்சிப் பாதைக்கு எவ்வாறு கொண்டு செல்வது என்பது பற்றியும்,தமிழ்தேசிய கூட்டமைப்பு இனியாவது சிந்திக்க வேண்டுமென வடகிழக்கில் உள்ள பொதுமக்கள்,புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் அண்மைக்கால நிலைப்பாடுகள்,செயற்பாடுகள் சம்பந்தமாக பொதுமக்கள்,புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மேலும் குறிப்பிடுகையில்:-

தமிழ்தேசிய கூட்டமைப்பில் எதிர்வரும் காலங்களில் இணைந்து கொள்பவர்களுக்கு மரபணு பரிசோதனை செய்வதை தவிர்க்குமாறும்,ஆளுக்காள் நீங்கள் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் குறைகூறுவதை நிறுத்திக் கொண்டு வடகிழக்கு தமிழ்மக்களின் நலன்சார்ந்த விடயங்களை சித்தித்து செயலாற்ற வேண்டும்.ஏன் என்றால் நீங்கள் யாருமே யோக்கியவான்கள் அல்ல என்பது தமிழ் மக்கள் நன்கறிந்த உண்மையாகும்.

இதுதான் எமது தமிழ்மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கிய இறுதியான சந்தர்ப்பம் ஆகும். மீதம் உள்ள காலத்திலும் எஞ்சியிருக்கின்றதையும் சுருட்டுவதை சுருட்டிக் கொண்டு ஓடுவதற்கு தாயார் ஆகுங்கள்.இனிவரும் காலங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை புத்திஜீவிகள், பொதுமக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஐக்கிய இலைக்குள் தமிழ்தேசிய கூட்டமைப்பு தமிழ்மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் என்று தமிழ்மக்கள் மூன்று தசாப்தங்களை கடந்து வந்துள்ள நிலையில் இனியும் தமிழ்மக்கள் ஏமாறமாட்டார்கள்.தங்களையும்,தங்களின் வியாபாரத்தையும் பெருக்கிக்கொண்டும்,தங்களின் குடுப்பத்தையும் உன்னிப்பாக கவனித்துக்கொண்டு செயற்படும் தமிழ்தேசிய கூட்டமைப்பையை சிந்திக்க தெரிந்த மக்கள் நிராகரிப்பார்கள் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

கடந்த 30 வருடங்களில் தமிழ்சமூகம் பாரிய பின்னடைவுகளை சந்தித்துள்ளது. வேலைவாய்ப்பு,அபிவிருத்தி,கல்வி,பொருளாதார முன்னேற்றங்கள்,உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட 100 மேற்பட்ட விடயங்களில் பாரிய சரிவுகளை தமிழ்மக்கள் எதிர்நோக்கியுள்ளார்கள்.இருந்தபோதிலும் தொடர்ச்சியாக தமிழ்தேசிய கூட்டமைப்பை நம்பியே வாழ்ந்த தமிழ்மக்களை தமிழ்தேசிய கூட்டமைப்பினர் தற்போது கையை விரித்துள்ளார்கள்.இன்று கூட்டமைப்பை நாடிச்செல்லும் பொதுமக்களை தமிழ்தேசிய கூட்டமைப்பினர் காரியங்களை சாதித்து கொடுப்பதில் அலட்சியைப் போக்கை கடைப்பிடிப்பதால் மாற்றுச் சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகளை நாடுமளவுக்கு தமிழ்மக்கள் உள்ளார்கள். இதனால் தமிழ்மக்கள் மூன்றாம்தரப்பிரஜையாக கருதப்படுகின்றார்கள்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவின் ஆலோசனை,வழிகாட்டலின் பேரில் வைத்தியசாலைகள் கிழக்கில் தரமுயர்த்தப்பட்டு வருகின்றது.சுமார் 6000 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 13 வைத்தியசாலைகளில் ஒன்று கூட தமிழ் பகுதிகளில் இல்லை.அதில் மூன்று வைத்தியசாலைகள் கிழக்கில் அதாவது ஏறாவூர்,சம்மாந்துறை,பொத்துவில் போன்றன தெரிவு செய்யப்பட்டு அங்ககுரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்று வருகின்றது.சீன அரசாங்கத்தின் 234 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் மட்டக்களப்பு ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சுகாதார போஷனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன ஞாயிற்றுக்கிழமை 10.02.2019 அங்குரார்ப்பணம் செய்தார். இவ்வைத்தியசாலையில் நவீன வசதிகளைக் கொண்ட நோயாளர் விடுதி, மகப்பேற்று விடுதி, இரத்த வங்கி, சத்திரசிகிச்சைக் கூடம் ஆரம்ப சிகிச்சைப் பிரிவு என்பவை அடங்கலாக 3மாடிக் கட்டிடம் அமையப் பெறவுள்ளது.

இவ்வாறு கிழக்கின் நிலைப்பாடு இருக்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசை நிலைநிறுத்துவதற்கு,சர்வதேசத்திலும்,உள்நாட்டிலும் களங்கமில்லாத நற்பெயரை ஏற்படுத்தியும் ரணிலுக்காக வழக்கில் வாதாடி வென்று கொடுத்த கூட்டணிக்காரர்களுக்கு இதெல்லாம் தெரியாதா? என தமிழ்மக்கள் கேள்வி கேட்கின்றார்கள்.இவையெல்லாம் சம்பந்தன், சுமந்திரன்,மாவை சேனாதிராசா மற்றும் கிழக்கை பிரதிநிதிப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் விவசாய அமைச்சர்,மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள்,பிரதி தவிசாளர்கள்,உறுப்பினர்கள் போன்றோர்கள் கண்ணைக் மூடிக்கொண்டு இருக்கின்றார்களா? அல்லது இவையெல்லாம் கண்டும் காணாமலும் செயற்படுகின்றார்களா என பொதுமக்கள் கேள்வி கேட்கின்றார்கள்.

தமிழ்மக்களுக்கு தீர்வு பெற்றுத்தருவோம்,இனப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைப்போம், என்று 30 வருடங்கள் வெற்றுக்கோசம் எழுப்பிவரும் தமிழ்தேசிய கூட்டமைப்பு தற்போது புதிய அரசியல் அமைப்புமூலம் தீர்வு கிடைக்கும் என நம்பிக்கொண்டு இருக்கின்றது.புதிய அரசியல்யாப்பு சீர்திருத்தத்திலும் தமிழர்களுக்கு தீர்வு கிடையாது என்பதுதான் உட்கிடையான முடிவாகும்.இவ்வாறு பல ஆண்டுகளை கடந்துள்ளநிலையில் இன்னும் தீர்வு கிடைக்கும் என தமிழ்மக்கள் நம்பத்தேவையில்லை.தமிழ்தேசிய கூட்டமைப்பு உயர்பீட அரசியல் வல்லுநர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பாவி தமிழினம் நடுரோட்ல நாதியற்று கிடக்கின்றது என்பதை இன்னும் கண்விழித்து பார்க்கவில்லை என்பதுதான் உண்மையாகும்.

தமிழ் மக்களுக்கு மாற்றம் ஏற்படவேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சுப் பொறுப்புகளை ஏற்று சேவையாற்றவேண்டும்.

கடந்த நான்கு வருட ஆட்சியில் எந்தவித முன்னேற்றமும் தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை. தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளனர்.தற்போது அரசாங்கத்தில் ஏற்றப்பட்ட மாற்றம் என்பது தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையினையும் ஏற்படுத்தப்போவதில்லை.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் போட்டிகள்,பொறமைகள் பிரச்சினைகள் காரணமாக எதிர்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சிதைவடையும்.இவ்வாறான நிலையில் அந்த இடைவெளியை நிரப்பும் வகையில் பாரிய கட்சியாக தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும்,கருணா அம்மான் கட்சியும் ஒன்று சேர்ந்து கிழக்குத்தமிழர்களை பாதுகாக்கும் என்பதுதான் இன்றைய கிழக்குத்தமிழர்களின் தூரநோக்கு சிந்தனையாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு எவரும் இல்லாத நிலையே இன்று உருவாகியுள்ளது.

கிழக்கில் குறைந்து வரும் தமிழர்களின் வீதாசாரம் வரட்டு கௌரவம் பார்த்தால் அடிமைத்துவமே நிலையாகும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன வீதாசாரம் குறைந்து கொண்டே செல்கின்றது. அரசியல் கொள்கை பாரம்பரியம் பேசிக் கொண்டு காலத்தினை இழுத்தடித்தால் கிழக்கில் தமிழர்கள் மாற்று சமுகங்களிடம் அரசியல் அடிமையாகும் நிலை தோன்றிவிடும்.

1960ஆம் ஆண்டு இதேபோன்று ஒரு அரசியல் சூழ்நிலையேற்பட்ட போது அன்று அதனை தமிழ் அரசியல் தலைமைகள் சரியாக பயன்படுத்தாத காரணத்தினாலேயே இன்று தமிழ் மக்கள் இன்று பல்வேறு இழப்புகளை எதிர்கொள்வதற்கு காரணமாக அமைந்தது.தமது சமூகத்தின் இலக்கினை அடைவதற்காக அரசியல் தலைமைகள் கிடைக்கும் சூழலை சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.சிறுபான்மை அரசியல் தலைமைகளுக்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது.குறிப்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பு தூசி பிடித்துள்ள கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும்.வாக்களித்த மக்களுக்கும்,பிரதேசத்துக்கும் தேவையான வளப்பக்கீடுகள்,ஒதுக்கீடுகள்,வேலைவாய்ப்புக்கள்,உட்கட்டமைப்பு வசதிகளையும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுத்து மாற்றுச்சமூகம் தங்களின் சமூகத்தையும்,இனத்தையும் வாழவைப்பது போன்று தமிழ்மக்களை வாழவைப்பதில் கரிசனை காட்டவேண்டும்.உரிமை,தேசிய கொள்கையுடன் சமாந்தரமாக அபிவிருத்தியையும் பெறவேண்டும்.

30வருடகால யுத்தத்தில் போராட்டத்தில் இணைந்த தமிழ்மக்களும்,அவர்களின் பிள்ளைகள்,அவரது உறவுகள் அழிந்தார்கள்.அழிந்ததுமட்டுமல்ல தமிழர்களின் கல்வி,பொருளாதாரம்,இருப்பு,நிருவாகம்,நிதி,உள்ளிட்ட பல விடயங்கள் அழிக்கப்பட்டுள்ளது.இன்னும் அழிவைச் சந்திப்பதற்கு தமிழ்மக்கள் தயாரில்லை.தமிழ்மக்களை வைத்து கபடநாடகமாடி அரசியல் செய்யும் வங்குரோத்து அரசியல் தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட வேண்டும்.

தமிழர்களின் 30 வருட ஆயுத போராட்டம் 30 வருட அரசியல் போராட்டங்களின் விழைவாக கிடைத்த ஆகக்குறைந்த நிர்வாக மாகாணசபை முறைமையினையும் கிழக்கு தமிழர்கள் அனுபவிக்க முடியாது வேடிக்கை பார்க்கும் நிலையினை மாற்றி 2008-2012 வரை சிவநேசதுரை-சந்திரகாந்தன்(பிள்ளையான்) கிழக்கு மாகாண முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழரின் இருப்பை நிலைநாட்டினார். அத்துடன் இன,மத,மொழி பேதமின்றி சமத்துவமான ஆட்சியும் நடாத்திக்காட்டினார். ஆனால் 2012 இன் பின்னர் 2015 இன் பின்னர் என என்ன நடந்தது என அனைவருக்கும் தெரியும்.

தமிழர்களிடம் நில,நிருவாக,நிதி ரீதியாக எப்படி நசுக்கப்படுகின்றனர் என்றும் தெரியும். யார் சரி, யார் பிழை என்று பார்ப்பதற்கான நேரமல்ல இது. எது சரி, எது தவறு என்றே பார்க்க வேண்டும் ஒவ்வொரு அரசியல் கருத்துக்கள் கொள்கைகள் இருக்கும்.இது கொள்கைகளைப் பற்றி பேசி கிழக்கு தமிழரின் இருப்பை இல்லாமல் செய்யும் செயற்பாட்டில் யார் ஈடுபட்டாலும் அதனை அனுமதிக்க முடியாது.2018 உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த பின்னர் கொள்கை பேசியதன் விளைவு கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் அன்றைய கட்சிகளை இணைக்கும் முயற்சி தோல்வியடைந்ததன் விளைவு செங்கலடி பிரதேச சபையின் செயற்பாடுகள் மூலம் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

1881ம் ஆண்டு கிழக்கில் 58.96 வீதமாக இருந்த தமிழர்கள் 1981ம் ஆண்டு 42.06 வீதமாகவும்,2012ம் ஆண்டு 39.79வீதமாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது. கிழக்கு மாகாணத்தில் 617295 தமிழர்கள் 569738 முஸ்லீம்கள் 359136 சிங்களவருமாக இன ரீதியான சனத்தொகையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். 49456 மேலதிக சனத்தொகையுடனேயே தமிழர்கள் கிழக்கில் 1ம் இடத்திலுள்ளனர். இந் நிலை இன்னும் 5 வருடத்திலேயோ அல்லது 10 வருடத்திலேயோ மாற்றமடையலாம்.

எனவே அரசியல் கட்சிகள் வடக்குடன் ஒப்பிட்டோ அல்லது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டோ போவதை ஒத்திவைத்து கிழக்கு மாகாண மக்களின் எதிர்காலம் குறித்து திறந்த மனதுடன் இதயங்களை பேசவைக்க வேண்டும். வாய்வார்த்தையால் பேசிவிட்டுச் செல்லக்கூடாது.கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் இருப்பிற்காக வலுவான எதிர்காலத்திற்காக எவ்விதமான ஏற்றுக் கொள்ளக்கூடிய விட்டுக் கொடுப்புகளுடனும் பேசுவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தயாராக உள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

செம்மொழியான தமிழ் மொழியே....

மையாகக் கொண்டு 34 நாடுகளில் வாழ்வோர் பேசும் மொழியாக உள்ளதுடன் தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாகவும் வரிசைப்படுத்தலில் இது முதல் இருபது மொழிகளுக்குள்ளும் அடங்குகிறது. தமிழ்மொழி ஒரு செம்மொழி என்பதற்கான அங்கீகார அறிவித்தல் 2004 ஜூன் 06 இல் அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் அப்துல் கலாமினால் வழங்கப்பட்டது. சீனாவின் யுன்னான் மாகாணத்திலுள்ள மின்சு பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கான பிரிவொன்று 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 மார்ச் தொடக்கம் அங்கு கற்கைநெறிகள் இடம் பெற்று வருகின்றது.

இன்று உலகில் பல்வேறு மொழிகளையும் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர். தனது தாய்மொழியுடன் பிறமொழிகளையும் தொழில் மற்றும் இடம்பெயர்வு போன்ற காரணங்களினாலும் பிற மொழிகளைப் பேசவேண்டுமென்ற ஆசையினாலும் பேசுவோரும் உள்ளனர். ஒவ்வொருவரும் பேசுகின்ற தாய்மொழியைக் கொண்டு அவர்கள் அந்தந்த மொழிக்குரிய இனத்தவராகக் கருதப்படுகின்றனர்.

எஸ்.நாகராஜா

ஆரம்பத்தில் உலகம் முழுவதிலும் பத்தாயிரம் தொடக்கம் பதினையாயிரம் மொழிகள் வழக்கத்தில் இருந்ததாக அறியமுடிகிறது. தற்போது அவற்றில் அதிகமானவை அழிந்து போக அழிவிலிருந்து தப்பிப்பிழைத்து ஆறாயிரம் தொடக்கம் ஏழாயிரம் வரையான மொழிகளே வழக்கத்தில் இருப்பதுடன் இவற்றில் பல மொழிகள் அழிந்துபோகக் கூடிய அபாயத்தையும் எதிர்நோக்கி வருகின்றன. உலகில் முதல்மொழி எங்கு எப்போது எப்படித் தோன்றியது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் எழுத்து வடிவில் இல்லாவிட்டாலும் ஆரம்பகால மனிதர்கள் சைகைகளைக் காட்டிக் குரல்கொடுக்கத் தொடங்கியதிலிருந்து மொழியும் தோன்றியிருக்கலாமென்பது மொழிபற்றிய ஆய்வாளர்களின் கூற்றாகும்.

ஒரு நாட்டின் உரிமையுள்ள குடிமகனாக வாழ்வதற்கு அந்நாட்டில் அவன் பேசும் மொழிக்கான உரிமையும் அங்கீகாரமும் இருத்தல் அவசியம். ஆனால் பல இனங்கள் வாழுகின்ற நாடுகளில் பல போராட்டங்களுக்கு மத்தியில்த்தான் மொழி உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் மொழி தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி டாக்கா பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் காரணமாகக் கொல்லப்பட்ட மாணவர்களின் மொழி உரிமை தொடர்பான பிரச்சனையைப் அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் யுனஸ்கோ அமைப்பு 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற அமர்வின்போது பெப்ரவரி 21 ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாகப் பிரகடனப்படுத்துவது என எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய 2000 ஆம் ஆண்டு தொடக்கம் பலநாடுகளால் இந்தத் தாய்மொழி தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன் பங்களாதேஷ் நாட்டில் இத்தினம் பொது விடுமுறை தினமாகவும் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மொழி உரிமை, மொழியின் சிறப்பு, மொழியின் பாதுகாப்பு, மொழியும் இனஐக்கியமும், மொழியின் பெறுமதி, மொழியும் சமாதானமும், அபிவிருத்தி போன்ற மையக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தொணிப்பொருளின் கீழ் இத்தினம் அனுஷ்டிக்கபடுகிறது.

ஒவ்வொரு மொழியையும் பேசுகின்ற மக்களின் சனத்தொகையை அடிப்படையாக வைத்து அம்மொழி நிலைத்து நிற்குமா அல்லது அழிந்து போகுமா என்பதனை நிச்சயிக்க முடியும். ஒரு மொழியைப் பேசுவோர் எண்ணிக்கை குறையக் குறைய அம்மொழி அழிவடைவதற்கான அறிகுறியாக அதனைக் கொள்ளலாம். ஒரு மொழியின் அடையாளமே அந்த மொழியைப் பேசி வந்தவர்களின் கலை, கலாசாரப் பாரம்பரிய விழுமியங்களைப் பிரதிபலித்துக் காட்டும் ஊடகமாகும். பண்டைக்கால எகிப்திய, சுமேரிய, ருஸ்கானிய நாகரீக கால மொழிகள் இன்று இல்லை. அவை அழிவடைந்துவிட்டன. அமீதுபோன்று ஆபிரிக்க, ஆசிய, ஆஸ்திரேலிய நாடுகளிலுள்ள சிறுபான்மையின மக்கள் பேசும் மொழிகளும் அழிவடைந்து



கொண்டு வருகின்றன.

இன்று உலகில் பேசப்படும் மொழிகளில் மாண்டரின், ஆங்கிலம், ஹிந்தி, ஸ்பானிஷ், ரஷ்யன், அரபி, பெங்காலி, போர்த்துகீஸ், மலாய், ஜப்பானிஷ் ஆகிய மொழிகள் முன்னிலையில் உள்ளன. எமது தாய்மொழியான தமிழ் மொழியும் பல நூற்றாண்டு கால தொன்மையான வரலாற்றைக் கொண்ட சுமார் எட்டுக் கோடி மக்களால் பேசப்படும் ஒரு மொழியாகவும் உள்ளது. இன்று தமிழ்மொழி தமிழ்நாடு, இந்தியப் பிற மாநிலங்கள், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளை முதன்

எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிங்களத்தையும் தமிழையும் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழுகின்ற ஒரு நாடாகும். ஆரம்பத்தில் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக இருந்து வந்ததுடன் 1988 தொடக்கம் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டிருப்பதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாக உள்ளது. அரச கரும மொழிகள் தொடர்பாக

13 ஆம் பக்கம் பார்க்க....

போதைப் பொருட்களின் கூடாரமாக திகழும் கொழும்பு

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போதைப் பொருள் ஒழிப்புத் தொடாபான விழிப்புணர்வு நடவடிக்கையை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் கிராமங்களிலும் ஆரம்பித்து வைத்துள்ள நிலையில், போதைப் பொருள் வியாபரத்துடன் இலங்கைப் படையினருக்குத் தொடர்புள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குறிப்பாக வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பிரதேங்களில் படையினர் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருட்களை விநியோகிப்பதாக முன்னாள் வடமாகாண சபை முதல்வர் சீ.வி.விக்னேஸ்வரன் ஏலவே குற்றம் சுமத்தியிருந்தார். இந்த நிலையில் 639 கிராம் ஹெரோயினுடன் முல்லைத்தீவு பிரதேசத்தில் உள்ள விசேட அதிரடிப்படை படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியொருவர் கலகெதரவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தன்னுடைய மேலதிகாரியொருவரே இந்த ஹெரோயின் போதைப்பொருளை வழங்கியதாக கைதான பொலிஸ் அதிகாரி தனது வாக்குமூலத்தில் சாட்சியமளித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ்த்தேசிய அரசியல் சிந்தனைகளைச் சீரழிக்கும் நோக்கிலும் திசை மாற்றவும் போதைப் பொருள் பாவனைகளை இலங்கை இராணுவம் இளைஞர்கள் மத்தியில் ஊக்குவித்தது.

இதனால், கொழும்பின் புறநகர் பகுதியான ரம்புக்கனை பிரதேசத்தில் உள்ள குறித்த பொலிஸ் உயர் அதிகாரியின் வீட்டை பொலிஸார் சோதனையிட்டனர்.

அங்கிருந்து எம் 60 ரக ஐந்து ரவைகளுடன் மகசின் ,ரி 56 துப்பாக்கி மற்றும் 46 ரவைகள், விமானப்படை சீருடைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆகவே இலங்கைப் பொலிஸாருக்கும் இலங்கைப் படையினருக்கும் போதைப் பொருள் வியாபாரத்தில் தொடர்புள்ளமை வெளியாகியுள்ளது.

போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய மேலும் பல இலங்கைப் படை உயர் அதிகாரிகள், கொழும்பு அரசியல் செல்வாக்கினால் சுதந்திரமாக நடமாடுவதாக ஜே.வி.பியும் குற்றம் சுமத்தியுள்ளது.

அதேவேளை, கொழும்பு- கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தில் 39 வயதுடைய பெண் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பெண், டுபாயில் கைதாகியுள்ள கஞ்சிபானி இம்ரானின் சட்டபூர்வமற்ற இரண்டாவது மனைவி என்று கொட்டாஞ்சேனைப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தப் பெண் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுபவரெனக் கூறியுள்ள பொலிஸார். மற்றுமொரு பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர்களே இந்தப் பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பொலிஸாரே திட்டமிட்ட முறையில் இந்தப் பெண் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் மாக்கந்துர மதுஸ் டுபாயில் கைது செய்யப்பட்டதை அடுத்து போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய பாதளா உலகக் குழுவைச் சேர்ந்த பலர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நடத்தப்பட்ட தேடுதலில் இதுவரை ஆயிரத்தி 130 கிலோகிராம் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரூவான் குணசேகர கூறியுள்ளார்.

அதேவேளை, கொழும்பு மருதானை மேம்பாலத்துக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை விபத்துக்குள்ளன ஜீப் ஒன்றில் இருந்தும் பெருமளவு ஹெரோயின் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆனால், இவை தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் நடப்பதில்லை என்றும் அரசியல் செல்வாக்குகள் பின்னணியில் இருப்பதாகவும் ஜே.வி.பி உறுப்பினர் ஹந்துந்நெத்தி கூறியுள்ளார்.

மாக்கந்துர மதுஸ் டுபாயில் கைது செய்யப்பட்டமை குறித்தும் பிரபல அரசியல்வாதிகள் பாதாள உலகக்குழுக்களுடன் தொடர்பு வைத்துள்ளமை பற்றியும் இலங்கை நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துமாறு ஜே.வி.பி., சபாநாயர் கரு ஜயசூரியவிடம் கோரியுள்ளது.

வடக்கு- கிழக்கில் போதைப் பொருள் பாவனையை ஊக்குவித்து தமிழ் இளைஞர்களை அரசியல் சிந்தனையற்றவர்களாக மாற்ற முற்பட்ட கொழும்பு, தற்போது அந்தப் போதைப் பொருளின் கூடாரமாக மாறியுள்ளமைதான் வேடிக்கையானது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ்த்தேசிய அரசியல் சிந்தனைகளை சீரழிக்கும் நோக்கிலும் திசை மாற்றவும் போதைப் பொருள் பாவனைகளை இலங்கை இராணுவம் இளைஞர்கள் மத்தியில் ஊக்குவித்தது.

பாடசாலை மாணவர்களுக்கு இரகசியமான முறையில் இலவசமாகவும் இலங்கைப் படையினர் போதைப் பொருட்களை விநியோகித்தமை குறித்து முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள் பகிரங்கமாவே குற்றம் சுமத்தியிருந்தனர்.

போதைப் பொருள் பாவனையில் யாழ்ப்பாணம் முதலாவது என்றும் மட்டக்களப்பு இரண்டாம் இடமென்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிண்டலாக வேறு கூறியுமிருந்தார்.

ஆனால், தமிழர் தாயகப் பகுதியில் முகாம் அமைத்துள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் படையினரே போதைப் பொருட்களை பாவிப்பதாகவும் தமிழ் இளைஞர்கள் அல்ல எனவும் யாழ் செய்தியாளர்கள், கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடக வகுப்பு ஒன்றில் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையில் மாக்கந்துர மதுஸ் டுபாயில் கைது செய்யப்பட்டதன் பின்னணியில் கொழும்பு போதைப் பொருள் கூடாரமாக திகழ்ந்து வருகின்றமை அம்பலமாகியுள்ளது.

அமைச்சர்கள், பிரபல அரசியல்வாதிகள் சிலருக்கு போதைப் பொருள் வியாபாரம், வருமானம் ஈட்டும் ஒன்றாக மாறியுள்ளது. எவ்வாறாயினும் வடக்கு- கிழக்கில் போதைப் பொருள் பாவனையை ஊக்குவித்து தமிழ் இளைஞர்களை அரசியல் சிந்தனையற்றவர்களாக மாற்ற முற்பட்ட கொழும்பு, தற்போது அந்தப் போதைப் பொருளின் கூடாரமாக மாறியுள்ளமைதான் வேடிக்கை.

நிலைமை இவ்வாறிருக்க, ஏன் தமிழர் தாயகமான முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் போதைப் பொருள் ஒழிப்புக்காண விழப்புணர்வு நடவடிக்கைகளை மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் ஆரம்பித்து வைத்தார் என்பது இங்கு கேள்வி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட ஏற்பாட்டில் மாக்கந்துர மதுஸ் டுபாயில் டுபாயில் கைது செய்யப்பட்டார். ஏனெனில் மைத்திரி, இலங்கையின் முன்னாள் பாதுகாப்பச் செயலாளர் கேட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீதான கொலைக் குற்றச்சாட்டில் மாக்கந்துர மதுஸ் உள்ளிட்ட குழுவுக்கும் தொடர்புள்ளது.

இந்த நிலையிலே மைத்திரி- ரணில் மோதல் மேலும் வலுவடையும் என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் தமிழ் மக்களின் தமிழ்த் தேசியச் சிந்தனையை இலங்கைத் தேசிய அரசியலில் கரைக்க முற்பட்ட சிங்கள அரசியல் கட்சிகள் இன்று தமக்குள்ளேயே முரண்பட்டு சிதறப்படுகின்றன.

மைத்திரி, மகிந்த, ரணில், சந்திரிகா என வெவ்வேறு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளன. ஒன்று சேரக் கூட முடியாத நிலையில் அவர்கள் தவிக்கின்றனர்.

அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்-

ஒன்று- இலங்கை இராணுவத்தைப் பயன்படுத்தி வடக்கு- கிழக்கில் போதைப் பொருள் பவானையை ஊக்குவித்து தமிழ்த் தேசிய சிந்தனை சிதைக்க முற்பட்டமை.

இரண்டாவது- 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் இலங்கை இரணுவத்தின் எண்ணிக்கையை வடக்கு கிழக்கில் குறைத்து முகாம்களை மூடாமல், அங்கு சிவில் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டை அனுமதித்ததோடு போதைப் பொருள் பாவனைக்கான சுதந்திரத்தையும் கையளித்தமை.

நன்றி: இணையம்

போராட்டமும் புறக்கணிப்பும்

தீர்வு குறித்து ஆராய தயாராகும் பெரும்பான்மை தலைமைகள் சமஷ்டியை ஆராயத் தயாராக இல்லை என்ற காரணியே தீர்வுக்கு பிரதான தடையாக உள்ளது

இலங்கையின் அரசியல் நெருக்கடி மற்றும் தீர்வுக்கான முயற்சி என்பது இன்று நேற்று பேசப்பட்டு வரும் விடயமல்ல. கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்னர் அவசியமான ஒன்றாகவும் அதற்கு முன்னர் இருந்தும் இதற்கான தேவையும் நோக்கமும் உருப்பெற்றுவிட்டது.

இலங்கை சுதந்திரப் போராட்டத்தை மட்டுமல்ல, உள்நாட்டு யுத்தத்தையும் எதிர்கொண்டு மிகச்சிறந்த அனுபவங்களை கொண்டுள்ளது. இனப்பிரச்சினை மற்றும் ஆயுதப் போராட்டம் என்பவற்றை மிக நீண்ட காலமாக எதிர்கொண்டு அதில் இழப்புக்களை பெருவாரியாக சந்தித்து நாட்டின் சகல மக்களும் வலிகளை சந்தித்த வரலாற்று பாடம் எமக்கு உண்டு.

கடந்த கால கசப்பான அனுபவங்களை கொண்டு அதிலிருந்து விடுபட்டு தீர்வுகளை நோக்கிய பாதையில் பயணிக்க வேண்டும் என்ற தெளிவான சிந்தனை உருப்பெறத் தொடங்கியவுடன் இந்த நெருக்கடிகளின் போதும் நெருக்கடிகளின் பின்னரும் தீர்வுகளை எட்ட அரசாங்கமும் சரி தமிழர் தரப்பும் சரி பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தன. இதில் சில நேரங்களில் தீர்வுகள் கையளவில் எட்டவிருந்த சந்தர்ப்பங்கள் தமிழர் தரப்பினரால் தவறவிடப்பட்டன. அதேபோல் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிங்களத் தரப்பினர் தீர்வுகளை குழப்பியும், நிராகரித்தும் சென்றுள்ளனர்.

எனினும் நீண்ட காலமாக அரசியல் பிரச்சினைகள் குறித்து எடுத்த முயற்சிகளின் விளைவுகள் எந்தளவு வெற்றி பெற்றன என்றால் அது கேள்வியே. எனினும் அரசியல் தீர்வு என்ற விடயத்தில் புதிய அரசியலமைப்பின் தேவை மற்றும் அதற்கான முயற்சிகள் என்பதே பிரதானமானதாகும். எப்போது சிங்கள தேசமெனும் தனி சிந்தனை சிங்கள தரப்பினரால் முன்வைக்கப்பட்டு அதற்கான அரசியல் வரைவு ஒன்று உருவாக்கப்பட்டதோ அன்றிலிருந்து நெருக்கடியும் முரண்பாடுகளும் உக்கிரமடைய ஆரம்பித்துவிட்டன.

அரசியலமைப்பு நாட்டின் ஜனநாயக பாதையின் அடிப்படையாகும். இனங்களை ஒன்றிணைக்க, நாட்டினை கட்டியெழுப்ப ஆரம்பப்புள்ளி அரசியலமைப்பில் இருந்து தொடங்குகின்றது. வெற்றிபெற்ற நாடுகளின் முற்றுப்புள்ளியும் கூட அரசியல் அமைப்பேயாகும். நாம் பல்லின சமூகம், இதில் சிங்களவர்கள் பெருமளவில் வாழ்வதால் அவர்கள் பெரும்பான்மை, தமிழ் பேசும் மக்கள் குறைந்த அளவில் வாழ்வதால் நாம் சிறுபான்மையினர். இது எண்ணிக்கை அடிப்படையில் கருதப்படுகின்றதே தவிர தமிழ்ப் பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்குவதிலோ சுதந்திர பாதையை உருவாக்கிக்கொடுப்பதிலோ சிறுபான்மைத் தனமாக சிந்திக்கக்கூடாது.

எனினும் இன்றுவரை இந்த நாட்டில் மூவினத்தவரையும் ஒன்றிணைக்க முடியாமல் போயுள்ளதென்றால் அதற்கு இந்த பாகுபாடே காரணமாகும் எனலாம். தொடர்ச்சியாக ஒரு இனம் தம்மை மேதாவியாகக் காட்டிக்கொண்டு ஏனையவர்களை அடிமைகளாக நினைக்க தொடங்கியதன் விளைவுகள், பாதுகாப்பு என்ற பெயரில் சிறுபான்மையினரின் உரிமையை பறித்தமை என்ற காரணிகள் மட்டுமல்லாது கல்வித்தகைமையை, ஆளுமையை திட்டமிட்டு அழித்தமை போன்ற காரணிகள் முரண்பாட்டுக்கான பலமான அடித்தளத்தை அமைத்தன.

எவ்வாறிருப்பினும், இன்றைய அரசியல் நெருக்கடிக்கு சமஷ்டி முறைமை தீர்வாக அமையும் என்பதே சிறுபான்மைக் கட்சிகளின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. அதனையே அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருகின்றனர். தமிழர் தரப்பு தனி அடையாளமாக தனி அதிகாரங்களை கொண்டு செயற்படுவது உரிமையை பாதுகாக்கும் என்பதே அதன் அர்த்தம். ஆனால் தீர்வு குறித்து ஆராய தயாராகும் பெரும்பான்மைத் தலைமைகள் சமஷ்டியை ஆராய தயாராக இல்லை என்ற காரணியே தீர்வுக்கு பிரதான தடையாக உள்ளது.

எவ்வாறிருப்பினும் இன்று தீர்வுகள் குறித்து பேசுவதும் புதிய அரசியலமைப்பின் மூலமாக தீர்வுகளை எட்ட நினைப்பதும் நல்லாட்சி அரசாங்கத்திலேதான் முதல் முயற்சி என்றல்ல. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதிலிருந்து புதிய அரசியலமைப்பு ஒன்றின் தேவை பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்தந்த அரசாங்கங்கள் முன்வைத்த காரணியேயாகும். எனினும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரதான இரண்டு கட்சிகளுமே அரசியலமைப்பின் இறுதி வடிவத்தை ஏதோ ஒரு காரணம் காட்டி நிராகரித்து அல்லது தீர்வை குழப்பிவிட்டன.

புதிய அரசியலமைப்பு குறித்து இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் தமிழர் தரப்பு கொண்டிராத அக்கறை இம்முறை அதாவது 2015 ஆம் ஆண்டிற்கு பின்னர் அவர்களால் கையாளப்பட்டது. இன்றும் தமிழர் அரசியல் தலைமைகள் அதற்கான முழு முயற்சியை முன்னெடுத்து வருகின்றனர் என்பதே உண்மையாகும். குறிப்பாக புதிய அரசியலமைப்பு குறித்த கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் சிவில் அமைப்புகள், பொதுமக்களின் கருத்துகளை திரட்டும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டு இன்று அவற்றை ஒன்றிணைத்து பாராளுமன்ற வழிநடத்தல் குழுவினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதித்துவக் கட்சிகள் மிகவும் இலகுவான போக்கினை கையாண்டு தீர்வு என்ற நோக்கத்தை எட்ட முழுமையாக முயற்சித்து வருகின்றனர் என்பது அவர்களின் முன்மொழிவுகளில் தெட்டத்தெளிவாக அவதானிக்க முடிகின்றது. புதிய அரசியலமைப்பினை எந்த வழியிலேனும் உருவாக்கி அதில் தமிழர் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் புலப்பட்டுள்ளது.

அரசியலமைப்பே இலங்கையின் உச்ச சட்டமாக இருக்கும் என்ற முதல் அங்கீகாரத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் ஓர் ஐக்கிய, பிரிக்க முடியாத மற்றும் பிரிக்கப்படாத நாட்டின் கட்டமைப்பிற்கு உள்ளாக ஓர் சமஷ்டி அரசாக இருக்கும், மாகாணங்களின் மையமானது அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் தமக்கு தகுதி வாய்ந்த விடயங்களில் பிரத்தியேக அதிகாரத்தை செயற்படுத்தும்.

மத்திய அரசாங்கத்தை நிராகரிக்காத அதேநேரம் மாகாணங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கம் அவர்களின் முன்மொழிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேபோல் இலங்கையின் மதம் என்ற விடயத்தில் இலங்கை ஒரு மதச் சார்பற்ற நாடாக இருத்தல் வேண்டும் என்பதாகும். எனினும் பௌத்த மதம் பிரதான மதமாக பெரும்பான்மை தரப்பு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் நிபந்தனை மற்றும் விதிமுறைகளுக்கு அமைய அதனை கையாள முடியும் என கூறுகின்றனர்.

மாகாண சபைகளை பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது என்பதே உண்மையாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாணமாக அரசாக உருவாக்கப்பட வேண்டும். அதுவும் சகல மக்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்யக்கூடிய போதியளவு பாதுகாப்புகள் இருத்தல் வேண்டும் என உறுதியான நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

எனினும் இந்த நிலைப்பாட்டிற்கு எந்தவொரு முஸ்லிம் அரசியல் தரப்பும் தயாரில்லை என்ற காரணியும் சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும். அரசியலமைப்பு குறித்த முஸ்லிம் தரப்பின் முன்மொழிவுகளில் இலங்கையின் மாகாணங்கள் ஒன்பதாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் உறுதியான நிலைப்பாடாகும். அத்துடன் அவ்வாறு இணைக்கும் முயற்சியை எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது அமைப்போ முயற்சிக்க இடமளிக்கக் கூடாது என்பதை அவர்களின் முன்மொழிவுகளாக முன்வைத்துள்ளனர்.

அதேபோல் ஆளுநர் விவகாரத்திலும் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணங்களுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான சீரான தொழில்முறை உறவொன்றை உறுதிசெய்வதற்காக முயற்சிக்க வேண்டும் என்பதுடன் மாகாணங்களின் நிறைவேற்று அதிகார பிரயோகத்தில் தலையிடுவதற்கான எந்தத் தத்துவத்தையும் கொண்டிருத்தலாகாது. ஆளுநரின் தத்துவங்கள் அரசியலமைப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்ட வேண்டும் என்ற காரணிகளை தமிழர் தரப்பு தெட்டத்தெளிவாக உயரிய சபையில் முன்மொழிந்துள்ளது.

இந்த காரணிகள் ஒன்றும் நாட்டினை பங்குபோடும் கோட்பாடுகள் அல்ல. தமிழர் தரப்பு இவற்றை முன்வைக்க முன்னரே சிங்கள தலைமைகள் சர்வதேசத்திடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் உயரிய அதிகார பகிர்வுகள் குறித்து வாக்குறுதிகளை கொடுத்துள்ளனர். யுத்தத்தின் பின்னர் அதியுச்ச அதிகாரப் பகிர்வு பற்றி கூறியவர்கள்தான் இவர்கள். ஆனால் நிறைவேறாத வாக்குறுதியாகவே அனைத்தும் நீடிக்கின்றமையே வருத்தமளிக்கிறது.

தீர்வு என்ற விடயத்தில் இன்னமும் தமிழர் தரப்பின் வலிகளை, அவர்களின் உணர்வுகளை சிங்களப் பெரும்பான்மை சமூகமோ தலைமைகளோ முழுமையாக உணர்ந்துகொள்ளவில்லை என்பதே உண்மையாகும். ஒரு நாட்டுக்குள் தமிழர் தரப்புடன் வாழ சிங்கள மக்களே அச்சம் கொள்கின்றனர். காரணம் கேட்டால் ஆயுத வரலாற்றை கூறுகின்றனர். இன்று ஜனநாயகம் பேசும் சிங்கள தலைமைகள், சுதந்திர தின கொண்டாட்டங்களில் ஈடுபடும் சிங்கள தரப்பினர் அவற்றை உணர்வுபூர்வமாகத்தான் கொண்டாடுகின்றனரா என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

தேசியவாதிகள் என்ற போர்வையில் இனவாதத்தை கக்குவது ஜனநாயகமாம். எது ஜனநாயகம்? எமது உணர்வுகளுக்கு எமது உரிமைகளுக்கு இடம்கொடுக்காது ஒட்டுமொத்த இனத்தையும் அடக்கிவைத்து ஆள நினைப்பதன் பெயர் ஜனநாயகமா? எனது பசிக்கு சோறு வேண்டும் என கேட்கக் கூட எமது இனத்துக்கு உரிமை இல்லையா? நான், எனது மண்ணின் உற்பத்தியை சுயேச்சையாக கையாள உரிமை இல்லையா? இதுவா 70 ஆண்டுகால சுதந்திர இலங்கையின் ஜனநாயக போக்கு என்ற காத்திரமான கேள்வி தமிழர் தரப்பில் எழுந்துவிட்டது.

தமிழர்கள் உரிமையை கேட்டால் தனி நாடு கேட்கின்றனர் என விமர்சனம் முன்வைக்கின்றனர். நாங்கள் இலங்கையர்கள் எனக் கூறிக்கொண்டுதான் இருக்கின்றோம். அவர்கள்தான் எம்மை இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. பிரிவினைவாதிகள் பிரிவினைவாதிகள் என அவர்கள்தான் எங்களைப்பார்த்து கூறிக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பௌத்த வாதம், அறம், விட்டுகொடுப்பு, அமைதி என போதித்த கௌதம புத்தரின் சிந்தனையை மீறிய அடிப்படை வாதமும் அடக்குமுறையும் இன்று விதைக்கப்பட்டு அதுவே ஆட்சியையும் தீர்மானிக்கும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. தீர்வுகளை சிந்திக்கும் அதனை முன்வைக்க முனையும் சகல சந்தர்ப்பங்களையும் தனிநாட்டு கோரிக்கை என சிறுபான்மையினரின் வாய்களை மூடிவிடுகின்றனர்.

நீங்கள் எங்களை ஈழத்தவர் என கூறுவதும் தமிழர் என கூறுவதும் தேசிய வாதம் என்றால் நாங்கள் எங்களை தமிழர், ஈழத்தவர் என கூறினால் பிரிவினைவாதிகளா? அடிவாங்கி அழும் பிள்ளைக்கும் ஆசையில் அழும் பிள்ளைக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. நாம் அடிவாங்கி அழும் பிள்ளைகள் எமக்குத்தான் வலிகளினதும் சுமைகளினதும் அர்த்தம் விளங்கும். அதனை உணர வேண்டியது பேரினவாத தலைமைகளின் கடமை. உணர்த்திக்கொண்டுதான் இருக்கின்றோம். உணர்ந்தும் ஒரு சுயநல நோக்கத்துக்காக பேரினவாதம் காதுகளை மூடிக்கொண்டுள்ளது. நாம் பயங்கரமானவர்கள் அல்ல என்பது தெரிந்தும் எம்மை பயங்கரவாதிகளாக உருவகப்படுத்திவிட்டீர்கள்.

தமிழ்த் தலைமைகளின் நோக்கம் ஒன்றுதான். அரசியல் நெருக்கடிக்கு தீர்வு வேண்டும். அதற்கு புதிய அரசியலமைப்பு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதே நிலைப்பாடு. அந்த நோக்கம் இருப்பவன் கையில் ஒருநாள் ஆட்சி கிடைக்க வேண்டும். நோக்கம் இல்லாத தலைமைகளின் கைகளில் ஆட்சி அதிகாரங்கள் தொடர்ச்சியாக சென்றடைகின்றது. தீர்வுகள் நோக்கிய பயணத்தை முன்னெடுக்கும் போதே ஏதோ ஒரு சக்தி அதனை தடுக்கின்றது. அதனை தாண்டி எந்தவொரு அரசியல் தலைமையினாலும் செயற்பட முடியாது போகின்றமையே இன்றுவரை சாபக்கேடாக அமைந்து வருகின்றது. அவ்வாறு இருக்கையில் புதிய அரசியலமைப்பு எப்போது உருவாவது?

நன்றி: இணையம்

செம்மொழி...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

எழும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் மொழி அமுலாக்கத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குமென அரச கரும மொழிகள் அமைச்சும் அரச கரும மொழிகள் திணைக்களமும் உருவாக்கப்பட்டுள்ளது. இருந்தும் மொழிக் கையாள்கையில் பிரச்சனைகள் இன்னும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளது.

இன்று மொழிகள் அழிவடைவதற்கு யுத்தம், இடம்பெயர்வு, பெரும்பான்மை இன மொழி அமுலாக்கம், வர்த்தகம், சிறுபான்மை இன மக்கள் மீது அரசியல், கலாசார ரீதியிலான நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்படுவது போன்ற பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றது. எவ்வாறு இருந்தாலும் தத்தமது மொழிகள் அழிந்து போகா வண்ணமும் மொழியின் அடையாளமாக இருந்துவரும் கலை கலாசாரப், பாரம்பரிய விழுமியங்களை தொடர்ந்து பாதுகாப்பதும் அம்மொழிகளைப் பேசிவரும் மக்களின் தலையாய கடமையாகும். அதுபோன்று சங்க காலம் தொட்டு பல மன்னர்களாலும்,

புலவர்கள், அறிஞர்கள் போன்றோராலும் பாதுகாக்கப்பட்டு செந்தமிழ், முத்தமிழ், நற்றமிழ் என்றெல்லாம் போற்றுமளவிற்கு பல சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்பட்டுவரும் எமது தாய்மொழியான தமிழையும் உயிர் மூச்சாகக் கொண்டு அதன் தன்மை குறையாது பாதுகாப்போமாக.

அமைதிக்காகக் காத்திருக்கும் ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பதில், தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும் உலகளாவிய அளவிலும் முயற்சிகள் நடக்கின்றன. போரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதில் அமெரிக்கா தீவிர முனைப்பு காட்டி வரும் நிலையில், கணிக்க முடியாத அதிபராலும், தீவிரமாக இயங்கிவரும் சிறப்புத் தூதர் ஜால்மே காலில்ஸாதாலும் இந்த விவகாரம் உச்சமடைந் துவருகிறது. 1994-ல், ஆப்கன் அரசைக் கவிழ்த் துவிட்டு தாலிபான்கள் ஆட்சியைக் கைப்பற் றியதைப்போல், மீண்டும் நிகழ்ந்துவிடுமோ எனும் அச்சம் ஆப்கனில் அதிகரித்துவருகிறது. பதற்றத்துடன் இருக்கும் அமெரிக்காவுக்கும் அதீத நம்பிக்கை கொண்ட பாகிஸ்தானுக்கும் இடையில் அவசரகோலத்தில் உருவாகவிருக்கும் ஒப்பந்தத் தின் மூலம், ஆப்கன் அரசு, அந்நாட்டின் அரசியல் வட்டாரம், ஜனநாயக அமைப்பு ஆகியவை ஏமாற் றத்துக்குள்ளாகவிருக்கின்றன. பதற்றம், பயம், இறுமாப்பு ஆகியவற்றின் மூலம் ஒரு அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம். ஆனால், அப்ப டியான ஒரு ஒப்பந்தம், அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கிய, நீடித்து நிலைக்கக்கூடிய அமைதி யைக் கொண்டுவராது.

ஒரு பிரச்சினையின் முக்கியக் காரணிகளைக் களைவதுதான், நிலையான அமைதித் தீர்வை ஏற் படுத்துவதற்கான அடிப்படை நோக்கமாக இருக்க முடியும். ஆப்கன் பிரச்சினையின் வேர்கள் அடிப்ப டையில் மத, இன ரீதியிலானவை. வெளிக்காரணி களும் உண்டு. ஆப்கன் அரசு மற்றும் சமூகத்தின் அடையாளம், சட்டபூர்வத் தன்மை, இறை யாண்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை நடந்துவருகிறது.

பஷ்தூன்களின் ஆதிக்கம் கொண்ட நாடாக ஆப் கன் இருக்க வேண்டுமா அல்லது பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாடாக இருக்க வேண்டுமா? நாட் டின் உண்மையான அடையாளம் என்பது இஸ்லா மிய / மதச்சார்புள்ள அரசா அல்லது அரசியல் ச ட்ட குடியரசா? பாகிஸ்தானின் கைப்பாவையாக இருக்க வேண்டுமா அல்லது சுதந்திரமான நாடாக இருக்க வேண்டுமா?

அமைதி தராத ஒப்பந்தங்கள்

1979-ல் ஆப்கன் பிரச்சினை தொடங்கியது முதலே, எண்ணற்ற அமைதி முயற்சிகளும் ஒப் பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இடதுசாரி அதிபரான நஜிபுல்லா அஹ்மத்ஜாயி அரசு, புர்ஹானுதீன் ரப்பானி தலைமையிலான முஜாஹிதீன் அரசு, மேற்கத்திய நாடுகளின் ஆதர வுடன் அமைந்த ஹமீத் கர்ஸாய் மற்றும் அஷ்ரஃப் கனியின் அரசுகள் அதிகாரப் பகிர்வு, ஜனநாயக அரசு நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு காண முயன்றன. ஆனால், அதில் தோல்வியைச் சந்தித்தன.

1994-ல் ஆட்சிக்கு வந்த தாலிபான் அரசு, முழு வெற்றியைப் பெறுவது; தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவுவது ஆகிய நோக்கங்களில் உறுதி யுடன் இருந்தது. தாலிபான் அமைப்பு என்பது அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் தேசியவாதக் கிளர்ச்சி அமைப்பு அல்ல. மாறாக, பாகிஸ்தானின் புவி வியூகக் கொள்கைகளுக்கு ஏற்ப ஒரு அரசியல் சூழலை மீண்டும் ஏற்படுத் துவதில் உறுதியுடன் செயல்படும் ஒரு சித்தாந்த இயக்கம். ஆப்கனில் சர்வதேசப் படைகள் இருப்பது, தாலிபான் அமைப்பின் நோக்கத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

பிரதான கேள்விகள் இவைதான்: தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவும் தாலிபானின் லட்சிய மானது, பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு, தேர் தல் அடிப்படையிலான அரசியல் ஆகியவற்றுக்குப் பொருத்தமானதா? இறையாண்மை கொண்ட, சுதந்திரமான ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் ஏற் றுக்கொள்ளுமா? தேசக் கட்டுமானம், ஜனநாயகம யமாக்குதல், பன்மைத்துவம் ஆகியவற்றில் நிகழ்த் தப்பட்டிருக்கும் பலவீனமான சாதனைகளின் அடிப்படையில் அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் கட்டமைக்கப்படுமா? எந்த ஒரு அமைதி ஒப்பந்தத் தின் நிலைத்தன்மையையும் உறுதிசெய்வதற்கான உத்தரவாதம் இருக்குமா?

1979 மார்ச்சில், 'ஆபரேஷன் சைக்ளோன்' மூலம் பாகிஸ்தானின் உதவியுடன் முஜாஹிதீன் களுக்கு ரகசியமாக ஆதரவளிக்கத் தொடங்கியது அமெரிக்கா. ஆப்கன் விவகாரத்தில் ஒரு தரப்பாக அமெரிக்கா இன்றுவரை தொடர்கிறது. எனினும், பெரும்பாலும் ஆழ்ந்த பரிசீலனையின் அடிப்ப டையில் அல்லாமல், உள்ளுணர்வின் அடிப்ப டையிலேயே அமெரிக்காவின் ஆப்கன் கொள்கை இருக்கிறது. அமெரிக்காவின் தற்போதைய அமைதி முயற்சிகள்கூட அந்நாட்டின் சுயநலன் ச ார்ந்தும், அடிக்கடி மாறும் அதன் மனநிலையின் அடிப்படையிலும்தான் எடுக்கப்படுகின்றனவே தவிர, ஆப்கனின் கள நிலவரத்தின் அடிப்படை யில் - குறிப்பாக ஆப்கன் அரசு மற்றும் மக்களின் பங்கு என்ன என்பதன் அடிப்படையில் அல்ல.

ஆப்கன் விவகாரத்தில், நிபந்தனையின் அடிப்ப டையிலான முன்னெடுப்புகள் தொடங்கி, அமெ ரிக்காவின் உள்நாட்டுத் தூண்டுதல்கள் அல்லது புவி அரசியல் நடப்புகளின் அடிப்படையிலான நடவடிக்கைகள் வரை, முந்தைய அதிபர்கள் அடிக் கடித் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்ட தைப்போலவே டிரம்பும் நடந்துகொள்கிறார்.

வலிமையான நிலையில் தாலிபான்

தற்போதைய ராணுவச் சூழலும் சரி, அரசியல் கட்டமைப்பும் சரி நிலையான அமைதி முயற்சி க்கு உகந்ததாக இல்லை. ஆப்கன் மற்றும் அதன் கூட்டணிப் படைகள் ராணுவரீதியாகவும் அரசி யல்ரீதியாகவும் களைப்படைந்தும் பதற்றத்துட னும் இருப்பதைப்போல், தாலிபான் அமைப்பு இல்லை. தாலிபான் தலைமையும், அதன் பாகிஸ் தான் கூட்டாளிகளும் முழு வெற்றியை அடை யும் அளவிலான வலிமை, வளம், காரணிகளைக் கொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் விஷயத்தில், ?தொடர்ந்து குரைத்தாலும் கடிப்பதில்லை? எனும் ரீதியிலான அணுகுமுறையை டிரம்ப் அரசு தொடர்ந்து மேற்கொண்டுவருவதன் காரணமாக தாலிபான் தரப்பின் நம்பிக்கையை வலுப்படுத்திவ ருகிறது.

ஜூலை மாதம் நடக்கவிருக்கும் ஆப்கன் அதி பர் தேர்தலில், வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அமெரிக்கா - தாலிபான் இடையிலான துரிதமான பேச்சுவார்த்தைகள், ஆப்கன் அதிபர் தேர்தலுடன் போட்டி போடும் அளவில் இணையாக நடந் துகொண்டிருக்கின்றன. தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக, தற்போதுதான் வளர்ந்துவரும் நிலையில் இருக்கும் ஆப்கன் ஜன நாயகத்தையும் இறையாண்மையையும் அமெரிக்கா பலிகொடுத்துவிடும் என்று ஆப்கனைச் சேர்ந்த பலரிடம் நிலவும் அச்சம் நியாயமானதுதான்.

ஆப்கன் அரசையும் மக்களையும் கவனத்தில் கொள்ளாமல் தாலிபான் அமைப்புக்கும் அமெ ரிக்காவுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு ஒப்பந்தமும் தோல்வியையே தழுவும். 2019-ன் ஆப்கன், 1990-களின் ஆப்கனைவிட அடிப்படையில் வேறுபட்டது. எத்தனையோ குறைபாடுகள் இருந்தாலும், ஆப்கன் அரசு குறிப்பி டத்தக்க அளவிலான திறனையும், சட்டபூர்வத்தன் மையையும் ஆப்கன் அரசு கொண்டிருக்கிறது. வலி மைமிக்க, வளர்ந்துவரும் தேசியப் பாதுகாப்புப் படையும் அதன் வசம் இருக்கிறது.

மக்கள் ஆதரவு இல்லை

மறுபுறம், பாகிஸ்தானும் தாலிபானும் ஆப்க னின் பெரும்பாலானோரின் வெறுப்புக்கும் அவநம் பிக்கைக்கும் ஆளாகியிருக்கின்றன. ஆப்கனின் 90% மக்கள் தாலிபானின் நோக்கத்தை ஆதரிக்கவில்லை என்பது, 2018-ல், ஆசியா ஃபவுண்டேஷன் நிறு வனம் நடத்திய வருடாந்திர ஆப்கன் கணக்கெ டுப்பிலும், வியூக ஆய்வுகளுக்கான ஆப்கன் நிறு வனம் நடத்திய தேசிய அளவிலான ஆய்விலும் தெரியவந்திருக்கிறது. தாலிபான்களின் வார்த்தை களில் சொன்னால், உலகமெங்கும் உள்ள ஜிகா திகளுக்கு ஆப்கன் என்பது ஒரு ?ஜிகாத் பள்ளி?. எனவே, தாலிபானுடனான எந்த ஒரு ஒப்பந்தமும் வன்முறை சார்ந்த பிற இஸ்லாமியக் குழுக்கள் மத் தியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் தாலிபானின் குவெட்டா ஷூரா அமைப்பு ஆகியவற்றுக்கு இடை யிலான முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்பது ஆப் கன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களைச் சேர்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது. அனைத் துத் தரப்பினரையும் உள்ளடக்கிய, நடைமுறைச் சாத்தியமுள்ள, நீடித்து நிலைக்கக்கூடிய முயற்சி களே அமைதி ஒப்பந்தத்துக்கு வழிவகுக்க வேண் டும். இது வெற்றியடைய, 1990-களின் இருண் டகாலத்துக்குத் திரும்பிவிடாமல் முன்னேற்றப் பாதையில் ஆப்கன் செல்வதை உறுதிசெய்ய விரும்புகின்ற, ஒத்த கருத்துடைய மற்ற சக்திகளு டன் இந்தியாவும் கைகோக்க வேண்டும்.

அமைதியான, பன்மைத்துவம் கொண்ட, வளமான தேசத்தையே ஆப்கன் மக்கள் விரும்பு கிறார்கள். இப்படியான ஒரு அரசியல் சூழலைக் கட்டமைப்பதில், பிற ஆப்கன் குடிமக்களுக்கும் அரசியல் குழுக்களுக்கும் இருக்கும் அதே பங்கு தாலிபான்களுக்கும் இருக்கிறது. அமைதியான - வளமான ஆப்கானிஸ்தான், அமைதியான -முன்னேற்றமடைந்த பிராந்தியம், வன்முறை சி த்தாந்தம் கொண்ட இஸ்லாமியக் குழுக்களின் வீழ்ச்சி ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. திணிக்கப்படும் அமைதி அல் லது திணிக்கப்படும் அரசியல் சட்டத்துடன் கூடிய சுதந்திரம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை ஆப்கன் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நிர்பந்திக் கப்படக் கூடாது. திணிக்கப்பட்ட அமைதி என்பது ஒரு தரப்புக்குத் தற்காலிக வெற்றியைத் தரலாம். ஆனால், அது நீண்டகாலத் துயரத்தை ஏற்படுத்துவ துடன், இறுதியில் தோல்வியையே தழுவும்!

– தாவூத் மோராதியான்,
வியூக ஆய்வுகளுக்கான ஆப்கன் நிறுவனத்தின் தலைமை இயக்குநர்.
'தி இந்து'ஆங்கிலம்,
தமிழில்: வெ.சந்திரமோகன்

தமிழ்..

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு அவற்றில் ஒன்றிலாவது சிறியளவு முன்னேற்றம் கூட நடைபெறாதது அனைவருக்கும் ஏமாற்றமாகவே அமைந் துள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்கள் தங்களது பிரச்சினைக்கான தீர்வு கோரி பல வழிக ளில் போராடி, சர்வதேசத்தின் தலையீட் டுடன் கூடி தீர்வினைப் பெற்றுக் கொள் ளும் பொருட்டு நல்லாட்சிக்கு இரண்டு வருடகால அவகாசம் வழங்கி நிற்கும் இத்தருணத்தில் அரசாங்கத்தில் இருக் கின்ற சிலர் சர்வதேசத்தை பகைக்கும் ஒரு நிலைமையை இன்று அவதானிக்க முடிகிறது. கடந்தவாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் ச பையின் விசேட நிபுணர் பென் எமர்ச னுக்கும் அமைச்சர் விஜேதாச ராஜபக் வுக்குமிடையில் ஒரு முறுகல் நிலைமை ஏற்பட்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இவ்வாறு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் சர்வதேசத்தை பகைத் துக் கொள்கின்ற அதேவேளை, தமிழ் மக்கள் குறித்த தீர்வு விடயத்திலும் பல முரண்பாடான கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். இவ்வாறான செயற்பாடு கள் நல்லாட்சி என்று கூறிக்கொள்கின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முரணானவையாகவே மக்களால் நோக் கப்படுகின்றன. எனவே, இவ்வாறான செயற்பாடுகளை ஜனாதிபதியும் பிரதம ரும் கவனத்திலெடுத்து நிறுத்த வேண் டியதே நல்லாட்சிக்கு ஆரோக்கியமான தாகும் என்பதுடன் தீர்வு விடயத்திலும் ச ாதகமான முடிவுகளைப் பெற வழிவகுக் கும் எனலாம்.

யுத்தத்துக்கு பின்னர் அரசியலமைப்பு மாற்றத்தினூடாக அடையப்பெறும் நியாயமான அதிகாரப் பரவலாக்கல்தான் இந்த நாட்டை ஒரு முன்னேற்றகரமான நாடாக மாற்றும் என இலங்கை வந்தி ருக்கும் ஐ.நா. உதவிச் செயலாளர் நாய கம் ஜெப்ரி பெல்ட்மன் கூட்டமைப்புட னான சந்திப்பின் போது மிகத் தெளிவாக தெரிவித்திருந்தார். இந்த விடயத்தை தெற்கில் இருக்கின்ற பலர் உணர்ந்தி ருந்தாலும் கூட, அவர்களுடைய முழுப் பார்வையும் அடுத்த தேர்தலை நோக்கிய தாக இருக்கிறது. கடந்தகால அனுபவங்க ளின் அடிப்படையில் வைத்து பார்த்தால் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது ஆட்சிக்காலத்தில் அதிகாரப்பரவ லாக்கல் தொடர்பில் நாட்டுக்கு மிகத்தெ ளிவாகக் கூறியிருந்த போதிலும் அவர் இரண்டாவது தடவையாக தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கு 62 வீதமான வாக்குகள் கிடைத்திருந்தன. எனவே, சிங்கள மக்கள் இனவாதிகள் அல்லர் அரசியலுக்காக இனவாதம் பேசுகின்றவர்களால் தான் இந்த நாடு தொடர்ந்தும் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றது என்பதே சாலப்பொருத்த மான கருத்தென்பது பல புத்திஜீவிகளின் நிலைப்பாடாகும்.

எனவே காலம் கனிந்துள்ள இவ்வாட் சியில் அதற்கான முயற்சிகளை த. தே. கூட்டமைப்பு எடுக்க வேண்டும். ஏனெ னில் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டுவிட்டு மீண்டும் புதிதாக ஒரு விடயத்தை ஆரம்பிப்பது என்பது காலத்தை வீண் விரயம் செய்யும் நடவ டிக்கை என்பதுடன், மக்கள் எதிர்பார்த்தி ருக்கும் உரிய தீர்வைப் பெறும் விடயம் மேலும் மேலும் பின்னடைந்து கொண்டு செல்லும். எனவே தமிழ் மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி உடன் தீர்த் துவைக்க வேண்டியபாரிய பொறுப்பில் தமிழ்த் தலைமைகள் தம்மை அர்ப்ப ணித்து செயற்படவேண்டும் என்பது தமிழ் மக்களது ஏகோபித்த வேண்டு கோளாகும்.

எனினும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் இன்று சில நகர்வு கள் இடம்பெற்று வரும் நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் மத்தியில் சில முரண்பாடுகள் இருந்து வருவதை அவதானிக்க முடிவதுடன், அண்மையில் வடமாகாண சபை விவ காரத்திலும் பல முரண்பாடுகளை அவைதோற்றுவித்திருந்தன. இதனால் பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பின் ஒற்றுமையை இன்று சர்வதேசம் கூட வலியுறுத்தி வருகின்றது. தமிழ் மக்களும் அந்த வலியுறுத்தலைத்தான் விடுத்து வருகிறார்கள். கூட்டமைப்புக்குள் சில போட்டி அரசியல் காரணமாகத்தான் இந்த ஒற்றுமையீனம் நிலவுவதாக பலர் கூறுகின்றனர்.எது எப்படியிருந்தாலும் கூட்டமைப்பு ஒரு பொழுதும் உடையாது என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை என கூட்டமைப்பின் சில கூறுப்பினர்களே தெரிவித்துவருவதென்பது கூட்டமைப் பின் ஆரோக்கிய அரசியல் நகர்வுக்கு வித் திட்டுள்ளது அல்லது பலம் சேர்த்துள்ளது என்றே குறிப்பிடலாம்.

வடக்கு..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

மாகாண கல்வி அமைச்சின் திட்டமி டப்படும் செயற்பாடுகளை மத்திய அரசு செய்யவிடுவதில்லை என பலவற்றை விளக்கி கூறுவார்.

இந்தியாவில் மத்திய அரசின் கல்வி, மாநில அரசின் கல்வி, இவை இரண் டுக்கும் இலங்கையின் மத்திய, மாகாண கல்விமுறைக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு விளக்கி கூறினார். இந்தியாவில் மத்திய அரசு, மாநில அரசுகளின் கல்வித்துறையில் ஒருபோதுமே தலையிடுவதில்லை. அதே போலவே ஆளுநரும் மாநில அரச பணி களில் குறுக்கிடுவதில்லை என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இன்று வடக்கு,கிழக்கில் பல பாட சாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனர். சில பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. ஒரு சில பாடச ாலைகளில் அதிபர்கள் இன்றி பதில் அதி பர்கள் பணிபுரிகின்றனர். சில பிரதேச ங்களில் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்ப டவில்லை. கஷ்டப்பட்ட பிரதேசத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்ட ஆசிரியர்கள், அங்கே கடமையை பொறுப்பேற்க பின் நிற்கின்றனர். ஆசிரிய இடமாற்றம், கல்வி அதிகாரிகளின் நியமனம், இட மாற்றம் போன்றவற்றில் அரசியல் தலை யீடுகள் காணப்படுகின்றன. இவை சீராக இடம்பெறாமல் எப்படி மாணவர்களின் கல்வி வளர்ச்சியடையலாம்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறித ரனும், கிளிநொச்சி,முல்லைத்தீவு பாடசா லைகளின் அபிவிருத்திக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படுவதில்லை என தெரி வித்தார். மன்னார்,வவுனியா மாட்டங்க ளின் பாடசாலைகளின் நிலைமைகளை ஊடகங்களில் பலர் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் பின்தங்கிய மாணவர் களின் போக்குவரவு ஒரு பிரச்சினை. அண்மையில் மடுவில் பஸ் போக்குவ ரத்தை ஏற்படுத்தி தருமாறு மாணவர்கள், பெற்றோர்கள் போராட்டம் செய்தனர். பல பின் தங்கிய பிரதேசங்களில் இன்றும் மாணவர்கள் நடந்தே பாடசாலைகளுக்கு செல்கின்றனர். முல்லைத்தீவு பகுதியில் இதேபோல ஒரு பிரச்சினையை ஊடகம் ஒன்றன் மூலம் அறிந்த ஜனாதிபதி,அங்கு பஸ் போக்குவரத்தை ஏற்படுத்த நடவ டிக்கை எடுத்திருந்தார். தெற்கில் பாடச ாலை பஸ் சேவைகள் சீராக நடைபெறு கின்றன.

போதைப்பொருள் பாவனை

நாட்டின் போதைப்பொருள் பாவ னையை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக ஜனாதிபதி முதல் அரசியல்வா திகள் கூறிவருகின்றனர். வடக்கே இன்று இதன் பாவனை, விற்பனை, கடத்தல் அதிகரித்துள்ளது. சில மாணவர்கள் இந்த குற்றச்சாட்டில் கைதாகியுள்ளனர். காட்டிக்கொடுத்த மாணவனை கிளிநொச் சியில் தாக்கியுள்ளனர். போதைப்பொ ருளை அரசியல்வாதிகளே கடத்துவதாக அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறி யுள்ளார். வடக்கு,கிழ க்கில் பல ஆயிரக் கணக்கான படையினரும், பொலிசாரும் இருக்கும்போது போதைப்பொருள் எவ்வாறு வருகிறது என தமிழ் எம்.பிமார் கூறுகின்றனர். அதைவிட மதுபான விற் பனை நிலையங்களும் அதிகரித்துள்ளன. இவையும் மாணவர்களின் கல்வியை பாதிக்கிறது.

தமிழ் கல்வி அமைச்சர் நியமனம்

அரசாங்கத்தில் தமிழ் கல்வி அமைச்சர் நியமிக்கப்பட்டால் தமிழ் மாணவர்களின் கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்பட்டுவிடும் என சிலர் கூறுகின்றனர். கடந்த நல்லாட்சியில் வே.இராதாகிருஸ்ணனை கல்வி இரா ஜாங்க அமைச்சராக நியமித்தது. ஆரம்பத் தில் தனக்கு உரிய அதிகாரங்கள் இல்லை என அவர் அப்போது பகிரங்கமாகவே கூறிவந்தார். அவருக்கு வடக்கை விட மலையக தமிழ் பாடசாலைகள், அந்த மாணவர்கள் ஆசிரியர்களின் பிரச்சினை கள் நன்கு தெரியும். ஆனால்,அவரால் அவற்றுக்கான தீர்வை கடந்த மூன்று வரு டங்களாக காணமுடியவில்லை.

தற்போது விஜயகலா மகேஸ்வரனை கல்வி இராஜாங்க அமைச்சராக நியமித் துள்ளனர். அவராலும் தமிழ் மாணவர் களின் கல்வி பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும? குறிப்பாக அவர் வடக் கைச் சேரந்தவர். யுத்தத்தால் வடபகுதி கல்வித்துறை எந்தளவுக்கு பாதிக்கப்பட் டது என்பது அவருக்கு நன்கு தெரியும். இன்னும் சில மாதங்களே ஆட்சி நடை பெறவுள்ளது. வரவு செலவு திட்டம் வந்தால் வடக்கு, கிழக்கு கல்விக்கு அதிக நிதி ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா?

தீவுப்பகுதியின் கல்வி நிலைமை

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசம் தீவுப்பகுதியே. இந்த பிரதேசத்துக்கு அரசியல்வாதிகள் நேரடியாக வந்து அவதானிப்பதில்லை என அப்பகுதி பெற்றோர்கள் கூறுகின்ற னர். நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு தமிழ் அரசி யல்வாதிகள் வருவதில்லை. ஏதாவது ஒரு நிகழ்வு என்றால் வருவார்கள். யுத்தம் முடிந்த பின் மகிந்த அரசின் பிரதி கல்வி அமைச்சரான சச்சிதானந்தன், கல்வி அமைச்சின் சில அதிகாரிகளுடன் இத் தீவுகளுக்கு கடல் வழியாக படகுகளில் பயணம் மேற்கொண்டு வந்து, நிலைமை களை அவதானித்து சென்றார்.இதற்கு காரணம் அன்றைய கல்வி அமைச்சின் ஆலோசகரான கலாநிதி ந.தணிகாசலம் பிள்ளையின் முயற்சியே. அவர் முன்னர் யாழ்., வன்னி, மாகாண கல்விப்பணிப் பாளராக பணியாற்றியதால் தீவுப்பகு தியின் கல்வி நிலைமைகளை நன்கு அறிவார்.

கல்வி அமைச்சில் தமிழ் கல்வி பணிப்பாளர்கள்

ஒரு காலத்தில் கல்வி அமைச்சில் தமிழ், முஸ்லிம் கல்வி பணிப்பாளர்கள், ஆலோசகர்கள் பணியாற்றினார்கள். இவர் களுக்குத்தான் நாட்டின் தமிழ் கல்வித்து றையின் குறைபாடுகள், ஆசிரியர் வெற்றி டங்கள்,பாடசாலைகளின் அபிவிருத்திகள் போன்ற பல்வேறு விடயங்கள் தெரியும். நாட்டில் உள்ள தமிழ் பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் இவர்க ளின் கவனத்துக்கு இவற்றை கொண்டு வந்தனர்.இவற்றை கல்வி அமைச்சின் தமிழ் அதிகாரி காரிகள்அமைச்சருக்கோ, அமைச்சின் செயலாளருக்கோ தெரிவிப் பார்கள். அதன் பின்னர்தான் அமைச்ச ருக்கு அந்த பிரச்சினை தெரியவருகிறது.

அதனால், அமைச்சர் உரிய நடவ டிக்கையை எடுக்க முடிகிறது. ஏனெ னில் கல்வி அமைச்சர் பெரும்பான்மை இனத்தவர் அவருக்கு சிறுபான்மை இனத்தவரின் கல்வி நிலைமைகள் தெரி யாது.

எனவே அரசியல் தலையீடுகள் ஏற்படாது நீதியான முறையில் கல்வி அமைச்சு தமிழர்களின் கல்வி செயற் பாடுபளை முன்னெடுத்து செயற்பட வேண்டும். இல்லையேல்,தொடர்ந்தும் வடபகுதி தமிழர்கள் கல்வியில் பின்தங் கிய நிலைமைக்கே வருவார்கள். அதே போலவே தமிழ் அரசியல்வாதிகளும் தமக்குள் உள்ள போட்டிகளை மறந்து கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு அதிக முக்கிய கவனம் செலுத்த முன்வ ரவேண்டும்.அப்போதுதான், வடக்கு, கிழக்கு, மலையக தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னேற வாய்ப்புள்ளது. எதிர்கால தமிழ் சமூகத்துக்கும் ஆற்றும் சி றந்த சேவையாகும்.

ஈரோட்டில் அதிரடி காட்டிய அமித் ஷா

பிரதமர் மோடியின் மதுரை விசிட்டிலிருந்து தமிழக அரசியல் களம் பரபரப்பாகிக்கிடக்கிறது. மோடியோ, பி.ஜே.பி-யின் மேல்மட்டத் தலைவர்களோ தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் 'பி.ஜே.பி - அ.தி.மு.க கூட்டணி குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்'என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டணி பற்றி எந்த அறிவிப்பையும் பி.ஜே.பி சொல்லாவிட்டாலும், மோடியைத் தொடர்ந்து பி.ஜே.பி-யின் முக்கியத் தலைவர்கள் பலரும் தமிழகத்தில் தொடர்ந்து வரிசைகட்டி பிரசாரம் செய்ய வந்துகொண்டிருக்கின்றனர். அந்த வகையில், பிப்ரவரி 14-ம் தேதி, அந்தக் கட்சியின் தேசியத் தலைவரான அமித்ஷாவின் ஈரோடு வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது. 'அமித் ஷாவின் வருகை பி.ஜே.பி - அ.தி.மு.க கூட்டணி பற்றி ஏதாவது ஒரு சேதியைச் சொல்லிவிட்டுப் போகும்' எனப் பலரும் எதிர்பார்த்திருந்த நிலையில், அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசாத அமித்ஷா, தி.மு.க தலைவர் மு.க. ஸ்டாலினையும் காங்கிரஸ் கூட்டணியையும் கடுமையாக விமர்சித்துப் பேசியதைத் தவிர, தமிழகத்தில் கூட்டணி பற்றி ஏதும் அறிவிக்கவில்லை. உச்ச நீதிமன்றமே முடித்துவைத்த 2-ஜி முறைகேடு வழக்கை மறுபடியும் கையிலெடுத்துக்கொண்டு, அமித் ஷா கடுமையாக விமர்சித்தது தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியைச் சூடாக்கியிருக்கிறது. டெக்ஸ்வேலியில் நடைபெற்ற கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளித்துறை பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக, காலை 10 மணிக்கு அமித் ஷா வருவதாக இருந்தது. ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு அமித் ஷா மதியம் 2 மணிக்கு ஹெலிகாப்டரில் வந்து ஒய்யாரமாக இறங்கியபோதே, பி.ஜே,பி தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் எனர்ஜி சுத்தமாய் இறங்கியிருந்தது.

'ஜவுளித்துறை பிரதிநிதிகளுடனான சந்திப்பு' என்று சொல்லப்பட்ட நிகழ்ச்சி நடந்த அரங்குக்குள் அமித் ஷா நுழைந்தபோது ஒலித்த 'பாரத் மாதா கீ ஜே' என்ற தொண்டர்களின் கோஷம், கூட்டத்தில் இருந்தவர்கள் பலரும் பி.ஜே.பி-யைச் சேர்ந்தவர்களே என்பதை பட்டவர்த்தனமாகக் காட்டியது. ஜவுளித்துறையினரிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு அமித் ஷா பேச்சை ஆரம்பிக்க, ஹெச்.ராஜா அதைத் தமிழில் மொழி பெயர்த்தார். அமித் ஷா பேச ஆரம்பிக்கையில், ஊடகத்தினுடைய கேமராக்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் மேடையை மறைப்பதாய் அரங்கிலிருந்தவர்கள் கூச்சலிட்டனர். அதை உணர்ந்துகொண்ட அமித் ஷா, 'கேமராவை ஸ்டேண்டில் வைத்துவிட்டு ஓரமாக இடையூறு இல்லாமல் நில்லுங்கள்' என ஆங்கிலம் கலந்த இந்தியில் வேண்டுகோள் விடுக்க, ஹெச்.ராஜா அதையும் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்ல, கூட்டத்தில் இருந்தவர்கள் குபுக்கென சிரித்தனர்.

ஜவுளித்துறை பிரமுகர்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்ட அமித் ஷா, ஜவுளித்துறைக்காக பல ஆயிரம் கோடி ரூபாயை மோடி தலைமையிலான மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இப்போது உங்களின் கோரிக்கைகள் எல்லாம் பி.ஜே.பி-யின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மேலும், தலைமையில்லாத, கொள்கையில்லாத, ஊழல் பணத்தைப் பங்கிட்டுக் கொள்கிற கூட்டணிதான் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி. பி.ஜே.பி-யைப் பொறுத்தவரை, அனைத்து தரப்பினருக்குமான வளர்ச்சியைக் கொடுத்து வருகிறோம். எனவே, நீங்கள் பி.ஜே.பி-க்கு ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் சந்திப்புக் கூட்டத்தில் அமித் ஷா கலந்துகொண்டார். தமிழக பி.ஜே.பி தலைவர் தமிழிசை செளந்தரராஜன், தமிழகத்தில் பி.ஜே.பி-யால் கையூன்ற முடியாது, காலூன்ற முடியாது என்று சொல்பவர்களுக்கு, வரும் தேர்தலில் நாங்கள் அடையும் வெற்றி பதில் செல்லும் என்று சீரியஸாகப் பேசினார். மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், கயிறுவாரியாத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர், 'மோடி தலைமையில் மீண்டும் ஆட்சி அமையும்'என ஹைடெசிபலில் முழங்கி அமர்ந்தனர். இந்தக் கூட்டங்களில் மூத்த தலைவர்கள் இல.கணேசன், ஹெச்.ராஜா ஆகியோர் பேசவில்லை. ஆனால், மேடையில் ஹெச்.ராஜாவின் பெயரை அமித் ஷா உச்சரித்தபோது, கைத்தட்டலும் ஆரவாரமும் எழுந்தன.

பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மத்தியில் பேசிய அமித் ஷா, கொங்கு தமிழ் பாஷை இனிமையானது. கொங்கு மக்கள், எதிரிகளிடம் பேசும்போதும் இனிமையாகத்தான் பேசுவார்கள். நான் கொங்குத் தமிழன் இல்லை. கொங்கு தமிழர்களைப் போல இனிமையான குரலில் திராவிடக் கட்சிகளை நான் பேசமாட்டேன். என்னுடைய பாஷையில் பதிலடி கொடுப்பேன் என எடுத்த எடுப்பிலேயே தி.மு.க மீதான விளாசலை ஆரம்பித்தார்.

தொடர்ந்து பேசியவர், 'மோடி தலைமையிலான பி.ஜே.பி அரசு தமிழக மக்களுக்காக என்ன செய்துவிட்டது' என ஸ்டாலின் கேட்கிறார்... 5,42,000 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழக மக்களுக்கான திட்டங்களை மத்திய அரசு வழங்கியுள்ளது. முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தைவிட இது 5.2 மடங்கு அதிக நிதி ஒதுக்கீடாகும். தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி, நாட்டின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட கூட்டணி அல்ல. ஊழல் மற்றும் குடும்ப ஆட்சிக்கான கூட்டணி. 10 ஆண்டுகளாகக் கூட்டணியில் இருந்த தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி மக்களுக்காக என்ன செய்தது? 2-ஜி போன்ற ஊழல்கள் மூலமாகக் கோடிக் கணக்கில் கொள்ளையடித்து வீட்டுக்குக் கொண்டு சென்றதுதான் அந்தக் கூட்டணியின் சாதனை. மீண்டும் அதே கூட்டணி அமைந்தால் நாட்டில் ஊழல் பெருக்கெடுத்துவிடும் எனக் கடுமையாகச் சாடினார்.

அ.தி.மு.க-வைப் பற்றி விமர்சித்து அமித் ஷா ஒருவார்த்தைகூட பேசாததில் இருந்தே பி.ஜே.பி - அ.தி.மு.க கூட்டணி உறுதியாகிவிட்டதை அவரே சொல்லாமல் சொல்லிவிட்டார். ஆனால், காங்கிரஸ் அரசாங்கத்தைவிட ஸ்டாலினையும் தி.மு.க-வையும் அவர் கடுமையாக விமர்சித்துப் பேசியது பரபரப்பைக் கூட்டியிருக்கிறது. எனினும் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராகப் பிரசாரம் செய்த அமித் ஷாவின் பேச்சுக்கு, கூட்டத்தில் இருந்த பி.ஜே.பி-யினர் மத்தியிலேயே பெரியளவில் ரெஸ்பான்ஸ் இல்லை என்பதுதான் உண்மை. நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரமாகப் பார்க்கப்பட்ட அமித்ஷாவின் ஈரோடு வருகை, எதிர்க்கட்சிகளை லேசாகச் சாடிய விதத்திலும், முடிந்துபோன 2-ஜி விவகாரத்தை முன்னிறுத்திப் பேசிய விதத்திலும் சற்று காரம் இல்லாமலேயே முடிந்தது. இன்னும் சொல்லப்போனால், பி.ஜே.பி அரசின் சாதனைப் பட்டியலை புள்ளிவிவரம் வாரியாக அமித் ஷா வாசித்துக் காட்டியது கணக்கு வகுப்பில் இருந்ததைப்போல கிறுகிறுக்க வைத்தது. அமித் ஷாவின் வருகை அரசியல் களத்தைப் பரபரப்பாக்கும் என நினைத்திருந்த வேளையில், பி.ஜே.பி தொண்டர்களைக்கூட உற்சாகப்படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

'அமித் ஷா வருவார்'எனப் பல மணி நேரமாகக் காத்திருந்த தொண்டர்களுக்கு அவர் வந்திறங்கிய ஹெலிகாப்டரைப் பார்த்தது மட்டுமே உற்சாகமான, ஆறுதலான ஒரு விஷயம். மற்றபடிச் சுட்டெரித்த வெயிலுக்கு மத்தியில், அமித்ஷாவின் சுரத்தில்லாத பிரசாரம் பெரிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

பிளான் பியூஷ் கோயல்!

'ஒரு மாதமாக இழுத்தடித்த பேச்சுவார்த்தை பியூஷ் கோயல் வந்ததும் ஓர் இரவில் முடிந்துவிட்டது' என்று உற்சாகமாகச் சொல்கிறார்கள் பி.ஜே.பி தரப்பினர். ஆம்! மத்திய அமைச்சரும் தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயலின் வருகையும் கூட்டணி உத்தரவாதமுமே பி.ஜே.பி தரப்பினர் உற்சாகத்துக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, கடந்த நவம்பர் மாதம் டெல்லிக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார். அப்போது கூட்டணி குறித்த பேச்சு எழுந்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளாக, தமிழக ஆட்சியே தங்கள் தயவில் நடப்பதால் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி அ.தி.மு.க-வுடன்தான் என்பதில் பிரதமர் தரப்பு உறுதியாக இருந்தது. அதை ஆமோதிக்கும் விதமாகவே, பிரதமருடனான சந்திப்பின்போது நாடாளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி-யுடன் இணைந்து செயல்படுவதில் எங்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று புன்னகையோடு எடப்பாடி சொல்ல, அதை இன்முகத்தோடு மோடியும் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பிறகுதான், அ.தி.மு.க-வில் அடுத்தடுத்த திருப்பங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, அ.தி.மு.க-வின் மூத்த தலைவரும் மக்களவை துணை சபாநாயகருமான தம்பிதுரை, பி.ஜே.பி-க்கு எதிராகக் கடும் விமர்சனங்களை வைக்க ஆரம்பித்தார். ஒருகட்டத்தில் பி.ஜே.பி-யை தூக்கிச் சுமக்க வேண்டிய அவசியம் அ.தி.மு.க-வுக்கு இல்லை என்று சொல்ல, கூட்டணி உடன்பாட்டில் உரசல் ஏற்பட ஆரம்பித்தது. அதற்குத் தோதாக, பல்வேறு அ.தி.மு.க நிர்வாகிகள் மத்தியிலும் பி.ஜே.பி-யுடன் கூட்டணி வைப்பதற்கு ஒருபக்கம் எதிர்ப்பு எழுந்தது. இது எடப்பாடி தரப்பை யோசிக்க வைத்தது. ஆனால், எடப்பாடிக்கு வலதும் இடதுமாக இருக்கும் வேலுமணி, தங்கமணி இருவரும் பி.ஜே.பி-யுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், 'முதலில் கூட்டணி வேண்டாம்'என்ற மனநிலையில் இருந்தவர், திடீர் என மனமாற்றம் அடைந்து கூட்டணி விஷயத்தில் அவரும் உறுதியாகச் சம்மதித்துவிட்டார். இந்நிலையில் டெல்லி பி.ஜே.பி தரப்பு தொடர்ந்து கூட்டணிப் பேச்சுகுறித்து அழுத்தம் கொடுத்துக்கொண்டே இருந்தது. மேலும், வேறு சில சேனல்களிலும் அ.தி.மு.க-வுடன் 'சீட் ஷேரிங்' குறித்துப் பேசினார்கள். முதலில் இரட்டை இலக்கத் தொகுதிகளைக் குறிவைத்த பி.ஜே.பி, ஒருகட்டத்தில் அ.தி.மு.க-தரப்பு தண்ணிகாட்டியதால் கூட்டணி அமைந்தால் போதும் என்று ஒற்றை இலக்க தொகுதிக்குக்கூட ஓ.கே சொல்லிவிட்டது. பி.ஜே.பி - அ.தி.மு.க இரண்டு கட்சிகள் மட்டும் களத்தில் நின்றால் வெற்றிவாய்ப்பு மிகவும் குறைவு என்பதை உணர்ந்த பி.ஜே.பி, சாதி ரீதியாக வலுவான அமைப்புகளாக இருக்கும் பா.ம.க, புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகளையும் இணைத்து வலுவான கூட்டணிக்கு அடிபோட்டது.

அதற்கான அசைன்மென்ட் முதலில் பொன்னார் வசம் ஒப்படைக்கப்பட்டது. பா.ம.க தரப்பு ஒரே நேரத்தில் தி.மு.க, அ.தி.மு.க என இரண்டு தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தியதால் குழப்பத்தில் இருந்தார் பொன்னார். தி.மு.க பக்கம் பா.ம.க போனால் தி.மு.க கூட்டணி வலுவடைந்துவிடும் என்று கருதி, அதைத் தடுக்கும் வேலையை பி.ஜே.பி தரப்பு செய்ய ஆரம்பித்தது. தைலாபுரத்தில் பா.ம.க நிறுவனர் ராமதாஸை பொன்னார் சந்திக்க பலமுறை முயன்றும், அந்த வாய்ப்பு கைகூடவில்லை. இந்நிலையில் தான் அ.தி.மு.க தரப்பே, கூட்டணி விஷயத்தை ஒழுங்குபடுத்த பியூஷ் கோயலைக் கொண்டுவரும் ஆலோசனையை பி.ஜே.பி மேலிடத்துக்குச் சொல்லியுள்ளார்கள். பட்ஜெட் தாக்கல் செய்யும் பணி, பியூஷ் கோயலிடம் இருந்ததால் அவர் வருகை தள்ளிப்போனது. ஆனால், தொலைபேசியில் தொடர்புகொண்டே அ.தி.மு.க-வை முதலில் சரிகட்டினார். அதன் பிறகு பா.ம.க தலைவர் ராமதாஸ் தொடர்புக்குக் கோயல் சென்றுள்ளார். முதலில் பிகு செய்த ராமதாஸ் பிறகு கோயல் சொன்ன பிளானுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்தக் கூட்டணி பேரங்கள் ஒரு வடிவத்துக்கு வந்த பிறகே, தமிழக பயணத்திட்டத்தை அதிரடியாக அறிவித்தார் கோயல். வியாழன் இரவு டெல்லியிலிருந்து வந்த கோயல், முதல்வர் வீட்டில் வைத்தே பேச்சுவார்த்தை நடத்த முடிவானது. ஆனால், எடப்பாடியோ அவரிடம் சீட் விஷயம், தொகுதி விஷயங்கள் எல்லாவற்றையும் நீங்கள் பேசி ஃபைனல் செய்துவிட்டு, இறுதியாக என்னிடம் அழைத்துவாருங்கள் என வேலுமணி, தங்கமணியிடம் சொல்லியுள்ளார். அதன் பிறகுதான், சென்னையில் உள்ள பொள்ளாச்சி மகாலிங்கம் வீட்டில் சந்திப்பை நடத்த முடிவானது. பொள்ளாச்சி மகாலிங்கம் குடும்பத்தினர், டெல்லி பி.ஜே.பி-யிலும் நல்ல தொடர்பில் உள்ளதால் அவர்கள் வீடு சந்திப்புக்கான இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது. ஐந்து முதல் ஆறு சீட் பி.ஜே.பி தரப்புக்கு வழங்க முடிவாகியுள்ளது. அதைத்தாண்டித் தேர்தல் செலவுகள் பற்றியும் பேசப்பட்டுள்ளதாம். இந்தப் பேச்சுவார்த்தை முடிந்த உடனே டெல்லி பறந்துவிட்டார் கோயல்.

கோயல் மீண்டும் வெள்ளி இரவு அல்லது சனிக்கிழமை அன்று தமிழகம் வர உள்ளார். அப்போது பா.ம.க இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸையும் அமெரிக்காவிலிருந்து திரும்பும் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த்தையும் சந்தித்துக் கூட்டணிப் பேச்சுவார்த்தையை இறுதி செய்ய உள்ளார். புதிய தமிழகம், ஐ.ஜே.கே கட்சிகள் எப்போது அழைத்தாலும் ஓடிவரத் தயாராக இருப்பதால் அந்தக் கட்சிகளை 'கூட்டணி அறிவிப்பு நாள் அன்று அழைத்துக்கொள்ளலாம்'என பி.ஜே.பி தரப்பு நினைக்கிறது. பியூஷ் கோயல் சென்னை வந்து பேசிய பின்னரே, கூட்டணி இழுபறிக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுள்ளது. மோடியும் தமிழகக் கட்சிகளுடனான கூட்டணி விஷயத்தில் பியூஷ் கோயல் என்ன முடிவு எடுக்கிறாரோ, அதற்கு ஒப்புதல் கொடுக்கத் தயாராக இருக்கிறாராம்.

அ.தி.மு.க அமைச்சர்கள் போட்டுக்கொடுத்த பிளான், பியூஷ் கோயல் வந்து சென்ற பின்னர், இப்போது வொர்க்கவுட்டாகியிருப்பதில் ஏக மகிழ்ச்சியில் இருக்கிறார்களாம் இரண்டு மணியான அமைச்சர்கள்.

யார் இந்த ஆதில் அகமது தார்?

ஜம்மு-காஷ்மீரில் நடந்த கோரத்தாக்குதலில் 44 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு காரணமான ஆதில் அகமது தாரின் பின்னணி குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

'இப்படியொரு தாக்குதல் நடக்க வாய்ப்பே இல்லை. பெரும்பாலான சுங்கச்சாவடிகள், பலத்த பாதுகாப்புகளைத் தாண்டி தீவிரவாதி வெடிபொருள் நிரம்பிய வாகனத்தை கொண்டு செல்லமுடியவே முடியாது. எங்கோ தவறு நடந்துள்ளது' என அடித்துச் சொல்கிறார் சி.ஆர்.பி.எஃப் செய்தித் தொடர்பாளர் ஆஷிஸ் குமார் ஜா. உலக நாடுகளைச் சேரந்த தலைவர்கள் பலர் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். 44 சி.ஆர்.பி.எஃப் வீரர்களின் உயிர் பறிபோயுள்ளது. இதில் தமிழகத்தைச் சேரந்த வீரரும் ஒருவர். தூத்துக்குடி மாவட்டம் சபலபேரியைச் சேர்ந்த சுப்ரமணியன் உயிரிழப்பு குறித்து அவர்களது வீட்டுக்கு தெரியப்படுத்தப்படும் என தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இருபது ஆண்டுகளுக்குப் பின் இப்படியொரு கோரத் தாக்குதல் நடந்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு ஜெய்ஷ்-இ-முகமது என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்நிலையில் தாக்குதலை நடத்திய ஆதில் அகமது தார், கடந்த ஆண்டுதான் ஜெய்ஷ் அமைப்பில் இணைந்துள்ளான். தாக்குதல் நடந்த பகுதியிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கண்டிபா என்ற இடத்தைச் சேர்ந்தவன். ஆதில் 12-ம் வகுப்பு வரை படித்து விட்டு பின்னர், அருகிலிருந்த மில் ஒன்றில் வேலைபார்த்து வந்துள்ளான். இவரது தந்தை ரியாஸ் அப்பகுதியில் சிறிய கடை ஒன்றை நடத்தி வந்துள்ளார். உறவினர் ஒருவர் மூலம் ஆதிலுக்கு பயங்கரவாத அமைப்பு மூலம் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மூலம் மூளைச் சலவை செயப்பட்டு, ஓராண்டுக்கு முன் ஜெய்ஷ் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளான்.

இதைப் பயன்படுத்திக்கொண்ட அந்த அமைப்பு, ஆதிலை தற்கொலைப் படை தாக்குதலுக்கு தயார் படுத்தியுள்ளது. கடந்த ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய தற்கொலைப்படை தாக்குதலை அரங்கேற்ற வேண்டும் என்று திட்டம் திட்டப்பட்டது. இதற்கான சரியான நேரத்தை எதிர்பார்த்திருந்தவர்கள், ஸ்ரீநகர் - ஜம்மு நெடுஞ்சாலையில் சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் வாகனத்தில் மோத திட்டமிட்டனர். அதன்படி 350 கிலோ வெடிமருந்து நிரப்பிய காரை ஓட்டிய ஆதில், வீரர்கள் வாகனத்தின் மீது மோதி தற்கொலைப்படை தாக்குதலை நிகழ்த்தியுள்ளான்.

இளைஞர்கள் பலரை மூளைச்சலவை செய்து, அவர்களை தற்கொலைபடைத் தாக்குதலுக்கு பல்வேறு ஆண்டுகளாக ஜெய்ஷ் அமைப்பு தயார் செய்து வருகிறது. இந்த தாக்குதல் குறித்து, 'என் பெயர் ஆதில். நான் ஓராண்டுக்கு முன் ஜெய்ஷா இயக்கத்தில்இணைந்தேன். நான் எதற்காக சேர்ந்தேனோ அதற்கான சரியான நேரத்தை எதிர்நோக்கி காத்திருந்தேன். இந்த வீடியோ உங்களை வந்தடையும் முன் நான் சொர்கத்தில் இருப்பேன். காஷ்மீர் மக்களுக்கு என்னுடைய கடைசி செய்தி!'என்று பேசிய வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டது. அந்த வீடியோவில் ஆதில் ஆயுதங்களுடன் நின்றுகொண்டிருக்கிறான்.இது தொடர்பான விசாரணையை தேசிய புலனாய்வு முகமை, அப்பகுதிக்குச் சென்று தொடங்க உள்ளது.

என்னைப் பார்த்து ஏன் புன்னகை ? நீங்கள் ஆண்கள் பிரியரா? ஜோ ரூட்டை நோக்கிக் கேட்டதால் தடைவிதிக்கப்பட்ட ஷனன் கேப்ரியல் மன்னிப்பு

செயிண்ட் லூசியா டெஸ்ட் போட்டியின் போது ஜோ ரூட், ஜோ டென்லி ஆடிக்கொண்டிருந்தனர், அப்போது மே.இ.தீவுகள் வேகப்பந்து வீச்சாளர் ஷனன் கேப்ரியல் விக்கெட் எடுக்க முடியாத வெறுப்பில் ஜோ ரூட்டை நோக்கி வசைபாடினார். அதற்காக அவருக்கு 4 போட்டிகள் தடை விதித்து ஐசிசி அதிரடி நடவடிக்கை மேற்கொண்டது.

இது குறித்து 4 போட்டிகள் தடை விதிக்கப்பட்ட ஷனன் கேப்ரியல் வெளிப்படையாக தெரிவித்த போது, நெருக்கடியான ஒரு தருணத்தில் இந்த வார்த்தைப் பரிமாற்றம் நடைபெற்றது. அழுத்தம் அதிகமாக இருந்தது, இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட் என்னை ஆழமாகப் பார்த்தார். இது எல்லா கிரிக்கெட் வீரர்களும் கடைபிடிக்கும் உளவியல் உத்திதான்.

இப்போது எனது டென்ஷனையும் கொஞ்சம் உடைத்துக் கொள்ள ஜோ ரூட்டிடம் என்னைப் பார்த்து ஏன் புன்னகை செய்கிறீர்கள்? நீங்கள் ஆண்கள் பிரியரா? என்று கேட்டேன்.

அதற்கு அவர் 'அதனை வசையாகக் கூறாதே, தன்பாலின நாட்டமுடையோராக இருப்பதால் தவறொன்றுமில்லை' என்றார். இதற்கு நான் பதில் கூறிய போது, அது பற்றி எனக்கு பிரச்சினை இல்லை, ஆனால் என்னைப் பார்த்து புன்னகைப்பதை நிறுத்த வேண்டும் என்று நான் கூறினேன்.

இந்த விவகாரத்தை ஜோ ரூட் மைதானத்திலேயே முடிந்தது என்று பெருந்தன்மையாக விட்டுவிட்டார், ஆனால் ஐசிசி தானாகவே முன் வந்து ஜோ ரூட் இப்படிக் கூறுவதற்கு காரணம் என்ன என்று விசாரிக்க ஷனன் கேப்ரியல் பேசியது தவறு என்று புலப்பட அவருக்கு ஆட்டத்தொகையில் 75% அபராதமும், 4 போட்டிகள் தடையும் விதிக்கப்பட்டது.

தன் தவற்றை உணர்ந்து கேப்ரியல் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

உலகக்கோப்பையில் பார்க்கலாம், குறைத்து மதிப்பிடாதீர்கள்: சேவாக்கை எச்சரித்த மாத்யூ ஹேடன்

ஆஸ்திரேலிய அணியை 'பேபி சிட்டர்கள்' போல் சித்திரித்து எடுக்கப்பட்ட விளம்பரத்தில் வீரேந்திர சேவாக் நடித்ததைப் பார்த்து ஆத்திரமடைந்த ஆஸி. முன்னாள் வீரர் மாத்யூ ஹேடன் கோபத்துடன் ட்வீட் செய்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ரிஷப் பந்த், டிம் பெய்ன் இடையே உருவான 'பேபி சிட்டர்' (குழந்தை பராமரிப்பவர்) வாக்குவாத விவகாரம் விளம்பரமாக தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

வரும் 24-ம் தேதி முதல் இந்தியாவுக்கு வரும் ஆஸ்திரேலிய அணி 2 டி20 போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளது. இந்தப் போட்டித் தொடருக்கு முன்னோட்ட விளம்பரமாக குழந்தைகளுக்கு ஆஸ்திரேலிய அணியின் ஆடை அணிவிக்கப்பட்டு எடுக்கப்பட்டது.

இந்த விளம்பரத்தில் நடித்துள்ள இந்திய அணியின் முன்னாள் வீரர் வீரேந்திர சேவாக், குழந்தைகளைப் பராமரிப்பது போன்று, ஆஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கு இடையிலான தொடர் குறித்தும் பேசுவது போன்று விளம்பரம் எடுக்கப்பட்டது.

ஆஸ்திரேலியத் தொடருக்கு இந்திய அணி சென்றிருந்தபோது, கேப்டன் டிம் பெய்ன், இந்திய வீரர் ரிஷப் பந்த் இடையே வார்த்தைச் சீண்டல் நடந்தது. அப்போது, ரிஷப் பந்திடம் கூறிய பெய்ன், 'நான் என் மனைவியை அழைத்துக் கொண்டு சினிமா சென்றால், குழந்தையை பார்த்துக்கொள்ளும் பேபி சிட்டராக இரு. தோல்வி அடைந்தவுடன் நாட்டுக்குச் சென்றுவிடாதே' என்று கிண்டலாகக் கூறினார். அதற்குப் பதலடியாக, தற்காலிக கேப்டன் இதைச் சொல்கிறார் என்று ரிஷப் பந்த் பேசி இருந்தார்.

ஆனால், உச்சகட்டமாக, டிம் பெய்ன் வீட்டுக்குச் சென்ற ரிஷப் பந்த், அவரின் மனைவி குழந்தைகளுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு ட்விட்டரில் வெளியிட்டார். இந்தக் காட்சியை ஆஸ்திரேலிய பிரதமர் முதல் ரசிகர்கள் வரை ரசித்தனர்.

'பேபி சிட்டர்' என்ற வார்த்தையை நிஜமாக்கி, சர்ச்சையை மகிழ்ச்சியுடன் முடித்து வைத்த ரிஷப்பந்தின் புத்திசாலித்தனத்தை அனைவரும் பாராட்டினார்கள்.

ஆனால், இப்போது 'பேபி சிட்டர்' கருவை வைத்து எடுக்கப்பட்டுள்ள விளம்பரம் ஆஸ்திரேலிய அணியைக் குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்துள்ளதாக ஆஸி. அணியின் முன்னாள் வீரர் மாத்யூ ஹேடன் உணர்கிறார்.

அதனால், இந்த விளம்பரத்தில் நடித்த வீரேந்திர சேவாகிற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில், தங்கள் அணியைக் குறைத்து மதிப்பிடாதீர்கள் என்று ட்வீட் செய்துள்ளார்.

மாத்யூ ஹேடன் ட்விட்டரில் கூறுகையில், 'உங்களை எச்சரிக்கிறோம். ஆஸ்திரேலிய அணியை ஒருபோதும் நையாண்டி செய்து, நகைச்சுவையாக எடுக்காதீர்கள் வீரேந்திர சேவாக். ஸ்டார் ஸ்போர்ட்ஸ் இந்தியா விளம்பரத்தில் நீங்கள் நடித்ததைப் பார்த்தேன். உலகக் கோப்பை வரட்டும், நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், எந்த அணி பேபி சிட்டராக வரப்போகிறார்கள் என்று பார்க்கலாம்' எனக் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வரும் 24-ம் தேதி பெங்களூரில் முதல் டி20 போட்டியும், 27-ம் தேதி விசாகப்பட்டினத்தில் 2-வது போட்டியும் நடைபெறுகிறது.

ஒருநாள் தொடர் மார்ச் 2-ல் ஹைதராபாத்திலும், மார்ச் 5-ம் தேதி நாக்பூரிலும், 3-வது போட்டி 8-ம் தேதி ராஞ்சியிலும், 10-ம் தேதி மொஹாலியிலும், 13-ம் தேதி 5-வது போட்டி டெல்லியிலும் நடக்கிறது.

இந்தியாவே கேட்கும் அளவுக்கு நிலைமையை உருவாக்குவோம்!

மும்பை குண்டுவெடிப்பு தாக்குதலுக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுடன் விளையாடுவதைத் தவிர்த்து வருகிறது. ஐசிசி ஏற்பாடு செய்யும் தொடர்களில் மட்டுமே பாகிஸ்தான் அணியுடன் விளையாடி வருகிறது. இதனால் இருநாட்டு கிரிக்கெட் வாரியங்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் ஏற்படுவது

வழக்கமாகி வருகின்றன.

பி.சி.சி.ஐ செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி இந்திய அணி விளையாட வராததால் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, நஷ்டஈடு வேண்டும் எனக் கூறி பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியமான பி.சி.பி ஐ.சி.சி-யை அணுகியது. ஆனால், இந்த வழக்கில் பி.சி.சி.ஐ-க்கு ஆதரவாகத் தீர்ப்பு வர பி.சி.பி-க்கு பின்னடைவு ஏற்பட்டது.

இருப்பினும் இந்திய அணி பாகிஸ்தானுடன் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண்டும் எனத் தொடர்ந்து போர்க்கொடி தூக்கிக்கொண்டு இருக்கிறது அந்நாட்டு கிரிக்கெட் வாரியம். இந்த நிலையில், இந்த விவகாரத்தில் தற்போது சர்ச்சைக்குரிய வகையில் கருத்துகளை தெரிவித்துள்ளார் பி.சி.பி-யின் புதிய நிர்வாக இயக்குநரான வாசிம் கான். அவர் கூறுகையில், 'பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாட விரும்புகிறோம் என இந்தியா கேட்கும் அளவுக்கு நிலைமைகளை பி.சி.பி உருவாக்கும். உருவாக்க வேண்டும். இது மிகப்பெரிய சவாலாகும். இருப்பினும் விரைவாக இந்த விஷயத்தில் தீர்வு எடுக்கப்படும் என நான் நினைக்கவில்லை.

இந்தியாவில் தேர்தல் நடக்கவுள்ளது. அதனால் எதிர்காலத்தில் இது எதுவும் நடக்கப்போவதில்லை. இருப்பினும் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். தொடர்ந்து இந்தியாவை விளையாடும் படி கேட்டுக்கொண்டே இருக்கிறோம். இந்தியாவுக்கு எதிராக விளையாட முடியவில்லை என வருத்தத்துடன் வாழ்க்கை நகர்ந்துகொண்டிருக்கிறது. அதேநேரம் நாங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இந்தியா விளையாடும் எனக் காத்திருக்க முடியாது. எங்கள் நோக்கம் எல்லாம் பாகிஸ்தான் கிரிக்கெட்டை உயர்த்த வேண்டும். எங்கள் வீரர்களைச் சர்வதேச அளவுக்கு வளர்க்க வேண்டும் எனக் கூறினார்.

2019 ஐசிசி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடர் அட்டவணை, இந்திய நேர விவரங்கள்

2019 மே 30ம் தேதி முதல் ஜூலை 14, 2019 வரை ஐசிசி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெறுகிறது. இந்தத் தொடரில் வித்தியாசம் என்னவெனில் 1992 உலகக்கோப்பை போல் 10 அணிகளும் ஒருவரை ஒருவர் எதிர்த்து ஆட வேண்டும்.

இதில் முதல் 4 இடங்களுக்கு வரும் அணிகள் அரையிறுதியில் விளையாடும்.

அணிகள் விவரம்: இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, வங்கதேசம், இந்தியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான், மற்றும் வெஸ்ட் இண்டீஸ்.

போட்டி அட்டவனை மற்றும் ஆட்டம் தொடங்கும் இந்திய நேர விவரங்கள்:

மே 30 (வியாழன்) - இங்கிலாந்து - தென் ஆப்பிரிக்கா - ஓவல் மைதானம் - மதியம் 3.00 மணி.

மே 31 (வெள்ளி) - மே.இ.தீவுகள் - பாகிஸ்தான் - ட்ரெண்ட் பிரிட்ஜ் - மதியம் 3.00 மணி

ஜூன் 1 (சனி) - நியூஸிலாந்து -இலங்கை - கார்டிப் வேல்ஸ் - மதியம் 3.00 மணி

ஜூன் 1 (சனி) - ஆஸ்திரேலியா -ஆப்கானிஸ்தான் - பிரிஸ்டல் - மாலை 6.00 மணி (பகலிரவு)

ஜூன் 2 (ஞாயிறு) - தென் ஆப்பிரிக்கா -வங்கதேசம் - தி ஓவல் - மதியம் 3.00 மணி

ஜூன் 3 (திங்கள்) - இங்கிலாந்து - பாகிஸ்தான் - ட்ரெண்ட் பிரிட்ஜ் - மதியம் 3.00 மணி

ஜூன் 4 (செவ்வாய்) - ஆப்கானிஸ்தான் - இலங்கை - கார்டிப் - மதியம் 3.00 மணி

ஜூன் 5★ (புதன்) - தென் ஆப்பிரிக்கா - இந்தியா - சவுதாம்ப்டன் - மதியம் 3 மணி.

ஜூன் 5 (புதன்) - வங்கதேசம் -நியூஸிலாந்து - நாட்டிங்காம் - மாலை 6.00 மணி (பகலிரவு)

ஜூன் 6 (வியாழன்) - ஆஸி. - மே.இ.தீவுகள் - ட்ரெண்ட் பிரிட்ஜ் - மதியம் 3 மணி.

ஜூன் 7 (வெள்ளி) - பாகிஸ்தான் - இலங்கை - பிரிஸ்டல் - மதியம் 3 மணி

ஜூன் 8 (சனி) - இங்கிலாந்து - வங்கதேசம் - கார்டிப் - மதியம் 3 மணி

ஜூன் 8 (சனி) - ஆப்கான் - நியூஸிலாந்து - டாண்ட்டன் - மாலை 6 மணி

ஜூன் 9★ (ஞாயிறு) - இந்தியா - ஆஸ்திரேலியா - தி ஓவல் - மதியம் 3 மணி

ஜூன் 10 (திங்கள்) - தென் ஆப்பிரிக்கா- மே.இ.தீவுகள் - சவுதாம்ப்டன் - மதியம் 3 மணி

ஜூன் 11 (செவ்வாய்) - வங்கதேசம் - இலங்கை - பிரிஸ்டல் - மதியம் 3 மணி

ஜூன் 12 (புதன்) - ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் - டாண்டன் - மதியம் 3 மணி

ஜூன் 13★ (வியாழன்)- இந்தியா - நியூஸிலாந்து - நாட்டிங்காம் - மதியம் 3 மணி

ஜூன் 14 (வெள்ளி) - இங்கிலாந்து - மே.இ.தீவுகள் - சவுத்தாம்ப்டன் - மதியம் 3 மணி

ஜூன் 15 (சனி) - இலங்கை - ஆஸ்திரேலியா - ஓவல் - மதியம் 3.00 மணி

ஜூன் 15 (சனி) - தெ.ஆ - ஆப்கானிஸ்தான் - கார்டிஃப் - மாலை 6.00 மணி

ஜூன் 16★ (ஞாயிறு) - இந்தியா - பாகிஸ்தான் - மான்செஸ்டர் - மதியம் 3 மணி

ஜூன் 17 (திங்கள்) - மே.இ.தீவுகள் - வங்கதேசம் - டாண்டன் - மதியம் 3 மணி

ஜூன் 18 (செவ்வாய்) - இங்கிலாந்து - ஆப்கன் - மான்செஸ்டர் - மதியம் 3 மணி

ஜூன் 19 (புதன்) - நியூஸிலாந்து - தென் ஆப்பிரிக்கா - பர்மிங்ஹாம் - மதியம் 3 மணி

ஜூன் 20 (வியாழன்) - ஆஸ்திரேலியா -வங்கதேசம் - நாட்டிங்காம் - மதியம் 3 மணி

ஜூன் 21 (வெள்ளி) - இங்கிலாந்து -இலங்கை - ஹெடிங்லே - மதியம் 3 மணி

ஜூன் 22★ (சனி) - இந்தியா - ஆப்கானிஸ்தான் - சவுத்தாம்டன் - மதியம் 3 மணி

ஜூன் 22 (சனி) - மே.இ.தீவுகள் - நியூஸிலாந்து - மான்செஸ்டர் - மாலை 6 மணி

ஜூன் 23 (ஞாயிறு) - பாகிஸ்தான் - தென் ஆப்பிரிக்கா - லார்ட்ஸ் - மதியம் 3 மணி

ஜூன் 24 (திங்கள்) - வங்கதேசன் - ஆப்கானிஸ்தான் - சவுதாம்டன் - மதியம் 3 மணி

ஜூன் 25 (செவ்வாய்) - இங்கிலாந்து - ஆஸ்திரேலியா - லார்ட்ஸ் - மதியம் 3 மணி

ஜூன் 26 (புதன்) - நியூஸி. - பாகிஸ்தான் - பர்மிங்ஹாம் - மதியம் 3 மணி

ஜூன் 27★ (வியாழன்) - இந்தியா - மே.இ.தீவுகள் - மான்செஸ்டர் - மதியம் 3 மணி

ஜூன் 28 (வெள்ளி) - இலங்கை - தென் ஆப்பிரிக்கா - டர்ஹாம் - மதியம் 3 மணி

ஜூன் 29 (சனி) - பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் - லீட்ஸ் - மதியன் 3 மணி

ஜூன் 29 (சனி) - நியூஸிலாந்து - ஆஸ்திரேலியா - லார்ட்ஸ் - மாலை 6 மணி

ஜூன் 30★ (ஞாயிறு) - இந்தியா- இங்கிலாந்து - பர்மிங்ஹாம் - மதியம் 3 மணி

ஜூலை 1 (திங்கள்) - இலங்கை - மே.இ.தீவுகள் - டர்ஹாம் - மதியம் 3 மணி

ஜூலை 2★ (செவ்வாய்) - இந்தியா - வங்கதேசன் - பர்மிங்ஹாம் - மதியம் 3 மணி

ஜூலை 3 (புதன்) - இங்கிலாந்து - நியூஸிலாந்து - டர்ஹாம் - மதியம் 3 மணி

ஜூலை 4 (வியாழன்) - ஆப்கான் - மே.இ.தீவுகள் - லீட்ஸ் - மதியம் 3 மணி

ஜூலை 5 (வெள்ளி) - பாகிஸ்தான் - வங்கதேசம் - லார்ட்ஸ் - மதியம் 3 மணி

ஜூலை 6★ (சனி) - இந்தியா - இலங்கை - லீட்ஸ் - மதியம் 3 மணி

ஜூலை 6 (சனி) - ஆஸ்திரேலியா - தென் ஆப்பிரிக்கா - மான்செஸ்டர் - மாலை 6 மணி

அரையிறுதிப் போட்டிகள்:

ஜூலை 9 (செவ்வாய்) - முதல் அரையிறுதி - மான்செஸ்டர் - மதியம் 3 மணி

ஜூலை 11 (வியாழன்) - 2வது அரையிறுதி - பர்மிங்ஹாம் - மதியம் 3 மணி

இறுதிப் போட்டி :

ஜூலை 14 (ஞாயிறு) - இறுதிப் போட்டி

உலகக் கோப்பையை வெல்ல இந்தியா, இங்கிலாந்துக்கு வாய்ப்பு ரிக்கி பான்டிங் கணிப்பு

2019 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் வெல்ல அதிகம் வாய்ப்பு இருப்பதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் ரிக்கி பான்டிங் தெரிவித்தார்.

இதுகுறித்து மெல்பர்னில் நேற்றுஅவர் கூறியதாவது: தற்போதுள்ள நிலவரப்படி இந்தியா, இங்கிலாந்து அணிகள் நல்ல பார்மில்உள்ளன. எனவே உலக கோப்பையை வெல்வதற்கு 2 அணிகளுக்கும் நல்ல வாய்ப்புகள் உள்ளன. அதைப் போலவே ஆஸ்திரேலிய அணிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. நான் ஆஸ்திரேலிய அணிக்கு உதவி பயிற்சியாளராக இருப்பதால் இதை சொல்லவில்லை.

மிகச் சிறந்த ஆட்டக்காரர்களான ஸ்டீவ் ஸ்மித், வார்னர் ஆகியோர் திரும்புவதால் அந்த அணிக்கும் கோப்பையை வெல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஸ்டீவ் ஸ்மித், வார்னர் இருவரும் மிகச் சிறந்த வீரர்கள். அவர்கள் மீதான தடை மார்ச் 29-ம் தேதியுடன் முடிவுக்கு வருகிறது. எனவே கோப்பையை வெல்வதற்கு ஆஸ்திரேலியா தீவிர முயற்சி செய்யும். இங்கிலாந்தில் நிலவும் தட்பவெப்பநிலை, ஆஸ்திரேலிய நாட்டின் தட்பவெப்பநிலையுடன் ஒத்துப் போகிறது. எனவே ஆஸ்திரேலிய வீரர்கள் அங்கு சிறந்த முறையில் விளையாட முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை சூடிக்கொண்டது டிபெண்டர்ஸ் விளையாட்டுக் கழகம். கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற டயலொக் சம்பியன்ஸ் லீக் தொடரின் சம்பியன் யார் என்பதைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் புளூஸ்டார் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய டிபெண்டர்ஸ் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

கூட்டமைப்பு அரைகுறை தீர்வையே முன்வைத்துள்ளது

சேனையூர் நிருபர்

தன்னுரிமைகளைக் கேட்டு நிற்கின்ற இனமொன்றின் உரிமைக்குரலை அரைக்குறைத்தீர்வென்ற வகையிலும், அரசியல் வரைபு என்ற வகையிலும், அரசும் அதன் அடிவருடிகளும் ஈடுபட்டு வருகின்றனர் என தமிழ் மக்கள் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் நந்தன் மாஸ்டர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெயிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கும் போது;

வடக்கு,கிழக்கு இணைப்பில்லாத, சமஷ்டிமுறையற்ற ,பௌத்தத்திற்கு முன்னுரிமையளிக்கின்ற விடயங்கள் உள்ளடக்கிய தீர்வினை அல்லது அவர்களது பாஷையில் கூறுவதனால் அரசியல் வரைபை தமிழ் மக்கள் என்றுமே ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.இவ்விடத்தில் அன்பையும்,அறநெறியையும் போதித்த புத்தர் பகவான் கூறிய கருத்து எனக்கு நினைவிற்கு வருகிறது.மனிதன் விழித்திருக்கும் போது ஒரு கருத்துடனும், நித்திரை கொள்ளும் போது ஒரு கருத்துடனும் இருப்பான் என்றார். இது யாருக்கு பொருந்துதோ,இல்லையோ,இக் கருத்து இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த பேரினவாதக்கட்சிகளுக்கு மிகவும் பொருந்தும்.

இக்கட்சிகள் ஆட்சிக்கு வர முன்னர் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழர்கள் உரிய கௌரவத்துடனும், மரியாதையுடனும் வாழும் தீர்வை இலங்கைத் தீவில் கொண்டு வரப் போவதாகக் கூறுவதும் பின்னர் ஆட்சிக்கு வந்தவுடன் இலகுவாக அதனை மறந்துவிட்டு இனவாதம் பேசுவதும் வரலாற்று வழி வந்த நடைமுறை. இனியும் இவர்களை எதிர்காலத்தில் தமிழ் மக்கள் நம்பத்தயாரில்லை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையில், காணி அதிகாரம்,பொலிஸ் அதிகாரம் இருந்த போதும் அதனை கூட நடைமுறைப்படுத்தாத இந்த பேரினவாத அரசுகள் தமிழ் மக்களின் நியாயபுர்வமான உரிமைகளை வழங்கும் என எதிர்பார்ப்பதற்கு இடமில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சி.நந்தகுமார் (நந்தன் மாஸ்டர்) விடுத்துள்ள பத்திரிகை செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒரு குடையின் கீழ் ஒன்றுபடவேண்டிய காலம் உருவாகியுள்ளது

தமிழர்கள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒரு குடையின் கீழ் ஒன்றுபடவேண்டிய காலம் உருவாகியுள்ளதாகவும் அதற்கான வரலாறு அழைப்பதாகவும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் மற்றும் சமூகமேம்பாடு,இந்துசமய விவகார அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

கடந்த மகிந்த ராஜபக்ஸவின் காட்டாட்சியில் பாதிணீக்கப்பட்டு அதற்குள் இருந்து பல இன்னல்களைசந்தித்து அந்த ஆட்சியை மாற்றவேண்டும் என்ற நம்பிக்கையினை தந்து புதிய ஆட்சியை தந்தவர்கள் தமிழர்கள்தான் என்பதை யாரும் மறந்துவிடமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பல பிரச்சினைகள் இருந்தாலும் இருவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு பெருமளவான உத்தரவாதங்களை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் மற்றும் சமூகமேம்பாடு,இந்துசமய விவகார அமைச்சராக மீண்டும் கடமையேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மனோகணேசனுக்கு நேற்று மாலை களுவாஞ்சிகுடியில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

களுவாஞ்சிகுடி,பட்டிருப்பு பஸ் நிலையத்தின் முற்பாக அமைச்சருக்கு பெருமளவான மக்கள் கூடி வரவேற்பளித்தனர்.

இதன்போது ஆலயங்களின் அறங்காவலர்கள் மற்றும் பொது அமைப்புகளினால் அமைச்சர் கௌரவிக்கப்பட்டதை தொடர்ந்து சமகால அரசியல் நிலமைகள் தொடர்பில் அமைச்சர் மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க. இவர்கள் இருவரையும் பதவியில் அமர்த்தியவர்கள் நாங்கள்தான்.அதனை யாரும் மறந்துவிடக்கூடாது. அவர்களுக்கு அது ஞாபகம் இல்லை.ஆனால் எங்களுக்கு ஞாபகம் இருக்கி;ன்றது.

2015ஆம் ஆண்டு வடகிழக்கு உட்பட அனைத்து பகுதியில் உள்ள தமிழர்களும் ஒன்றிணைந்து வழங்கிய வாக்கினால்தான் மைத்திரிபாலசிறிசேன ஜனாதிபதியாகியிருக்கின்றார்.எங்களுடன் இணைந்து முஸ்லிம் மக்களும் முற்போக்கு சிந்தனை கொண்ட சிங்கள மக்களும் வாக்களித்தனர். ஆனால் அணி திரண்டவர்கள் தமிழ் மக்கள்தான்.

வாக்களிப்பதற்கான சூழலை உருவாக்குவதற்காக மகிந்த ஆட்சிக்காலத்தில் கடும் துன்பங்களை அனுபவித்த நாங்கள்தான் அந்த காட்டாட்சிக்குள் இருந்து கொண்டுபோராடி,போராடித்தான் அந்த காட்டாட்சியை மாற்றமுடியும் என்ற நம்பிக்கையினை தந்து புதிய ஆட்சியை நாங்கள்தான் மலரச்செய்தோம்.

இன்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் பல பிரச்சினைகள் இருக்கின்றது.என்னதான் சண்டையிருந்தாலும் இருவரும் இணைந்து நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கு பெருந்தொகையான உத்தரவாதத்தினை தந்துள்ளதுள்ளனர். அதனை அவர்கள் அடிக்கடி மறந்துபோகின்றனர்.அதனை அடிக்கடி ஞாபகப்படுத்தவேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. அவர்கள் இருவருக்கும் மறதி அதிகம்.

யார் ஆட்சியில் அமர்த்தினார்கள்,எதனால் அமர்த்தப்பட்டோம், என்ன சொன்னோம் என்பதை இருவரும் மறந்துவருகின்றனர்.அவ்வாறு மறந்துவருபவர்களுக்கு தலையில் குட்டியாவது ஞாபகப்படுத்தவேண்டிய தேவையுள்ளது.

தமிழர்கள் அனைவரும் தங்களுக்குள்ள பிரதேச வேறுபாடுகளை மறந்து தமிழர்கள் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்றுபடவேண்டிய காலம் உருவாகியுள்ளது. வரலாறு எங்களை அழைக்கின்றது.இந்த ஒன்றுபடல் என்பது எவருக்கும் எந்த இனத்திற்கும் எதிரானது அல்ல.எந்தவொரு இனத்தின் உரிமையினையும் தட்டிப்பறிக்க முனையவில்லை. ஆனால் எங்களது உரிமைகளையும் எவரும் தட்டிப்பறிக்க அனுமதிக்க முடியாது.

யுத்தம் காரணமாக வடகிழக்கு உட்பட அனைத்து பகுதி மக்களும் கஸ்டங்களை எதிர்கொண்டனர். அதிலும் ஏனைய இனங்களை விட அதிக கஸ்டங்களை எதிர்கொண்டவர்கள் தமிழர்களாகும்.இதனை சிலர் மூடிமறைக்க பார்க்கின்றனர்.தமிழர்கள் யுத்த காலத்தில் இழந்தவாழ்க்கையினை பெற்றுக் கொடுக்கவேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருக்கின்றது.

தமிழர்களுக்கு இரண்டு விடயங்களை செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றது.அரசியல் தீர்வு,அபிவிருத்தி தீர்வு என்னும் இரண்டு விடயங்களை செய்யவேண்டியுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீல.சு.கட்சி சரித்திரம் படைக்கும்

சேனையூர் நிருபர்

எதிர்வருகின்ற எந்தத் தேர்தலாக இருந்தாலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சரித்திரம் படைக்குமென, ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரும், திருகோணமலை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளருமான, முன்னாள் எம்.பி ஜயந்த விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் அலுவலகமொன்று, கந்தளாய் நகரில் ஞாயிற்றுக்கிழமை (10) திறந்து வைக்கப்பட்ட போது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது, திருகோணமலை மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் ஆகியன வளர்ச்சியடைந்து வரும் நிலையில், கட்சிகளுக்கான மும்முனைப் போட்டிகளும் விசாலமாக நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் இல்லாமல் செய்யப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலையை கூடிய விரைவில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான வேலைகள், தமது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் எத்தனையே இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்க முடியுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதியின் கண்காணிப்பின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் பல மில்லியன் ரூபாய் செலவில், வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன எனவும் இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் எனவும் முடியாத பட்சத்தில், ஜனாதிபதியின் கவனத்துக்குத் தான் கொண்டு செல்வேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் யாரென்பதை, ஜனாதிபதியே தீர்மானிப்பர் என்றும் இதனை நாட்டிலுள்ள வேறு கட்சிகளின் முக்கியஸ்தகர்கள் குழம்பிக்கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வருகின்ற தேர்தலில் மாற்றுக் கட்சிகளின் தேவைகள் ஏற்பட்டால், பொதுஜன பெரமுனையுடன் கூட்டுச் சேர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

சசிகரன் மீண்டும் கடமையை பொறுப்பேற்பு

க.விஜயரெத்தினம்

கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளராக சங்கரப்பிள்ளை-சசிகரன் சிறப்பாக பணியாற்றிக் கொண்டு வருகின்றார்.இந்நிலையில் கிழக்கு மாகாண புதிய ஆளுநராக கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஜ் அவர்கள் மீண்டும் இவரை அப்பதவிக்கு மீள்நியமனம் செய்துள்ளார். முன்பள்ளி பணியகத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எஸ்.சசிகரன் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவ்வாறு கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தின் தவிசாளர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் றுஸ்வின் முகம்மத்,முன்பள்ளி பணியகத்தின் அம்பாறை மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர்களான எஸ்.எம்.புஞ்சிபண்டா,ஏ.எஸ்.எச்.சைபீடின் மற்றும் பணியகத்தின் உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டார்கள்.

களுதாவளை மகாவித்தியாலய புதிய அதிபராக சத்தியமோகன் கடமையை பொறுப்பேற்பு

க.விஜயரெத்தினம்

களுதாவளை மகாவித்தியாலய தேசிய பாடசாலையின் புதிய அதிபராக கணபதிப்பிள்ளை-சத்தியமோகன் அவர்கள் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். பட்டிருப்பு கல்வி வலயத்தில் இரண்டாவது தேசிய பாடசாலையாக களுதாவளை மாகாவித்தியாலயம் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் புதிய அதிபராக குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்தின் அதிபராக செயற்பட்டு கல்வி வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சேவையாற்றியவர் ஆவார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் விரைவில் உருவாக்கப்படும்

க.விஜயரெத்தினம்

கல்முனை பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் ஏக வேண்டுகோள் நிறைவேற்றித் தரப்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்விற்கு விசேட அதிதியாக வருகைதந்து உரையாற்று கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கல்முனை பிரதேசத்தில் பிரதேசவாழ் மக்கள் மிகவும் வேண்டிநிற்கின்ற, கடந்தகாலங்களில் செயற்பட்டிருக்க வேண்டிய, முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன.

அந்தவிடயத்தில் ஒட்டுமொத்தமாக கல்முனை பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் ஏக வேண்டுகோளாக இருப்பது கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்ற வார்த்தையே ஆகும். இது ஒட்டுமொத்த அம்பாறை மாவட்ட தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும். கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தப்பட வேண்டிய கடமைப்பாடு எனக்கு இருக்கின்றது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் ஒரு சிறந்த பிரதேச செயலகமாக நிச்சயம் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட மாதத்திற்குள் தரமுயர்த்தப்படுமென்ற அந்த நல்ல கருத்தினை இந்த இடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எங்களது நீண்டகால கோரிக்கையாக இருக்கின்ற கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் தரமுயர்த்தி கல்முனை பிரதேச வாழ் தமிழ் மக்களின் நீண்டநாள் கனவு நிறைவேற்றித்தரப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன் .

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இரண்டு மில்லியன் ரூபாய் கார்மேல் பற்றிமா கல்லூரியின் மைதானத்தின் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்வதாக கருத்தினை பகிர்ந்துகொண்டார்.இந் நிகழ்விற்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வா ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு பேச்சு, கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள்

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையானது கல்வி மற்றும் சமூக அரசியல் மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தந்தை செல்வாவின் விழுமியங்களின் அடிப்படையில் 2010ம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவருகின்றது.

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த இரு வருடங்களாக மக்களிடையே தந்தை செல்வாவின் விழுமியங்கள்;, கொள்கைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன், பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி, பொது மக்களிடையேயும் கட்டுரைப் போட்டிகளை நடாத்தி வருகின்றோம்.

2019ம் ஆண்டிற்கான போட்டிகளானது மூன்று பிரிவுகளாக நடாத்தப்படுகின்றது.

1. வடமாகாண உயர்தர பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி 2. கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு மற்றும் சித்திரப் போட்டி 3. திறந்த கட்டுரைப் போட்டி- இலங்கை முழுவதுமாக

பாடசாலை மாணவர்களுக்கான விபரங்கள் ஏற்கனவே உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திறந்த கட்டுரைப் போட்டி - வயது வேறுபாடின்றி விரும்பிய அனைவரும் பங்குபற்ற முடியும்

திறந்த போட்டியாளர்கள் பின்வரும் தலைப்புக்களில் விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து 400- 500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும்.

1. தமிழ் மக்களின் அரசியல் வழிநடத்துதலில் தந்தை செல்வாவின் வகிபாகம் 2. தந்தை செல்வாவின் பன்முக ஆளுமை

கட்டுரைகளை அனுப்புபவர்கள் தங்களது முழுப்பெயரினை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுமாறு வேண்டப்படுவதுடன் அறக்கட்டளையானது போட்டியாளர்களை தொடர்புகொள்வதற்கு உதவியாக தமது முகவரியினையும் தொலைபேசி இலக்கத்தினையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

பங்குபற்றிய அனைவருக்கும் அறக்கட்டளையினால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி;

தந்தை செல்வா நினைவு அறக்கட்டளை தந்தை செல்வா இல்லம் தந்தை செல்வா வீதி தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் கட்டுரை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 05.03.2019

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு செ.கமலதாஸ் 0770044596, ச.சிவயோகநாதன் 0779060474 (மட்டக்களப்பு)

மரம் நடுகை திட்டம் முன்னெடுப்பு

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது எண்ணக்கரு மற்றும் ஆலோசனைக்கு அமைவாக 'மரம் ஒன்றை நடுவோம் பசுமையான உலகை காண்போம்' எனும் தொனிப்பொருளில் நாடு பூராகவும் மரநடுகையினை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு வலுச்சேர்க்கும்முகமாக மண்முனைப் பற்று பிரதேச செயலகத்தில் கடமை புரிந்துவரும் உத்தியோகத்தர்களின் பிறந்த தினத்தினை முன்னிட்டு அவர்களுக்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் பயன்தரும் பழ மரக்கன்றுகளை பரிசாக வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளரும் நலன்புரிச் சங்க தலைவருமாகிய திருமதி ந.சத்தியானந்தி அவர்களது ஆலோசனைக்கு அமைவாக நடைபெற்ற இந்நிகழ்வின்போது இவ்வாண்டு தை மற்றும் மாசி மாதங்களில் பிறந்த தினத்தினை நினைவு கூர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர் அவர்களினால் நினைவுப் பரிசான நல்லின மாதுளங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டது.

இதன் போது மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ.அருணன் அவர்களும், பிரதேச செயலக நிருவாக உத்தியோதத்தர், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோதத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்ததுடன், உத்தியோகத்தர்களுக்கான பரிசான பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கிவைத்தனர்.

மகிளூர்முனை சக்தி வித்தியாலய வீதியை தார் வீதியாக மாற்றித்தருமாறு கோரிக்கை

பெரியகல்லாறு நிருபர்

ஓந்தாச்சிமடம் மகிளூர் பிரதான வீதியல் இருந்து ஆரம்பமாகி மீன்பிடி துறைமுகத்தில் முடிவடையும் சுமார் ஒன்றரை கிலோமீற்றர் நீளமான மகிளூர் முனை சக்திவித்தியாலய வீதியை தார் வீதியாக மாற்றித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பிரதேச கல்விச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் வீதியை தினமும் சக்தி வித்தியாலய வீதியை சுமார் 300 மாணவர்களும், பாடசாலையின் 25 ஆசிரியர்களும் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் மழை காலங்களில் இவ் வீதியால் மாணவ சீருடை அணிந்தோ அல்லது சப்பாத்து அணிந்தோ இவ்வீதியை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பிறேமதாச காலத்து வீட மைப்பு திட்டமும் (50வீடுகள்) இவ் வீதியை அண்டியே இருக்கின்றது. இவ் வீதி மீன்பிடி துறைமுகத்தில் முடிவடைவதால் மீனவர்களுக்கும் இது முக்கிய வீதியாகக் காணப்படுகின்றது.

அத்துடன் தபாலகம், இரு கிறிஸ்தவ ஆலயங்கள், விஸ்ணு ஆலயம் என்பனவும் இவ் வீதியிலேயே அமையப் பெற்றுள்ளது. இவ்வீதி பல வருடங்களாக சீர் செய்யப்படாமல் இருக்கின்றது. இதனால் இவ் வீதியை தினமும் பயன்படுத்தும் மாணவர்கள் ஆசிரியர்கள், மீனவர்கள். மற்றும் பொதுமக்கள் என பல தரப்பும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். எனவே கிராமத்தின் அத்தியாவசிய தேவையாக இதைக் கருத்திற்கொண்டு இவ்வீதியை தார் வீதியாக மாற்றித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பிரதேச கல்விச் சமூகம் கோரிக்கை விடுக்கின்றது.

வடக்கு,கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான நிதி இனி தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரிடம் கையளிக்கப்படும்

கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் களுதாவளையில் தெரிவிப்பு

கல்லடி நிருபர்

வடக்குஇகிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான நிதி இனி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் கையளிக் கப்படும்.

வடக்குஇகிழக்கு அபிவிருத்திக்கான நிதியானது இனி தமிழ்த்தேசிய கூட்ட மைப்பினரிடமே கையளிக்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா -மகேஷ்வரன் அவர்கள் தெரிவித்தார்.

களுதாவளை மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி அதிபர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கல்வி இராஜங்க அமைச்சர் கௌரவ திருமதி விஜயகலா மகேஸ் வரன் அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டபோது இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கருத்தினை முன்வைத்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்இபட்டிருப்பு வல யக்கல்வி பணிப்பாளர் திருமதி. நகுலேஸ்வரி புள்ளநாயகம்இகளுவாஞ் சிகுடி பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம்இமற்றும் அதிபர்கள்இஆசிரியர்கள்இமாணவர் கள்இ பெற்றோர்கள்இபொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அவர் கள் தொடர்ந்து கருத்துரைக்கையில்:-

எமது ஐக்கிய தேசிய முன்னணியி னர் ஆட்சிபீடமேற நூறு வீதம் பிரதான பங்காற்றியவர்கள் தமிழ்தேசிய கூட் டமைப்பினரே. இதனால்தால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் ஐக்கிய தேசிய முன்ன ணியின் சார்பாக கூட்டமைப்பினருக்கு நன்றியினை தெரிவித்துகொள்கின்றேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் எதிர்கால தீர்வை நோக் கியே எம்முடன் கைகோர்த்துள்ளனரே தவிர சுயநலத்திற்காகவல்ல.

கடந்த இரு மாதங்களின் முன்பு எங்களுடைய பிரதமர் அரசியல் சூழ்ச்சி யின் காரணமாக சட்டத்தோடு போராடி ஆட்சியை மீண்டும் கைப்பற்றினார். இதற்கு பக்கபலமாய் நின்றுதவிய சி றுபான்மை மக்களது தீர்வுகளுக்கு தமது பங்களிப்பினை தருவார் என கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற எமது நாட்டிலுள்ள மக்களும் புலம்பெ யர் தேசங்களில் வாழ்வோரும் பொறு மையாக இருக்க வேண்டும். சிலரது விமர்சனங்கள் எங்களை பாதிப்பதோடு மட்டுமல்லாது தெற்கிலும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

நான் இரண்டு தடவைகள் பாரா ளுமன்ற உறுப்பினராக வருவதற்கு எனது கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாக்குபலமே முக்கியபங்கு. இதுவே எங்களது மக்களை கௌரவப்படுத்தி என்னை கல்வி இராஜாங்க அமைச்சராக எங்களது பிரதமர் நியமிக்க காரணி யாகும்.

எனக்கு கிடைத்துள்ள கல்வி இரா ஜாங்க அமைச்சு பதவியானது வடக்கு, கிழக்கு மக்களுக்கு கிடைத்துள்ள வரப் பிரசாதமாகும். இதனை சரியாக பயன்ப டுத்தி வடகிழக்கின் கல்வி வளர்ச்சி யை உயர்த்த வேண்டும்.யுத்தத்தினால் அழிவடைந்துள்ள வடகிழக்கின் கல்வி இபொருளாதாரம்இஉட்கட்டமைப்பு வசதிகளை சீர் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு எனக்குள்ளது.

நான் களுதாவளை கிராமத்திற்கு முதல்தடவையாக வருகைதந்துள்ளேன். நான் கல்வி இராஜாங்க அமைச்சராக பவியேற்ற பின்பு களுதாவளை மாகா வித்தியாலயத்திற்கு முதல்முறையாக வருகை தந்தமை எனக்கு பெருமையை தேடித்தந்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், நானும் சே ர்ந்துதான் இப்பாடசாலையை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தி தந்திருக் கின்றேன். இப்பாடசாலையின் ஊடாக இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி உயர்த் தப்பட்டு கல்வியில் சிறப்பான விளைச் சல், பயன்கள் கிடைக்கவேண்டும். இதன்மூலம் வலுவான சமூக கட்ட மைப்பு உருவாக்கப்படும்.

யுத்தத்தினால் பாதிப்புற்றது எமது வடக்கு கிழக்கு மாகாணங்கள் மாத் திரமே, யுத்தத்தினால் போராடிவந்த இரு மாகாணங்களும் இன்று மக்களின் தேவைக்கேற்ப போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அதே போல் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளுக்காக இயற்கையோடு போராடவேண்டியுள்ளது எனத் தெரி வித்தார்.

தாழங்குடா ஸீப்ரா விளையாட்டுக் கழகத்தின் 4வது பிறீமியர் லீக் கிறிக்கெட் சுற்றுப்போட்டி

கல்லடி நிருபர்

தாழங்குடா ஸீப்ரா விளையாட்டுக் கழகத்தின் 4வது பிறீமியர் லீக் கிறிக்கெட் சுற்றுப்போட்டி நிகழ்வுகள் கழகத் தலை வர் நிரஞ்சன் தலைமையில் நடைபெற் றது.

இடம்பெற்ற போட்டிகளின் அடிப் படையில் சிறந்த பந்துவீச்சாளராக சுதா அவர்களும், சிறந்த துடுப்பாட்ட வீரராக லோ.ஜெகன் அவர்களும், ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகனாக பூ.முகுந்தன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வின் முக்கிய அம்சமாக இம்முறை தாழங்குடா கிராமத்திலிருந்து பல்கலைக்கழத்திற்கு தெரிவான மாண வர்கள் கௌரவிக்கப்பட்டனர். வைத்தி யத் துறைக்குத் தெரிவான கு.மிதுசிகா, பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரி வான ஓ.இந்து, கலைப்பிரிவுக்குத் தெரி வான கு.ரதீபா மற்றும் அ.மிலுக்சா ஆகிய மாணவர்கள் அதிதிகளால் நினைவுச் சி ன்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்னர்.

ஸீப்ரா விளையாட்டுக் கழகமானது விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாது வருடம் தோறும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களை கௌரவப் படுத்தி வருகின்றது. தாழங்குடா கிரா மத்தின் சாதனையாளர்களை சமூகத்தின் மத்தியில் அடையாளப்படுத்தவும், அவர் கள் தாண்டிவந்த தடைகளை வெளிக்கொ ணரவும் அதன் மூலம் எதிர்காலச் சமூகத் தினை சிறந்த பாதைக்கு வழிப்படுத்தவும் இக் கௌரவங்களை தவறாது மாணவர்க ளுக்கு வழங்கி வருகின்றது.

நிகழ்வின் அதிதிகளாக பிரதேச விளை யாட்டு உத்தியோகத்தர் அ.சிவகுமார், மண்முனைப் பிரதேச சபை உறுப்பினர் ஆ.சிவலிங்கம், தாழங்குடா ஸ்ரீ வீரமா காளியம்மன் ஆலயத் தலைவர் ந.துவா கரன், சமுர்த்தி உத்தியோகத்தர் மா.நமசி வாயம், ஆசிரியர் க.இளங்கீரன், உலக நாச்சி கலைக்கழகத் தலைவர் க.தேவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிறீமியர் லீக் சுற்றுப் போட்டிக்கு கோபால் மோட்டார் சேவிஸ் (பிரதான வீதி, தாழங்குடா), பௌசீஸ் (மட்டக் களப்பு), L.E மோட்டார் காட்சியறை (பிரதான வீதி, புதுக்குடியிருப்பு) ஆகி யோர் அனுசரணை வழங்கினர்.

களுவாஞ்சிக்குடி முருகன் ஆலய வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

துறைநீலாவணை நிருபர்

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக சபைக்குட்பட்ட ஸ்ரீமுருகன் ஆலய வீதி கவனிப்பா ரற்ற நிலையில் காணப்படுவதாக சமூகமட்டக் குழுக்களைச் சேர்ந்தவர் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவரு வதாவது,

களுவாஞ்சிக்குடி 09 ஆம் வட்டார கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முருகன் ஆலய வீதி சேறும் சகதியுமாக புதையும் தன்மையில் காணப் படுவதனால் இப் பிரதேசத்து மக்கள் பல்வேறு அசௌக ரியங்களுக்குள்ளாவ தாக விசனம் தெரிவிக் கின்றனர்.

இவ்வீதியில் வாக னங்களை செலுத்தும் போது அவை சேற் றில் புதையுண்டு நின்றுவிடுகின்றன. மேலும் இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதனால் பல்வேறு சி ரமங்களுக்குள்ளாவதாக சாரதிகளால் தெரிவிக்கப்படுகிறது.

களுவாஞ்சிக்குடி மக்களின் பாதை மார்க்கத்தினை கவனத்திற்கொண்டு இதனை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

கோட்டைக்கல்லாறு ஸ்ரீஅம்பாரைவில் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா

பெரியகல்லாறு நிருபர்

மட்டக்களப்பு கோட்டைக்கல் லாறு அருள்மிகு ஸ்ரீ அம்பாரைவில் பிள்ளையார்ஆலய மஹேற்சவம கடந்த ஞாயிறன்று (10) கொடியேற்றத்துடன் சிறப்பாகஆரம்பமாகியுள்ளது. திங் களன்று புஸ்பாஞ்சலி திருவிழாவும், செவ்வாயன்று வேதபாராயண திருவி ழாவும் இனிதே நடைபெற்றது. பத னன்று கைலாயவாகனத் திருவிழாவும். வியாழன்று சுமங்கலி பூசை திருவிழா வும்,வெள்ளியன்று மாம்பழத் திருவி ழாவும், 16ந் திகதி சனிக்கிழமை திரு வேட்டைத்திருவிழாவும், நடைபெற்றது. ஞாயிறு பஞ்சமுக அர்ச்சனையும், திங் கட்கிழமைசப்புறத் திருவிழாவும் நடை பெற்று, மாசிமகத் தீர்த்தோற்சவமும்தி ருபொன்னூஞ்சலும் கொடியிறக்கமும்; 19ந் திகதி செவ்வாய்க்கிழமைநடை பெறும். 20ந் திகதி பதனன்று பூங்காவ னமும் 1008 பிள்ளையார்அர்ச்சனையும் நடைபெறும்.

மஹோற்சவ பிரதம குருவாக யாழ்.மல்லாவி பிரதிஸ்டா பூசணம், சி வாகமகலாநிதி, சிவாகம விசரத், சொற் பொழிவு வேந்தன் சிவஸ்ரீ குமார பிரபா கர குருக்களுடன் ஆலயத்தின் பிரதம குரு பூஜா இளம் தீபம் சிவஸ்ரீ த.ரதிகரசர் மாவும் கிரியைகளை மேற்கொள்வர்.

விளையாட்டு அரங்கு திறப்பு விழா

துரைவந்தியமேடு நிருபர்

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட் டின் மூலமாக பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டு அரங்கு திறப்பு விழா நிகழ்வு வித்தியாலயத்தின் அதிபர் சி.சசிதரன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய ஒருமைப் பாடு, அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற் றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணே சன் மற்றும் விசேட அதிதியாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் மற்றும் சிறப்பு அதிதிகளாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் ச.கணே சநாதன், தேசிய ஒருமைப்பாடுகள் அரச கருமமொ ழிகள் சமூக மேம்பாடு அமைச்சின் மட்டு மாவட்ட இணைப்பாளர் க.கோபிநாத், பொது அமைப்புக் களின் பிரதி நிதிகள், பெரிய கல்லாறு கிராமத்தி லுள்ள பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்,மாணவர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கோட்டைக்கல்லாற்றில் சுவாமி விவேகானந்தரின் 157வது பிறந்ததின நிகழ்வும் அறநெறி பாடசாலைபரிசளிப்பு விழாவும்

பெரியகல்லாறு நிருபர்

கோட்டைக்கல்லாறு அற நெறி பாடசாலையின் சுவாமி விவேகானந்தரின் 157வது பிறந்ததின நிகழ்வும் மாண வர்களுக்கான பரிசளிப்ப விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை (17.02.2019) காலை அதிபர் ந.இராசரெத்தினம் தலைமையில் கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம அதிதியாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியாவில் வரெத்தினமும், சிறப்பு அதிதிகளாக ஆலயங்களின் வண்ணக்கர் மு.தம்பிரா சாவும், நிருவாகஉததியோகத் தர் வே.தவேந்திரன், இந்துச மய கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.பரமசிவம்,ஓய் வுநிலைநிர்வாக உத்தியோ கத்தர் க.ருத்திராகணேஸ் ஆகியோரும் கலந்து கொள் ளுகின்றனர். கௌரவஅதிதி களாக பிரதேச ஆலயங்களின் தலைவர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளு கின்றனர்.

சுவாமி விவேகானந்தரின் பூஜை மற்றும் வழிபாட்டைத் தொடர்ந்து சுவாமி விவேகா னந்தரின் பக்திப்பாடல்கள் ஓதப்பட்டு, அதிதிகள் கௌர விக்கப்பட்டு, அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கா னபரிசளிப்பு நடைபெறும்.

கல்முனையில் வீசப்படும் கழிவுகளால் பாதசாரிகளுக்கு அசௌரியம்

க.விஜயரெத்தினம்

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட கல்முனை பிரதான வீதியில் பொதுமக்கள்,தனியார் வர்த்தக நிலையங்களினால் வீசப்படும் கழிவுகளால் மாநகரம் பாரியதொரு சுகாதார சீர்கேடுகளை சந்தித்துள்ளது.இதனால் கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து பாதசாரிகள் அசௌரியங்களை முகம்கொடுத்து வருவதையும்,இச்சுகாதார சீர்கேட்டை கல்முனை மாநகரசபை முதல்வர், ஆணையாளர் கவனம் செலுத்தி மாநகரத்தின் வனப்பை பேணவேண்டும் என்பது தான் கல்முனை மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வடிகான்கள் சீரில்லை

எரிக்

படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு கிராமமான விளாவெட்டுவான் கிராமத் தில் வடிகாண் இல்லாமையினால் அக்கி ராம மக்கள் வடிகாண் வெட்டியுள்ளனர்.

ஆனால் இக் கிராமத்தில் இக் கிராம மக்களால் வெட்டப்பட்ட வடிகாண் மழை காலங்களில் மழை நீர் வடிந் தோடாமல் மழை நீர் நிரம்பி வீதிகளில் ஒடுகின்றது. இதனால் இவ் வீதியால் செல்லும் பாதசாரிகள் , வேலைக்கு செல்வோர் எனப் பலரும் அசௌகரியங் களுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

விளாவெட்டுவான் கிராமத்தில் நிரந் திர வடிகாண் அமைத்துத் தருமாறு இப் பகுதி பிரதேச சபை அதிகாரிகளோ அல் லது இப் பகுதி அரசியல்வாதிகளோ இப் பகுதியில் நிரந்திர வடிகாண் அமைத்துத் தருமாறு இப் பகுதி மக்கள் கேட்டு நிற் கின்றனர்.

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

துரைவந்தியமேடு நிருபர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு வித்தியாலயத்தின் முதல்வர் அல்ஹாஜ் எம்.எம்.எ.ச தார் தலைமையில் காத்தான்குடி மத்திய மகாவித்தி யாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அல்ஹாஜ் எம்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அவர்க ளும். விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம். நிசாம் மற்றும் மட்டு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.எம். எஸ். ஊமர் மௌலானா, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது சுவட்டு, மைதான விளையாட்டு, விநோத உடைப் போட்டிகள் நடை பெற்றதுடன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அதி திகளினால் சான்றிதழ் மற்றும் வெற்றி கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஆளுநரின் மக்கள் சந்திப்புகளை பிரதேச செயலாளர் மட்டத்தில் நடாத்துமாறு வேண்டுகோள்

சாய்ந்தமருது நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநரின் மக்கள் சந்திப்புகளை பிரதேச செயலாளர் மட்டத்தில் நடாத்த முன்வர வேண்டும் என கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் பளீல் பவுண்டேசன் சமூக சேவை அமைப்பின் தலைவருமான ஏ.அப்துல் கபூர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் தீர்க்கப்படாது குவிந்து கிடக்கின்ற மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மாகாண ஆளுநராக பதவியேற்றது தொடக்கம் திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண முதலமைச்சர் செயலகத்தில் பிரதி புதன்கிழமை தோறும் மக்கள் சந்திப்புகளை நடாத்தி வருவதானது மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

இதன் மூலமாக கிடப்பில் இருந்து வந்த பல முக்கிய பிரச்சினைகள் ஆளுநரின் நேரடி தலையீடு மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளினால் தீர்த்து வைக்கப்படுவதாக அறியக்கூடியதாகவுள்ளது.

எனினும் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த மக்கள் தூரப்பயணம் மேற்கொண்டு, உரிய நேரத்திற்கு சமூகமளிப்பதிலும் சந்திப்புக்கான வாய்ப்புகளை பெறுவதிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாக பெருந் தொகைப் பணச்செலவுடன் ஒரு முழு நாள் அலைக்கழிந்து, கைசேதமடைகின்ற துர்ப்பாக்கிய நிலை இம்மக்களுக்கு ஏற்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் காரியாலய மட்டத்தில் மாதம் ஒரு முறையாவது நடமாடும் மக்கள் சந்திப்புக்களை நடாத்தி, இம்மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க ஆவண செய்யுமாறு வலியுறுத்துக் கேட்டுக் கொள்கின்றேன் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை

மருதமுனை நிருபர்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் கௌரவ தலைவர் மீரா எஸ்.இஸ்ஸத்தீனின் வழிகாட்டலில் சம்மேளனத்தின் அங்கத்தினர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ பரிசோதனை எதிர்வரும் 2019.02.19ம் திகதி காலை 8 மணிக்கு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என சம்மேளனத்தின் கௌரவ செயலாளர் ஏ.ஜே.எம்.ஹனீபா தெரிவித்தார்.

மேலும் அன்றைய தினம் 10.30 மணிக்கு சம்மேளனத்தின் மாதாந்தக் கூட்டமும் தலைவர் கலாபூஷணம் மீரா.எஸ்.இஸ்ஸதீன் இல்லத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் ஒரு வருடமாக விஞ்ஞான ஆசிரியர் இல்லை

காரைதீவு நிருபர்

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இயங்கி வரும் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த ஒரு வருட காலமாக விஞ்ஞான பாட ஆசிரியர் இல்லாமையினால் கற்றல். கற்பித்தல் நடவடிக்கையில் பெரும் தடையேற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். கல்வி வலயத்தில் விஞ்ஞான பாட ஆளணியினர் மேலதிகமாக காணப்படுகின்ற நிலையில் வலய மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற ஆசிரியர் சமப்படுத்தலில் கூட விஞ்ஞான பாட ஆசிரியர் இன்னமும் இப்பாடசாலைக்கு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடிப்படை பாடங்களுக்கு தேவையான உரிய ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மாணவர்கள் வறுமை நிலையின் காரணமாக வெளியூர்களுக்கு சென்று கற்க முடியாமையினால் தமது பாடசாலைக் கல்வியை இடைவிலகள் செல்கின்றனர் எனவும் மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை காரியாலயத்தை மூடும் நடவடிக்கை நிறுத்தம்

சாய்ந்தமருது நிருபர்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை மூடிவிட்டு அதனை அம்பாறை நகரக் காரியாலயத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு, அதனை கல்முனை மாநகர சபையில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

தனது வேண்டுகோளின் பேரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸ் ஆகியோர் எடுத்துக் கொண்ட அவசர நடவடிக்கையின் பயனாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

கடந்த பல வருடங்களாக தனியார் கட்டிடமொன்றில் இயங்கி வருகின்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்திற்கு சொந்தக் கட்டிடம் இல்லாத விடயத்தையும் வாடகைப் பணம் அதிகம் செலுத்தப்படுவதாகவும் காரணம் காட்டி கடந்த வாரம் அதனை மூடிவிடுவதற்கான உத்தாவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை தொடர்ந்தும் கல்முனையில் இயங்க வைக்கும் பொருட்டு அக்காரியாலயத்திற்கு கல்முனை மாநகர சபையில் இடமளிப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டதுடன் அதற்கான இணக்கத்தைத் தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்திற்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தேன்.

அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் துரிதமாக செயற்பட்டதன் பயனாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் கலாநிதி ஜகத் முனசிங்க இதற்கான அங்கீகாரக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளர்.

இதன் பிரகாரம் அடுத்த ஒரு சில தினங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிராந்தியக் காரியாலயத்தை கல்முனை மாநகர சபை கட்டிடமொன்றுக்கு இடமாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க தொண்டு நிறுவனத்தின் 07 கோடி ரூபா நிதியுதவியுடன் நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி கட்டிட திறப்பு விழா அதிபர் ஏ.எல்.நிசாமுதீன் தலைமையில் நடைபெற்றபோது கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம், அமெரிக்காவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதரக அரசியல் விவகார பொறுப்பதிகாரி அந்தோணி எப் ரென்சுல்லி, சிவில் இராணுவ பணிப்பாளர் டெர்ரி ஏ.ஜோன்சன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

படம்: சாய்ந்தமருது நிருபர்

நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் திருகோணமலையில் செயலமர்வு

சேனையூர் நிருபர்

நல்லிணக்க பொறிமுறை செயற்பாடுகள் எவ்வாறு இலங்கையில் செயற்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பிலான செயலமர்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நல்லிணக்க பொறிமுறைகளை ஒன்றிணைப்பதற்கான செயலகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் நல்லிணக்க பொறிமுறை செயற்பாடுகள்,நிலைமாறு நீதி,பாதிக்கப்பட்டவர்களின் மீளிணைப்பு மற்றும் நல்லிணக்கம்,காணாமல் போனோர்கள் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

வளவாளர்களாக நல்லிணக்க பொறிமுறைகள் ஒன்றிணைப்பதற்கான செயலகத்தின் பணிப்பாளர் சஞ்சீவ விமல குணரத்ன, நல்லிணக்க பொறிமுறைகளை ஒன்றிணைப்பதற்கான செயலகத்தின் பதுளை வலய செயலணி ஒருங்கிணைப்பாளர் நடேசன் சுரேஷ் மற்றும் காணாமல் போனோர் அலுவலகத்தின் ஆணையாளர்களான சட்டத்தரணி எஸ்.கே.லியன கே,ஜெயதீபா புண்ணியமூர்த்தி கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.அருந்தவராஜா, மாவட்ட உதவி அரசாங்க அதிபர் என். பிரதீபன்,திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

புதிய அரசியல் யாப்பு நகல் வெளிநாட்டுச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலாகும்

சின்னக் கிண்ணியா நிருபர்

புதிய அரசியல் யாப்பு நகல் முழுக்க முழுக்க சர்வதேசத்தின் சாயல்களையும் புலம்பெயர் அமைமைப் புக்களின் பலத்தினையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதால், இதன் மூலம் முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியாக அநாதைகளாக்கப்படக் கூடிய பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என கிழக்கு மாகாண சமத்துவ முற்போக்கு முன்னணியின் தலைவர் டொக்டர் வை.எல்.எம்.யுசுப் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு நகல் வரைபு தொடர் பாக விளக்கமளிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று கிண்ணியா விஷன் கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம வளவாளராக கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சமத்துவ முற்போக்கு முன்னணியின் உதவித் தலைவரும் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளருமான டொக்டர் ஏ.எம்.ஏ.அஜீத் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் யாப்பு நகலின் 45 ஆவது சரத்து கிழக்கை வடக்குடன் நிரந்தரமாக இணைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பண்பாட்டுரிமைகள் மறுதலிப்பதற்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

இந்த நகலில் இந்தியா, தென் ஆபிரிக்கா, பின்லாந்து போற்ற நாடுளின் அரசியல் யாப்பில் இருந்து பெரும் பகுதி உள்வாங்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையானது உள்ளூரில் அரசியல் யாப்பு தொடர்பாக பிரச்சினைகள் எழுகின்ற போது, சர்வதேசத்தின் தலையீடு செய்வதற்கான வாய்ப்பினை இது உருவாக்கலாம். இந்த நிலையினை புலன்பெயர் அமைப்புக்களின் பொருளாதார பலமும் இராஜதந்திர நகர்வுகளுமே உருவாக்கியிருக்கின்றன.

வடக்கும் கிழக்கும் இணைவதற்கு நாங்கள் எதிரனவர்கள் அல்ல. ஆனால் இனவிகதாசாரத்துக்கு ஏற்ப இணைந்த வட கிழக்கில் தங்களை தாங்களே ஆளுவதற்கான நிலங்கள் வழங்கப்படல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் 9996 சதுர கிலோ மீற்றர் நிலங்கள் உள்ளன. இதில் முஸ்லிம்களின் இன விகிதாசாரப்படி 28 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு அரச காணிகள் வழங்கப்பட்டு, முஸ்லிம் சமூகத்துக்காக தனி ஆட்சி அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் வட கிழக்குக்கு வெளியே வாழ்கிற முஸ்லிம்களின் வாழ் உரிமைக்கான பாதுகாப்புப் கிடைக்கும்.

முஸ்லிம்ளிகன் காணிப் பிரச்சினையோ, கல்வியில் விகிதாசாரத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகளோ செய்யப்படவில்லை. அத்தோடு முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு குறித்தான ஏற்பாடு தொடர்பில் பெரிய சந்தேகம் நிழவுகின்றது.

தனியான அரசியல் கட்சி ஒன்று முஸ்லிம்களுயக்க தேவைதானா? ஏன் தேசிய கட்சிகளோடு சேர்ந்து போக முடியாது என்ற வாதப் பிரதிவாதங்கள் இங்கு முன்வைக்கப்பட்டன. இதற்கான மழுமையான விளகத்தையும் தரவேண்டிய எது கடமையாகும்.

தனித்துவமான அரசியல் அடையாளம் ஒரு சமூகத்துக்கு இருக்குமானால், அவர்களுக்குத்தான் தேசிய சுய உரிமை வழங்கப்பட வேண்டும் என 2014 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட ஐ.நா வின் உறுப்பு நாடுளின் கூட்டத் தொடரில் தேசிய பாதுகாப்பு என்ற விடயம் பற்றி ஆராய்ந்த போது, தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன்படி அரசியல் கட்சி ஒன்று தேவை என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அரசியல் கட்சி என்பது ஒரு சமூகத்தின் அரசியல் வாழ் உரிமைக்கான அடையாளமாகும். இந்த அடையாளத்தை ஐக்கிய தேசிய கட்சியல் இருந்தோ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தோ பெறமுடியாது.

ஒருமித்த நாடு என்ற பதமும் கிழக்கு முஸ்லிம் சமூகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. சமஸ்டி என்ற சொல் சிங்களவர்களுக்கு ஒவ்வாமையாக இருப்பதால் இந்த ஒருமித்த நாடு (ஏக்க ராஜ்ஜிய) என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால், பிரிந்த இரண்டு தேசங்கள் ஒன்றிணைவதையும் மீண்டும் தேவையான போது பிரிவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தியிருப்பதாக சில அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதற்கு மேற்கு, கிழக்கு ஜெர்மனிகளையும், இங்கிலாந்து, பின்லாந்தையும் உதாரணம் காட்டுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பசுமைச்சூழல் வேலைத்திட்டம்

எஸ்.எம்.அறூஸ்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் 'பசுமையான சூழலினை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளில்' மரநடுகை திட்டம் அக்கரைப்பற்று முல்லைத்தீவு வீதியின் இரு மருங்கிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வை பொது சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பீ.கே. ரவீந்திரன், தரமுகாமைத் துவ பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல் ஆகியோர் ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

மரநடுகை திட்டத்திற்கு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் ,தாதிய பரிபாலகர், தாதிய உத்தியோகத்தர்கள் , சுகாதார உதவியாளர்கள் மற்றும் சன்ரைஸ் விளையாட்டுக்கழகம், ஏஸ் விளையாட்டக்கழகம், வை.எம்.எம்.ஏ அமைப்பு ஆகியவற்றுடன் முல்லைத்தீவு ஜூம்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினர், அக்கரைப்பற்று வோக்கர்ஸ் அமைப்பினர் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்படும் 2019ம் ஆண்டுக்கான நிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் மற்றுமொரு செயற்றிட்டம் இதுவென்பதுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை 2018ம் ஆண்டிற்கான ஜனாதிபதி பசுமை விருதினை பெற்று வெற்றியடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பழுகாமம் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் இவ்வீதியால் நாளாந்தம் பயணிக்கும் வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் மிகவிரைவில் இவ்வீதியை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கொரிக்கை விடுக்கின்றனர்.

படம்: மண்டூர் நிருபர்

இரண்டு காணிகளை விடுவிப்பதற்காக கடற்படை உயர் அதிகாரிகள் இணக்கம்

சின்னக் கிண்ணியா நிருபர்

மூதூர் தக்வா நகர் பிரதேசத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இரண்டு காணிகளை விடுவிப்பதற்காக கடற்படை உயர் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட கடற்படை உயர் அதிகாரிகளுடன் பாராளமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அந்த இரண்டு தனியார் காணிகளையும் சென்று பார்வையிட்டார்.

குறித்த காணிகளை விடுவிப்பது சம்பந்தமாக கிழக்கு மாகாண கடற்படை கட்டளைத் தளபதிக்கும் பாராளமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்குக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு அமைய, இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு பிரதேச சபையிலே மீண்டும் பரபரப்பு

பிரதி தவிசாளர் இல்லாத கூட்டத்தில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

வரவு - செலவு திட்டம், மாடுகள் கொல்களம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே பாரிய சர்ச்சைக்கு உரிய உள்ளூராட்சி சபையாக மாறி உள்ள காரைதீவு பிரதேச சபையில் பிரதி தவிசாளர் ஏ. எம். ஜாஹீர் மீது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை புதிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் 12 ஆவது அமர்வு தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்றது. அனைத்து உறுப்பினர்களும் அமர்வுக்கு வந்திருந்தனர். கூட்டம் குறித்த அறிவித்தல் நேர காலத்துடன் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று ஒழுங்கு பிரச்சினை ஒன்றை கிளப்பி பிரதி தவிசாளர் ஜாஹீர் கடுமை தொனியில் உரையாற்றியதுடன் வெளி நடப்பு செய்து வெளியேறி சென்றார். இவருடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சபாபதி நேசராசாவும் வெளியேறினார்.

பிரதி தவிசாளர் வெளியேறி சென்ற பிற்பாடு ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து அவர் சபையையும், தவிசாளரையும் அவமானப்படுத்தி விட்டார் என்று குற்றம் சாட்டி பிரதி தவிசாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர் பஸ்மிர் முதலில் வாய்மூலமும், பின்னர் தவிசாளர் கேட்டு கொண்டதன் பெயரில் எழுத்துமூலமும் கோரிக்கை விடுத்தார். இதை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சி. ஜெயராணி வழிமொழிந்தார். இதில் யாருக்காவது எதிர்ப்பு இருக்கின்றதா? என்று தவிசாளர் வினவியபோது காரைதீவு மகா சபையின் சுயேச்சை குழு உறுப்பினர் ஆறுமுகம் பூபாலரட்ணம் பூர்வாங்க ஆட்சேபனை முன்வைத்தார்.

இதை அடுத்து இவ்விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆறுமுகம் பூபாலரட்ணம், மு. காண்டீபன், எம். எச். எம். இஸ்மாயில், எம். றனீஸ் ஆகிய 04 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். மறுபுறத்தில் தவிசாளரின் வாக்குடன் சேர்த்து ஆதரவாக 05 வாக்குகள் கிடைத்தன. காரைதீவு மகா சபை சுயேச்சை குழுவின் மற்றொரு உறுப்பினரான இராசையா மோகன் நடுநிலை வகித்தார்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதை அடுத்து பிரதி தவிசாளர் ஜாஹீர் ஒரு மாத காலத்துக்கு சபை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் தடை விதிக்க முடியும் என்கிற தீர்மானத்தை தெரிவித்து இதை சட்ட ரீதியாக நிறைவேற்ற அடுத்த அமர்வில் பிரேரணையாக கொண்டு வருவது என்று அறிவித்தார்.

அத்துடன் பிரதி தவிசாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பு வெற்றி பெற்ற விடயத்தை கிழக்கு மாகாண ஆளுனர், உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் அ. சுந்தரகுமாருக்கு தவிசாளர் ஜெயசிறில் அறிவுறுத்தினார்.

இதே நேரம் அன்று மாலை சம்மாந்துறையில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் எச். எம். எம். ஹாரிஸால் நடத்தப்பட்ட கூட்டத்தில் காரைதீவு பிரதேச சபையின் பிரதி தவிசாளர் என்கிற வகையில் ஜாஹீர் கலந்து கொண்டதுடன் அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையின் செல்லுபடியாகின்ற தன்மை குறித்து அங்கு வந்திருந்த உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உயரதிகாரிகளிடம் வினவினார். ஒரு உறுப்பினர் சபையில் இல்லாதவிடத்து அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை என்று துறை சார்ந்த நிபுணர்களால் அவருக்கு எடுத்து கூறப்பட்டது. இந்நிலையில் அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை வலிதற்றது என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று கோரி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு பிரதி தவிசாளர் ஜாஹீர் எழுத்துமூலம் முறையிட்டார்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில் அட்டப்பள்ளம் பிலோமினாவுக்கு தேசிய சாதனை விருது

விழாவுக்கு செல்ல முடியாத அளவுக்கு வீட்டில் வறுமை

நாடளாவிய ரீதியில் இந்து அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆக்க திறன் போட்டியில் கிழக்கு மாகாணத்தின் அதிகஷ்ட பிரதேசங்களில் ஒன்றான அட்டப்பள்ளத்தை சேர்ந்த சிறுமி ஜெ. பிலோமினா மகத்தான வெற்றி ஈட்டி தேசிய சாதனை புரிந்து உள்ளார்.

அட்டப்பள்ளம் விநாயகர் அறநெறி பாடசாலை மாணவியான பிலோமினா எழுதிய கட்டுரைக்காக தேசிய ஆக்க திறன் விருது இன்று ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இடம்பெற உள்ள விழாவில் வைத்து வழங்கப்படுகின்றது.

அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தின் தரம் 02 மாணவியான இவர் மிகவும் வறிய குடும்பத்தை சேர்ந்தவர் ஆவார். இவரின் பெற்றோர் கூலி தொழிலாளிகள் ஆவர். கொழும்பில் இடம்பெற உள்ள விருது வழங்கல் விழாவுக்கு நேரில் சென்று பங்கேற்க முடியாத நிலையில் இவரின் குடும்ப சூழல் காணப்படுகின்றது.

மீராவோடை வைத்தியசாலைக்கு மருந்தாளர் நியமனம்

பஹ்த் ஜுனைட்

மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று மேற்கு, பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் எச்.எம்.எம். முஸ்தபா மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் மீராவோடை வைத்தியசாலைக்கு மருந்தாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரின் வேண்டுகோளையேற்று இந்நியமனத்தினை வழங்கியமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கு வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் ஊர் மக்கள் சார்பாக நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மீராவோடை வைத்தியசாலையில் நாளாந்தம் சுமார் 250க்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவிலும், ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் நாளாந்தம் பற்சிகிச்சை கிளினிக் இடம்பெறுவதுடன், மாதத்தில் 8 தினங்கள் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு ஆஸ்த்மா, தொற்றா நோய் போன்ற நோய்களுக்கான கிளினிக் நடைபெறுகின்றன. இதற்காக சுமார் 1400க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இவ் வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருக்குமுரிய மருந்து, மாத்திரை வகைகளை வழங்குவதற்கு மருந்தாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் நீண்ட நேரம் நோயாளிகள் காத்திருக்க வேண்டிய தேவைப்பாடும், குறிப்பாக வயோதிப நோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களையும் எதிர்நோக்கி வந்தனர்.

சில சந்தர்ப்பங்களில் இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் நோயாளிகளை பார்வையிட்ட பின்னர் வைத்தியர்களே மருந்தாளருக்கான கடமையினையும் மேற்கொண்டு மருந்து, மாத்திரைகளை வழங்கும் சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெற்றும் வந்துள்ளன.

இவ்வாறு பல சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரின் வேண்டுகோளை ஏற்று இந்நியமனத்தினை பெற்றுத்தந்தமைக்காக ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன், இவ்வைத்தியசாலையின் ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறைகளில் கவனம் செலுத்தி வைத்திய பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்திற்கும் இன்றுவரை உதவி புரிந்து வரும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினையும் பாராட்டுக்களையும் எமது பிரதேச மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச தகவல் திணைக்கள ஊடக அடையாள அட்டை வழங்குவதில் தாமதம்

காத்தான்குடி நிருபர்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்கிவரும் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் மாகாண ஊடகவியலாளர்களுக்கான ஊடக அனுமதி அட்டை வழங்குவதில் (2019) இவ் வருடம் தாமதம் நிலவி வருவதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஊடக அனுமதி அட்டை கடந்த காலங்களில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் உரிய நேரத்திற்கு பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் இவ் வருடம் 2019 புதுவருடம் தொடங்கி 1 மாதம் 14 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் ஊடக அனுமதி அட்டை பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

2019 புதிய வருடத்திற்கான ஊடக அனுமதி அட்டை வழங்குவதில் தற்போது காணப்படும் தாமதம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு புதிய வருடத்திற்கான ஊடக அனுமதி அட்டையை அவசரமாக வழங்குமாறும் பிராந்திய ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளுநர் அடிக்கல் நாட்டிவைப்பு

தோப்பூர் நிருபர்

மூதூர் கல்வி வலயத்திலுள்ள தோப்பூர் அல்லை நகர். அல் ஷிபா வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் பாடசாலை அதிபர் என்.எம்.பாஜீத் தலைமையில் நடைபெற்றது

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம், ஹிஸ்புல்லா கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

சுமார் 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இக்கட்டிடம் அமையவுள்ளது. கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

அம்பாறை கரையோரத்தில் போதனா வைத்தியசாலையையும் மருத்துவ பீடத்தையும் ஏற்படுத்துவதே இலக்கு!

சாய்ந்தமருது நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிராந்தியத்தில் போதனா வைத்தியசாலை ஒன்றையும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தையும் ஏற்படுத்துவதே தனது இலக்கு என சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற சீன நிதி உதவியின் கீழான புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மற்றும் புதிய விடுதி திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் மேலும் கூறுகையில்;

சம்மாந்துறை வைத்தியசாலைக்கு கட்டடம் ஒன்று தேவை என்று என்னிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் இருக்கும் போதே இந்தக் கட்டடத்துக்கான வரை படம் வரையப்பட்டது. அதைக் கட்டி முடிப்பதற்காக இஸ்ரேல் நாட்டின் நிதி கிடைக்கவுள்ளது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அந்த நிதி கிடைக்கவில்லை. அதன் பின் நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றி இந்த முயற்சியைக் கையில் எடுத்தோம். அது வெற்றியளித்துள்ளது.

நான் பிரதி அமைச்சராக பதவியேற்றது முதல் இதுவரை 117 மில்லியன் ரூபா நிதியை இந்த வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளேன். இப்போது திறக்கப்பட்டுள்ள புதிய கட்டடம் பெண்களின் நலன்கருதி அமைக்கப்பட்டதாகும். இந்த வைத்தியசாலையில் இருக்கும் கட்டடங்களுள் இந்தப் புதிய கட்டடம்தான் நவீனமானதாக இருக்கின்றது.

எனக்குக் கிடைத்துள்ள அமைச்சைப் பயன்படுத்தி பல சேவைகளை நான் செய்து கொண்டு போனாலும்கூட அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிராந்தியத்தில் பொது வைத்தியசாலை ஒன்று அமைக்க வேண்டும் என்பதுதான் எனது இலக்கு. அவ்வாறு பொது வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதை போதனா வைத்தியசாலையாக மாற்ற வேண்டும். அதன் பின் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தைத் தொடங்க வேண்டும். இவற்றுக்கான பாரிய முயற்சிகளை நான் முன்னெடுத்து வருகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிராந்தியம் வைத்தியத் துறையில் தன்னிறைவு அடைய வேண்டும். இதய சத்திர சிகிச்சைக்கு நாம் யாழ்ப்பாணம் அல்லது பொலநறுவை போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த நிலை மாற வேண்டும். கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையை இவ்வாறான சத்திர சிகிச்சைகள் செய்யும் வைத்தியசாலையாக மாற்ற வேண்டும்.

இருக்கின்ற ஒரு வருடத்துக்குள் என்னால் முடிந்தவற்றைச் செய்வேன். இவ்வாறு என்னால் செய்ய முடிகின்றமைக்குக் காரணம் எமது கட்சியும் தலைமைத்துவமும்தான் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

டெங்கற்ற பாடசாலையாக கிண்ணியா அல் ஹிரா தெரிவு

சின்னக் கிண்ணியா நிருபர்

கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட டெங்கு நுளம்பு ஒழிப்புப் போட்டியில் கிண்ணியா அல் ஹிரா முஸ்லிம் மகளீர் மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்காக இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் திருகோணமலை மாவட்டக் கிளையினால் நடாத்தப்பட்ட இந்தப் போட்டியில் கிண்ணியாவில் உள்ள 66 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

இதில் அதிக தொடர் மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்று, இந்த வருடத்தில் டெங்கற்ற பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு, அதற்கான விருதும் வழங்கி வைக்கப் பட்டது.

பாலம் அமைக்க கோரிக்கை!

தோப்பூர் நிருபர்

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் கறுக்கா முனையிலிருந்து - புன்னயடி இறங்கைத்துறை முகத்துவாரத்தினை இணைக்கும் ஆற்றுக்கு குறுக்கேயான புன்னையடிப் பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்குள்ள மக்கள் கறுக்காமுனை,புன்னையடி ஆகிய பிரதேசங்களுக்கும் இடையிலான சுமார் 100 மீற்றர் வரை நீளமுடைய உவர் நீர் களப்பு ஆற்றைக்கடந்து செல்லுவதற்கு இழுவைப்பாதையூடாக. நாளாந்தம் பயணிக்கவேண்டிய அவல நிலையுள்ளது. இதனால் இப்பகுதி வாழ் மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

இவ் இழுவைப்பாதையானது காலை முதல் மாலை 5.00 மணி வரை சேவையில் ஈடுபடுவதாகவும் கூறுவோர் இரவு நேரங்களில் பாதை சேவையில் ஈடுபடுவதில்லையெனவும் கூறுகின்றனர். அவசர நிலைமைகளில் இரவு நேரங்களில் நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்ப்பதில் தாம் பெரிதும் சிர.மங்களை எதிர்கொள்வதாகவும் கூறுகின்றனர். இதனால் இம் மக்கள் வீண் செலவினத்தையும் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொள்வதாக கூறுகின்றனர் அத்துடன் இழுவைப்பாதை சேவையில் ஈடுபடாத நேரங்களில் மக்கள் நீண்ட தூரம் சுற்றவேண்டியிருப்பதாகவும் இதனால் தாம் வீண் செலவினத்தையும் பெரும் அசௌகரியத்தையும் எதிர்கொள்வதாகவும் கூறுகின்றனர் புன்னயடிக்கு பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு கடந்தகாலங்களில் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும் இன்னும் பாலம் அமைக்கப்படவில்லையென இவர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி முகமாலைப் பகுதிக்கு ஜப்பான் அதிகாரிகள் விஜயம்

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சார்ப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டு கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை, வேம்பொடு கேணி, கிளாலி ஆகிய பகுதிகளில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

ஜப்பானிய அரசின்நிதியுதவியுடன் மனித நேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவான சார்ப் அமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்படி குழுவினர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

மேற்படி குழுவினர் அதன் அலுவலகத்தில் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளதுடன், கண்ணிவெடி அகற்றும் பகுதிக்குச்சென்று அதனைப்பார்வையிட்டதுடன், நிலமைகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் உப அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட செயலகத்தில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் உப அலுவலகம் மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம். கனீபா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அயேல இத்தவல பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாவட்ட செயலகத்தின் வளாகத்தில் அமைந்துள்ள சுரங்க பணியகத்தின் உப அலுவலகத்தை திறந்து வைத்திருந்தார்.

நிகழ்வில் அதிதிகள் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மங்கள இசை முழங்க பவனியாக அழைத்து வரப்பட்டு அலுவலகத்தின் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் வீதிகள் மற்றும் கட்டிடங்களுக்கான மண் கற்களுக்கான அனுமதிகளை பெற்றுக் கொள்வதற்கு அனுராதபுரத்திலுள்ள புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைமை காரியாலயத்திற்கு செல்ல வேண்டியிருப்பதால் கால தாமதத்தை தவிர்க்கும் நோக்குடன் உப அலுவலகம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் க.உதயராசா மற்றும் மாவட்ட செயலகத்தின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா பொலிசாரால் மாணவர்களிற்கு போக்குவரத்து தொடர்பான பயிற்சி

வவுனியா சைவபிரகாசா மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிசாரின் ஏற்பாட்டில் இப் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

குறிப்பாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிவடையும் நேரத்தில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை கையாளும் விதம் தொடர்பாக போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தரால் குறித்த பயிற்சிகள் வழங்கபட்டிருந்தது.

வவுனியாவில் சிறுவனின் மரணத்திற்கான மருத்துவ அறிக்கையால் உறவினர்கள் மேலும் சோகத்தில்

வவுனியா நிருபர்

வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் பகுதியில் அப்பம்மாவுடன் சென்ற சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளமை கிராமத்தையே சோகமாக மாற்றியிருந்ததுடன் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உறவினர்கள் தெரிவித்ததையடுத்து மருத்துவ அறிக்கை வெளிவந்ததானது உறவினர்களை மேலும் சோகத்திற்குள்ளாக்கியுள்ளது.

மேலும் இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

சுந்தரபுரத்திலிருந்து சிதம்பரபுரம் கற்குளம் படிவம் 3 பகுதிக்கு தொண்ணூறாம் நாள் நினைவஞ்சலிக்கு முன் ஆயத்த வேலைக்காக சிவானந்தம் தருண் என்ற ஆறு வயது சிறுவன் அப்பம்மாவுடன்

சென்றிருந்தார். அங்கு ஏனைய சிறுவர்களுடன் விளையாடி கொண்டிருந்ததாகவும் இரவாகியதால் சிறுவனை காணவில்லை என நீண்ட நேரமாக தேடியும் எங்குமே கிடைக்கவில்லை. இதனையடுத்து கிணற்றில் இருந்து குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட கிணறானது முழுமையாக நிர்மானிக்கப்பட்டுள்ளதுடன் கிணற்றின் கட்டு 3அடிக்கு உயற்றப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள கிணறு என்றும் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உறவினர்கள், அயலவர்கள் தெரிவித்திருந்த நிலையில் மருத்துவ பரிசோதனை இடம்பெற்றிருந்தது.

எனினும் வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். சட்ட வைத்திய அதிகாரி பிரசன்ன அப்புகாமி பிரேத பரிசோதனையின் பின்னர் நீரில் மூழ்கி மூச்சுதிணறியே சிறுவன் உயிரிழந்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகள் முறைகேடுகளாகவும் ஊழல், மோசடிகள் நிறைந்ததாகவும் உள்ளது

கரைச்சி பிரதேச சபை தொடர்ச்சியாக சுற்று நிருபங்களுக்கு மாறாகவும், சட்டத் திட்டங்களுக்கு புறம்பாகவும், விதிமுறைகளையும் மீறியும் அரசியல் நலன் சார்ந்து செயற்பட்டு வருகின்றமை தொடர்பில் தொடர்ச்சியாக நாம் குரல் கொடுத்து வருகின்ற போதும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் சபைக்குள் குரல் கொடுத்து அதனால் பயன் ஏற்படாத போது தற்போது ஊடக சந்திப்பின் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துகின்றோம் என கரைச்சி பிரதேச சபையின் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தங்களின் மாவட்ட அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில்

கரைச்சி பிரதேச சபையானது கிளிநொச்சி தமிழரசு கட்சியின் கிளை அலுவலகம் போன்று செயற்படுகிறது. எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் கருத்துச் சுந்திரமோ, அல்லது அவர்களின் கோர்க்கைகள், வேண்டுகோள்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை, அறிக்கைகளில் கூட இடம் பெறுவதுகிடையாது. இது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் எந்தப் பயனும் ஏற்படவில்லை, முறைகேடுகள் அதிகார துஸ்பிரயோகங்கள் தொடர்பில் நாம் தொடர்ச்சியாக சபையில் கருத்து தெரிவித்து வருகின்ற போதும் அதனை சபையின் அறிக்கைகளில் இடம்பெறாது நீக்கி வருகின்றனர்.

இதன்மூலம் அங்கு முறைகேடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான சூழலை திட்டமிட்டு ஏற்படுத்துகின்றனர் எனத் தெரிவித்த அவர்கள். கிராம எழுச்சித் திட்டம்(கம்பரலிய) மூலம் கரைச்சி பிரதேச சபையின் கீழ் வருகின்ற பல அபிவிருத்தி திட்டங்களை மாவட்டச் செயலகம் வழங்கியிருந்தது. முக்கியமாக இதில் வீதி அபிவிருத்தி அடங்குகிறது. இதனை தொழிநுட்ப மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு சபையினுடையது.

ஆனால் இங்கு இத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பணிகளுக்கான மதிப்பீட்டின் போது திட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட வீதி ஒன்றாகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி வேறான்றாகவும் காணப்படுகிறது. அத்தோடு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள், தர நிர்ணயங்களில் அபிவிருத்திகள் இடம்பெறவில்லை, உதாரணமாக திட்ட மதிப்பீட்டின் படி ஏழு தொண் றோலர் போட வேண்டிய இடத்தில் ஆறு தொண் றோலர் பயன்படுத்தப்படுகிறது. இதனை மேற்பார்வை செய்ய வேண்டிய பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கு மக்கள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டிய போதும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை

அத்தோடு புதிதாக அமைக்கப்பட்டு முடிவுறுத்தப்படாதுள்ள கிளிநொச்சி பேரூந்து நிலையத்தில் பலர் அடாத்தாக கடைகளை அமைத்துள்ளனர். இவர்கள் யாரெனின் ஏற்கனவே டிப்போக் காணியில் இலவசமாக வியாபார நிலையங்களுக்கான காணிகள் வழங்கப்பட்டு அவற்றை பல இலட்சங்களுக்கு விற்பனை செய்து விட்டு தற்போது புதிய பேரூந்து நிலையத்தில் வியாபார நிலையத்தை அமைத்துள்ளார்கள். அவர்களுக்கு மின்சாரமும் பிரதேச சபையின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மிக் முக்கியமானது அவ்வாறு கடை அமைத்துள்ளவர்கள் தமிழரசு கட்சியின் வட்டாரக் கிளைகளில் பதவிகளில் உள்ளவர்கள். எனத் தெரிவித்த அவர்கள்

இவ்வாறே சபையின் எவ்வித அனுமதியோ, ஒப்புதலோ இன்றி ஏ9 பிரதான வீதியில் கரபோக்கு சந்திக்கருகில் தவிசாளரினால் அவரது கட்சி செயற்பாட்டாளர்களுக்க வியாபார நிலையங்கள் வழங்கப்பட்டு அவர்கள் நிரந்தரமாக வியாபார நிலையத்தை நடத்தி வருகின்றனர். இவ்வாறு பல இடங்களில் இடம்பெற்று வருகிறது. சபையில் எதிர்தரப்பு உறுப்பினர்கள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுகின்ற போதும் தவிசாளர் அதனை கருத்தில் எடுக்காது தன்னிச்சையாக, கட்சி நலன் சார்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்

மேலும் ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்தல் ஒப்பந்தகள் வழங்குவது, உள்ளி ட்ட தீர்மானங்களை மேற்கொள்வது என அனைத்து விடயங்களையும் தவிசாளர் தன்னிச்சையாக மேற்கொண்டு வருகின்றார் எனவேதான் நாம் இந்த விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு தீர்மானித்து ஊடகவியலாளர் சந்திப்பை மேற்கொள்கின்றோம், எதிர்தரப்பு உறுப்பினர்களின் கருத்துச் சுந்திரத்தை மறுத்து முறைகேடுகளை மேற்கொள்கின்ற சபையானது மக்களின் குரல்களுக்காவது மதிப்பளித்து நியமாகவும் சட்டத்திட்டங்களுக்கு அமைவாகவும் நடக்க வேண்டும் என்பதே.

இரண்டு அம்ச கோரிக்கையை முன்வைத்து துவிச்சக்கர வண்டியில் இலங்கையை சுற்றி பயணம்

வவுனியா நிருபர்

லயன்களில் வாழும் மலையக மக்களுக்கு தனித்தனி வீடுகள் அமைத்து கொடுக்கப்படவேண்டும், தேயிலைத்தோட்டத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் என்ற இளைஞன் துவிச்சக்கர வண்டியில் இலங்கையை சுற்றிவரும் சாதனைப்பயணத்தை வவுனியா கோவில்குளம் சிவன்கோவில் வளாகத்திலிருந்து தமிழ் மணி அகளங்கன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையை சுற்றி 32 நாட்களில் 2125 கிலோமீற்றர் பயணிக்கவுள்ள பிராதபனின் பயணத்தை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையின் 25 மாவட்டங்களுக்கு மலையக தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பயணித்த பிராதாபனை பாராளுமன்ற உறுப்பினர், நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், எஸ்.காண்டீபன், மக்கள் சேவை மாமணி சேனாதிராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் நிறுவனர் கெ.சந்திரகுமார் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாவை சேர்ந்த கலைஞரான த.பிரதாபன் கடந்த காலங்களிலும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கையை சுற்றி மோட்டார் சைக்கிளில் பயணித்திருந்ததுடன் வட மாகாணத்தினை சுற்றியும் துவிச்சக்கரவண்டியில் பயணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக இடம்பெற்ற வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் வரவேற்பும் அறிமுக நிகழ்வும்

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் வரவேற்பு நிகழ்வு இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தலைமையில் இலாங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நீதி அமைச்சின் கீழ் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் வவுனியா மாவட்டத்தில் உள்ள காணி உரிமை, உடமை மாற்றம் மற்றும் காணிப் பிணக்குகள் தொடர்பான பிரச்சனைக்களுக்கு விரைவாக தீர்வு காணும் பொருட்டு 45 பேர் மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த உறுப்பினர்களை மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தி காணி மத்தியஸ்தர்களை வரவேற்று காணி பிணக்கு விசாரணைகளை ஆரம்பிக்கும் முகமாக குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது முதற்கட்டமாக 15 காணிப்பிணக்குளுக்கு தீர்வு காணப்பதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, விசேட காணி மத்தியஸ் சபை ஆணைக்குழுவின் ஆலோசகர் சிரேஸ்ட சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, ஆசியான் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எம்.ஜயந்த, நீதி அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா, வவுனியா பிரதேச செயலாளார் கா.உதயராஜா, வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளார் க.சிவகரன், வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலளர் த.தர்மேந்திரா, பொலிஸ் அதிகாரிகள் பொது மக்கள் எனவும் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வவுனியா மாவட்ட காணி மத்தியஸ்தர் சபையிடம் 400 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு தந்தி

ஊடகவியலார்களை புகைப்படம் எடுத்து இராணுவம் எச்சரிக்கை

கணுக்கேணிப்பகுதியில் பொது குழாய் கிணறு ஒன்றில் இருந்து படையினர் தொடர்ச்சியாக நாள் தோறும் இருபதிற்கு மேற்பட்ட தண்ணீர் பௌசர்களில் நீரினை எடுத்து செல்வதால் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்ப்பட்டு வந்த நிலையில்

குறித்த பகுதியில் மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் சென்று படையினரை நீர் எடுக்க வேண்டாம் என்று சொன்னபோது படையினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பத்தில் செய்தி சேகரிப்பிற்காக சென்ற ஊடகவியலாளர்களை அச்சுறுத்து வகையில் படையினர் ஒளிப்படம் எடுத்துள்ளதுடன் ஊடகர் ஒருவரின் கமராவினை பறிக்க முற்பட்ட சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது.

குறித்த செய்தியை பதிவுசெய்துகொண்டிருந்த ஊடகவியலார்களை புகைப்படம் எடுத்த இராணுவம் மற்றும் இராணுவ அதிகாரிகள் கடு தொனியில் எச்சரிக்கை விடுத்தனர்

மேலும் சுயாதீன ஊடகவியலாளரான செல்வராசா சுமந்தன் என்பவரது கமெராவை பறிக்க முற்பட்ட படை அதிகாரி ஒருவர் கமெராவில் என்ன உள்ளது கமெராவை காட்டு என கடும் தொனியில் மிரடடல் விடுத்தார்

மக்கள் எமக்கு எதுவும் முறையிடவில்லை ஊடகவியலாளர்கள் நீங்கள் தான் பிரச்சினையை ஏற்படுத்துகிண்றீர்கள் என படையினர் ஊடகவியலாளர்களை பார்த்து கடும் தொனியில் எச்சரித்தனர்.

படையினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஊடகவியலாளர்களால் குறித்த சம்பவம் வெளிக்கொணரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வீதிப்பதாதைகளில் பல்வேறு முரண்பாடுகள்

வவுனியா நிருபர்

வவுனியாவில் புதிதாக காட்சிப்படுத்தப் பட்டு வரும் வீதிப்பதாதைகளில் தகவல்கள் சரியானதாக வழங்கப்படவில்லை இதனால் மக்களுக்கு குழப்பங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசங்களும் காணப்படுவதாக தெரி விக்கின்றனர்.

அண்மைய காலங்களில் வவுனியா நகரங் களில் வீதி அதிகாரசபையினரால் வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வீதிப்பதாதை களில் சில எழுத்துப்பிழைகள் காணப்படு கின்றது குறித்து அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் அவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டு இன்று வரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் இடம்பெற வில்லை.

இந்நிலையில் தற்போது வவுனியா நெளுக்குளம் பகுதியில் வீதியில் பொருத் தப்பட்டுள்ள வீதிப்பதாதை ஒன்றில் வவுனியா நகர் 4.5 கிலோ மீற்றர் என்று குறிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டு காணப்படும் வீதி வீதிப்பதாதையில் 5 கிலோ மீற்றர் என்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்க ளுக்கு பல்வேறு குழப்பங்கள் எற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தவறுகள் தெரிந்து இடம்பெறுகின் றதா அல்லது தெரியாமல் இடம்பெறுகின் றனவா? என்ற கேள்வியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதுடன் சுட்டிக் காட்டப்பட்டு வரும் தவறுகள் திருக்கிக் கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதேவைளை வீதி அபிவிருத்தி அதி காரசபை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு வினவிய போது, இதற்கு பதில ளிப்பதற்குரிய அதிகாரிகள் தற்போது அலு வலகத்தில் இல்லை எனவும் இவ்விடயம் சம்பந்தமாக உடனடி கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

தாய்பால் புரக்கேறி மரணித்ததாக கூறப்பட்ட குழந்தையின் இதயத்திலும் துவாரம்: குடும்பத்தினர் அதிர்ச்சி

வவுனியா நிருபர்

வவுனியா, சாம்பல் தோட்டம் பகுதியியைச் சேர்ந்த ஒரு மாத குழந் தையின் மரணத்திற்கு தாய்பால் புரக்கே றியமையே காரணம் என கூறப்பட்ட நிலையில் குழந்தையின் இதயத்தில் துவாரம் இருந்தமை உடற்கூற்று மருத் துவ பரிசோதனை அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவ ருவதாவது,

வவுனியா, சாம்பல் தோட்டம் பகு தியில் வசித்து வந்த இளம் குடும்பம் ஒன்றின் ரங்கநாதன் ரவீன் என்ற ஒரு மாதக் குழந்தைக்கு தாய்பால் புரக் கேறிய நிலையில்

உடனடியாக குழந்தையை வவு னியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் முயற்சி பலனின்றி குழந்தை மரணமடைந்ததாக உறவினர் கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குழந்தையின் உடற் கூற்று மருத்துவ பரிசோதனையில் குழந்தையின் இதயத்தில் துவாரம் இருந்தமை கண்டு பிடிக்கப்பட் டுள்ளது. குறித்த குழந்தையின் தாய் வவுனியா வைத்தியசாலையிலேயே குழந்தையை பிரசவித்த அதேவேளை, வைத்தியசாலை வைத்தியர்களின் மருத்துவ அறிக்கையிலும் குழந்தை ஆரோக்கியமனது என தெரிவிக்கப்பட் டிருந்த நிலையில் இதயத்தில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை.

இந்நிலையில் தற்போது குழந்தை இறந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில் இத யத்தில் துவாரம் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டமை பெற்றோர், உறவி னர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

குழந்தை பிறந்த பின் வைத்தியர்கள் சரியான முறையில் மருத்துவ பரிசோ தனை மேற்கொள்ளாமையே தமது குழந்தையின் மரணத்திற்கு காரணம் என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ள னர்.

இதேவேளை, மேலதிக உடற்கூற்று மருத்துவ பரிசோதனைக்காக குழந்தை யின் உடல் பாகங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலைய விடயம் தொடர்பாக வர்த்தக நலன்புரிச்சங்கம் ஆளுனருடன் சந்திப்பு

வவுனியா நிருபர்

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து உள்ளுருக்கான பேருந்து சேவைகளை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கையையும், வவுனியா மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி தொடர்பான விடயங்களையும் முன் வைத்து வவு னியா வர்த்தக நலன்புரிச்சங்கத்தினர் வடமாகாண ஆளுனருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த தாக வர்த்தக நலன்புரிச் சங்கத்தினுடைய தலைவர் கோ.சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இந் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்; கடந்த 2018ம் ஆண்டில் இருந்து பழைய பேருந்து நிலையத்தில் இருந்து எவ்வித பேருந்து சேவைகளும் இடம்பெறாமையினால் பழைய பேருந்து நிலையத்தை அண்மித்த வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதோடு, தூர இடங்களில் இருந்து நகர் பகுதிகளுக்கு வருகின்ற பொதுமக்கள் மற்றும் பாடச ாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதோடு தமது தேவைகளை பூர்த்தி செய்வ தற்கும், பாடசாலைக்கு செல்வதற்கும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்துமுச்சக்கர வண்டி போன்றவற்றை வாடகை;ககு அமர்த்த வேண்டிய நிலை ஏற்படுவதன் காரணமாக அதிகளவான பணத்தினை விரயம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரிவித்தார். இதன் காரணமாக உள்ளூர் சேவைகளை வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நடாத்துவதன் ஊடாக பல்வேறு நன்மைகள் வவுனியா மாவட்டத்திற்கு கிடைக்கும் என்ற விடயத்தினையும் சுட்டிக்காட்டியிருந்ததன் பய னாக வடமாக ஆளுனர் வவுனியாவிற்கு தான் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேரடியாக இவ்விடயத் தினை பார்வையிட்டு தீர்வை பெறுவதற்கு ஆவனை செய்வதாக தெரிவித்துள்ளதாக வர்த்தக நலன்புரிச்ச ங்கத்தின் தலைவர் தெரிவித்திருந்தார்.

இராணுவத்தில் பணியாற்றும் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள்

வவுனியா நிருபர்

இராணுவத்தில் பணியாற்றும் வருமானம் குறைந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு வன்னி படைத்தலைமையகத்தால் வீடு கள் நிர்மாணித்து வழங்கப்படவிருக்கிறது.

வன்னி பிரதேசத்தில் இராணுவத்தில் பணியாற்றும் வீடு இல்லாதவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் நன்கொடையாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீடுகள் நிர்மா ணிக்கப்பட்டு வரு கிறது.

முதற்கட்ட மாக வவுனியா பம்பைமடு மற் றும் வெலிஓயா பிரதேசத்தில் இரண்டு வீடு களை அமைத்து பயனாளிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா தலைமையில் இன்று (10) அடிக்கல் நாட்டப் பட்டு வீட்டின் நிர்மானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 61வது மற்றும் 62வது படைப்பிரிவுக ளில் பணியாற்றும் நாகராசா மூர்த்தி என்பவருக்கு வவுனியா பம்பை மடுவிலும், தனுஷ்கா பிரதீப் குமார என்பவருக்கு வெலிஓய பிரதேசத்திலும் வீடுகள் அமைத்து வழங்கப்பட வுள்ளது.

மேலும் இராணுவத்தில் பணியாற்றும் ஐந்து குடும்பங் களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் 61 வது படைப்பிரிவின் பிரிகேடியர் கே.டி.சி.ஜி. திலகரத்ன, வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கேணல் அனில் பீரிஸ் மற்றும் இராணுவத்தினர் கிராமவாசி கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாவில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தி னால் நகரசபை மண்டபத்தில் வவுனியா தெற்கு கல்வி வயலத்திற்குட்பட்ட மாணவர்களுக்கும் வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட 41 மாண வர்களுக்குமான கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தவைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலத் தின் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்க மும், வவுனியா கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட நல் உள்ளங்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் புலமைப்பரிசில் சித்திய டைந்த 10 மாணவர்களும், க.பொ.த உயர்தரத் தில் சித்தியடைந்த 32 மாணவர்களும் கௌர விக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன் வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவ னியா தெற்கு கல்விப்பணிப்பாளர் முத்து இரா தாகிருஷ்ணன், வவுனியா வடக்கு கல்விப்பணிப் பாளர் திருமதி சுரேந்திரன் அன்னமலர், வவுனியா சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள், வவுனியா நகர சபை உப நகரபிதா சு.குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான நா.சேனாதிராசா, ரி.கே.இரா ஜலிங்கம், வைத்தியர்கள், வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், வவுனியா வர்த்தகர் சங்கதலை வர் எஸ்.சுஜன், செயலாளர் ஆ.அம்பிகைபாகன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்தி ரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், சமூக ஆர்வலர் விக்னா, வர்த்தகப்பிரமுகர்கள், கல்வி யலாளர்கள், பொதுமக்கள் பெற்றோர்கள், மாண வர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

பிரதி அமைச்சர் புத்திக பத்திரன கிளிநொச்சிக்கு விஜயம்

பிரதி அமைச்சர் புத்திக பத்திரன கிளிநொச்சி வியம் மேற்கொண்டிருந்தார். கிளிநாச்சி பரந்தன் இரசாயன தொழிற் காலை அமைந்திருந்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர், அங்கு அமைந்திருந்த இரசாயன தொழிற்சாலை பணி களையும் பார்வையிட்டார். யுத்தின்போது கைவிடப்பட் டிருந்த குறித்த தொழிற்சாலை சிதைந்திருந்ததை பார்வை யிட்ட அவர், குறித்த தொழிற்சாலை கைவிடுவதற்கு முன்னர் அங்கு பணிபுரிந்தவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட் டார். குறித்த தொழிற்சாலை அமைந்திருந்த காணியின் ஒரு பகுதி படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிட த்தக்கதாகும்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இரண்டாவது கட்டட வசதிக்காக அடிக்கல் நாட்டி வைப்பு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இரண்டாவது கட்டட வசதிக் காகஅடிக்கல் நாட்டி வைக்கப் பட்டது. வைத்தியசாலையில் மொத்த நிதி 4474 மில்லி யன்னூகள் ஆகும். இதில் கட்டடம் அமைப்பதற்காக 1974 மில்லியன் நெதர்லாந்து அரசின் நிதி உதவி என்பது டன், மிகுதி 2500 மில்லியன் உபகரண கொள்வனவிற்காக இலங்கை அரசின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி என் பதும் குறிப்பிடதக்கது.

குறித்த கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதமர், அமைச்சர் கள், பா.ம உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த வைத் தியசாலைக்க கட்டடடத்தின் இரண் டாவது தொகுதிக்கான அடிக்கல்லை பிரதமர் ரணில் விரமசிங்க பா ம உறுப் பினர் சிறிதரனிடம் கையளித்தார். நீண்ட காலத்திற்கு பின்னர் குறித்த வைத்திய சாலைக்கான முக்கிய பிரிவுகளிற்கான கட்டட வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட உள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டம் பிரதமர் தலைமையில் நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டம் இன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத் தில் பிரதமர் தலமை யில் இடம்பெற்றது. குறித் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்ர மசிங்க, அமைச்சர்களான ராஜித சேனா ரத்தின, சாகல ரத்நாயக்க, ரிசாட் பதிஉத் தீன், ரவுப் கக்கிம், வஜிர அபேவர்த்தன, கரிசன் , ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பா.ம உறுப்பினர்களான சேனாதிராஜா, சிறிதரன், சித்தார்த்தன், சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்டத்தில் முன்னெ டுக்கப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பில் ஆரம்பத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்புக்களை வழங்கினார்.

தொடர்ந்து வெள்ள அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட மக்களிற்கு நிவாரணம், வீடு, நட்ட ஈடு வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையா டப்பட்டன. இதன்போது வெள்ள அனர்த்தத்தின் போது பிரதமர், சபாநாய கர்ஆகியோர் கலந்து கொண்ட கூட்டங் களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை எனவும், பாதிக் கப்பட்ட மக்களிற்கு பத்தாயிரம் ரூபா மற்றும் இரண்டாம் கட்ட நிவாரணம் ஆகியன வழங்கப்படவில்லை எனவும் இதன்போது பா. ம உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வும் குறிப்பிடப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் அதிகஷ்ட பிரதேசமான அரியாலை கிழக்கு மனித நேய வேலை திட்டத்துக்காக இராணுவத்தால் தத்தெடுப்பு

யாழ். மாவட்டத்தின் அதிகஷ்ட பிரதேசங்களில் ஒன்றான அரியாலை கிழக்கு இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தின் மனித நேய வேலை திட்டங்களுக்கான கேந்திர பிரதே சமாக தத்தெடுக்கப்பட்டு உள்ளது.

கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி, ஒழுக் கம் ஆகியவற்றில் மிகவும் மோசமான நிலையில் அரியாலை கிழக்கு காணப் படுகிறது. போதை பொருள் , பல தார மணம், பாலியல் ஒழுக்க கேடுகள் ஆகி யன இங்கு மலிந்து காணப்படுகின்றன. வன்முறைகள், குற்ற செயல்கள் ஆகியன அடிக்கடி நடந்த வண்ணம் உள்ளன. ஒவ் வொரு வீட்டிலும் வறுமை தாண்டவம் ஆடுகின்றது. எதிர் கால சந்ததியினராகிய பிள்ளைகள் பெரும்பாலும் பாடசா லைக்கு செல்வதே இல்லை.

அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அணுகி வராத பிரதேசமாகவே இது உள்ளது. அதே நேரம் அரசாங்கத்தின் மனித நேய வேலை திட்டங்களின் வரப் பிரசாதங்கள் இப்பிரதேசத்தை முறையாக வந்தடைவதும் இல்லை.

இந்நிலையில் இராணுவத்தின் மனித நேய வேலை திட்டங்களுக்கான நாடளா விய இணைப்பாளர் செல்வா இப்பிரதே சத்தினதும், இங்கு வாழ்கின்ற மக்களின தும் பேரவல நிலையை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சிக்கு எடுத்து கூறினார்.

மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியா ராச்சி இப்பிரதேசத்துக்கு நேரில் கள விஜ யம் மேற்கொண்டு நிலைமைகளை பார் வையிட்டதுடன் இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தின் மனித நேய வேலை திட்டங்களுக்கான கேந்திர பிரதேசமாக அரியாலை கிழக்கை தத்தெடுக்கின்ற தீர்மானத்தை எடுத்தார்.

இங்கு வாழ்கின்ற மக்களின் வறு மையை ஒழித்தல், வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், கல்வி, சுகாதாரம், ஒழுக்கம் ஆகியவற்றை மேம்படுத்துதல், இளையோர்களுக்கான வேலை வாய்ப் புகளை ஏற்படுத்துதல், வன்முறைகள், குற்ற செயல்கள் ஆகியவற்றை குறைத் தல், அறிவூட்டல்கள், விழிப்பூட்டல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் ஆகிய செயல் திட்டங்கள் இங்கு இராணுவத் தின் யாழ்.மாவட்ட கட்டளை தலைமை யகத்தால் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

இந்நிலையில் 130 உலர் உணவு பொதிகள், 50 மாணவர்களுக்கான கற் றல் உபகரணங்கள், சொக்லேட்டுகள் ஆகியன பூம்புகார் பொதுநோக்கு மண்ட பத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டன. இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதியின் வேண்டு கோளை ஏற்று தெற்கை சேர்ந்த தமிழ் - சிங்கள மனித நேய செயற்பாட்டாளர்கள் இவற்றுக்கான உதவிகளை மேற்கொண் டதுடன் நேரில் வந்து இவற்றை கைய ளித்து வைத்தார்கள்.

தெற்கில் இருந்து வருகை தந்த மனித நேய செயற்பாட்டாளர்கள் சார்பாக பிரபா லோகநாதன் இங்கு உரையாற்றியபோது இறைவனின் அருட்பார்வை அரியாலை கிழக்கு பிரதேசத்துக்கு கிடைத்து உள்ள து, இறைவனின் கருவியாக இராணுவத் தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி செயற்படுகின்றார், இறைவனின் கரு விகளாக இருந்து இப்பிரதேசத்துக்கும், இப்பிரதேச மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்றுவோம் என்று பேசினார். இவைபவத்துக்கு விசேட அழைப்பின் பெயரில் அம்பாறை மாவட்டத்தை சே ர்ந்த ஊடகவியலாளர்கள் சென்றிருந்தனர்.

சதுப்பு நிலங்களை பாதுகாப்போம்

இரத்தினம் நடராஜன்

உலகினது அனைத்துப்பகுதிகளிலும் ஈரநிலங்கள் காணப்பட்டாலும் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், அமேசனை அண்டிய பிரேசில் பகுதிகளில் முக்கியமான ஈரநிலங்கள் காணப்படுகின்றது. உலகில் ஏறக்குறை 1112 ஈரநிலப்பகுதிகள் காணப்படுவதுடன் அவை மொத்தமாக 89.37 மில்லியன் ஹெக்டயர் நிலப்பகுதிகளைக் கொண்டிருக்கின்றன.

நிலங்களைப் பாதுகாப்பதன் மூலம் பல்லுயிர் வளங்கள் மற்றும் கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டும் என்று பிப்ரவரி மாதம் 2ந்தேதி 1971ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் கரீபியன் கடற்பகுதியில் ராம்சர் (Ramsar) என்னுமிடத்தில் ஈரநிலங்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாக நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. . இதனைக் கருத்தில் கொண்டே ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2 அன்று சர்தேச அளவில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஏனைய அடிப்படை கொள்கைகளாவன, நிலம், நீர்,நேரடி வளப்பாதுகாப்பு என்பன சாதாரண முறையில் பாதுகாக்கும் அதேநேரம், பல்துறைசார் செயற்பாடுகளை துறைகளினூடாக செயற்படுத்தவேண்டியதாக காணப்படுகிறது. மேலும் நகர மற்றும் நகரை அண்மித்த சதுப்பு நிலங்களுக்கான சிறந்த திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தை பின்பற்றுவது ஆகும்.

இதையடுத்து, ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி உலக சதுப்பு நில தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. சதுப்பு நிலங்களின் அவசியம், சூழலியல் மாற்றங்களால் சதுப்பு நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அதனால் உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இத் தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகம் முழுக்க மனிதனின் தொடர் செயல்களால் இவை மிகப்பெரிய அழிவை சந்திக்கின்றன. சுற்றுலா தளங்களை உருவாக்குதல், எஸ்டேட் தொழில்கள் ஆகியனவும் இத்தகைய நிலங்களை அழிக்கின்றன. பல்லுயிரி வளம், நிலத்தடி நீர் வளம், நீரை வடிகட்டி நன்னீர் ஆக்குதல், உணவுச்சங்கிலியின் உறுதியான பிணைப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் இவற்றின் அழிவு எல்லாவற்றையும் காணாமல் செய்கிறது.

அழிவுக்குள் ஈரநிலம்

மனிதன் மேல் ஈரநிலத்திற்கு உள்ள ஈரம் ஈரநிலத்தில் மனிதனுக்கு இல்லை இதனால் மிகப்பெரிய அழிவை சந்திக்கின்றன. சுற்றுலா தலங்களை உருவாக்குதல், ரியல் எஸ்டேட் தொழில்கள் ஆகியனவும் நமது நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகளும், பாராமறிப்பு இன்மையும் இந்த நிலங்களை பாழ்ப்படுத்திவருகிறது. எனவே இந்த நிலங்களை பாதுகாக்கவும் அதன் பயன்களை மக்களிடம் கொண்டுசெல்லவும் இந்த தினத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஈரநிலப்பிரதேசங்களை பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

தாவரப்போர்வையை பாதுகாத்தல்:- அலையாத்தி தாவரங்களின் முக்கியத்துவத்தை சகலருக்கம் உணர்த்துவதன் மூலம் அவற்றை அழிவிலிருந்து மீட்டுக்கொள்ளலாம். அத்துடன் அழிக்கப்பட்ட தாவரங்களுக்கு பதிலாகவும் மேலதிகமாகவும் கடல்தாவரங்களை மீள்நடுகை மூலம் உருவாக்குதல்.

பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அறிவித்தல்:- ஈரநிலங்கள் அமைந்து காணப்படும் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவித்து அப்பிரதேசங்களில் ஈரநிலத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோரை சட்டத்தின் முன்நிறுத்துவதன் மூலமும் ஈரநிலப்பகுதிகளைப் பாதுகாக்கலாம்.

நகரக்கழிவுகளை கொட்டுவதை தவிர்த்தல்:- ஈரநிலப்பிரதேசங்களில் நகரக்கழிவுகளை கொட்டுவதை தவிர்த்து தொலைவான இடங்களில் அவற்றை கொட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தோ அல்லது கூட்டுஉரம் தயாரிப்பதற்கோ பயன்படுத்தலாம். இதன் மூலம் ஈரநிலப்பகுதிகளில் திண்மக்கழிவுகள் சேர்வதனைக் குறைக்கலாம்.

தொழிற்சாலைகளை வேறுபகுதிகளில் அமைத்தல்:- ஈரநிலங்கள் உள்ள பகுதிகளில் அமைந்து காணப்படுகின்ற தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் ஈரநிலங்களில் சேர்வதனைக் கட்டுப்படுத்தவேண்டுமாயின், அக்கைத்தொழிற்சாலைகளை வேறுபகுதிகளில் அமைத்தல்.

ஈரநிலப்பகுதிகளில் நிலம்நிரப்பி குடியிருக்கும் தேவையை கருத்திற் கொண்டு அத்தகையவர்களுக்கு வேறு சமவெளிப்பிரதேசங்களில் வசிப்பிடவசதி அல்லது நிலத்திற்கான உரிமையைப் பெற்றுக்கொடுத்தல்.

சதுப்பு நிலங்களின் முக்கியத்துவம் என்னவென்றால் அதிக நீர்வீழ்ச்சியின் போது பெறப்படும் நீரை உள்வாங்கி வெள்ளம் வராமல் தடுக்கிறது. வெள்ளத்தடுப்பைத் தவிர மேலும் பல முக்கியமான பல நன்மைகள் சதுப்பு நிலத்தில் கிடைக்கின்றன. வயல் மற்றும் ஏனைய விவசாய நிலங்களினூடாக உணவு உற்பத்தி செய்தல், வடிகாலமைப்பு அல்லது வீட்டுப்பாவனைக்கான கிணறுகளுக்கு நன்னீரை வழங்கல், அழகிய மற்றும் மருத்துவ தாவரங்களை வளர்த்தல், உள்ளக காற்றின் வெப்ப நிலையை கட்டுப்படுத்துதல், பூச்சிகளை கட்டுப்படுத்தல், வீட்டுத்தோட்டங்களின் மகரந்த சேர்க்கைக்கு துணை புரிதல், உலக வெப்பநிலை சீர்ப்பாட்டுக்கான காபனை சேமித்தல் மற்றும் பிரித்தல் பணியை செவ்வனே செய்தல், பொழுதுபோக்கு மற்றும் கல்வி வாய்ப்புகளை வழங்குதல், சப்பிரதாயபூர்வமான நம்பிக்கைகள், ஆன்மீக மற்றும் கலாசார விடயங்களுக்கு பங்களிப்பு வழங்கல் என்பற்றுடன் கூடிய உல்லாசத்துறைசார் நன்மைகள் என்பன இவற்றுள் உள்ளடங்குகின்றன.

இச்சதுப்பு நிலங்களாவன பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக அதன் தரத்தை இழக்கிறது. இவ்வாறு சதுப்பு நிலங்கள் தரமிழப்பதால் அவற்றில் இருந்து கிடைக்கும் நன்மைகளும் படிப்படியாக குறைந்து வருகிறது.

கொழும்பு சதுப்புநில முகாமைத்துவ மூலோபாயத்தின் குறிக்கோள்களாவன

கொழும்பு மாநகர எல்லைக்குள் மதிநுட்பத்துடன் கூடிய, நிலையான சதுப்புநில முகாமைத்துவ மூலோபாயம். மூலோபாய நோக்கங்கள் ஊடாக பயணிக்கும் (ஞிணூணிண்ண்-ஞிதணூணூடிணஞ்) துணைச் செயற்பாடுகள் காணப்படுவதுடன் கீழே தரப்பட்டுள்ள அடையாளங்காணல், தவிர்த்தல், மீட்டல், ஈடுபடல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகிய ஐந்து கருப்பொருட்ளினூடாக அக்குறிக்கோள்கள் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன

மூலோபாய குறிக்கோள்

1. அடையாளங்காணல்- சதுப்பு நிலங்களில் கண்டறிந்த, உய்த்தெடுக்கப்பட்ட பலன் மற்றும் மதிப்புகளை மதிநுட்பமான பயன்பாட்டு, செழிப்பான அபிவிருத்தி, மனித நலன் என்பவற்றுக்கு அடிப்படையாக காணப்படுகிறது. இவ்வனைத்து மதிப்புகளும் இனங்காணப்பட்டு தீர்மானங்கள் எடுக்கும்போது பயன்படுத்தவேண்டும்.

2. தவிர்த்தல்- சதுப்பு நிலங்கள்மென்மேலும் அழிவடையாமல், தரம் குறைவடையாமல் தவிர்த்தல் வேண்டும்.

3. மீட்டல்- தரம் குறைந்த, சதுப்பு நிலங்களை மீட்டு மீண்டும் அவற்றின் தரத்தை மேம்படுத்துவதனூடாக சுற்றுச்சூழல் செயற்பாட்டை சீர்படுத்தி சமூக,பொருளாதார மதிப்புக்களை அதிகரிக்கச் செய்தல்.

4. ஈடுபடல்- மதிப்புக்களை அடையாளங்காணல் மற்றும் மதிநுட்ப செயற்பாடு என்பவற்றை கருத்திற்கொண்டு பலவேறு பங்குதாரர்களுடன் இணைந்து பங்கேற்பு அணுகுமுறையினூடாக செயற்படல்.

5. கட்டுப்படுத்தல்- சட்டக்கருவிகள் மற்றும் முகாமைத்துவ நிறுவனங்கள் என்பன சதுப்பு நில முகமைத்துவ மூலோபாயத்திற்கு பொருந்துவதாக அமைய வேண்டும்.

மண்ணில் காற்று குன்றும் போது அதற்கு ஈடு செய்யும் வண்ணம் தாவரங்களும் இந்த ஈர நிலங்களில் உள்ளன. உவர் நீர்ச்சதுப்பு நிலங்களில் கண்டல் தாவரங்களைக் காணலாம். சிறுகண்டல், நரிக் கண்டல், கிண்னை, தில்லை, கடல் நீர் முள்ளி, வெண்கண்டல். கண்டல். நீர்த் தேங்காய், சாமுந்திரி, திப்பரத்தை காரான் பன்னம், யானைக் கண்டல் என்பன குறிப்பிடத்தக்கன.

சுற்றாடல் சமநிலையைப் பேணுவதற்கும் உகந்ததாக ஈர நிலத் தொகுதி காணப்படுகின்றது. ஆறுகள், தாழ்நிலங்கள், ஈரமான புல்வெளிகள், கழிமுகங்கள், கழிமுக, கடலோர குடியிருப்பு பகுதிகள், சதுப்புநிலக்காடுகள், பவளத் திட்டுகள், மீன் குளங்கள், நெற்பயிர் நிலங்கள், நீர்த் தேக்கங்கள் என்பவையெல்லாம் ஈரநிலப்பட்டியலில் உள்ளடங்குகின்றது.

ஈரநிலங்களின் பயன்கள்

சூழலியல், பொருளாதார சமூக ரீதியில் மனிதனுக்கு மறைமுகமாக பங்களிப்பினை வழங்குகின்றன.

அதிக மழை கிடைக்கும் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் பாதுகாக்கின்றன.

கட்டுக்கடங்காது காட்டாறாக பெருகி ஓடும் ஆறுகளை அடக்கியாண்டு குளங்களில் தேக்குவதும், வயல் நிலங்களில், வெள்ளச் சமவெளிகளில் பாய்ந்து அமைதியடைவதும் சதுப்பு நிலங்களில் வடிமானம் அடைய வைப்பதும் இந்த நிலங்களே

ஆற்றுப் பெருக்குக் காலங்களிலும், கடலலை செயற்பாடுகளின் போதும் சுனாமி போன்ற இயற்கை பேரழிவுகளின் போதும் கடற்கரை அரிப்புச் செயற்பாடுகளை சதுப்புநில தாவரங்களாலும், கற்பாறைத் தொடர்களாலும் நுரை போட்டு வரும் ஆக்ரோஷ அலைகளினை தடைபோட்டு நிற்பதுவும் இவ் ஈரநிலங்களே.

வண்டல் கலந்த நீரானது ஈரநிலங்களினூடாக செல்கின்ற போது கடற்கரை சதுப்பு நிலத்தாவரங்கள் போன்றவற்றால் தடுக்கப்பட்டு வண்டல்களை படிய வைக்கின்றன.

புயற்காலங்களில் ஏற்படும் கரையோர மண் அரிப்பை தடுக்கின்றது.

நீரை தூய்மையாக்குதல் இந்த நிலங்களின் முக்கியபயனாகும் . மேற்ப்பரப்புநீர்களில் கரைந்துவரும் ரசானங்களை நீக்கும் ஒரு வடிகட்டியாக இது செயல்பட்டு தரைக்கீழ் நீரின் தரத்தை பாதுகாக்கிறது.

ஒரு பிரதேசத்தின் இடம்சார் காலநிலை (கூணிணீணி- இடூடிட்ச்ணுஞு) நுண் காலநிலை (ஞுடிஞிணூணி இடூடிட்ச்ணுஞு)ஆகியவற்றின் தன்மைகளை பேணுவதிலும் இவை முக்கியமான பங்களிப்பினையே செய்கின்றன. இதனால் மிதமான வெப்பநிலை நிலவுவதற்கும் மனித செளகரிய நிலையை ஏற்படுத்தவும் இவை காரணமாகின்றன.

விவசாய உற்பத்திகளையும் நீர்ப்பாசன தேவைகளையும், குடிநீரையும் பெற்றுக் கொள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் என்ற பெயரிலும் நீர் மின்சாரத்தை பெறுவதில் என பயன்படுகிறது.

கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக விளங்குகின்றது.

மீனினங்களின் இனவிருத்திக்கு ஏற்ற இடங்களாக உள்ளதோடு மீன்பிடி, உப்பு உற்பத்தி போன்றவைற்றில் கடல்சார் மற்றும் களப்பு, கடல் நீரேரிகளாவும்,

ஈரநிலங்கள் உயிரினங்களின் பல்வகைமைத் தன்மையைக் கொண்டிருப்பதனால் 'நகரங்களின் பச்சை நுரையீரல்கள்' என அழைக்கப்படுகின்றன. சேத்துநிலம் என்றும் சகதி என்றும் மக்களால் அசௌகரியமாக அழைக்கப்பட்டுக் கழிவுகள் கொட்டுகின்ற இடமாக மாறிக் கொண்டிருக்கின்ற இடங்களுக்கு ஈரநிலங்கள் (ஙிஞுணுடூச்ணஞீண்) என்று பெயர் அதாவது குட்டை, குளம், ஏரி, போன்றவையே

தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்கள் ஈரநிலங்கள் ஆகும். சேற்றுநிலம், சகதி, முற்றாநிலக்கரியுள்ள நிலம், நீர்நிலைகள் ஆகியவை ஈரநிலங்கள் எனப்படும். நீர் நிலைகள் இயற்கையாக அல்லது செயற்கையாக அமைந்தவையாகவோ, நிலையான, அல்லது பாயும் நீரைக் கொண்டவையாகவே நிரந்தரமானவையாகவோ, தற்காலிகமானவையாகவோ, நன்னீரை அல்லது உப்புநீரை உடையவையாகவோ இருக்கலாம். வற்றுப் பெருக்கின் போது ஆறு மீற்றருக்கு அதிகரிக்காத ஆழமுள்ள கடல் நீரைக் கொண்டுள்ள பகுதிகளும் ஈரநிலங்களுக்குள் அடங்கும் என கூறப்படுகிறது.

எது எப்படி எனினும் நாம் இயற்கையுடன் ஒன்றித்து சென்று அதனை நேசிக்க தொடங்கினால் அது நம்மை நேசிக்கும் மனிதனாய் பார்த்து திருந்தாவிடடால் அழிவினை தடுக்க முடியாது என்பது நிதர்சனம்.

காதல் நிராகரிப்பை எளிதாகக் கடக்க உதவும் மூன்று குணங்கள்

அர்ப்பணிப்பு, அக்கறை, பொறுப்பு ஆகிய மூன்றில் ஏதோ ஒன்று இல்லை என்றால்தான் காதலில் பிரிவு வரும். இந்த மூன்றில் ஏதோ ஒன்று குறைவாக இருந்தால் அங்கே சிக்கல்கள் உருவாகும். ஆக, இந்த மூன்றும் சேர்ந்த முதிர்ச்சியான மனநிலைதான் காதல்.

'காதல் என்பது மதித்தல்... பரஸ்பரம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல்...' - இது மறைந்த எழுத்தாளர் பாலகுமாரன் தன்னுடைய வாசகர்களுக்கு அடிக்கடி சொல்லும் 'மந்திரம்'. 'காதல் அற்பமானது. அது தோன்றுவதுக்கும் மறைவதுக்கும் அற்பமான காரணங்களே போதுமானது. அது மேன்மையுறுவதும் மலினப்படுவதும் சம்பந்தப்பட்ட நபர்களைச் சார்ந்தது...!' - இது எழுத்தாளர் ஜெயகாந்தனின் சிந்தனை. காதலர்கள் உற்சாகமாகக் கொண்டாடுவார்கள். புதிய காதல்கள் உதிக்கும். எல்லாக் காதலும் ஏற்கப்படுவதில்லை. சில இதயங்கள் நிராகரிப்புக்கும் உள்ளாகலாம். பலர், அதோடு வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். சிலர் தங்கள் வாழ்க்கையையே முடித்துக்கொள்ள முனைகிறார்கள்.

வாழ்க்கையில் நிறைய பேரைச் சந்திக்கிறோம், கடந்துபோகிறோம். ஆனால், எல்லோருடனும் எப்போதும் இருக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்படுவதில்லை. ஆனால், சிலருடன் இருக்கும்போது மட்டும் அப்படியான உணர்வு ஏற்படும். அவர்களுடன் இருக்கும்போது சௌகரியமாக உணருவோம். அந்த உணர்வு நமக்கு நல்லதாகத் தோன்றும். அவர்களோடு தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புவோம். அவர்களோடு ஒரு ரிலேஷன்ஷிப்பை உருவாக்கிக்கொள்ள நினைப்போம். ஒரு நல்ல உணர்வுக்காக ஒருவரோடு இருக்கவேண்டும் நினைக்கிறோம். அவ்வளவுதான், மற்றபடி இதுவும் காதல் கிடையாது.

காதலில் மூன்று குணங்கள் முக்கியம். அவை அர்ப்பணிப்பு, அக்கறை, பொறுப்புணர்வு. இதில் ஏதேனும் ஒன்றில் தொய்வு ஏற்பட்டாலும், அந்தக் காதல் தோல்வியில்தான் முடியும்!

ஓர் ஆண் ஒரு பெண் மீது காதல் கொண்டால், அந்தக் காதலை பெண்ணும் விரும்ப வேண்டும். அப்படி விரும்பினால் இருவரும் ஓர் உறவை வளர்த்துக்கொள்ளலாம். ஒருவர் மற்றவரின் அருகில் இருக்கலாம், சுக, துக்கங்களில் பங்கெடுக்கலாம். இருவரும் தங்களுடைய உறவின்மீது எந்தளவுக்கு அர்ப்பணிப்போடு இருக்கிறார்கள் என்பதைப்பொறுத்தே அந்த உறவு நீடிக்கும். ஒரு பிரச்னை வந்தால் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டாமல் தங்களுடைய உறவு நீடிப்பதற்காக இருவரும் அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. ஒரு சிக்கல் வந்தால் அதைத் தீர்ப்பதில் தனக்கும் பங்கிருக்கிறது என்பதை இருவருமே உணர வேண்டும்.

உறவு என்பதே இருவர் சேர்ந்துதான். ஆகவே, எதிர் பாலினத்தவரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். இருவருக்கும் இடையேயான உறவைத் தக்கவைத்துக்கொள்வதற்காக அர்ப்பணிப்பு, அக்கறை, பொறுப்புணர்வு ஆகிய மூன்றையும் கடைப்பிடிக்க வேண்டும். இது பக்குவப்பட்ட முதிர்ச்சியான மனநிலையில்தான் வரும்.

அர்ப்பணிப்பு, அக்கறை, பொறுப்பு ஆகிய மூன்றில் ஏதோ ஒன்று இல்லை என்றால்தான் காதலில் பிரிவு வரும். இந்த மூன்றில் ஏதோ ஒன்று குறைவாக இருந்தால் அங்கே சிக்கல்கள் உருவாகும். ஆக, இந்த மூன்றும் சேர்ந்த முதிர்ச்சியான மனநிலைதான் காதல். இந்த மனநிலை என்பது வளரிளம் பருவத்தில் வராது. வந்தாலும் அது காதலாக இருக்காது. ஒருவருக்கு ஹார்மோன் கிளர்ச்சியெல்லாம் தாண்டி, சுமார் 22 வயதுக்குப் பிறகு மெச்சூரிட்டி நிலை ஏற்படும். உடல், மனம் மற்றும் அறிவியல்ரீதியாக சுய முடிவு எடுக்கும் பக்குவத்தை அடையும்போதுதான் காதல் மலரும்.

ஒருவர் தன் காதலைத் தெரிவிக்கும்போது மற்றவர் அதை ஏற்காமல் நிராகரிக்கிறார் என்றால், அவர் 'தன் உறவைத்தான் நிராகரிக்கிறார்... தன்னையல்ல' என்பதை உணரவேண்டும். 'நான் காதலிக்கவில்லை... இது வேண்டாம்...' என்று மறுத்தால், அவர் உங்களுடைய சுபாவத்தை நிராகரிக்கவில்லை. உங்களுடனான உறவைத் தக்கவைத்துக்கொள்வதில் விருப்பமில்லை என்றே எடுத்துக்கொள்ளவேண்டும். ஒருவர் காதலை நிராகரித்தால் அது மற்றொருவருக்குப் பலவீனம் கிடையாது. நிறைய நேரங்களில் ஒருவருடைய காதல் நிராகரிக்கப்படும்போது அவர் என்ன நினைப்பாரென்றால், 'நான் சரியில்லை... நான் தகுதியானவன் இல்லை... அதனால்தான் காதல் ஏற்கப்படவில்லை... நான் பொருத்தமான ஆளில்லை'என்று பர்சனலாக எடுத்துக்கொள்வார்கள். ஒருவர் உங்கள் காதலை நிராகரித்தால் அப்படி எடுத்துக்கொள்ளக் கூடாது.

உங்களுடன் மற்றொருவர் உறவு வைத்துக் கொள்ளலாமா... வேண்டாமா என்பதை முடிவு செய்யும் சுதந்திரம் உங்களுக்கு இருக்கிறது என்றால், அதேபோல, உங்களோடு உறவைத் தொடரலாமா... வேண்டாமா என்பதை முடிவு செய்யும் சுதந்திரம் மற்றவருக்கும் இருக்கிறது. ஆகவே, மற்றவர் உங்கள் காதலை மறுக்கும்பட்சத்தில் அதை நீங்கள் மதிக்க வேண்டும். அதற்குப் பக்குவம்வேண்டும்.

எந்த உறவிலும் பிரிவு என்பது இழப்புதான். ஆனால், எந்தவோர் இழப்பிலிருந்தும் நாம் மீண்டு வந்துவிடுவோம் என்று உணரவேண்டும். அதற்கான பக்குவம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. ஒரு இழப்பிலிருந்து படிப்பினைக் கற்றுக்கொள்வதுதான் மனிதனுடைய இயல்பு. ஆகவே, காதல் நிராகரிப்புக்கு உள்ளானால் அதை தன்னுடைய தனிப்பட்ட விஷயமாக ஒருவர் எடுத்துக்கொள்ளக் கூடாது.

'என்னைப் பிடித்திருக்கிறது. ஆனால், என்னுடனான உறவைத் தொடர்ந்து எடுத்துச்செல்ல விருப்பமில்லை. அதில் சில தயக்கங்கள் இருக்கின்றன...' என்பதை உணரவேண்டும்.

காதலில் ஆண், பெண் இருவருக்குமே சமபொறுப்பு உண்டு. காதலில் பிரிவு வந்துவிட்டால் அவர்கள் மனோரீதியான பிரச்னைக்கு உள்ளாகிவிடுவார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஒருவர் காதலை எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கிறார், அவர் காதல் என்று எதைச் சொல்கிறார், ஒருவருடைய இழப்பை அவர் எவ்வாறு எடுத்துக்கொள்கிறார் என்பத்தைப்பொறுத்தே காதல் நிராகரிப்பின் தாக்கம் அமையும்.

ஒருவர் காதலை உணர்வுபூர்வமாக அணுகினால், அவருக்கு மன உளைச்சல் ஏற்படலாம். ஆனால், சம்பந்தப்பட்டவர் முதிர்ச்சி மனநிலையில் உள்ளவராக இருந்தால் அவருக்குப் பெரிதாக பாதிப்புகள் இருக்காது.

பொதுவாக, காதல் நிராகரிப்புக்கு உள்ளானவர்கள் உறவினர்களிடமிருந்து விலகிப்போவார்கள். கலகலப்பாக இருக்க மாட்டார்கள். தனிமையை நாடுவார்கள். வாழ்க்கை சார்ந்து தத்துவமாகப் பேசுவார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளில் புதுப்புது மாற்றங்கள் வரும். தன்னுடைய உடை, சிகை விஷயத்தில் அக்கறையற்றவர்களாக இருப்பார்கள். அலைபேசி அழைப்புகளுக்கு உரிய பதில்தர மாட்டார்கள். தற்கொலைக்கான சமிக்ஞைகளை தருவார்கள். அப்படியாக இருந்தால் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். மேற்கண்ட அறிகுறிகள் தென்பட்டால், மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

தேவ்

காதலியின் பிரிவால் வாடும் இளைஞன் தன் மனவலிமையை அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறினால், அப்போது பனிச்சரிவில் சிக்கினால் அவனே 'தேவ்'.

கார்த்தி, அம்ருதா, விக்னேஷ் காந்த் ஆகிய மூவரும் பள்ளிப் பருவத்திலிருந்தே நண்பர்கள். விக்னேஷ் காந்த் ஸ்டாண்ட் அப் காமெடியில் தலைசிறந்து விளங்குகிறார். பயணங்கள் மேற்கொள்வதில் கார்த்திக்கு அலாதி ப்ரியம். திட்டமிட்ட இலக்கு என்று எதுவும் இல்லாமல் பயணம் தரும் மகிழ்ச்சியான அனுபவங்களின் மூலம் வாழ்க்கையை அதன்போக்கில் வாழ்கிறார் கார்த்தி. நண்பர்கள் அம்ருதா, விக்னேஷ் காந்துக்கும் அதையே தத்துவார்த்தமாகச் சொல்கிறார். கார்த்தியுடன் இருந்தால் நிம்மதியாக இருக்க முடியாது என்று நினைக்கும் விக்னேஷ் காந்த் அவரைக் காதலில் விழ வைக்க வியூகம் வகுக்கிறார். ஃபேஸ்புக் மூலம் ரகுல் ப்ரீத் சிங் அறிமுகம் ஆகிறார்.

மிகப்பெரிய நிறுவனம் ஒன்றின் சி.இ.ஓ.வாக இருக்கும் ரகுல் ப்ரீத் சிங்கின் பின்னணி என்ன, கார்த்தியை ஏன் அவர் கண்டுகொள்ள மறுக்கிறார், அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினை என்ன, ஏன் அந்தக் காதலுக்காக கார்த்தி தன்னை வருத்திக்கொள்கிறார், பிரச்சினைகளைத் தாண்டி அவர்கள் இணைந்தார்களா போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

காதலும் காதல் நிமித்தமுமாக ஒரு படத்தைக் கொடுக்க முயற்சித்திருக்கிறார் அறிமுக இயக்குநர் ரஜத் ரவிசங்கர். ஆனால், படத்தின் பேசுபொருள் கதையின் மையத்துக்கு நேர்மையாகவும் உண்மையாகவும் இல்லை.

28 வயது இளைஞனுக்கான தோற்றத்தில் கார்த்தியை பொருத்திப் பார்க்க முடியவில்லை. சாகசப் பயண விரும்பியாக தன்னை வடிவமைத்துக்கொள்ளும் விதத்தில் கவனம் ஈர்க்கிறார். விதவிதமான ஆடைகளிலும் பளிச்சென இருக்கிறார். ஆனால், ஆஸம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கார்த்தி நடிப்பதற்கான ஒரு காட்சி கூட படத்தில் இல்லை. தத்துவார்த்தம் பேசும் கார்த்தியே காதலில் விழுந்த பிறகு சுயசிந்தனையும், தன்னம்பிக்கையும் இல்லாமல் ஒடுங்கிப் போவதும், அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பதும், அதற்காக விபரீத முடிவுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதும் கதாபாத்திரச் சறுக்கல்.

ரகுல் ப்ரீத் சிங்குக்கு எது பிரச்சினை, ஏன் பிரச்சினை என்பதெல்லாம் பொதுவாகவே சொல்லப்பட்டுள்ளதால் கதாபாத்திரப் படைப்பில் குழப்பமே மேலோங்குகிறது. அலட்சியும், ஈகோ இதை வைத்தே அவர் கேரக்டர் டிஸைன் செய்யப்பட்டிருப்பது சரியாக இல்லை. ஒரு சி.இ.ஓ தடுமாற்றத்துடனும் தடமாற்றத்துடனும் அப்படி இயங்க முடியுமா என்பது கேள்விக்குறி. பெயர், பதவி எல்லாம் வெயிட்டாக இருக்கிறதே தவிர, ரகுலின் கேரக்டர் அவ்வளவு கனமில்லை. அதனால் அவர் நடிப்பிலும் எந்த அழுத்தமும் இல்லை.

பிரகாஷ்ராஜ் அந்த மருத்துவமனைக் காட்சியில் மட்டும் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொள்கிறார். ரம்யா கிருஷ்ணன் பாவம். டம்மியான ரோலில் எதுவும் செய்ய முடியாமல் வந்து போகிறார். அம்ருதா சீனிவாசன் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தில் குறை வைக்கவில்லை. ரேணுகா, பழைய ஜோக் தங்கதுரை, கார்த்திக், நிக்கி கல்ராணி ஆகியோர் கவுரவத் தோற்றம் அளவுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

விக்னேஷ் காந்தின் ஸ்டாண்ட் அப் காமெடியில் தான் படம் தொடங்குகிறது. ஆனால், இடைவேளை தாண்டியும் அந்தக் காமெடி என்று கருதப்படும் நீண்ட பேச்சு விடாமல் துரத்துகிறது. சில இடங்களில் சிரிக்க வைக்கும் விக்னேஷ் அதிகப்படியான பேச்சால் சோர்வையும் கடுப்பையும் வரவழைக்கிறார். முதல் பாதியின் சேதாரத்துக்கு விக்னேஷ் காந்த் பாத்திரப் படைப்பே காரணம்.

ஹாரீஸ் ஜெயராஜ் இசையில் அணங்கே பாடல் மட்டும் ரசிக்க வைக்கும் ரகம். மற்ற பாடல்களும், பின்னணி இசையும் படத்துடன் பொருந்தாமல் துருத்தி நிற்கின்றன. வேல்ராஜ் படத்தை மொத்தமாகத் தூக்கி நிறுத்தியிருக்கிறார். அமெரிக்கா, உக்ரைன், மும்பை, சென்னை என்று கண்டங்கள் தாண்டிய லொக்கேஷன்களின் அழகை கேமராவில் அள்ளி வந்திருக்கிறார். ஆண்டனி எல். ரூபன் கத்தரிக்கு இன்னும் வேலை கொடுத்திருக்கலாம்.

பயணம் தொடர்பான காட்சிகள் வசீகரிக்கின்றன. படத்தின் சாதகமான அம்சம் இது மட்டுமே. காதல் மலர்வதற்கான தருணங்களை சரியாகச் சொல்லாதது படத்தின் பெருங்குறை. பயணங்களில் லயிக்கும் முதிர்ச்சியான நாயகன் தன்னையே தொலைக்கும் அளவுக்குப் போவது, பொய்யாக உருவாகும் சண்டைகள், தேவையே இல்லாத ஈகோ, அதனால் வரும் பிரிவு, நெடுஞ்சாலையில் குழந்தையைக் காப்பாற்றுவதற்காகவே வலிந்து திணிக்கப்பட்ட சண்டைக் காட்சி என படம் முழுக்க செயற்கைத்தனம். கார்த்தி- ரகுல் ப்ரீத்சிங் இடையேயான உறவு நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்தவில்லை. அப்பாவிடம் வளர்ந்த பையனுக்கு இருக்கும் சிக்கல்களை- சுதந்திரத்தைப் படம் பதிவு செய்யவில்லை. அம்மா வளர்த்தெடுத்த பெண்ணுக்கு இருக்கும் உளவியல் சிக்கலையும் படம் ஓரளவுக்குக் கூடப் பேசவில்லை.

ஃபேஸ்புக்கில் நட்புப் பட்டியலில் கூட சேர்த்துக் கொள்ளாத ஒரு பெண்ணுக்காக நாயகன் எடுக்கும் மெனக்கெடல்கள் நம்பும்படியாக இல்லை. சி.இ.ஓ. சாதாரணமாகக் கேள்வி கேட்கும் இளைஞனைத் தேடி வந்து பதில் சொல்வதில் லாஜிக்கும் இல்லை. இந்த நிமிஷம் உன் மனசு என்ன சொல்லுதே அதைச் செய் என்கிறார் இயக்குநர். ஆனால், அந்த மனங்களின் ஊடலையும் கூடலையும் நேர்த்தியாகப் பதிவு செய்யத் தவறியிருக்கிறார்.

அப்பா எனக்கு அட்வைஸ் செய்ததே இல்லை

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில் ரஜினி ஜோடியாக நடிக்க நயன்தாராவிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ரஜினி நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'பேட்ட'. கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய இந்தப் படத்தை, சன் பிக்சர்ஸ் தயாரித்தது. நவாஸுதின் சித்திக், விஜய் சேதுபதி, சிம்ரன், த்ரிஷா, பாபி சிம்ஹா, மேகா ஆகாஷ், சனந்த் ரெட்டி ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்தனர். அனிருத் இசையமைத்தார்.

'பேட்ட' படத்துக்குப் பிறகு தன்னுடைய இரண்டாவது மகள் சௌந்தர்யாவின் திருமண வேலைகளில் பிஸியாக இருந்தார் ரஜினி. சௌந்தர்யாவுக்கு கடந்த 11-ம் தேதி திருமணம் முடிவுற்றது. எனவே, அடுத்த படத்தில் கவனம் செலுத்தப் போகிறார் ரஜினி.

ரஜினியின் அடுத்த படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்குகிறார். லைகா புரொடக்ஷன்ஸ் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கு சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்கிறார். 'பேட்ட' படத்தைத் தொடர்ந்து இந்தப் படத்துக்கும் அனிருத்தே இசையமைப்பார் என்று கூறப்படுகிறது.

இந்தப் படத்தில், நயன்தாராவை ஹீரோயினாக்கப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே 'சந்திரமுகி' படத்தில் ரஜினி ஜோடியாக நடித்துள்ள நயன்தாரா, 'சிவாஜி' படத்தில் அவருடன் இணைந்து ஒரு பாடலுக்கு நடனமாடினார். மேலும், 'குசேலன்' படத்திலும் இருவரும் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'கதைகளைத் தேர்வு செய்வதில் என்னுடைய கணிப்புகளும், முடிவுகளும் சில நேரங்களில் தவறாக அமைந் திருக்கு. அந்த அனுபவத்துக்குப் பிறகு, இப்போதெல்லாம் என்னிடம் கதை சொல்ல வருகிறவரின் முந்தைய படங்களின் ஸ்டைலை முக்கியமானதாக பார்க்க ஆரம்பித்துவிட்டேன். அவர்கள் கொண்டு வரும் கதைகளின் தன்மையையும் கூர்ந்து கவனிக்கிறேன். இதைத் தொடர்ந்து நான் தேர்ந்தெடுத்தக் கதையில் இயக்குநரும் நானும் புரிதலோடு பயணிக்க ஆரம்பிப்போம். இதுதான் என்னுடைய சமீபத்திய படங்கள் எல்லாம் வித்தியாசமான களங்களாக அமைய காரணமாகும்' என்கிறார் கார்த்தி.

'தீரன் அதிகாரம் ஒன்று', 'கடைக்குட்டி சிங்கம்' போன்ற படங்களின் வெற்றிகளைத் தொடர்ந்து தற்போது 'தேவ்' படம் . அடுத்தடுத்து 'மாநகரம்' இயக்குநர் லோகேஷ், பாண்டிராஜ், ஜீத்து ஜோசப் இயக்கும் படங்கள் என வரிசையாக டிக் அடித்துக்கொண்டு படப்பிடிப்புகளுக்குப் பறந்து கொண்டிருக்கிற கார்த்தியுடன் தொடர்ந்து உரையாடியதில் இருந்து..

'தேவ்' படத்தின் மேக்கிங் ஸ்டைல், டிரெயிலர் போன்றவற்றைப் பார்க்கும்போது 'பையா' பாணியில் ஒரு படம் மாதிரி தெரிகிறதே?

'பையா' படத்துக்குப் பிறகு அதே மாதிரி மனநிலையில் ஒரு படம் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டே இருந்தேன். 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்துக்குப் பிறகு தொடர்ந்து அதே மாதிரி போலீஸ் கதைகளாக வந்த நேரத்தில்தான் இந்த மாதிரி ஒரு கதையைக் கேட்க நேர்ந்தது. 'பையா' மாதிரி இரண்டு கேரக்டர்களோட பயணமாகத்தான் இதுவும் இருக்கும். ஆனால் எனக்கும், நாயகி ரகுல் ப்ரீத் சிங்குக்கும் பின் கதைகள் இருக்கும். நான் அப்பாவிடம் வளர்ந்த பையனாகவும் ரகுல் அம்மா வளர்த்த பொண்ணாகவும் ஒரு பெரிய வாழ்க்கைக் கதையிருக்கும். பாடல் காட்சி மாதிரியே இதில் ஒவ்வொரு 20 நிமிஷத்துக்கும் லொகேஷன் மாறிக் கொண்டே இருக்கும். அந்தப் புதுமை தான் இந்தக் கதையை நான் டிக் அடிக்க முக்கிய காரணம்.

படத்தில் நீங்கள் அப்பா வளர்த்த பைய னாக வருகிறீர்கள் என்றால், உண்மையில் உங்கள் அப்பா சிவகுமாருக்கும் உங்களுக்கு மான நடைமுறை அனுபவங்கள் இதில் வெளிப்படுமா?

அப்பா எனக்கு அறிவுரைகள் செய்ததே இல்லை. அவருடைய அனுபவங்களை மட்டுமே எங்களுடன் பகிர்ந்து கொள்வார். அவ்வளவுதான். நான் 10-ம் வகுப்பு படிக்கும் காலகட்டத்தில்தான் அவர்கூட எனது நேரத்தை செலவழிக்க முடிந்தது. அந்த நேரத்தில்தான் சினிமாவில் இருந்து இடைவெளி எடுத்துக்கொண்டு டிவி பக்கம் அப்பா வந்தார். எங்கள் வீட்டில் நானும், என் தங்கையும்தான் அப்பாவிடம் பயமே இல்லாமல் ரொம்பவும் ஜாலியாக, என்ன வேண்டுமானாலும் பேசும் சூழலில் இருந்தோம். வீட்டுக்குள் அந்த சுதந்திரம் ஒரு மகனுக்கோ, மகளுக்கோ ரொம்பவும் முக்கியம். அப்படி ஓரிடத்தை அப்பா எங்களுக்குக் கொடுத்திருந்தார். இந்தப் படத்தின் கதைக் களத்தில் ஹீரோ, அப்பா வளர்த்த பையன் என்பதில் இயக்குநரோட சொந்த வாழ்க்கை அனுபவங்களும் சில முக்கிய அங்கமாக இருக்கும்.

சமீபத்தில் நடந்த 'தேவ்' படத்தின் புரோமோஷன் நிகழ்ச்சியில் இயக்குநர், வசனகர்த்தா இருவரது தனித்தனி உழைப்பு பற்றி ஏதோ பேச வந்தீர்களே?

ஆந்திரா, கேரளாவில் எல்லாம் கதை விவாதம், கதை எழுத்தாக்கம் உள்ளிட்ட விஷயங்களுக்காகவே ஒரு தனி பிரிவு வைத்திருக்கிறார்கள். அதற்காக இரண்டு மாதங்களை செலவு செய்கிறார்கள். தமிழில் தான் கதை எழுதுபவரே அல்லது வசனம் எழுதுபவரே தனக்கு இன்னும் பெரிய வெளிச்சம் வேண்டும் என்று படத்தை இயக்கு வது உள்ளிட்ட எல்லா வேலைகளையும் தானே கையில் எடுத்துக் கொள்கிறார். அந்த விஷயம் முதல் படம் என்றால் ஓகே. இதையே தொடர்ந்து செய்ய வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். சமீபத்தில் சில அறிமுக இயக்குநர்கள் என்னிடம் கதை சொல்ல வந்தார்கள்.

அதை எல்லாம் கேட்டதும், இதை நீங்கள் உங்களுடைய இரண்டாவது, மூன்றாவது படங் களுக்கான கதையாக வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். அப்படி இல்லை யெனில் என்னிடம் இந்தக் கதையைக் கொடுங்கள். நான் ஒரு தொகை கொடுக் கிறேன் என்று சொல்லி, தொகை கொடுத்து அந்தக் கதையை வாங்கி வைத்திருக்கிறேன்.

அந்தத் தொகை அவர்களுடைய அடுத்த கட்ட நகர்வுக்கு பயன்படும். அப்படியில்லை என்றாலும் அவர்கள் தொடர்ந்து இது போன்ற கதை ஆக்கத்தில் கவனம் செலுத் தத் தூண்டுகோலாக இருக்கும். இந்த மாதிரியான நடைமுறை பரவலாக வேண்டும் என்பது எனது விருப்பம். அதைத்தான் அங்கே குறிப்பிட்டுச் சொல்ல வந்தேன். ஆனால், அந்த நிகழ்ச்சியில் இதைப் பேசுவதற்கு நேரம் கிடைக்கவில்லை.

'ஐரா'க்கு

நயன்தாரா நடித்துள்ள
சென்சார் போர்டு 'யு/ஏ' ச
யுள்ளது.

'லட்சுமி' மற்றும் 'மா'
மூலம் பரவலான கவனத்
கே.எம்.சர்ஜுன். வரலட்சு
ராஜ் நடிப்பில் வெளியான
மனிதர்கள் நடமாடும் இட
திரையில் இயக்குநராக அ

நயன்தாராவை வைத்
தைத் தற்போது இயக்கியு
தில், முதன்முறையாக இர
நடித்துள்ளார் நயன்தாரா.
கலையரசன், யோகி பாபு
கதாபாத்திரங்களில் நடித்து

'அறம்' படத்தைத் தய
டியோஸ் இந்தப் படத்தை
சுதர்சன் சீனிவாசன் ஒளிப்
தப் படத்துக்கு, கே.எஸ்.சு
மைத்துள்ளார். கதை மற்று
பிரியங்கா ரவீந்திரன் எழுதி

இந்தப் படத்தைப் பார்
அதிகாரிகள், படத்துக்கு 'ய
அளித்துள்ளனர். மார்ச் மா
என அறிவிக்கப்பட்டுள்ள
ஜோடியாக 'தளபதி 63' ப
நார் நயன்தாரா.

சசிக்கு நாயகியாக நிக்கி

சசிகுமார் நடிக்கும் பெயரிடப்படாத புதிய படத்தில் நாயகியாக நடிக்க நிக்கி கல்ராணிஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

சசிகுமார் தற்போது புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார். சுந்தர்.சியின் உதவியாளர் கதிர்வேலு இயக்கும் இப்படத்தில் நிக்கி கல்ராணி நாயகியாக நடிக்கிறார். மேலும் ராதாரவி, தம்பி ராமையா, விஜய குமார், ரேகா, சுமித்ரா, சதிஷ், மனோபாலா, ரமேஷ் கண்ணா, சிங்கம் புலி, நிரோஷா, யோகி பாபு போன்ற 30க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

இந்தப் படம் சசிகுமாருக்கு 19-வது படமாகும். சசிகுமார் ஐ.டி.யில் பணிபுரியும் நபராக வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். செந்தூர் பிலிம்ஸ் சார்பில் டி.டி.ராஜா என்பவர் தயாரிக்கிறார். சித்தார்த் ஒளிப்பதிவு செய்ய, சாம்.சிஎஸ் இசையமைக்கிறார்.

'பூமராங்' படம் மார்ச் 1-ம் தேதி ரிலீஸ் ஆக உள்ளது. இதனை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆர்.கண்ணன் இயக்கத்தில் உருவான படம்'பூமராங்'. அதர்வா ஹீரோவாக நடித்துள்ள இந்தப் படத்தில், மேகா ஆகாஷ் ஹீரோயினாக நடித்துள்ளார். மேலும், இந்துஜா, உபென் படேல், சுஹாசினி, ஆர்.ஜே. பாலாஜி, சதீஷ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மசாலா பிக்ஸ் சார்பில் ஆர்.கண்ணனே தயாரித்திருக்கும் இந்தப் படத்துக்கு,'அர்ஜுன் ரெட்டி' புகழ் ரதன் இசையமைத்துள்ளார். பிரசன்னா குமார் ஒளிப்பதிவு செய்ய, செல்வா ஆர்.கே. படத்தொகுப்பு செய்துள்ளார்.

இந்தப் படத்தில் இடம்பெறும் ஒரு முக்கியக் காட்சிக்காக, அதர்வா மொட்டை அடித்தார். இதனால் அடுத்த படத்தில் நடிக்கத் தாமதமாகும் என்று தெரிந்தும், காட்சியின் முக்கியத்துவம் கருதி மொட்டையடித்தார் அதர்வா.

படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் முடிந்து வெளியீட்டுக்குத் தயாராகி வந்தது. இந்நிலையில் படம் ராங்' வெளியாவதாக இயக்குநர் ஆர்.கண்ணன் தன் ஃபேஸ்புக் பக்கத்தில் அறிவித்தார்.

'பூமராங்' படத்தைத் தொடர்ந்து, தற்போது 'குருதி ஆட்டம்' படத்தில் நடித்து வருகிறார் அதர்வா. '8 ணேஷ் இயக்கிவரும் இந்தப் படத்தில் அதர்வா ஜோடியாக பிரியா பவானிசங்கர் நடிக்கிறார்.

அனந்த கிருஷ்ணன் இயக்கத்தில் விஜய் ஆண்டனி

கொலைகாரன், அக்னி சிறகுகள், தமிழரசன் ஆகிய படங்களில் நடித்து வரும் விஜய் ஆண்டனி, அடுத்து மெட்ரோ படத்தை இயக்கிய ஆனந்த கிருஷ்ணனின் இயக்கத்தில் நடிக்கிறார். இந்த படத்துக்கு இன்னும் பெயரிடவில்லை. என்.எஸ்.உதயகுமார் ஒளிப்பதிவு செய்ய, உரு ஜோஹன் இசை அமைக்கிறார். படத்தின் ஹீரோயின் தேர்வு நடந்து வருகிறது.

ஸ்ருதி ஹாசனை
நடித்து வந்த ஸ்ருதி தற்
வருகிறார். ஸ்ருதிஹாசன்
கினார். முன்னதாக அவ

ஆக மொத்தம் கடந்
கைக்கான மேக்அப் வி
ததுமே அக்ஷராவுக்கு ப

ஸ்ருதிஹாசன்போல்
யெல்லாம் கூட்டிகழித்து
யிருக்கிறார். சமீபத்தில்
வந்திருந்தார். அவரது ப

னி
யாக
ன்

– ய/ஏ

‘ஐரா’ படத்துக்கு,
ான்றிதழ் வழங்கி

குறும்படங்களின்
தைப் பெற்றவர்
மி சரத்குமார், சத்ய
‘எச்சரிக்கை: இது
ம்’ மூலம் பெரிய
றிமுகமானார்.
‘ஐரா’ என்ற படத்
ள்ளார். இந்தப் படத்
ண்டு வேடங்களில்
அவருடன் இணைந்து
ஆகியோர் முக்கியக்
ள்ளனர்.
ாரித்த கேஜேஆர் ஸ்டு
த் தயாரித்துள்ளது.
பதிவு செய்துள்ள இந்
ந்தர மூர்த்தி இசைய
ம் திரைக்கதையை
தியுள்ளார்.
த்த சென்சார் போர்டு
ு/ஏ’ சான்றிதழ்
தும் படம் ரிலீஸாகும்
து. தற்போது விஜய்
டத்தில் நடித்து வருகி

மார்ச் 1-ம் தேதி ‘பூம
தோட்டாக்கள்’ ஸ்ரீக

மீண்டும் இணையும் சிம்ரன் - த்ரிஷா

சிம்ரன் - த்ரிஷா இருவரும் மீண்டும் இணைந்து நடிக்க இருப்பதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

பிரவீன் காந்தி இயக்கத்தில் 1999-ம் ஆண்டு ரிலீஸான படம் ‘ஜோடி’. பிரசாந்த் ஹீரோவாக நடித்த இந்தப் படத்தில், ஹீரோயினாக சிம்ரன் நடித்தார். சிம்ரனுக்குத் தோழியாக, ஒருசில காட்சிகளில் நடித்தார் த்ரிஷா. அதன்பிறகு இருவரும் இணைந்து நடிக்கவில்லை.

18 வருடங்களுக்குப் பிறகு ‘பேட்ட’ படத்தில் இருவரும் ரஜினிக்கு ஜோடியாக நடித்தனர். ஆனால், இருவருக்குமான காம்பினேஷன் காட்சி ஒன்றுகூட இல்லை.

இந்நிலையில், சிம்ரன் - த்ரிஷா இருவரும் மீண்டும் இணைந்து நடிக்க இருப்பதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. ஜீவா நடிப்பில் உருவாகிவரும் ‘கொரில்லா’ படத்தைத் தயாரித்துள்ள ஆல் இன் பிக்சர்ஸ், இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

ஆக்ஷன் அட்வெஞ்சராக உருவாக இருக்கும் இதன் படப்பிடிப்பு, மார்ச் மாதம் முதல் தொடங்க இருக்கிறது. இதில் நடிக்கும் மற்ற நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோயின்களாக விளங்கிய இரண்டு நடிகைகள் ஒரே படத்தில் இணைந்து நடிப்பதால், இந்தப் படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

‘எங்கேயும் எப்போதும்’ இயக்குநர் சரவணன் இயக்கத்தில் உருவாகும் புதிய படத்தில் நடிக்க த்ரிஷா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஜெய், அஞ்சலி, சர்வானந்த், அனன்யா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகி, மாபெரும் வரவேற்பைப் பெற்ற படம் ‘எங்கேயும் எப்போதும்’. எம்.சரவணன் இயக்கத்தில் உருவான இப்படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்க, ஃபாக்ஸ் ஸ்டார் நிறுவனம் வெளியிட்டது.

இடையே விபத்து ஏற்பட்டதால் சில காலம் ஓய்வில் இருந்தார். தற்போது மீண்டும் இயக்குநர் பணிக்குத் திரும்பியுள்ளார். முழுக்க நாயகிக்கு முக்கியத்துவம் கொடுத்து கதையொன்றை எழுதியுள்ளார். அக்கதையில் நடிக்க த்ரிஷா சம்மதம் தெரிவித்துள்ளார். தற்போது த்ரிஷாவுடன் நடிக்கவுள்ளவர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. சரவணன் - த்ரிஷா இணையும் படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

படக்குழுவை மறித்த கமாண்டோ

இயக்குநர் பா.இரஞ்சித் தயாரிப்பில் ‘பரியேறும் பெருமாள்’ படத்தைத் தொடர்ந்து அடுத்ததாக உருவாகிவரும் படம் ‘இரண்டாம் உலகப்போரின் கடைசி குண்டு’. இதன் படப்பிடிப்பு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நடந்து வருகிறது. பா.இரஞ்சித்தின் உதவியாளர் அதியன் ஆதிரை இயக்கும் இப்படத்தில் தினேஷ், ஆனந்தி, ரித்விகா, ராம்தாஸ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.

சென்னை புறநகர் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் இப்படத்தின் ஆக்சன் காட்சிகளை சண்டைப் பயிற்சியாளர் சாம், இயக்குநர் அதியன் ஆதிரை ஆகியோர் இரவில் படமாக்கிக் கொண்டிருந்தனர். வேகமாகச் செல்லும் லாரியில் தொங்கிக்கொண்டு தினேஷ் சண்டை போடும் காட்சிகள் படமாக்கப்பட்டன. வெளியே தெரியாதவாறு லாரிக்குள் கேமரா இருந்தது.

இதனால், நிஜமாகவே லாரியில் ஏதோ சண்டை நடப்பதாக, அருகே சென்ற வாகன ஓட்டிகள் நினைத்துள்ளனர். போலீஸாருக்கும் இதுபற்றி தெரியப்படுத்தியுள்ளனர்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக வந்த சிறப்பு கமாண்டோ படை வீரர்கள், லாரியை சுற்றி வளைத்து நிறுத்தியுள்ளனர். படப்பிடிப்பு என்று அவர்களுக்கு விளக்கப்பட்ட பிறகு சென்றுள்ளனர். இதனால், தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் பரப்பான சூழல் காணப்பட்டது.

‘மாமனிதன்’ இசைக்கோர்ப்பு வேலைகள் ஆரம்பம்

வரும் 22 -ம் தேதி ரிலீஸாகும் ‘கண்ணே கலைமானே’ படத்தின் புரொமோஷன் பணிகளை கையில் எடுத்திருக்கிற இயக்குநர் சீனு ராமசாமி.

இதைத் தொடர்ந்து விஜய்சேதுபதி - சீனுராமசாமி கூட்டணியில் முழு படப்பிடிப்பும் முடிந்த ‘மாமனிதன்’ படத்தின் தொழில்நுட்பப் பணிகளில் இறங்கவுள்ளார். ‘மாமனிதன்’படத்துக்கு இளையராஜாவும், யுவன்ஷங்கர் ராஜாவும் இசையமைப்பதாக முன்பே அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அதன் தீம் மியூஸிக் உருவாக்கம் மற்றும் பின்னணி இசைச் சேர்ப்பு பணிகளில் இருவரும் இறங்க உள்ளனர்.

கடன் கேட்பதற்காக கமலிடம் சென்ற பாலுமகேந்திரா, கேட்பதற்கு தவித்துப் போய் பேசாமல் இருந்தார். ஆனால் அதை உணர்ந்த கமல், தாமாகவே உதவி செய்தார்.

இயக்குநர் பாலுமகேந்திராவின் நட்பு வட்டம் மிகச்சிறியது. எவரிடமும் எதற்காகவும் எந்த நிலையிலும் எதுவும் கேட்கமாட்டார். அவரின் இயல்பு அப்படி.

திரைத்துறைக்கு வந்த புதிதிலேயே மலையாளப் படங்களில் ஒளிப்பதிவாளராக பணியாற்றியவர், இயக்கும் எண்ணத்திலேயே இருந்தார். அந்த சமயத்தில் கமல்ஹாசனை சந்தித்துப் பேசும் தருணம், இருவருக்குள்ளும் ஓர் புரிதல் ஏற்பட்டது. பாலுமகேந்திரா இயக்கியது முதலில் கன்னடத்தில்தான். ‘கோகிலா’ என்ற அந்தப் படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அந்தப் படத்தின் நாயகன் கமல்.

கடன் கேட்க தவித்த பாலுமகேந்திரா கேட்காமலேயே உணர்ந்து உதவிய கமல்

ஆடுபுலி ஆட்டம் முதலான படங்களுக்கு கதை வசனம் எழுதிக்கொண்டிருக்கும் போதே இயக்குநர் மகேந்திரனுடன் நல்ல நட்பு கமலுக்கு உண்டு. பிறகு ஆனந்தி பிலிம்ஸ் வேணு செட்டியார் தயாரிக்க, மகேந்திரன் முதல் படத்தை இயக்கினார். அந்தப் படத்துக்கு ரஜினிதான் நாயகன். ‘லொகேஷன், கதை எல்லாமே நல்லாருக்கு. அதுக்குத் தகுந்த மாதிரி, ஒரு ஒளிப்பதிவாளர் கிடைச்சா நல்லாருக்கும்’ என்று மகேந்திரன் கமலிடம் சொல்ல, பாலுமகேந்திராவை அறிமுகப்படுத்திவைத்தார் கமல். அந்தப் படம் ‘முள்ளும் மலரும்’, மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது என்பதை இன்றைய தலைமுறை கூட தெரிந்துவைத்திருக்கிறது.

கோகிலாவுக்குப் பிறகு தமிழில் ‘அழியாத கோலங்கள்’படத்தை இயக்கினார் பாலுமகேந்திரா. இந்தப் படத்தில் கமல், கௌரவ வேடத்தில் நடித்துக்கொடுத்தார். அதையடுத்து, சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில், கமல், ஸ்ரீதேவி, சில்க்ஸ்மிதா நடித்த ‘மூன்றாம் பிறை’ கமலுக்கு தேசிய விருதைப் பெற்றுத் தந்தது.



இப்படி கமலுக்கும் பாலுமகேந்திராவுக்குமான நட்பு, தொடர்ந்து பலப்பட்டுக்கொண்டே இருந்தது.

‘மறுபடியும்’ படத்துக்குப் பிறகு, பாலுமகேந்திராவுக்கு மிகப்பெரிய பணச்சிக்கல். என்ன செய்வது, எவரிடம் கேட்பது என்று தெரியாமல் ரொம்பவே துடித்துப் போனார். அப்படியாரிடமும் பணமோ உதவியோ கேட்டதில்லை பாலுமகேந்திரா. யோசிக்க, ‘கமல்தான் நமக்கு நல்ல நண்பன். அவரிடம் இதுவரை எந்த உதவியும் கேட்டதே இல்லை. அவரிடம் கேட்போம்’என்று கமலின் அலுவலகத்துக்கு வந்தார் பாலுமகேந்திரா.

அவரைப் பார்த்ததும் கமல் குஷியாகிவிட்டார். அன்றைய தேதிக்கு வந்திருக்கிற தமிழ், இந்தி, மலையாளப் படம் தொடங்கி, உலகப் படங்கள் வரை கமல் விலாவாரியாகச் சொல்லிக்கொண்டே இருக்க, பாலுமகேந்திராவும் பதிலுக்கு அவரும் பல படங்களைச் சொல்லியபடி இருந்தார். ஆனால் பணம் மட்டும் கேட்கவே இல்லை.

ஒன்றரை மணி நேரம் பேச்சுப் போய்க்கொண்டே இருக்க, சட்டென்று கடிகாரத்தைப் பார்த்த கமல், ‘அடடா... நேரம் போனதே தெரியல. ஷூட்டிங்குக்கு டைம் ஆயிருச்சு. இதோ ரெண்டே நிமிஷம்... வந்துடுறேன்’ என்று சொல்லிவிட்டு, மேலே சென்றார்.

பண உதவி, கடனுதவி கேட்க வந்த பாலு மகேந்திரா, கமலிடம் கேட்கத் தயங்கிக் கொண்டே இருந்தார். ‘சரி, பார்த்துக் கொள்ளலாம்’ என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்.

அடுத்த இரண்டாவது நிமிடம்... மாடியில் இறங்கி வந்த கமல், பாலுமகேந்திராவிடம் மிகப்பெரிய கவர் ஒன்றை நீட்டினார். ‘இந்தாங்க’ என்றார். அந்தக் கவரை வாங்கிப் பிரித்த பாலு மகேந்திராவுக்கு ஆச்சரியம் ப்ளஸ் அதிர்ச்சி. பணம்... முழுவதும் பணம்!

நெகிழ்ந்து போய் பேசவே முடியவில்லை பாலுமகேந்திரா வால். அதில் இன்னொரு ஆச்சரியம்... பாலு மகேந்திரா கேட்க நினைத்த தொகையை விட மூன்று மடங்கு தொகை அந்தக் கவரில் இருந்தது.

‘உங்களை எனக்குத் தெரியும் பாலு சார். கடன் கேக்க கூச்சப்படுவீங்க. அதனால, இது கடன் இல்ல. இனாமும் இல்ல. அப்படி இனாம் வாங்கறது உங்களுக்கு சுத்தமா புடிக்காது. அதுவும் தெரியும் எனக்கு. இது அட்வான்ஸ். நம்ம ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிக்கிற படத்தை, நீங்கதான் டைரக்ட் பண்றீங்க. உற்சாகமா வேலையை ஆரம்பிங்க பாலு சார்’ என்று கைகுலுக்கினார் கமல், கட்டியணைத்துக் கொண்டார் பாலுமகேந்திரா. அந்தப் படம்தான் சதிலீலாவதி. மிகப்பெரிய ஹிட் படத்தைக் கொடுத்து, தன் அன்பை, நன்றியை வெளிப்படுத்தினார் பாலுமகேந்திரா.

இன்றைக்கும் ‘சதிலீலாவதி’ படத்தைப் பார்த்து, வயிறு வலிக்க சிரித்துக்கொண்டே இருக்கிறோம். அந்தச் சிரிப்புக்குப் பின்னே உள்ள பாலு மகேந்திராவின் வலியும் அவருக்கும் கமலுக்குமான அன்பும், அதைவிட அடர்த்தியானது.

தொடர்ந்து நடிகை அக்ஷரா நடிக்க வந்தார். மளமளவென தமிழ், இந்தி, தெலுங்கு படங்களில் போது பிரேக் எடுத்துக்கொண்டு ஆங்கில பாப் பாடல்களை வெளிநாட்டு மேடைகளில் பாடி ன் நடிக்க வந்து நீண்ட நாள் கழித்தே அவரது தங்கை அக்ஷரா நடிப்பில் ஆர்வம் காட்டத் தொடங் ர் இணைய இயக்குனராக பணியாற்றிக்கொண்டிருந்தார்.

து 4 வருடத்தில் 4 படங்களில் மட்டுமே அவரது எண்ணிக்கையில் இடம்பெற்றிருக்கிறது. நடி ஷயத்தில் கவனம் செலுத்தாமலிருந்ததும், திறமையை வெளிப்படுத்தும் கதாபாத்திரம் அமையா டங்கள் அதிகம் வராததற்கு காரணம் என்று கூறப்பட்டு வருகிறது.

கவர்ச்சி காட்சிகளில் நடிக்காமல் ஒதுங்கியிருந்ததும் மற்றொரு மைனஸ் ஆக இருந்தது. அதை ு ஒரு முடிவுக்கு வந்திருக்கும் அக்ஷரா. மேக்அப், கிளாமர் அட்ராக்ஷனில் கவனத்தை திருப்பி பட விழா ஒன்றிற்கு வந்த அக்ஷரா, பார்பி கேர்ள் பொம்மைபோல் அசத்தலான மேக்அப்புடன் டுகவர்ச்சியான காஸ்டியூம் பல்வேறு கமெண்ட்டுகளுக்கு வழிவகுத்திருக்கிறது.

டீச்சராக ரெஜினா

அரவிந்த்சாமி, ரெஜினா, ஹரிஷ் பெராடி, ஆதேஷ், பாப்ரிகோஷ், ராட்சசன் பேபி மோனிகா நடிக்கும் படம், கள்ளபார்ட். நிவாஸ் கே.பிரசன்னா இசை அமைக்கிறார். ஆர்.கே. வசனம் எழுதுகிறார்.

திரைக்கதை எழுதி ராஜபாண்டி இயக்குகிறார். ஆக்ஷன் திரில்லர் படமாக உருவாகும் இது பற்றி அவர் கூறுகையில், ‘அதிபன் என்ற கேரக்டரில் அரவிந்த்சாமி நடிக்கிறார்.

என்ன சொல்கிறோமோ அதை அப்படியே உள்வாங்கி பிரதிபலிக்கிறார். டான்ஸ் டீச்சராக ரெஜினா நடிக்கிறார். வரும் ஏப்ரல் மாதம் படம் ரிலீசாகிறது’ என்றார்.

அதிக சத்துக்கள் நிறைந்த சிவப்பு முட்டைக்கோஸ்

சிவப்பு முட்டைகோஸில் (Red Cabbage) உள்ள அதிகளவிலான ஆன்டிஆக்ஸிடன்ட், ஃப்ரீராடிக்கல்களின் தாக்குதல்களால் செல்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கிறது. இந்த ஃப்ரீராடிக்கல்கள்தான் புற்றுநோய், இதயநோய் போன்றவற்றுக்கு முக்கியக் காரணம். சிவப்பு முட்டைகோஸ் பெண்களைத் தாக்கும் மார்பகப் புற்றுநோயின் பாதிப்பைக் குறைக்கும்.

★ சிவப்பு நிற முட்டைகோஸில் இருக்கும் வைட்டமின் கே மூளையை தாக்கும் அல்மைசர் நோயிலிருந்து பாதுக்காப்பு அளிக்கிறது.

★ சிவப்பு நிற முட்டைகோஸ் ஜூஸ் வயிற்று உப்புசம், அஜீரணக் கோளாறை போக்கி உடலின் நச்சுகளை நீக்கும்.

★ சிவப்பு நிற முட்டைகோஸில் வைட்டமின் ஏ உள்ளதால் கண்புரை உருவாவதையும் தடுக்கும்.

★ அல்சரைக் குணப்படுத்தும். வயிற்றுப்புண் மற்றும் சிறுநீர்ப்பாதை தொற்று ஆகியவற்றை தடுக்கும்.

★ சிவப்பு மற்றும் நீல நிறப்பழங்கள், காய்கறிகளில் ரெஸ்வெரட்ரால் என்ற கிருமி நாசினி உள்ளது.

★ அத்தியாவசியச் சத்துக்களான கால்சியம், மக்னீசியம், மாங்கனீஸ் மற்றும் இதர கனிமச்சத்துக்கள் எலும்புகளின் அடர்த்தியை அதிகரிக்கும்.

பழங்கள்

எப்படி, எப்போது சாப்பிடலாம்?

இன்றைய அவசர உலகில் எந்த உணவையும் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடுகிறோம். அதற்கான நேரம் காலமே நாம் பார்ப்பது இல்லை. அவ்வாறு சாப்பிடுவதன் மூலம் உடல் பருமன், செரிமான பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுகிறது.

★ நம் உடலுக்கு ஆரோக்கியம் தரக்கூடிய உணவுகளில் பழங்களும் ஒன்று. பழங்கள் நம் உடலுக்கு நல்லது. ஒவ்வொரு பழங்களிலும் நம் உடலுக்கு தேவையான எல்லா ஊட்டச் சத்துக்களும் உள்ளன. அப்படிப்பட்ட சத்துள்ள பழங்களை நாம் எப்போது எப்படி சாப்பிட வேண்டும் என்று தெரிந்து கொள்வது அவசியம்.

★ பழங்களில் நார்ச்சத்து, பொட்டாசியம், வைட்டமின் சி மற்றும் இதர சத்துக்கள் உள்ளது. இந்த சத்துக்கள் பல்வேறு நோய்களால் நமக்கு பாதிப்பு ஏற்படாமல் நம்மை பாதுகாக்கிறது.

சரியான முறையில் நாம் பழங்களை எடுத்துக் கொள்ளும்போது அது நமது செரிமான மண்டலத்தை மட்டுமல்லாமல் நமது உடலுக்கு தேவையான வைட்டமின் அளவையும் மேம்படுத்தும். பழங்களை சரியான முறையில் எடுத்துக் கொள்வது என்பது மிகவும் முக்கியமானதாகும். தவறான முறையில் எடுத்துக் கொள்ளும்போது அவை நமது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். பழங்களை சரியான முறையில் எடுத்துக் கொள்வதற்கான சில விதிமுறைகள் உள்ளன. அதை கண்டிப்பாக ஒவ்வொரு வரும் கடைப்பிடிக்க வேண்டும்.

★ எப்போதும் புதிய பழங்களையே வாங்கி சாப்பிடுங்கள்.

★ பழங்களை வெட்டி பாத்திரங்களில் வைத்து பல மணி நேரம் கழித்து சாப்பிடாதீர்கள்.

★ பழங்களை வெட்டியவுடன் 20 நிமிடத்திற்குள் சாப்பிட வேண்டும். நேரம் தாமதித்தால் அதில் உள்ள சத்துக்கள் நம் உடலில் சேராது.

★ எப்போதும் உள்நாட்டில் விளையும் நாட்டு பழங்களையே சாப்பிடுங்கள். அதுவே நமது உடலுக்கு உகந்ததாகும்.

★ பருவநிலைக்கு ஏற்ப கிடைக்கும் பழங்களை சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

★ உணவு சாப்பிட்ட பின் பழங்களை சாப்பிடாதீர்கள். எப்போதும் உணவு உட்கொள்வதற்கு 2 மணி நேரத்திற்கு முன்னதாகவோ அல்லது உணவு சாப்பிட்ட பின் இரண்டு மணி நேரத்திற்கு பின்னரோ பழங்களை சாப்பிடுங்கள். அவ்வாறு பழங்களை சாப்பிடும்போது அதில் உள்ள நார்ச்சத்து மற்றும் அனைத்து சத்துக்கள், சர்க்கரை ஆகியவற்றை நமது செரிமான மண்டலத்தை எளிமையாகவும் வேகமாகவும் செரிக்கச் செய்யும். இல்லை என்றால், செரிமான பிரச்சினை, நெஞ்செரிச்சல், மூச்சுத் திணறல் மற்றும் இதர செரிமானம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

★ இரவில் பழங்களை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். நெஞ்செரிச்சல் மற்றும் அஜீரணக் கோளாறு ஏற்படும்.

★ மாலை 6 மணிக்கு முன் பழங்களை சாப்பிட வேண்டும். இரவில் பழங்களை எடுக்க விரும்புபவர்கள் இரவு உணவுக்கு 2 மணி நேரத்திற்கு முன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

★ காலையில் எழுந்தவுடன் முதலில் பழங்களை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் பல மணி நேரம் நீங்கள் உணவு எடுத்துக் கொள்ளாமல் இருக்கும் பட்சத்தில் முதலில் பழத்தை சாப்பிடும்போது அது நமது உடலில் சர்க்கரை அளவை அதிகரிக்கச் செய்யும். அடுத்த 1 மணி நேரத்தில் பசியை தூண்டும்.

★ பழங்களை சாறாக (ஜூஸ்) குடிக்காமல் அப்படியே சாப்பிடுவது நல்லது. ஜூசர்கள் மூலம் நாம் பழங்களை சாறாக மாற்றும்போது அதில் உள்ள அதிக வெப்பம் காரணமாக பழங்களில் உள்ள நார்ச்சத்துக்கள் சரிவர கிடைக்காமல் செரிமானம் மற்றும் மென்மையான குடல் இயக்கத்திற்கு பிரச்சினை ஏற்படும். மேலும் அந்த பழங்களில் உள்ள வைட்டமின்கள் மற்றும் மினரல்கள் தன்மையும் குறையும். எப்போதாவது பழச்சாறு குடிக்கலாம். ஆனால் தொடர்ந்து குடிக்க வேண்டாம்.

★ பழச்சாறுகளை நீங்கள் குடிக்க விரும்பினால் அப்போது புதிதாக செய்யப்பட்ட பழச்சாறுகளை மட்டுமே குடியுங்கள் மற்றவற்றை தவிர்த்திடுங்கள்.

★ பாலுடன் பழத்தை சேர்த்து சாப்பிடுவது உடல் நலத்துக்கு உகந்ததல்ல. உதாரணமாக புளிப்பு நிறைந்த ஆரஞ்சு போன்ற பழங்களை பாலுடன் சேர்த்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் போன்ற பழங்களை பாலுடன் சேர்த்து சாப்பிடலாம்.

★நாளொன்றுக்கு 5 முறை பழங்களை சாப்பிடலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. முதல் முறையாக பழங்களை சாப்பிடுபவர்கள் மீடியம் சைஸ் அளவு கப் அளவில் பழங்களை எடுத்துக் கொள்ளலாம்.

★ தனிப்பட்ட ஒருவரின் பசியை பொறுத்து அவர்களுக்கு தேவையான பழங்களை எடுத்துக் கொள்ளலாம். அதே சமயம் அவர்கள் நீரிழிவு நோயாளியாகவோ அல்லது உடல் எடையை குறைக்க விரும்பினாலோ அவர்கள் அதிக அளவில் பழங்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் பழங்களில் உள்ள சர்க்கரை தன்மை இந்த இரண்டு பிரச்னைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும்.

★ விதவிதமான பழங்களை சாப்பிடுங்கள். ஒவ்வொரு பழங்களிலும் பல விதமான வைட்டமின்கள் மற்றும் சத்துக்கள் உள்ளன. அவை நம் உடலுக்கு ஒவ்வொரு நன்மையை கொடுக்கும்.

விக்கல் வருவதற்கு என்ன காரணம்?

சாதாரணமாக நாம் சுவாசிக்கும்போது காற்றை உள் இழுக்கிறோம். அப்போது மார்பு தசைகள் விரிகின்றன. மார்புக்கும், வயிற்றுக்கும் இடையில் நுரையீரலை ஒட்டியுள்ள உதரவிதானமும் அப்போது விரிகிறது. உடனே, தொண்டையில் உள்ள குரல்நாண்கள் திறக்கின்றன. அப்போது நுரையீரலுக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதேநேரம் நுரையீரலுக்குள் காற்று செல்ல அதிக இடம் கிடைக்கிறது.

இதனால் நாம் சுவாசிக்கும் காற்று, திறந்த குரல்நாண்கள் வழியாக தங்கு தடையின்றி நுரையீரல்களுக்குள் நுழைந்துவிடுகிறது. இதுதான் இயல்பாக நிகழும் சுவாச நிகழ்வு. சில நேரங்களில், மார்பு பகுதியில் உள்ள நரம்புகள் உதரவிதானத்தை எரிச்சல்படுத்தினால், அது மூளைக் கட்டுப்பாட்டை மீறி, தன்னிச்சையாக திடீர் திடீரென்று சுருங்க ஆரம்பித்துவிடும். அப்போது குரல்நாண்கள் சரியாக திறப்பதில்லை.

அந்த மாதிரி நேரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று குரல் நாண்களின் குறுகிய இடைவெளி வழியாகத்தான் நுரையீரலுக்குள் சென்று திரும்ப வேண்டும். அப்போது அந்த காற்று, புல்லாங்குழலில் காற்று தடைபடும்போது இசையொலி உண்டாவதைப் போல, தொண்டையில் 'விக்... விக்...' என்று ஒரு விநோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்'.

வேக வேகமாக உணவைச் சாப்பிடுவது, மிகச் சூடாக சாப்பிடுவது, தேவையான அளவுக்கு தண்ணீர் அருந்தாதது போன்றவை விக்கலுக்கு முக்கிய காரணங்கள். வலி நிவாரணி மாத்திரைகள், ஸ்டீராய்டு மாத்திரைகளை சாப்பிட்டாலும் விக்கல் வரும். இரண்டு நாட்களுக்கு மேல் விக்கல் தொடர்ந்தால், அது நோய்க்கான அறிகுறி என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உதாரணத்துக்கு, இரைப்பையில் அல்சர் இருக்கும்போது, சிறுநீரகம் பழுதாகி ரத்தத்தில் யூரியா அளவு அதிகரிக்கும்போது விக்கல் வரும். உதரவிதானத்தில் நோய் தொற்று, கல்லீரல் கோளாறு, நுரையீரல் நோய் தொற்று, குடல் அடைப்பு, மூளைக் காய்ச்சல், கணைய அழற்சி, பெரினிக் நரம்புவாதம் போன்றவற்றாலும் விக்கல் வரும். மூச்சை நன்றாக உள்ளிழுத்து அடக்கிக்கொள்ளுங்கள். 20 எண்ணும் வரை மூச்சை வெளியில்விட வேண்டாம்.

பிறகுதான் மூச்சை வெளியில்விட வேண்டும். இப்படி 5 முறை செய்தால் விக்கல் நின்றுவிடும். வேகமாக ஒரு சொம்பு குளிர்ந்த தண்ணீர் குடித்தால், விக்கல் நின்றுவிடும். ஒரு தேக்கரண்டி சர்க்கரையை நாக்கில் வைத்து அதை தானாக கரையவிட்டால், விக்கல் நிற்கும். ஏதேனும் ஒரு வகையில் தும்மலை உண்டாக்கினால், விக்கல் நிற்கும். சில நிமிடங்கள் நீடிக்கும் விக்கலுக்கே நாம் பயந்துபோகிறோம். அமெரிக்காவில் சார்லஸ் ஆஸ்பார்ன் என்பவர் 68 ஆண்டுகளுக்கு தொடர்ந்து விக்கல் எடுத்துக் கின்னஸ் ரிக்கார்டு செய்திருக்கிறார். அம்மாடியோவ்!

குக்கர் சாதமும் நீரிழிவு நோயும்

இன்றைய அவசர உலகில் சமையல் நேரத்தை மிச்சப்படுத்த நவீன உபகரணங்கள் உதவியாக இருந்தாலும் அதனால் நோய்களும் வருகிறது என்பதுதான் கவலை அடைய வைக்கும் அம்சம். அந்த வகையில் குக்கர் சாதம் குறிப்பிடத்தக்கது. பொதுவாக குக்கர் சாதம் சாப்பிடும்போது உடல்நல கேடுகள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதைப்பற்றி இங்கு பார்ப்போம்.

பொதுவாக குக்கரில் சாப்பாடு செய்வது சாதாரணமான ஒன்று தான். அதனால் உடல்பருமன், சர்க்கரை நோய் வரும் அபாயம் அதிகமாக இருக்கிறது. அதாவது வடித்து சமைக்கும் சாதத்தில் 30 முதல் 40 சதவீதம் மாவுச்சத்து குறைந்து விடும். மேலும் ரத்த சர்க்கரையின் அளவை அது உடனடியாக கூட்டாது என டாக்டர்கள் கூறுகின்றனர். ஆனால் குக்கரில் சமைக்கும்போது அந்த சத்துக்கள் சாப்பாட்டில் முழுமையாக இருந்து விடும்.

மேலும் குக்கரில் சமைக்கும் சாப்பாட்டில் கஞ்சி நீக்கப்படுவதில்லை. அதனால் கலோரி குளுக்கோஸ் அளவு அதிகம் இருப்பதானால் திடீரென ரத்தத்தில் சர்க்கரை அளவு கூடுவதற்கும் வாய்ப்புகள் உண்டு. அதேபோன்று சிலருக்கு புதிதாக சர்க்கரை நோயை உண்டு பண்ணும் அபாயமும் இருக்கிறது. மேலும் நார்சத்து நிறைந்த கஞ்சி நீக்கப்பட்ட சாதமே சர்க்கரை நோயாளிகளின் ரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்.

அது மட்டுமல்லாமல் அரிசி வேக எவ்வளவு நேரம் எடுத்து கொள்கிறதோ அந்த அளவுக்கு சாப்பிட உடலுக்கு நல்லது. மேலும் குறைந்த நேரத்தில் வேகும் சாப்பாட்டால் பிரச்சினை தான். அதிக நேரம் வெந்த சாப்பாட்டை ஒரு கப் சாப்பிட்டாலே அது மிகவும் நல்லது. பொதுவாக வேகமாக தயாரான சாப்பாட்டை இரண்டு மடங்கு எடுத்து கொண்டால் மட்டுமே வயிறு நிரம்பும்.

இப்படி வயிற்றுக்குள் உணவை திணிக்க திணிக்க பிரச்சினைகளும் அதிகமாகும். எனவே கூடுமானவரை குக்கர் சாதம் சாப்பிடாமல் கஞ்சி வடித்த சாப்பாட்டை சாப்பிடுவதால் பல நோய்கள் நம்மை நெருங்க விடாமல் வைத்து இருக்கும். அதனால் முடிந்த வரை குக்கரில் சமைக்கும் சாதத்தை சாப்பிடுவதை தவிர்க்கலாம் என டாக்டர்கள் தெரிவிக்கிறார்கள்.

மகத்துவம் நிறைந்த மண்பானை நீர்

வெயில் காலம் வந்துவிட்டாலே மண் பானை விற்பனையை பல இடங்களிலும் பார்க்க முடிகிறது. குளிர்ச்சியான தண்ணீர் வேண்டும் என்று நினைக்கிற எளிய மக்களின் இனிய தேர்வாகவும் மண்பானை இருக்கிறது. இந்த மண்பானை நீர் உடலுக்குக் குளிர்ச்சி மட்டும் தருவதில்லை. பல நன்மைகளையும் மருத்துவரீதியாக தருகிறது

காலம்காலமாகவே நம்முடைய முன்னோர்கள் சமையலுக்கும், தங்களுடைய மற்ற தேவைகளுக்கும் மண்பானையை உபயோகப்படுத்தி வந்திருக்கின்றனர். முக்கியமாக கஷாயம் போன்ற மருந்துப் பொருட்களைத் தயாரிக்க மண்பானை தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதிலிருந்தே மண்பானையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம். ஃப்ரிட்ஜ் தண்ணீர் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. அது தாகத்தையும் தணிப்பதில்லை. அதனால்தான் இப்போது குளிர்ச்சியான தண்ணீர் வேண்டும் என்று மண்பானையைப் பலரும் உபயோகிக்கிறார்கள். மண்பானை நீர் தாகம் தணிப்பதோடு மட்டுமில்லாமல், உடலில் ஏற்படுகிற பல பாதிப்புகளை குணப்படுத்தும் தன்மையும் கொண்டது. ஆரோக்கியத்துக்கும் உகந்தது.

மண் பானை நீர் இயற்கையான முறையில் உடலை குளிர்ச்சியாக்குகிறது. கோடையில் ஏற்படுகிற நா வறட்சி, உடல் நீர் இழப்பு போன்றவற்றைத் தடுக்கிறது. உடலுக்கு நோயை ஏற்படுத்துகிற வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்களையும் சமநிலையில் வைத்திருக்கிறது.

கோடை காலத்தில் மண்பானை தண்ணீர் குடிப்பதை வழக்கமாக கொண்டவர்கள் சுவை மற்றும் நறுமணத்துக்காக தண்ணீரில் வெட்டிவேர், எலுமிச்சைப்பழம் போட்டு வைப்பார்கள். இவற்றோடு கைப்பிடி அளவு தேற்றான் கொட்டையை சுத்தமான வெள்ளைத்துணியில் கட்டிப் போடுவது அவசியம். இவ்வகை கொட்டை கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமிகளை அழித்து நீரை சுத்தப்படுத்தும். வாரம் ஒருமுறை அல்லது தண்ணீரை மாற்றும்போது, புதிதாக தேற்றான் கொட்டை போட வேண்டும். இந்த தேற்றான் கொட்டை எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

குளிர்ச்சியான நீர் வேண்டும் என்பதற்காக மண்பானையை உபயோகப்படுத்துகிறவர்கள் நாகரிகம் என்ற பெயரில் பெயின்ட் அடித்து உபயோகிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். ஒரு சிலர், பானையின் உட்புறத்திலும் பெயின்ட் அடிக்கின்றனர். இவ்வாறு செய்வது பார்ப்பதற்கு வேண்டுமானாலும் அழகாகத் தெரியலாம். ஆனால், இதனால் மண்பானையின் பயன் எதுவும் கிடைக்காது. மேலும், பானையின் வெளிப்புறத்தில் உள்ள கண்ணுக்குத் தெரியாத சிறுசிறு துவாரங்கள் வழியே நீர்த் திவலைகள் வெளிப்படுவதும் தடைபடும்.

பொருள் புதிது

பனிப்பிரதேச ஆடை

பனிப்பிரதேசம் மற்றும் குளிர்காலங்களில் உடல் வெப்ப நிலையை சீராக்க உதவும் ஆடை. ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் தேவைக்கேற்ற வெதுவெதுப்பைப் பெற முடியும். ஹாங்காங்கைச் சேர்ந்த போலார் சீல் நிறுவனம் தயாரித்துள்ளது.

துர்நாற்றம் நீக்கி

வீட்டிலுள்ள குப்பைத்தொட்டி, ஷூ வைக்கும் இடம், குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றில் ஏற்படும் துர்நாற்றத்தை நீக்க உதவும் கருவி. புறஊதாக் கதிர் தொழில்நுட்பத்தில் இயங்குகிறது. தைவானைச் சேர்ந்த வென்டிஃபிரெஷ் நிறுவனத்தின் தயாரிப்பு.

பைக் லாக்

ஸ்மார்ட் போனைப் பயன்படுத்தி பைக் மற்றும் சைக்கிளை பூட்டவும், திறக்கவும் உதவும். தானே சார்ஜ் செய்து கொள்ளும் சோலார் பேட்டரியில் இயங்குகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த லாட்டிஸ் நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

பயண ஆடை

பயணத்தின் போது அணிந்து கொள்ளும் ஆடையை பல வசதிகளுடன் வடிவமைத்துள்ளது பவ்பாக்ஸ் என்கிற நிறுவனம். வழக்கமான பாக்கெட்டுகளுடன், ஜிப்பில் பேனா, சார்ஜர், டேப்லெட், சன்கிளாஸ், குளிர்பானம் போன்றவை வைப்பதற்கு தனித்தனி பாக்கெட், கை கிளவுஸ், அவசர கால விசில் என பல வசதிகளும் இதில் உள்ளன. மைக்ரோ பைபர் துணியால் தைக்கப்பட்டுள்ளதால் புழுக்கமும் இருக்காது. ஆண்கள் பெண்களுக்கு என தனித்தனியாக நான்கு மாடல்களில் கிடைக்கிறது.

குழந்தைகள் டேபிள்

குழந்தைகள் அமர்ந்து விளையாடுவதற்கு ஏற்ற டேபிள். பல வகையான விளையாட்டுகளுடன், உலக வரைபடமும் உள்ளது. பாக்கர்கிட் நிறுவனம் தயாரித்துள்ள இதில், பொம்மைகள் வைக்க தனியாக பை, பேனா, பென்சில் வைக்கும் குடுவை, கரும் பலகை, 3 வயது குழந்தை முதல் 8 வயது சிறுவர்கள் வரை விளையாடும் விளையாட்டுப் பொருட்களும் உள்ளன. குழந்தைகளின் உயரத்திற்கு ஏற்ப டேபிளின் உயரத்தையும் ஏற்றி இறக்க முடியும். நண்பர்களுடன் விளையாடுகையில் டேபிளின் அகலத்தையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

தெரிந்த மெயில்; தெரியாத சங்கதிகள்!

வட்ஸ் அப் யுகத்திலும் இமெயிலுக்கான தேவை குறைந்துவிடவில்லை. அதேநேரம் இமெயில் கலையையும் நாம் இன்னமும் கற்றுத் தேர்ந்துவிடவில்லை. தகவல் தொடர்பு சாதனமாக இமெயிலைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான நுணுக்கங்களும் வழிமுறைகளும் அநேகம் இருக்கின்றன. அதற்குச் சிறந்த உதாரணமாக இமெயிலின் மாற்றுப் பயன்பாடுகளைப் பார்ப்போம். இப்படியும் இமெயிலைப் பயன்படுத்த முடியும் என வியக்கக்கூடிய விஷயங்களை 'பாப்புலர் சயின்ஸ்' நாளிதழ் பட்டியலிட்டுள்ளது:

இணையக் குறிப்பேடு

இமெயில் வசதியை கணினியிலும் பயன்படுத்தலாம், ஸ்மார்ட் போனிலும் பயன்படுத்தலாம். இந்தத் தன்மையைக்கொண்டு, இமெயிலை நமது இணையக் குறிப்பேடாகவும் பயன்படுத்தலாம். இமெயிலை உருவாக்கும்போது அதை டிராப்ட் வடிவில் சேமித்துவைக்கும் வசதி இருக்கிறது. முக்கிய விஷயங்கள் அல்லது திடீரெனத் தோன்றும் எண்ணங்களை இமெயில் டிராப்ட் வடிவில் டைப் செய்து வைக்கலாம்.

இமெயில் முகவரி கட்டத்தில் எதையும் டைப் செய்யாமல் இருக்க வேண்டும். இப்படிச் சேமித்து வைக்கும் குறிப்புகளைப் பின்னர் எப்போது தேவையோ அப்போது திறந்து வாசித்துக்கொள்ளலாம். ஸ்மார்ட்போனில் உள்ள குறிப்பேடுகளைவிட இது சிறந்தது. டெஸ்க்டாப்பிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நினைவலைகளை எழுதுங்கள்

குறிப்பேடு வசதிபோலவே, இமெயிலை டிஜிட்டல் டயரியாகவும் பயன்படுத்தலாம். புதிய மெயிலைத் திறந்து அதில் அன்றைய தின நிகழ்வுகள், நினைவுகளை எழுதி வைக்கலாம். தேவையெனில், ஒளிப்படங்களையும் உடன் இணைக்கலாம். இந்த மெயிலை சுயமெயிலாக நமக்கு நாமே அனுப்பிக் கொள்ளலாம்.

இவற்றுக்கான தலைப்புகள், முக்கிய குறிச் சொற்களையும் அடையாளமாகக் குறிப்பிடலாம். இந்த வகையில் இமெயில் பெட்டியிலேயே டயரி எழுதுவது எளிது. என்றாலும் கைத்தவறி யாருக்கேனும் அனுப்பிவிடாமல் இருப்பதில் கவனம் தேவை.

ஒளிப்படப் பகிர்வு

சுற்றுலாவின்போது எடுத்துக்கொண்ட செல்ஃபி, அலுவலக நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படமோ எதுவாக இருந்தாலும் அவற்றை ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பகிர்வது பலரது வழக்கம். தனிப்பட்ட படங்களைச் சமூக ஊடகம் எனும் பொது வெளியில் பகிராமல் இருப்பதே நல்லது. ஒருவருடைய தனிப்பட்ட படங்கள் இணையத்தில் எப்படிப் பயன்படுத்தப்படும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. எனவே, ஒளிப்படங்கள் பகிர்வதைக் கட்டுப்படுத்திக்கொள்வதே நல்லது.

அதற்காகப் படங்களைப் பகிரவே கூடாது என்றில்லை, யாருடன் பகிர விருப்பமோ அவர்களுடன் மட்டும் பகிரலாம். இதற்கெனத் தனியே ஒரு இமெயில் முகவரி கணக்கைத் தொடங்கிக் கொள்ளுங்கள். இந்த முகவரியிலிருந்து தனிப்பட்ட ஒளிப்படங்களை அனுப்பிவைக்கலாம். இந்த முகவரியைப் படங்களைப் பகிர மட்டுமே பயன்படுத்திக்கொள்ளலாம். தேவையெனில், இமெயிலில் உள்நுழையும் விவரங்களை நெருக்கமானவர்களிடம் தெரிவித்து அவர்கள் பார்வையிட அனுமதிக்கலாம்.

சமூக ஊடகப் பகிர்வு

ஃபேஸ்புக் அல்லது ட்விட்டரில் ஒரு கருத்தைப் பகிர விரும்புகிறீர்கள். ஆனால், அந்தப் பக்கம் போனால் அவற்றிலேயே நேரம் வீணாகலாம் என்ற தயக்கமும் இருக்கிறதா? இதற்கும் இமெயில் மூலமே தீர்வு காணலாம். பல்வேறு இணைய சேவைகளை ஒருங்கிணைக்கும் ஐ.எப்.டி.டி.டி. (If Ths Then That) என்ற சேவையின் மூலம் ட்விட்டர், ஃபேஸ்புக் சேவையை இமெயிலுடன் ஒருங்கிணைக்க முடியும். இப்படிச் செய்வதால், குறிப்பிட்ட கருத்தை இமெயில் செய்தால், அது ட்விட்டரில் பகிரப்படும்.

இதேபோல வலைப்பதிவையும் பாரமரிக்கலாம். பல வலைப்பதிவு சேவைகள் இமெயில் வாயிலாகப் பதிவுகளை வெளியிட உதவுகின்றன. இந்த வசதியைப் பயன்படுத்தி இமெயிலிலேயே பதிவுகளை எழுதி வலைப்பதிவைப் புதுப்பிக்கலாம்.

வாசிப்பு வழிகாட்டி

வாசிப்பதற்கான விஷயங்கள் இணையத்தில் கொட்டிக்கிடக்கின்றன. பல நேரம் இணைய உலாவலில் நல்ல கட்டுரைகள் கண்ணில் படும். உடனே அவற்றைப் படித்துப் பார்க்க நேரம் இருக்காது. கவலையே வேண்டாம், இத்தகைய கட்டுரைகளை நமது இமெயிலுக்கு அனுப்பிவைத்துக்கொண்டு, நேரம் கிடைக்கும்போது படிக்கலாம். பெரும்பாலான இணையதளங்கள் இப்படிக் கட்டுரைகளை மின்னஞ்சல் செய்யும் வசதியை அளிக்கின்றன. இதற்காகவே பாக்கெட் (Pocket) அல்லது இன்ஸ்டாபேப்பர் (Instapaper) போன்ற பிரத்யேகச் செயலிகளையும் பயன்படுத்தலாம்.

சேமிப்பு வசதி

பேக்கப் செய்வது, அதாவது முக்கியக் கோப்புகளின் நகலை வேறு ஒரு இடத்தில் சேமித்துவைப்பது இணையப் பயன்பாட்டில் மிகவும் முக்கியம். இதற்கும் இமெயில் வசதியைப் பயன்படுத்தலாம். எப்படி? ஒளிப்படம் அல்லது ஆவணங்களின் நகலை இமெயிலில் நம் முகவரிக்கு அனுப்பிவைத்து, அந்த நகலைச் சேமிக்கலாம். இமெயில் பயன்பாட்டில் சேமிப்புத் திறனுக்கான வரம்பு இருக்கிறது.

ஆனாலும் படங்கள், ஆவணங்களின் நகலைச் சேமிக்க இது எளிய வழி. முழுவீச்சிலான பேக்கப் சேவைக்கு மாற்று இல்லை என்றாலும், பயனுள்ள வசதி. வீடியோ போன்ற கோப்புகளைச் சேமிக்க முடியாது. கோப்புகளைச் சேமிப்பதோடு, ஸ்மார்ட் போன்களுக்கான செயலிகள் மூலம் முக்கியக் குறுஞ் செய்திகளையும் மெயிலில் சேமிக்கலாம்.

அன்று இணையம் இன்று ஏஐ



தொழில்நுட்ப உலகில் ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு பற்றித் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இத்துறை சார்ந்த முயற்சிகளும் தீவிரமடைந்துள்ளன. செயற்கை நுண்ணறிவுத் துறையின் எதிர்கால சாத்தியங்கள் பற்றி உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் பொப் பாடகரும் தொழில்நுட்ப ஆர்வலருமான வில்லியம் சொல்லும் கருத்தைக் கேளுங்கள்.

அண்மையில் துபாயில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இவர், '1987இல் இணையம் எப்படி இருந்ததோ அப்படித்தான் செயற்கை நுண்ணறிவு இப்போது இருப்பதாகக் கூறியுள்ளார்'.

1990களுக்குப் பிறகு இணையம் எப்படி அதிவேக வளர்ச்சி அடைந்ததோ, அதுபோலவே வருங்காலத்தில் செயற்கை நுண்ணறிவிலும் பெரும் பாய்ச்சல் நிகழும் என்பதே இதன் பொருள்.

சுற்றிச் சுழன்று படம் எடுத்து சுற்றுப்புறத் தோற்றத்தை முழுமையாகக் காட்டும் 360 டிகிரி கேமராதான் இப்போது பிரபலம். இந்த வகை கேமராக்களைத் தயாரிக்கும் 'இன்ஸ்டா 360', நானோ எஸ் கேமராவை அறிமுகம் செய்துள்ளது.

தனி சாதனமாகவும் ஐபோனுடன் இணைந்தும் செயல்படக் கூடிய இந்த கேமரா 360 கோணத்தில் படத்தை எடுக்கும். இவற்றை ஃபேஸ்புக், ட்விட்டரிலும் பகிரலாம். சுற்றுப்புறத் தோற்றத்திலிருந்து தேவையான காட்சியை மட்டும் தேர்வு செய்தும் பகிரலாம். 360 கோண படப்பிடிப்பு சுழலில் வீடியோ வழி உரையாடும் வசதியும் இருக்கிறது.

எழுத்தாளராக ஆசையா?



எழுத வேண்டும் அல்லது எழுத்தாளராக வேண்டும் என்ற விருப்பம் இருந்தால், '200 வேர்ட்ஸ் ஏ டே' என்ற தளத்தைக் குறித்துக்கொள்ளலாம். எழுத்தார்வமிக்கவர்களை ஊக்குவிக்கும் தளம் இது. இதைத் தனியே செய்யாமல் எழுத்தார்வமிக்கவர்களுடன் இணைந்து மேற்கொள்ள உதவுகிறது இந்த சேவை.

எதைப் பற்றியும் யோசிக்காமல் முதலில் எழுதும் பழக்கத்தை வர வைத்துக்கொண்டால், அதன் பிறகு விரும்பிய வகையில் எழுதலாம் என்பதுதான் இந்தத் தளத்தின் அடிப்படை. இந்தக் கருத்துக்கு இந்த இணையதளம் செயல்வடிவம் கொடுத்திருக்கிறது. இதில் உறுப்பினராகத் தினமும் குறைந்தது 200 சொற்களை யாவது எழுத வேண்டும். இந்தத் தளத்திலேயே எழுதி இங்கேயே பதிப்பிக்கலாம்.

இதேபோல மற்றவர்கள் எழுதி பதிப்பிப்பதையும் வாசித்து ஊக்கம் பெறலாம். பலரும் எழுத்தார்வமிக்கவர்கள் என்பதால், இந்தத் தளம் எழுதுவதற்கு தூண்டுதலாக அமையும். ஒவ்வொரு நாளும் புதிதாக உறுப்பினர்கள் இணைந்து கொண்டே இருக்கின்றனர். அனைவருமே ஆங்கிலத்தில்தான் எழுதுகின்றனர். நம் பங்குக்குத் தமிழிலும் எழுதிப் பார்க்கலாம்.

இணைய முகவரி:
https://200wordsaday.com/

பாஸ்வேர்ட்டை மேலும் வலிமையாக்குவது எவ்வாறு

ஜிமெயில் உள்ளிட்ட கூகுள் சேவைகளில் பாஸ்வேர்டு பாதுகாப்பை மேலும் வலிமையாக்குவது குறித்து கூகுள் அறிவித்துள்ளது.

அதிகரித்து வரும் இணையப் பயன்பாட்டில் நம்முடைய அந்தரங்கம் பாதுகாப்பாக இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. பெரும்பாலான அனைத்துப் பரிவர்த்தனைகளும் இணையத்திலேயே நடைபெறும் காலகட்டத்தில் இருக்கிறோம்.

இதில் ஹேக்கர்கள், சைபர் திருடர்கள் உள்ளிட்டோரிடம் இருந்து நம்மை, நமது தகவல்களைக் காத்துக்கொள்வது முக்கியமாக உள்ளது. இதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், தங்களின் வாடிக்கையாளர்களுக்கு முழுப் பாதுகாப்பை அளிக்க வேண்டிய தார்மீகக் கடமை இருக்கிறது.

அந்த வகையில், கூகுள் நிறுவனம் க்ரோம் எக்ஸ்டன்ஷனாக 'பாஸ்வேர்டு செக்கப்' என்னும் வசதியை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்மூலம் உங்களுக்குத் தெரியாமல் உங்களின் பாஸ்வேர்டை யாராலும் மாற்ற முடியாது.

உங்களுடைய அக்கவுன்ட்டை பாதுகாப்பில்லாமல் இருப்பதாக கூகுள் உணர்ந்தால் உங்களின் பாஸ்வேர்டை மாற்றச்சொல்லி கூகுள் தன்னிச்சையாக எச்சரிக்கை செய்தியை அனுப்பும்.

எப்படி இன்ஸ்டால் செய்வது?

★ முதலில் Chrome desktop extension-ஐ இன்ஸ்டால் செய்து கொள்ளுங்கள்.

★ உடனே பிரவுசர் பாரில் பச்சை நிறத்தில் சரி என்ற குறியிடப்பட்ட Password Checkup தோன்றும்.

★ எப்போதாவது தேர்ட்-பார்ட்டி சேவைகளில் பாதுகாப்பற்ற தளங்களுக்குள் நுழைந்தீர்கள் எனில், பாஸ்வேர்டை மாற்றச் சொல்லிக் கேட்கும்.

★ பச்சை நிற ஐகான், சிவப்பு நிறத்துக்கு மாறும்.

★ இதன்மூலம் உங்களின் பாஸ்வேர்டைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஜெப்ரானிக்ஸின் 'ஜெப்-ஜர்னி'

'ஜெப்-ஜர்னி' என்கிற புதிய ஹெட்ஃபோனை ஜெப்ரானிக்ஸ் நிறுவனம் அறிமுகபடுத்தியுள்ளது.

கழுத்து பட்டை வடிவில் வடிவமைப்பட்டுள்ள இதில் 13 மணி நேரங்களுக்கு தடையில்லா இசையை அல்லது குரல்உதவியைப் பெறலாம் என அந்த நிறுவனம் கூறியுள்ளது.

வயர்லெஸ் ஹேட்ஃபோனான இதில் ஆண்ட்ராயிட் மற்றும் டிஷ்கு போன்களுக்கான குரல் உதவி வசதி கொடுக்கப்பட்டுள்ளது. ரீசார்ஜபிள் பேட்டரி உள்ளது.

'எங்களுடைய இந்த 'ஜெப்-ஜர்னி' என்னும் புதிய படைப்பில், குரல் உதவி எனும் தொழில்நுட்பத்தின் மூலம் நீங்கள் அதிகமாக செயல்படலாம் மேலும் இது அதிக நேரம் இயங்கக்கூடிய வல்லமை கொண்டது, இசை பிரியர்களுக்காகவே சிறப்பாக தயாரிக்கப்பட்டது' என்று ஜெப்ரானிக்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் பிரதீப் தோஷி கூறியுள்ளார்.

இந்த ஹெட்ஃபோன் கருப்பு நிறத்தில் வருகிறது. இதன் விலை ரூ.1,399

கண்ணுக்குப் பூசிய காஜலை எளிதாக நீக்கலாம்

பெண்கள் அழகுக்காக பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று தான் காஜல். அவ்வாறு தினமும் காஜலைப் பயன்படுத்தும் பெண்கள் ஒரு நாள் அதனை பயன்படுத்தவில்லை என்றாலும், பார்க்க ஏதோ ஒன்று குறைந்தது போல் காணப்படுவர். அதிலும் காஜல் நிறைய வகையில் தற்போது கடைகளில் விற்கப்படுகின்றன.

மேலும் அந்த காஜலை வீட்டிலே கூட தயாரிக்கலாம் அல்லது காஸ்மெடிக்ஸ் கடைகளில் வாங்கலாம். தற்போது அவ்வாறு காஜலைப் பயன்படுத்தும் பெண்களுக்கு இருக்கும் ஒரு பிரச்சனை தான், கண்களுக்கு போடும் காஜல் கலைந்துவிட்டு, முக அழகை கெடுத்துவிடுகின்றன. அதனாலேயே நிறைய பெண்களுக்கு கருவளையம் வந்துவிட்டது போன்று காணப்படுகிறது.

சிலசமயங்களில் அந்த காஜலை போட்டவர்கள் சரியாக அதனை நீக்காமல் இருப்பதும் கருவளையத்திற்கு காரணம். ஆகவே அத்தகைய காஜலை சரியாக நீக்குவதற்கு ஒரு சில டிப்ஸ் இருக்கிறது. அவை இதோ

★ தினமும் முகத்தை கிளின்சிங் மில்க்கை வைத்து கழுவ வேண்டும். இதுவும் மேக்கப்பில் ஒரு வித பகுதி தான். அதிலும் முகத்திற்கு என்னதான் மேக்கப் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ போட்டாலும், கிளின்சிங் மில்க்கால் கழுவ வேண்டும். அதிலும் காஜலை எளிதாக நீக்குவதற்கு, கிளின்சிங் மில்க்கை முகத்திற்கு தடவி, முகம் மற்றும் கண்களுக்கு நன்கு மசாஜ் செய்ய வேண்டும். பின் அதனை ஒரு காட்டனை வைத்து, துடைத்து எடுக்க வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும் காஜல் வருவதோடு, அழுக்குகளும் வந்துவிடும். இல்லையெனில் மேக்கப் ரிமூவல் க்ரீம் என்று விற்கப்படும் கிரீமையும் பயன்படுத்தி நீக்கலாம்.

★ காஜல் பயன்படுத்தியதால் ஏற்படும் கருவளையத்தை தடுப்பதற்கு, தினமும் படுப்பதற்கு முன், எண்ணெயை வைத்து நன்கு மசாஜ் செய்து, தூங்க வேண்டும். அவ்வாறு மசாஜ் செய்ய பயன்படுத்தும் எண்ணெய் ஆலிவ் அல்லது ஆமணக்கெண்ணெயை பயன்படுத்தினால் நல்லது. இவ்வாறு எண்ணெயை பயன்படுத்தினால், கண் இமைகள் நன்கு வளர்வதோடு, காஜலும் எளிதில் நீங்கும். வேண்டுமென்றால், எண்ணெயை பயன்படுத்தி மசாஜ் செய்ததும், ஒரு காட்டனை வைத்து துடைத்துவிட்டு, பின் ஃபேஸ் வாஷை பயன்படுத்தலாம்.

★ வாஸ்லினை பயன்படுத்தி கண்களுக்கு அடியில் சிறிது நேரம் மசாஜ் செய்து, பின்னர் காட்டனை வைத்து, துடைக்க வேண்டும். இதனால் காஜல் எளிதில் நீங்கிவிடும்.

ஆகவே மேற்கூறியவாறெல்லாம் செய்தால், காஜல் எளிதில் நீங்குவதோடு, கருவளையம் ஏற்படாமலும் இருக்கும்.

அழகிய கூந்தலுக்கு இயற்கை முறையில் ஷாம்பூ

இன்றைய வாழ்க்கைமுறை, பணிச்சுமை ஆகியவை நமது உடல் மற்றும் உள்ளம் ஆகியவற்றுக்கு பல பிரச்சனைகளைத் தருகிறது. அவற்றில் தலை முடிப் பிரச்சனை முக்கியமானது. ரசாயன ஷாம்பூக்களை அளவு தெரியாமல் பயன்படுத்துவதால் பல மோசமான விளைவுகள் ஏற்படுகிறது. அதில் உள்ள சோடியம் லாரில் சல்ஃபேட், சோடியம் லாரத் சல்ஃபேட் போன்ற வேதியியல் பொருட்கள் முடி உதிர்தல், தோல்வீக்கம், நோயெதிர்ப்புக்கேடு, ஒவ்வாமை, கண்புரைக்கேடு போன்றவற்றை ஏற்படுத்தும் என பல ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கு மாற்றாக இயற்கையான முறையில் வீட்டிலேயே ஷாம்பூ தயாரித்து பயன்படுத்தினால் நன்மை கிடைக்கும். இன்று இயற்கையான வழியில் ஷாம்பூ தயாரிக்கும் முறையை அறிந்து கொள்ளலாம்.



சீயக்காய் ஷாம்பூ

தேவையான பொருட்கள்

சீயக்காய்- 1 கிலோ

செம்பருத்திப்பூ- 50

பூலாங்கிழங்கு - 100 கிராம்

எலுமிச்சை தோல் காய வைத்தது - 25

பாசிப்பருப்பு - கால் கிலோ

மரிக்கொழுந்து - 20 குச்சிகள்

மல்லிகை பூ காய வைத்தது - 200 கிராம்

கரிசலாங்கண்ணி இலை - 3 கப் அளவு.

செய்முறை

மேற்கண்ட அனைத்தையும் வெயிலில் காய வைத்து மெஷினில் கொடுத்து அரைத்து வைத்துக் கொண்டால் ஷாம்பூவுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். வெறும் தண்ணீர் மட்டும் விட்டு பேஸ்ட் போல கலந்து தலைக்கு தடவி குளிக்கலாம். இந்த சீயக்காய் ஷாம்பூ அழகாக நுரை வரும். பொடுகை நீக்கும். முடி கருமையாகும். முடி ஈரப்பதத்தோடு இருக்கும். வறண்டு போகாது. இந்த இயற்கை ஷாம்பூ தயாரிக்கப் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்துமே மிகுந்த மருத்துவ குணங்களைக் கொண்டவை.

சீயக்காய் பலநூறு ஆண்டுகளாக இயற்கை ஷாம்பூவாக பாரம்பரிய மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதனுடைய குறைந்த காரத்தன்மை முடியின் இயல்பான எண்ணெய் தன்மையை தக்கவைக்க உதவுகிறது. இதனுடைய கிருமிநாசினித் தன்மையானது பொடுகு போன்ற பரவுநோய்களிலிருந்து முடியைப் பாதுகாக்கிறது. இதில் காணப்படும் சாப்போனின், லேக்டோன், அராபினோஸ், ராம்னோஸ் எனும் மூலக்கூறுகள் முடிக்கு போஷாக்களித்து முடி உதிர்வதிலிருந்து காக்கிறது.

செம்பருத்திப்பூவில் காணப்படும் ஃப்ளேவனாய்ட்கள் மேலும் தயமின், ரிபோஃப்ளேவின், நியாசின், அஸ்கார்பிக் ஆசிட் போன்ற வைட்டமின்கள் முடி வளர்ச்சிக்கு உதவுகிறது. மேலும் முடி உதிர்தல், இளநரை, பொடுகு போன்றவற்றை குணமாக்குகிறது. பூலாங்கிழங்கில் உள்ள ஆர்கானிக் அமிலம், ரெசின், க்ளுக்கோசைட், அல்புமின், சைட்டோஸ்டிரொலென்ட், ஃபுரோனாய்ட், 7- ஹைட்ராக்சிகேட்சைனொன் போன்ற பொருட்கள் முடிக்கு வலு சேர்க்கிறது.

எலுமிச்சைத் தோலில் அதன் சாற்றினை விட 5 முதல் 10 சதவிகிதம் அதிகமான கால்சியம் மற்றும் வைட்டமின் சி உள்ளது. இவை முடிக்கு நன்மையையும் உறுதியையும் வழங்குகிறது. பாசிப்பயறில் உள்ள செழுமையான வைட்டமின் அ, இ மற்றும் தாதுப் பொருட்கள் ஆகியவை முடி பிளத்தல், முடி உதிர்தல் ஆகியவற்றை தடுக்க உதவும்.

மரிக்கொழுந்தில் உள்ள ஏராளமான நறுமண எண்ணெய் முடிக்கு வளமை தருகிறது. மல்லிகைப்பூவில் உள்ள இண்டோல், உ-உ- ஃபெர்மிசென், Z3ஹ்க்செனைல் பென்சோவேட், லினலால் போன்ற வேதிப்பொருட்கள் முடி உதிர்தலைத் தடுத்து பேனை ஒழிக்கிறது.

பெண்களுக்கு ஏற்படும் சருமச் சுருக்கங்களை எப்படிப் போக்குவது?

உங்கள் 30-வது பிறந்த நாளில் இருந்து நீங்கள் சருமத்தை இளமையாக தக்க வைப்பதற்கான செயல்முறைகளை தொடங்கி விடுவது நல்லது. இது உங்கள் தினசரி வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும். மேலும் முப்பது வயதிற்கு மேல் உங்கள் சருமத்தை பராமரிக்க சில புது சரும பராமரிப்பு சாதனங்கள் மற்றும் சில நிபந்தனைகளை உங்களுக்கு கூறுகிறோம். நீங்கள் இந்த பத்து நிபந்தனைகளை கடைபிடித்தால் உங்கள் சருமம் சுருக்கங்கள் மற்றும் முதிர்ந்த தோற்றம் இல்லாமல் இளமை பொலிவோடு இருக்கும். அதனால் 30 வயதடைந்த பெண்கள் இந்த எளிய சரும பாதுகாப்பு நிபந்தனைகளை படித்து தினசரி செயல்படுத்துதல் வேண்டும். பேஸ்புக்கில் எங்களது செய்திகளை உடனுக்குடன் படிக்க க்ளிக் செய்யவும்

1, ரெடினாய்டு, சரும பராமரிப்பில் வெளிப்புற இணைப்புத்திசுக்களை (இணிடுடூச்ஞுண) மற்றும் தோல் திசுக்களை (புதிதாக உற்பத்தி செய்கிறது. நீங்கள் 30 வயதானவராக இருந்தால் உங்கள் சரும பராமரிப்பு முறைகளில் கண்டிப்பாக ரெடினாய்டு உபயோகியுங்கள். நீங்கள் ரெடினாய்டு உள்ளடங்கிய சரும பராமரிப்பு சாதனங்களை தேர்ந்தெடுங்கள். ரெடினாய்டு ஒரு சிறந்த முகப்பரு தடுப்பானாக செயல்படுகிறது. இது சருமச் சுருக்கங்கள் வராமல் தடுப்பதோடு முகத்திலிருக்கும் கரும்புள்ளிகளை அகற்றுகிறது. மேலும் இது சூரியனின் புற ஊதாக் கதிர்களில் இருந்து சருமத்தை பாதுகாக்கிறது.

2. உங்கள் சருமம் வயதான தோற்றமடைய காரணம் சருமத்தில் வறட்சியே. எனவே நீங்கள் கட்டாயமாக சருமத்தின் ஈரப்பதத்தை தக்க வைக்க வேண்டும். அதனால் நீங்கள் முப்பது வயதடைந்ததும் சருமத்திற்கு மாய்ஸ்ட்ரைசர் பயன்படுத்துவதை அதிகரிக்கவும். சரும மாய்ஸ்ட்ரைசர்களுக்கு நீங்கள் எடுத்து கொள்ளும் இடைவெளி மிகக் குறைவானதாகவும் எப்போதும் உங்கள் சருமம் நீர்ச்சத்துடை உடையதாகவும் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பயணங்களின் போதும் கண்டிப்பாக மாய்ஸ்டரைசரை பயன்படுத்த வேண்டும்.

3. நீங்கள் முப்பது வயதை அடைந்திருக்கும் போதே உங்கள் சரும பராமரிப்பு பொருட்களில் சரும முதிர்ச்சியை தடுக்கும் பயனுள்ளவைகளை தேர்ந்தெடுங்கள். நீங்கள் ஏற்கனவே பயன்படுத்திய சரும பராமரிப்பு பொருட்களையே மேலும் தொடர்ந்தால் உங்கள் சருமத்திற்கு தேவையான போஷாக்கு கிடைக்காது, அதனால் நீங்கள் தேர்ந்தெடுக்கும் சரும பராமரிப்பு பொருட்களில் முதிர்ந்த தோற்றத்தை தடுக்கும் மூலக்கூறுகள் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். உயர் ரக பிராண்டுகளில் உள்ள சரும பராமரிப்பு பொருட்களில் சரும முதிர்ச்சியை தடுக்கும் பொருட்களை நீங்கள் உபயோகிக்கலாம். 4. வயது முதிர்ச்சியையும் பாலின வேறுபாட்டையும் தாண்டி சூரியனின் புற ஊதாக்கதிர்கள் எப்போதுமே உங்கள் சருமத்திற்கு கெடுதல் தரக்கூடியது தான். சரும முதிர்ச்சியை தடுக்கும் சரும பராமரிப்பு முறைகளை தொடங்கியிருப்பின் அதிகமாக வெயிலில் செல்வதை தவிருங்கள். இதனால் உங்கள் சருமம் மேலும் நிலையான இளமைப்பொலிவோடும், சரும நிறம் மாறாமலும் இருக்கும். முப்பது வயதிற்கு மேல் வீட்டிலேயோ அல்லது அலுவலங்களிலோ உள்ளேயே இருந்து வேலை செய்வதை அதிகப்படுத்துங்கள், இது உங்கள் சருமத்தின் தன்மை மாறாமல் பாதுகாக்கும்

5. உடலில் வயதான தோற்றத்தை முதலில் எடுத்துக்காட்டுவது கண்களும் அதன் சுற்றுப்புறமும் தான் சொறி போன்ற அலர்ஜியான கண்ணிமைகள் அல்லது காக்கைச்சுவடு போன்ற கண்ணிமை கோளாறுகள் கண்ணைச் சுற்றியுள்ள சருமத்தை மிகவும் பலவீனமாகவும் சுருக்கங்கள் உடையதாகவும் மாற்றுகிறது. இதற்கு கண்களுக்கு பிரத்யேகமான அதிக பயன்களுடைய சரும முதிர்ச்சி தடுக்கும் சரும பராமரிப்பு பொருட்களை உபயோகிப்பது சிறந்த தீர்வாகும். சாதாரண சரும பராமரிப்பு பொருட்கள் கண்களை சுற்றி சரியாக வேலை செய்யாது காரணம் அது உடலின் மிக மென்மையான பகுதியாகும். இதற்காக நீங்கள் கண் மருத்துவர் பரிசோதித்து பரிந்துரைக்கும் கண்களுக்கு பிரத்யேகமான சரும பராமரிப்பு பொருட்களை உபயோகிக்கவும்.

மேற்கூறிய கடின முயற்சிகள் இருந்தாலும் உங்கள் சருமம் கண்டிப்பாக 30 வயதை கடந்ததும் முதிர்ச்சியை காட்டுகிறதென்றால், நீங்கள் தோல் மருத்துவரிடம் உங்கள் சருமத்தை பரிசோதித்து தக்க மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். எனவே உங்களுக்கு சருமத்தில் எந்த பிரச்சினையும் இல்லாவிடிலும் மாதத்திற்கு ஒரு முறை நீங்கள் பரிசோதித்து சருமத்தின் ஆரோக்கியத்தை உறுதி செய்து கொள்வது நல்லது.

முகத்திற்கு அடிக்கடி டிஷ்யூ பயன்படுத்தாதீர்கள்!

பேபி வைப்ஸ் போலவே தற்போது பெரும்பாலானோர் ஸ்கின் கேர் வைப்ஸ் பயன்படுத்துகிறார்கள். காற்று புகாத வண்ணம் டைட்டான பாக்ஸில் ஈரப்பசையுடன் வைப்ஸ் இருக்கும்.

இதனை நாம் எளிதாக பயன்படுத்தலாம். தண்ணீரைக் கொண்டு முகத்தை கழுவ முடியாத சமயங்களில் இதனைப் பயன்படுத்தலாம். மேக்கப் ரீமூவ் செய்வதற்கு சருமம் வறண்டு காணப்பட்டால் இதனைப் பயன்படுத்தி முகத்தை துடைக்கலாம்.

இதனைப் பயன்படுத்த எளிதாக இருந்தாலும் இதனால் ஏராளமான தீமைகள் ஏற்படுகிறது.

ஸ்கின் கேர் வைப்ஸில் ஏராளமான கெமிக்கல்ஸ் இருக்கும். எப்போதும் அவை ஈரப்பதத்துடன் இருப்பதற்காக அவற்றில் கெமிக்கல் சேர்க்கப்படுகிறது. இவற்றால் சென்ஸிட்டிவ் ஸ்கின் இருப்பவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. இதனை தொடர்ந்து பயன்படுத்தினால் சருமம் வரண்டு போகும். இதனால் பல்வேறு சரும பாதிப்புகள் உண்டாகும்.

தண்ணீரை பயன்படுத்த முடியாத சூழ்நிலைகளில் தான் அதிகமாக இதனை பயன்படுத்துகிறார்கள் ஆனால் இதனை பயன்படுத்துவதால் முகம் முழுவதுமாக சுத்தம் ஆகாது. சில நுண்ணிய துகள்கள் முகத்தில் ஒட்டியபடியிருக்கும். இப்படியே அடிக்கடி செய்து வந்தால் அது சருமத்திற்கு பாதிப்பையே உண்டாக்கும்.

வைப்ஸில் இருக்கும் ஆல்கஹால் நம் சருமத்தை வறட்சியாக்கிடும். இது சீக்கிரத்திலேயே சருமத்தில் சுருக்கம் விழுவதற்கு காரணமாக அமைந்திடும். இதனால் பருக்கள், கரும்புள்ளி தோன்றும்.

சமையலறை தந்திரங்கள்

★ இஞ்சி நீண்ட நாள் கெடாமல் இருக்க ஒரு கிண்ணத்தில் இஞ்சியை வைத்து தண்ணீர் ஊற்றி பிரிட்ஜில் வைக்கலாம். தண்ணீரை மட்டும் 2 நாட்களுக்கு ஒரு முறை மாற்றி வந்தால் இஞ்சி நீண்ட நாட்கள் பிரஷ்ஷாக இருக்கும்.

★ அரிசி, காய்கனிகள் கழுவிய தண்ணீரை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றினால் அவை நன்றாக வளரும்.

★ காலி பிளவரை சமைக்கும் போது ஒரு டீஸ்பூன் பால் சேர்த்தால் அதன் வெள்ளை நிறம் மாறாமல் இருக்கும்.

★ சப்பாத்திக்கு மாவு பிசைவதற்கு முன்னர் சிறிதளவு உப்பை கையில் தடவினால் ஒட்டாது.

★ பில்டர் காபி டிகாஷன் தயாரான உடன் அப்படியே எடுத்து கலக்காமல் சிறிது சூடாக்கி பின்னர் கலந்தால் காபி வாசனை அதிகமாக இருக்கும்.

★ மாம்பழ மில்க் ஷேக் செய்யும் போது குளிர்ந்த பால் பாதியளவும், கன்டென்ஸ்டு மில்க் பாதியும் கலந்து தயாரித்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

★ அடை மாவில் தண்ணீர் அதிகமாகி விட்டால் சோளமாவை கலந்தால் கெட்டியாகும். சுவையும் நன்றாக இருக்கும்.உளுந்து வடை செய்யும்போது மாவில் சிறிதளவு சேமியாவை பொடித்து போட்டால் நன்றாக இருக்கும்.

★ சப்பாத்தி குருமாவில் பைனாப்பிள் துண்டுகள், திராட்சை, கிஸ்மிஸ்பழம் போன்றவைகளை சேர்த்தால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர்.

★ சாம்பார் பொடி செய்யும்போது சிறிதளவு சுக்கை தட்டி போட்டு கலந்து அரைக்க வேண்டும். இதனால் வாசனை கூடும். பருப்பில் உள்ள வாயுவையும் போக்கும். பாயசம் செய்யும் போதும் சிறிது சுக்கு போடலாம்.

★ ரவா தோசை மொறுமொறுப்பாக வருவதற்கு ரவையை நன்றாக வறுத்து அதன் பின்னர் அரைமணி நேரம் நீரில் ஊற வைத்து மற்ற உணவு பொருட்களை சேர்க்க வேண்டும்.

தேங்காய் எண்ணெய் உங்கள் வறண்ட வெடித்த உதடுகளைச் சுற்றி ஒரு படலத்தை ஏற்படுத்தி குளிர்காற்றில் இருந்து பாதுகாக்கும். தேங்காய் எண்ணெய் எளிதில் கிடைக்ககூடிய விலை மலிவான பொருளாகும். அதனால், எல்லோரும் வறண்ட வெடித்த உதடுகளின் சிகிச்சைக்கு தேங்காய் எண்ணெயை பயன்படுத்தலாம். தேங்காய் எண்ணெய் கொண்டு வெடித்த உதடுகளை சிகிச்சை செய்வதற்கான சில வழிகளை இப்பொழுது பார்க்கலாம்.

தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் எப்பொழுதும் உங்கள் கைப்பையில் சிறிய தேங்காய் எண்ணெய் பாட்டில் ஒன்று எடுத்து செல்ல வேண்டும். போதுமான இடைவேளைகளில் எண்ணெயை தடவிக்கொள்ள வேண்டும். உங்கள் விரல் நுனிகளில் சிறிதளவு எடுத்துக்கொண்டு உங்கள் உதடுகளில் தடவிக்கொள்ள வேண்டும்.

பாலைவனத்தை சோலைவனமாக்கும் பேரீச்சை

சவுதி அரேபியா பேரிச்சம் பழ ஏற்றுமதியில் உலகின் முதல் 3 நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது. பெட்ரோலும் பாலைவனமும் நிறைந்த இந்நாட்டில் விவாசாயத்திற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. கோதுமை, தக்காளி, தர்பூசணி, உருளைகிழங்கு உள்ளிட்ட பல்வேறு விவசாய பொருட்கள் லட்சக்கணக்கான டன் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக பேரீச்சம் பழ விவசாயத்தில் ஏராளமானோர் ஈடுபடுகிறனர். அந்நாட்டு அரசாங்கம் இதனை முதன்மைபடுத்தும் விதமாக சவுதியில் பல்வேறு பகுதிகள் பேரீச்சம் பழ திருவிழாக்கள் நடைபெறும் இந்நாட்டின் கிழக்கில் அமைந்துள்ள அல் அஹ்ஷா பகுதி பேரீச்சம் மரங்கள் நிறைந்த உலகின் மிகபெரிய பாலைவன சோலைகளில் ஒன்றாகும். இப்பகுதியில் 10 ஆயிரம் ஹெக்டர் நில பரப்பளவில் லட்சக்கணக்கான

பேரீச்சம் மரங்கள் உள்ளன. சவுதி அரேபியாவில் ஒட்டுமொத்த பேரீச்சம் பழ உற்பத்தியில் இப்பகுதி முக்கிய இடம்பெறுகிறது. பாலைவனத்திலும் ஒரு சோலை என்பதுபோன்றே இப்பகுதி காணப்படுகிறது.

காலம் தவறாமை!

ஒருசமயம் நெப்போலியன் தன்னுடைய தளபதிகளை விருந்துக்கு அழைத்திருந்தான். விருந்து நேரம் என்ன என்பதையும் அறிவித்திருந்தான். குறிப்பிட்ட நேரம் வந்தது. எவரும் அந்த நேரத்திற்கு விருந்திற்கு வரவில்லை. ஏனோ சற்று அசட்டையாக இருந்துவிட்டார்கள்.

நெப்போலியனோ குறிப்பிட்டிருந்த நேரத்தில் தனியாக உட்கார்ந்து உணவை உண்ண ஆரம்பித்துவிட்டான்.

அவன் உணவருந்தி முடியும் தருவாய் வந்தது. அப்பொழுதுதான் தளபதிகள் ஒருவர்பின் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். உடனே நெப்போலியன் சாப்பாட்டு மேஜையை விட்டு எழுந்தான். பின் நடந்துகொண்டே,''என்னருமைத் தளபதிகளே! சாப்பிடும் நேரம் முடிந்துவிட்டது. இப்பொழுது வேலை செய்யும் நேரம் தொடங்கிவிட்டது! வாருங்கள். ஒரு நிமிடமும் வீணாக்காமல் காரியத்தில் ஈடுபடுவோம்'' என்றார்.

விவேகானந்தர் சிந்தனைகள் : அன்புதான் வாழ்க்கை

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகிய வற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

கல்வி என்பது மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. மத்தியக் கிழக்கில் அமைந்துள்ள நாடு. லெபனான், இஸ்ரேல், ஜோர்டான், ஈராக், துருக்கி இதன் பக்கத்து நாடுகள்.

2. 1936-ம் ஆண்டு பிரான்ஸிடமிருந்து விடுதலைப் பெற்றதாக அறிவித்தது. 1946-ம் ஆண்டு முழுமையாக விடுதலை அடைந்ததாக அங்கீகரிக்கப்பட்டது.

3. இங்குள்ள டமாஸ்கஸ் நகரம் மிகவும் பழமையானது. இதுவே இந்த நாட்டின் தலைநகர்.

4. இந்த நாட்டின் கொடியில் 2 நட்சத்திரங்கள் இருக்கின்றன.

5. அஸ்ஸாட் மிகப் பெரிய ஏரி. மனிதரால் உருவாக்கப்பட்டது.

6. இந்த நாட்டின் தேசியப் பறவை ஒரு வகைப் பருந்து (Hawk).

7. டமாஸ்கஸில் அமைந்துள்ள 'உமையாத் மசூதி' மிகப் பழமையானது. இஸ்லாமியர்களின் நான்காவது புனிதத்தலமாகக் கருதப்படுகிறது.

8. பெட்ரோலியம், பாஸ்பேட், மார்பிள், ஜிப்சம் போன்ற இயற்கை வளங்கள் உள்ளன.

9. கால்பந்து, கூடைப்பந்து, நீச்சல், டென்னிஸ் மிகவும் பிரபலமான விளையாட்டுகள்.

10. 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டு யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நாடு.

விடை: சிரியா

விளையாட்டு எந்த நாட்டில் தோன்றியது?

இந்த நாட்டில்தான் விளையாட்டு ஆரம்பித்தது என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது. மிகப் பழங்காலத்திலேயே (15,300 ஆண்டுகளுக்கு முன்பு) பிரான்ஸ் நாட்டுக் குகை ஓவியங்களில் ஓட்டமும் மல்யுத்தமும் இடம் பெற்று இருந்திருக்கின்றன. கி.மு. 7000-ல் மங்கோலியாவின் குகைகளில் மல்யுத்தப் போட்டியை மக்கள் பார்ப்பதுபோன்ற ஓவியங்கள் இருந்திருக்கின்றன. கி.மு. 6000-ல் லிபியாவில் நீச்சலும் வில்வித்தையும் ஓவியங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

கி.மு. 766-ல் கிரீஸ் நாட்டில் பழங்கால ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெற்றதற்கான ஆதாரம் இருக்கிறது. இதில் குதிரைப் பந்தயம், மல்யுத்தம், ஈட்டி எறிதல், வட்டு எறிதல், குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றுள்ளன. பைபிளில் மல்யுத்த விளையாட்டு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று உலகம் முழுவதும் கால்பந்துதான் அதிகமாக விளையாடப்படுகிறது.

கால்பந்து போன்ற விளையாட்டை கி.மு. 2-ம் நூற்றாண்டில் சீனர்கள் கண்டுபிடித்துள்ளனர். தோலுக்குள் ரோமங்களை வைத்து பந்துபோல் உருவாக்கி, கைகளைப் பயன்படுத்தாமல் கால்களால் விளையாடி இருக்கிறார்கள். 'Sport' என்ற ஆங்கிலச் சொல் பிரெஞ்சு மொழியில் இருந்து வந்தது. 'ஓய்வு' என்று பொருள். ஓய்வு நேரத்தில் மனிதர்கள் மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்குவதற்கு உருவாக்கப்பட்டதுதான் விளையாட்டு. கடந்த 2 நூற்றாண்டுகளில்தான் மற்ற விளையாட்டுகள் தோன்றியுள்ளன.

★ தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சுக் கருவியின் பெயர் ஸ்கூபா ஆகும். (SCUBA - Self Contained Underwater Breathing Apparatus). இதை அணிந்து கொண்டு தண்ணீருக்கு அடியில் செல்வதை ஸ்கூபா டைவிங் என்கிறார்கள்.

★ பியானோவைக் கண்டுபிடித்தவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டபோரி. கண்டுபிடித்த ஆண்டு 1709.

★ உலகின் இரண்டாவது நீளமான நகர்ப்புறக் கடற்கரை, சென்னையின் மெரினா. இதற்கு பெயர் சூட்டியவர், 1881 முதல் 1886 வரை சென்னை கவர்னராக இருந்த எல்பின்ஸ்டன் கிராண்ட் டஃப். கடற்கரையில் சாலை அமைத்து மெரினாவை அழகுபடுத்தியவர் இவரே!

★ தமிழில் பெண்கள் மாத இதழாக வெளிவந்த முதல் இதழ் தமிழ் மகள். இது 1937ம் ஆண்டு வெளி வந்தது. இதன் ஆசிரியராக திருவாட்டி மங்களம்மாள் மாசிலாமணி அவர்கள் இருந்தார்.

★ இந்தியாவின் முதல் அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பலின் பெயர் ஐ.என்.எஸ் சக்ரா.

★ தாஜ்மஹாலை உருவாக்கிய தலைமைச் சிற்பி இஸ்தாக் உஸ்தாக்.

★ உலகிலேயே வெப்பமான இடம் அசீசீயா (லிபியா).

★ உலகிலேயே அதிக வயதில் பிரதமர் ஆனவர், மொரார்ஜி தேசாய். இவர் 1977 மார்ச் 24ல் பாரதப் பிரதமராக பதவி ஏற்றபோது வயது 81.

★ உலகிலேயே அதிகமாக சினிமா தயாரிக்கும் நாடு இந்தியா.

★ பிரதமரும் மந்திரிகளும் இல்லாத நாடு சுவிட்சர்லாந்து.

★ அச்சுப்பிழை உள்ள நாணயங்களுக்கு வழங்கப்படும் பெயர் fido.

★ பறக்க முடியாத பறவைகள் கிவி, ஈமு, பெஸ்பரோ, தீக்கோழி, பென்குவின்.

★ முதன்முதலில் மக்களுக்காக நூலகம் அமைத்தவர் ஜூலியஸ் சீஸர்.

★ இந்தியாவில் முதல் நர்ஸ் பயிற்சி பள்ளி 1946ல் வேலூரில் தொடங்கப்பட்டது.

★ பைபிளை முதன்முதலில் தமிழில் அச்சிட்டவர் சீகன் பால்க்.

வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்



அன்பின் சக்தி

அந்த கல்யாண சத்திரத்தில் விதவிதமான உணவு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. எந்த உணவை சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்து விடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி.

அந்த நேரத்தில் தெருவோரமாக இருந்த மதில் மீது ஒரு காகம் அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியின் அருகே பறந்து வந்து அதனை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப் போனது.

காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது.

''காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். இங்கே தெருவில் நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர்களே... என் மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா?'' என்று அன்போடு கேட்டது. அதனைக் கேட்ட காகம், ''''எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகிறது. அதனால் உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடும்!'' என்று கண்டிப்புடன் கூறியது. ''காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒரு வித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக் கொண்டால் அது என்ன பாடுபடும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர் பிச்சை கொடுங்களேன்!'' என்று பரிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனது இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, ''''எலியே! உன்னைப் பார்த்த போது எப்படியாவது உன்னை சாப்பிட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது.

''உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிற போது அந்த எண்ணம் என் மனதைவிட்டு அகன்றுவிட்டது. நீ உன் சாதுர்யமான பேச்சினால் என் மனதினுள் இருக்கிற பாச உணர்ச்சியினைத் தட்டி எழுப்பிவிட்டாய். இனிமேல் நீ பயமில்லாமல் செல்லலாம்!'' என்று கூறியபடி வேறு இரையைத் தேடிப் பறந்து சென்றது.

எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக் கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்து கொண்டது. அன்புக்கு இத்தனை பெரிய சக்தியிருப்பதையும், அது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டது. தானும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அது உறுதி பூண்டது.

அமெரிக்காவின் பெருங்குகைகளில் ஒன்றான நயாக்கிரா

இயற்கையில் குகைகள் என்பது உயர்ந்த மலைகளிலும், மலை அத்திவாரத்திலும், மேலும் நிலத்திலே துளையாக உள்ள பாதாளம் போன்றும் பலவகைப்பட்டது. பொதுவாக எல்லாக் குகைகளும் இவற்றின் ப்ரதான அம்சமான ஒன்றில் வகைப்படுத்தப்படும்.

ஆயினும் மினசோட்டா மாநிலத்தின் நயாக்கிரா குகையோ பல்வேறு குணாதிசயங்களையும் உட்கொண்டது. அமெரிக்கக் கண்டங்களில் நாம் குகை என்று கூறினால் பெரும்பாலானோர் குகையின் கூரையில் இருந்து விழும் சுண்ணாம்பு சார்ந்த சரலாகிமையிற் ளுவயடயஅவைந சுரப்பியினாலான அரண் தூண்களையே யோசிப்பர். காரணம், இவற்றைத் தாம் நாம் பொதுவாகத் திரைப்படங்களில் காண்கிறோம். எனினும் இயற்கைக் குகையாகிய நயாக்கிராக் குகையை அவதானித்தோமானால் அதன் அழகிய இயற்கை தோற்பாடுகள் விபரமாகத் தெரியவரும். நயாக்கிராக் குகை பல மில்லியன் ஆண்டுகளிற்கு மேற்பட்டது. அவ்விடம் பண்டைய உலகின் கடல்பரப்பு, பெரும் உறைபனி காலம் தோன்றுவதற்கு முன்பிருந்த அமெரிக்கக் கண்டத்தின் தோற்றம், அந்தக் காலங்களில் வாழ்ந்த உயிரினங்களின் படிமங்கள் எனப் பல வியத்தகு விஷயங்களை அறியமுடியும்.

குகையின் உச்சியிலும், பக்கங்களிலும் விதவிதமான சுண்ணாம்பு, மற்றும் தாதுப் பொருட்கள் சுரந்து பல்வேறு வடிவங்களில் இயற்கையாக படிந்திருப்பதைக் காணலாம். இவை துணி சீலைத் தூரிகைகள் (சடிடிடிழளெ), முள்ளங்கிக்கிழங்குகள், சிறு வைக்கோல் கீறல்கள் போன்ற பல வடிவங்களில் காணப்படுகின்றன. மேலும் குகையின் கரையோரங்களிலும், உச்சியிலும் ஏறத்தாழ 325-400 மில்லியன் ஆண்டுகளிற்கு முன்னர் வாழ்ந்த தாவரங்கள், உயிரினங்களின் படிமங்களும் மிகத்தெளிவாக இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

இந்தக் குகையில் நிலப்பரப்புக்கு கீழே 200 அடி ஆழம் வரை உல்லாசப்பயணிகள் வழிகாட்டியுடன் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். இதைப் பார்வையிடச் செல்பவர்களுக்கு வியப்பூட்டும் வகையில் இயற்கையாக அமைந்திருக்கும் 60 அடி பாதாள நீர் வீழ்ச்சியையும் காணலாம்.

வரலாறு

NiagraCave3_520x371 நயாக்கிரா குகையானது ஹார்மனி Harmoney Minnesota என்னும் ஊரில் விவசாய நிலங்களின் மத்தியில் காணப்படும் பூகோள அதிசயமாகும். இந்தக் குகை 1924ம் ஆண்டு வரை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. உள்ளூர் விவசாயி ஒருவர் தமது கால்நடைத் கொட்டிலில் மூன்று பன்றிகள் தப்பி விட்டன என்று அக்கம்பக்கத்தில் தேட ஆரம்பித்தார். எங்குத் தேடியும் இந்த பன்றிகளைக் காணாததினால் ஊராரிடம் உதவி கேட்டார். இதைக் கேட்டு உதவி செய்ய வந்த இளைஞர்கள் பக்கத்தில் இருந்த நிலப்பரப்பெல்லாம் தேடி கடைசியாக இயற்கையில் உருவான தாவர செடிகளிடையே மறைந்திருந்த ஆழமான புதைக்குழியைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் ஊருக்குள் சென்று கயிறு போன்ற உபகரணங்களைக் கொண்டு வந்து குகைக்குள் இறங்கினர். சுமார் 50 அடி ஆழத்தில், குகையின் ஒரு சாரலில் தொலைந்த பன்றிகளைக் கண்டுப் பிடித்தனர். பன்றிகள் உயிருடன் மீட்கப்பட்டன். இந்த சம்பவத்திலிருந்து இந்தப் புதைகுழி பற்றிய செய்தி ஊராருக்குத் தெரிய வந்தது எனலாம். ஆயினும் உண்மை குகை ஆராய்ச்சியானது ஐயோவா மாநிலத்தில் இருந்து வந்த ஆராய்ச்சியாளர்களால் தான் பிரபலப்படுத்தப்பட்டது.

பூகோளவியல்

NiagraCave7_520x371eahf; நயாக் கிராக் குகையின் கதை ஏறத்தாழ 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தது எனலாம். ஏறத்தாழ 325-400 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வட அமெரிக்கா ஆழம் குறைந்த எனினும் பரந்த கடலினால் சூழப்பட்டு இருந்தது. இந்தக் கடலை பூகோளவியலாளர் ஓர்டோவிசியன் கடல் ழுசனழஎடிஉயைண ளுநய என்று அழைப்பர். இந்த நிலப்பரப்பு இப்போது இருக்கும் குகையிடத்தில் இருந்து இன்னும் தெற்கிலும் கிழக்கிலும் காணப்பட்டதாம். ஒரு காலத்தில் இந்த நிலப்பரப்பு கடல் தண்ணீருக்குள்ளே காணப்பட்டது. இதன் காரணமாக பல மணல், மற்றும் தாதுப்பொருள் சுரப்புக்கள் கடலின் அடியே பதியத் தொடங்கின. இதன் காரணமாக அவ்வப்போது இறந்த உயிரினங்களும் இந்த கடலடியில் தாழ்ந்து, அமிழ்ந்து காணப்படுகின்றன.

நயாக்கிராக் குகையானது பல்வேறு குடைவான நுழைவாயில்களைக் கொண்ட குகையாகும். இவை பல நூறு அடிகள் ஆழத்திலும் மைல் கணக்கில் அகன்று பரவியும் காணப்படுகிறது.

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் தன பாவத்தை குரு , குஜன் நோக்குவதால் தனம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதிவரவு, நற் செய்திகள் நன்மை தரும். செய்தொழில் விருத்தி, சேமிப்புண்டு, உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர்.

இவ்வாரம் சப்தம , களத்திர பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் களத்திர சுகம், இல்லற சுகம் நன்கு இருக்கும். இலாப பாவத்தில் சுபர் சஞ்சாரஞ் செய்வதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் உயர்வு பெறும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பும், உத்தியோக அதிகாரமும் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடி திருமணப் பேச்சுக்கள் தொடரும்.

சத்துரு ஸ்தானத்தில் குரு, குஜன் சஞ்சாரம் செய்வதால் சத்துரு ஜெயம், ரோக நிவர்த்தி, சிவில் வழக்குகளில் அனுகூலம் கிட்டும். சப்தமத்தில் சனி, 8இல் கேது சஞ்சரிப்பதால் புருஷன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் அவ் அவ்பொழுது தோன்றி மறையும். உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தில் வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும்.குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.

தர்ம பாவத்தில் உச்சு வெள்ளி , புதன் சஞ்சரிப்பதால் தர்ம காரியங்களில் ஆர்வம், ஈடுபாடு, நோன்பு, விரதம் அனுஷ்த்தல், பிதாவழி உதவி, சொத்துச் சேர்கை உண்டாகும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, அதிகாரம் கொள்வர். உத்தியோகப் பெண்களும் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் வெள்ளி சுகத்தால் ஜெயமளிக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

அஷ்டமத்தில் புதனும், உச்ச வெள்ளியும் சஞ்சரிப்பதால் ஆயுட்பலம் உண்டு. தன பாவத்தில் சுபர் பார்வை விழுவதனால் தனம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். மாதுரு ஸ்தானத்தில் குஜன், குரு சஞ்சரிப்பதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை சுகம், குடும்பம் சேமம் முதலியன உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி, அனுசரனை கிட்டும்.

களத்திர பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் இல்லற சுகம் நன்கு அமையும். புருஷன், மனைவி ஐக்கியம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஊக்குவிப்பும், பாராட்டும் கிடைக்கும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறைகளை பயிர் உற்பத்திகளை அதிகரிக்க செய்யலாம். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.

இவ்வாரம் தனலாபம், பொருள் வரவு, மனை, வாகன குடும்பம் அபிவிருத்தியடையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் இடமாற்றம், பதவி உயர்வு , சம்பள ஏற்றம் முதலியவற்றுக்கு சிபாரிசுகள் உண்டாகும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். விவசாயிகளுக்கு பன்னைகளின் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

இவ்வாரம் ஏழரைச்சனி கடைக்கூறு , ஜென் மத்து வியாழன் , செவ்வாய் தோஷம் கண்டக ரவி தோஷம் முதலியன இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலை அழுத்தம் குறையும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் ஆதாய முன்னேற்றம் அடைவர்.

இவ்வாரம் ஜென்ம ரவி சஞ்சாரம் செய்வதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. செய்தொழில் விருத்தி, இலாப சேமிப்பு ஏற்படும். உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் உதவி, அனுகூலம் உண்டு. விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு ச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் அளித்து இந்த வாரமும் திருமணப் பேச்சுக்கள் தொடரும்.

இவ்வாரம் ஜீவன பாவத்தில் குஜன், குரு சஞ்சாரம் செய்வதால் தொழில் மேன்மை, உயர்வு, விருத்தி உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு கூடும். விவசாயிகளுக்கு நவின முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.

இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகனம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நற்செய்திகள் நன்மையளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு அடைவர். உத்தியோக செல்வாக்கு உண்டாகும். வியாபாரிகள் விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். பெண்கள் , மாணவர் இவ்வாரம் சௌபாக்கியம் பெறுவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.

அஷ்டமத்துக் குரு , குஜன் தோஷம் இவ்வாரம் உண்டு. ஜீவன , கர்ம ஸ்தானத்தில் ரவி இருப்பதால் தொழிலால் மேன்மை, உயர்வு விருத்தி கிட்டும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற இலாப அடைவர். விவசாயப் பண்னைகளின் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் சுமூகமாக இடம்பெறும். மாணவர் கல்வி , விளையாட்டுக்களில் சிறப்படைவர்.

வாழ்வை உயர்த்தும் நற்செயல்கள்

நாம் வாழ்க்கையில் செய்யும் நற்செயல்களின் புண்ணியமே நமக்கு நற்கதி தரும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்றைய அவசர உலகத்தில் அப்படிப் பட்ட நல்ல செயல்கள் செய்வதை விட, தவறான செயல்களைத் தவிர்ப்பதே பெரும் பாடாய் உள்ளது. நம் முன்னோர்கள் நம்மை பின்பற்ற வலியுறுத்திய வாழ்வை உயர்த்தும் புண்ணிய செயல்களும், அதற்கான பலன்களும் என்னவென்று அறிவோமா?

வீட்டில் துளசி வளர்ப்பது - பாவம் நீங்குவதுடன், உடல் ஆரோக்கியமும் தரும்.

கல்விக்கு உதவுவது - புத்திர பாக்கியம் தருவதுடன், நாட்டையும் உயர்த்தும்.

கோவில் கட்டுதல் - பிறப்பற்ற நிலையைத் தருவதுடன், ஆன்மிகமும் வளரும்.

குளம் வெட்டுவது - கடன்கள் தீருவதுடன் தண்ணீர்ப் பஞ்சமும் தீரும்.

விரதம் இருப்பது - உடல், மனத் தூய்மை பெறுவதுடன் மனக் கட்டுப்பாடும் அதிகரிக்கும்.

சுமங்கலி பூஜை - சவுபாக்கியம் பெருகுவதுடன் சந்தோசம் தரும்.

மரம் வளர்த்தல் - லட்சுமி கடாட்சம் ஏற்படுவதுடன் மழையும் பொழியும்.

தர்மம் செய்தல் - சித்தப் பிரமை நீங்குவதுடன், ஏழைகளின் பசியும் நீங்கும்.



யாகம் நடத்துதல் - பாவங்கள் விலகுவதுடன் ஒற்றுமை பெருகும்.

பசு பராமரிப்பினால் - நம் குழந்தைகள் நலமுடன் வாழ்வர்.

முன்னோர் வழிபாடு - சகல சவுபாக்கியம் கிடைப்பதுடன் வாழ்வில் நிம்மதி தரும்.

மேலும் கோவிலை சுத்தம் செய்வதால் கடவுள் அருள் கிட்டும் என்றும், மந்திரங்களை மனப்பாடம் செய்தால் செல்வம் கிட்டும் எனவும் பலவிதமான நற்செயல்களை ஆன்றோர்கள் நம் வாழ்வு உயர வகுத்து வைத்துள்ளனர். இவைகளில் நம்மால் முடிந்தவற்றை செய்து நாமும் வாழ்வில் உயர்வோம்.

தொண்டாற்றுவதே மகிழ்ச்சி!

ஒரு ஊரில் செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவன் தொழில் நிமித்தமாக வெளியூர் சென்று திரும்பிய போது அவனது அழகான பெரிய பண்ணை வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அந்த ஊரிலேயே மிகவும் அழகான வீடு அவனுடையது தான். அந்த வீட்டை 2 மடங்கு விலை கொடுத்து வாங்க பலரும் தயாராக இருந்தனர். ஆனால் அவன் விற்கவில்லை.

இப்போது அந்த வீடு அவன் கண்முன்னே எரிந்து கொண்டிருந்தது. நிறைய பேர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர். அந்த செல்வந்தன் என்ன செய்வது என்று தெரியாமல் கண் கலங்கிய படி நின்று கொண்டு இருந்தான். அப்போது அவனுடைய மூத்த மகன் வந்து அப்பா, நேற்றே இந்த வீட்டை 3 மடங்கு லாபத்திற்கு விற்று விட்டேன்.

இதனால் நமக்கு நஷ்டம் இல்லை என்றான். இதனை கேட்டவுடன் செல்வந்தன் மகிழ்ச்சி அடைந்தான். இந்தநிலையில் அவனின் 2-வது மகன் வந்து தந்தையே நாங்கள் விற்ற வீட்டிற்கு முன்பணம் மட்டுமே வாங்கி உள்ளோம் என்றான். இப்போது வீட்டை வாங்கியவர் மீதி பணத்தை தருவாரா என்பது சந்தேகமே என்றான். இதை கேட்ட செல்வந்தன் அதிர்ச்சி அடைந்தான். மீண்டும் புலம்ப ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து 3-வது மகன் ஓடி வந்தான். அவன், தந்தையே கவலை வேண்டாம்.

இந்த வீட்டை வாங்கிய மனிதர் மிகவும் நல்லவர். வீட்டை வாங்கியவர், இந்த வீடு தீப்பிடிக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஆகையால் நான் பேசிய படியே முழு தொகையை கொடுப்பது தான் நியாயம் என்று கூறினார் என்றான். இதைக்கேட்டவுடன் செல்வந்தன் மகிழ்ச்சி அடைந்தான். கடவுளுக்கு நன்றி சொல்லி ஆடி, பாடினான். கண்ணீரும், சோகமும் அவனிடம் காணாமல் போய்விட்டது. மீண்டும் கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான். இங்கு எதுவுமே மாறிவிடவில்லை, அதே வீடு! அதே நெருப்பு! அதே இழப்பு! ஆனால் அவன் மனநிலையில் மட்டும் மாற்றம்.

உண்மையான மகிழ்ச்சி தொண்டு ஏற்பதில் அல்ல. தொண்டாற்றுவதில் தான். அதற்கு மிகச்சிறந்த எடுத்து காட்டு நான் என்கிறார் ஏசு.

தவக்காலத்தில் நாமும் உண்மையான மகிழ்ச்சியை பணத்தில், பதவியில் தேடாமல் தொண்டாற்றுவதில், உதவி புரிவதில் நம்பிக்கையோடு ஏசு கிறிஸ்துவுக்காக ஏற்பதில் காண்போம்.

தலையை ஆதிக்கம் செய்யும் நவக்கிரகங்கள்

நவக்கிரகங்களும் நம்முடைய தலையில் இருக்கும் உறுப்புகளை ஆதிக்கம் செய்கிறது. நமது ஜாதகத்தில் ஏதாவது கிரக பாதிப்புகள் இருந்தால், அதற்குரிய அவயங்களில் பாதிப்புகள் உண்டாகும்.

மனிதன் பிறக்கும் போதே, அவனுக்கான தலைவிதி எழுதப் படுவதாக மக்களின் நம்பிக்கை. அந்த தலையெழுத்தைத் தான் ஜோதிடத் துறை கணித்துக் கூறுகிறது. ‘எண் ஜான் உடலுக்கு சிரசே பிரதானம்’ என்பார்கள். ஆறு அடி உயரம் கொண்ட மனிதனில், ஒரு அடி கொண்ட தலை தான் முக்கியத்துவம் பெறுகிறது.

நமது உடலில் ஏற்படும் அனைத்து வகையான உணர்ச்சிகளுக்கும் தலையே முக்கிய பங்கு வகிக்கிறது. நம்முடைய அனைத்து செயல்களுக்கும் மூளையே உத்தரவு பிறப்பிக்கிறது. மூளையின் உத்தரவின்றி எந்த விதமான அசைவுகளும், உணர்வுகளும் நம்மிடம் இருக்காது. ஒரு மனிதனின் அடையாளம் என்ன என்பது, தலையை வைத்து தான் கூறப்படுகிறது.

நாம் ஒரு கடின முயற்சியில் வெற்றி பெறுகிறோம். அதற்குரிய வெற்றி கிரீடம் நம் தலையில் தான் வைக்கப்படுகிறது. நம் தலை அப்படி என்ன செய்து விட்டது?. அந்த வெற்றிக்குரிய அறிவும், ஆற்றலும், விடாத முயற்சியும், ஓயாத உழைப்பும் மூளையின் செயல்பாட்டால் வந்தது. நமது மூளைக்கு மகுடம் சூட்ட முடியாமல், அந்த மூளை பகுதி இருக்கும் தலைக்கு மகுடம் சூட்டி விடுகிறோம். ஆழ்ந்த சிந்தனை, தெளிவான அறிவு, அதி புத்திசாலித்தனம் இவையாவற்றுக்கும் காரணம் நம் மூளை தான்.

இஸ்லாமை எளிமையாக்க சொன்ன எம்பெருமானார்

முஸ்லிம்களுக்கு ஹஜ் ஜத்துல் வதாவுக்கு அதாவது இறுதி ஹஜ்ஜுக்கு முந்தைய வருடம் ஹஜ்ஜை தலைமையேற்று நடத்தும்படி நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களை மக்கா அனுப்பினார்கள். அந்த வருடம் துல்ஹஜ் பிறை பத்தாம் நாள், நபி(ஸல்) அவர்கள் அபூபகர் (ரலி) அவர்களை, எச்சரிக்கை! இந்த ஆண்டிற்குப் பின்னர் இணைவைப்பவர்கள் யாரும் ஹஜ் செய்யக்கூடாது. ‘கஅபாவை நிர்வாணமாக வலம் வரக் கூடாது’ என அறிவிக்கச் செய்தார்கள். ஏனெனில் மடமைக் காலத்தில் மக்கள் நிர்வாணமாகவே கஅபாவை வலம் வந்துள்ளனர். ஹும்ஸ் கிளையார்களைத் தவிர. ஹும்ஸ் என்றால் குறைஷியர்களும் அவர்களின் சந்ததியர்களுமாவர். இந்த ஹும்ஸ் கிளையார்கள் மக்களுக்கு நற்பணி புரிபவர்களாவர். அவர்களில் ஓர் ஆண் இன்னொரு பெண்ணுக்கு, தவாஃபு செய்வதற்காக ஆடை கொடுப்பார். இந்த ஹும்ஸ் கிளையார் யாருக்கு ஆடை கொடுக்கவில்லையோ அவர் நிர்வாணமாக வலம் வருவார்.

மேலும், மக்கள் அரஃபாவிலிருந்து திரும்பி விடுவார்கள். ஆனால், குறைஷிகளோ எல்லாம் முடிந்த பின்பு முஸ்தலிஃபாவிலிருந்துதான் திரும்புவார்கள். ‘மேலும் மற்றவர்கள் திரும்புகிற (அரஃபா என்னும்) இடத்திலிருந்து நீங்களும் திரும்பிச் செல்லுங்கள்’ என்ற திருக்குர்ஆனின் வசனம் குறைஷிகளுக்காகவே அருளப்பட்டது.

பின்னர் நபி(ஸல்) அவர்கள் அலீ(ரலி) அவர்களை அனுப்பி, திருக்குர்ஆனின் 9-வது அத்தியாயத்தில் ஒப்பந்த முறிவு பற்றிக் கூறப்படும் முதல் இருபது வசனங்களை அறிவிக்குமாறு கட்டளையிட்டார்கள். அதில் ஒப்பந்தங்கள் அனைத்தும் இன்றுடன் முடிந்து விட்டன என்பதை அறிவித்தார்கள். மேலும், நான்கு மாதங்கள் தவணையளித்தார்கள். ஒப்பந்தமில்லாதவர்களுக்கும் நான்கு மாத தவணை கொடுத்தார்கள். உடன்படிக்கை செய்தவர்கள் அதனை மீறாமலும் முஸ்லிம்களுக்கு எதிராகப் பிறருக்கு உதவி செய்யாமலும் இருந்தால் அவர்களது ஒப்பந்தக் காலம் முடியும் வரை தவணையளிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.

இதெல்லாம் அரபுலகம் முழுவதும் சிலை வணக்கம் ஒழிந்தது என்ற முகமாக அறிவிக்கப்பட்டது.

முஸ்லிம்களுக்கு மக்காவில் கிடைத்த வெற்றி, மூளையை மழுங்கச் செய்த சிலை வணக்கக் கலாச்சாரத்தை வேரோடு கலைத்து விட்டது. இவ்வெற்றியால் பொய்யிலிருந்து மெய்யை, அசத்தியத்திலிருந்து சத்தியத்தை மக்கள் பிரித்து அறிந்து கொண்டனர். அவர்களின் சந்தேகங்கள் நீங்கின. எனவே, இஸ்லாமை ஏற்றுக் கொள்ள விரைந்தனர்.

மக்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் கூட்டம் கூட்டமாக நுழைந்தனர். தபூக் போர் முடிந்து நபி (ஸல்) ஹஜ்ஜுக்காக மக்கா பயணமான போது முஸ்லிம்களின் ஒரு கடலே அவர்களுடன் இருந்தது. அதாவது தஸ்பீஹ், தக்பீர், தஹ்லீல் முழக்கங்கள் விண்ணை முட்ட ஓர் இலட்சம் அல்லது ஓர் இலட்சத்து நாற்பதாயிரம் நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களைப் புடை சூழச் சென்றனர்.

அதேபோல் நபி (ஸல்) தபூக் போரிலிருந்து மதீனா வந்த பின் யமன் நாட்டு ஹிம்யர் பகுதி அரசர்களின் கடிதம் நபி (ஸல்) அவர்களுக்கு வந்தது. அரசர்களான அல்ஹாரிஸ் இப்னு அப்து குலால், நுஅய்ம் இப்னு அப்து குலால், நுஃமான் போன்றோர் மாலிக் இப்னு முர்ரா ரஹாவியை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி, தாங்கள் இணைவைத்தலையும் இணைவைப்பவர்களையும் விட்டு விலகி இஸ்லாமை ஏற்றோம் என்று தெரிவித்தனர்.

நபி (ஸல்) அந்த அரசர்களின் இஸ்லாமிய வருகையை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதில் முஸ்லிம்களின் சலுகைகள், அவர்களின் கடமைகள் முதலியவற்றை விவரித்தார்கள். மேலும், முஆத் இப்னு ஜபல் (ரலி) தலைமையில் தம் தோழர்களை மார்க்கக் கல்விப் பணிக்காக அம்மக்களிடம் நபி (ஸல்) அனுப்பி வைத்தார்கள். அபூமூஸா அஷ்அயை யமனின் கீழ்புறத்தில் உள்ள ஜுபைத், மஃரப், ஜமா, ஸால் ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பாளியாக்கினார்கள். நீங்கள் இருவரும் இஸ்லாமை மக்களுக்கு எளிமையாக்குங்கள் கடினமாக்காதீர்கள். நற்செய்தி நவிலுங்கள் வெறுப்பூட்டாதீர்கள். இணக்கமாக இருங்கள் பிணங்கிக் கொள்ளாதீர்கள் என நபி (ஸல்) அழகிய அறிவுரை கூறி யனுப்பினார்கள்.

மட்டக்களப்பு தமிழகத்தில் புதிரெடுத்தலும் புதிருண்ணலும்

கு.சண்முகம்
வந்தாறுமூலை

நல்வகை நிலவளமும் நீர்வளமும் மலிந்து கிடக்கும் மட்டக்களப்புத் தமிழகத்தில் பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்கள் இன்றும் அர்த்தம் உள்ளவையாகவே வழக்கிலுள்ளன. அறிவியலும் நாகரீகமும் நாளுக்குநாள் அரங்கேறு வீறு நடைபோட்டாலும் இப்பிரதேசத்தில் வேரூன்றி நிலைத்து நிற்கும் மரபுகள், மக்கள் வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதவையாகவே உள்ளன. இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் கைக்கொண்டு வரும் பண்பாட்டு விழுமியங்கள் இன்றுவரை அவர்களால் பேணிப்பாதுகாக்கப் பட்டு வருவது விசேட அம்சமாகும். தமது வாழ்வியலில் இடம்பெறும் மரணச்சடங்கு, திருமண நிகழ்வு, பூப்புநீராட்டு விழா, மருங்கை, காதுகுத்துதல் முதலான சடங்குகளுடன் தமது தொழிலோடு சம்பந்தப்பட்ட மரபு சார்ந்த விடயங்களையும் கைக்கொண்டு வருகின்றனர். இதனடிப்படையில் மட்டக்களப்பு தமிழர் பாரம்பரியத்தில் புதிரெடுத்தல் புதிருண்ணல் என்ற விடயமும் முக்கியமானது.

காலபோக வேளாண்மை அறுவடை நிறைவு பெற்றதும் முன்மாரி வேளாண்மைச் செய்கைக்காக விவசாயிகள் தயாராகுவர். நல்லநாள் முகூர்த்தம் பார்த்து பூமிப்பிரவேசம் செய்து, கச்சான் காற்றிலும் கொடிய வெயிலிலும் வரண்டு கிடக்கும் வயல் வெளிகளில் காணப்படும் புதர்களையும் புற்களையும் எரித்து துப்பரவு செய்வர். இவ்வாறு செய்துவிட்டு தலைமழை பெய்யும் வரை காத்திருப்பர். ஆவணி, புரட்டாதி மாதங்களில் மழை தொடங்க வேண்டும். இவ்வாறு வான்மழை பெய்து நிலம் நன்றாக ஊறியதும் இளம்புல் தழைக்கத் தொடங்கும். இந்த வேளையில் நிலையெடுப்பு எனப்படும் முதலாவது உழவு இடம்பெறும். முற்காலத்திலும் தற்காலத்தில் அரிதாகவும் மரக்கலப்பை, மாடு என்பன உழவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் பெரும்பாலும் உழவு இயந்திரத்தினால் உழும் நடைமுறையே காணப்படுகின்றது.

இவ்வாறு வரம்பு கட்டுதல், வயலின் மத்தியில் வாடிக்குடில் வைத்தல் ஆகிய ஆரம்ப வேலைகள் இடம்பெறும். நீரோடும் வாய்க்கால்களும் துப்பரவு செய்யப்படும். வரம்புக்கட்டு உறுதியாக இருக்கும்போதுதான் மழை நீரை வயலுக்குள் தேக்கி வைக்க முடியும். வேலை செய்து களைப்புற்றிருக்கும் வேளை இளைப்பாறுவதற்கும் தமது விவசாய உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்குமே வயலின் மத்தியில் வாடி அமைக்கப்படும்.

வரம்பு கட்டி முடிந்ததும் மழை பெய்து நிலம் நன்கு ஊறியதும் இரண்டாவது உழவு உழப்படும். மழைநீர் போதியளவு கிடைக்குமாயின் தரவைக்குள் நீரைத் தேக்கி புல் பூண்டுகளை அழுகி உக்கலடையச் செய்வர். வயல் நிலம் நன்கு புளித்ததும் நீரை வெளியேற்றி விட்டு விதைப்பதற்கு முடிவு செய்வர். மழைநீர் போதாமலிருந்தாலும் புழுதி விதைப்பு விதைக்க முற்படுவர். நல்லநாள் காலம் பார்த்து நாளுக்கு விதைவிதைப்பு இடம்பெறும். இதனை விதைப்புச் சடக்கு எனக் கூறுவர்.

சில வேளைகளில் பருவமழை பொய்த்து விடுவதும் உண்டு. இவ்வேளையில் பருவமழையைப் பெய்ய வைப்பதற்காக பல்வேறு வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவர். பச்சை களிமண்ணால் பானை செய்து வயல் வெளியில் வைத்து மழைக்காவியம் பாடுதல், போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல் ஆகிய வழிபாடுகள் இடம்பெறும்.

கொம்பு முறித்தல் வழிபாடு பல படிமுறைகளைக் கொண்டது. வடசேரி, தென்சேரி என வாரம் பிரிந்து தமக்குள் ஒரு தலைவரைத் தெரிவு செய்தல், ஒவ்வொரு சேரிக்காரரும் காட்டில் சென்று தத்தமக்குரிய கொம்பை எடுத்து வந்து அதைப்பதப்படுத்தல், கொம்பு எழுந்தருளப் பண்ணுதல், ஏடகம் வளைத்தல், வாரம் பிரித்தல், கொம்பு முறித்தல், காளாஞ்சி வைத்தல் என்பவற்றுடன் இந்நிகழ்வு நிறைவு பெறும். சோனா மாரியாக மழையும் பொழிய விதைப்பு வேலையும் மும்முரமாக நடைபெறும். வந்தாறுமூலை, சித்தாண்டி ஆகிய விவசாயக் கிராமங்களில் பக்தி உணர்வுடன் நடைபெறும் இவ்வழிபாட்டு முறைகளை தற்காலத்திலும் காண முடியும்.

நெல் விதைத்து நாலாம் நாளில் நெல் முளைத்து வேகமாக வளரத் தொடங்கும். வயல் வெளி எங்கும் பச்சைப்பசேல் எனக்காட்சி தரும். நெல்லுடன் போட்டி போட்டு வளரும் களைகளைக் கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபடுவர். களை கட்டி முடிந்த பின் பசளையிடல், நோய் பீடைத்தாக்கங்களிலிருந்து பயிரைக் காப்பாற்றுதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவர். பூச்சி, புழுத்தாக்கத்திலிருந்து நெற்பயிரைக் காப்பாற்றுவதற்கு வயல்வரம்புகளில் சுடுவான் எனப்படும் தீப்பரண்களை அமைத்து தீமூட்டுவர். வேப்பம் குழை, ஆமணக்கம் குழை என்பவற்றை வயல்களில் கட்டுதல், விளக்கு வைத்தல் ஆகிய பாரம்பரிய பீடை கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளைப் பின்பற்றுவர். ஆனால் தற்காலத்தில் கொடிய விசமுள்ள இரசாயன மருந்துகளைப் பயன்படுத்தி தமது ஆரோக்கியத்தைக் கெடுப்பது கவலைக்குரிய விடயமாகும்.

பழங்காலத்தில் மூன்றரை, நான்கு மாத வயதுடைய நெல்லினங்கள் பயிரிடப்பட்டன. இவை வரட்சியைத் தாங்கி, நோய் பீடைகளை எதிர்த்து செழித்து வளர்ந்து அதிக விளைச்சலைத் தந்தது. முத்துக்கறுப்பன், கீனட்டி, பனங்கழியன், பொக்கழியன் என்பன அவற்றுள் சில நெல்லினங்களாகும். தற்காலத்தில் நோய் பீடைத்தாக்கத்தை எதிர்கொள்ள முடியாத குறைந்த வயதுடைய வரட்சியைத் தாக்க முடியாத நெல்லினங்கள் பயிரிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு செழித்து வளர்ந்துவரும் நெற்பயிர் குடலைப்பருவம் அடைவதற்கு தயார் ஆவதை இசாப்பருவம் என்று சொல்வர். இக்காலத்தில் நெற்பயிர் சற்று வெளிறிக் காணப்படும். இந்தப் பருவத்தில் போதுமான அளவு நீரும், பசளையும் அவசியமாகும். எவை இரண்டாவது தடவையாக பசளையிட்டு நீர் பாய்ச்சுவர். அப்போதுதான் அதிக நெல்மணிகளைக் கொண்ட கதிர்கள் வெளிவரும். இசாப்பருவம் தாண்டி ஒன்பது பத்து நாளில் குடலைப் பருவம் அடைந்து நெற்கதிர்கள் வெளிவரும். அங்கொன்றும் இங்கொன்றுமாக நெற்கதிர்கள் வெளிவருவதை அலவாக் கதிர் என அழைப்பர். நாலைந்து நாளில் ஏகமும் கதிராகி விடும். நெல்மணிகள் பால் பிடித்து காலாகும் வரை மழை பெய்யக்கூடாது என்றும் பனிப்பொழிவு இருக்க வேண்டும் என்றும் கூறுவர். மழைபெய்து வெள்ளம் வந்து தலைமூடினால் கதிர்கள் நீர்ச்சாவி அடித்து பதர்க் கதிராகவே காணப்படும். விளைச்சல் வெகுவாகக் குறைவடையும். இத்தகையக தடைகள் ஏற்படாது யாவும் நல்லபடி நடந்து நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமென இறைவனடி வேண்டி பல சடங்குகள் செய்வர்.

இப்படி நெற்பயிர்க் கதிராகிக் காயாகி பூவேழு, காயேழு, பழம் ஏழு நாள் என்ற கணக்கில் இருபத்தொரு நாளில் கதிர் காயாகிக் கனிந்து விளைந்துவிடும். விளைந்த நெல் வயல் மஞ்சள் துயில் விரித்தாற் போல் கலகல என்று காட்சியளிக்கும். தலை குனிந்து காற்றிலசையும் நெற்கதிர்கள் தற்பெருமை கொள்வதில்லை. தலை குனிந்து பணிந்து நமஸ்காரம் செய்ய வண்ணமே இருக்கும்.

புதிரெடுத்தல்

வயலில் விளைந்த நெல்லை நல்ல நாள் முகூர்த்தம் பார்த்து அறுவடை செய்து முதன்முதல் வீட்டுக்குக் கொண்டு வருவதையே புதிரெடுத்தல் என அழைக்கப்படும். புதிரெடுக்கும் இந்தப் பாரம்பரியம் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஊருக்கு ஊர் சிறு வேறுபாடுகளுடன் நடைபெறுகிறது.

புதிரெடுப்பதற்கு முகூர்த்தம் பார்த்து நல்ல நாள் நிர்ணயிக்கப்படும். நாள் தீர்மானிக்கப்பட்டதுடன் சாணமிட்டு மெழுகி வீட்டைத் தூய்மைப்படுத்துவர். வீடுவாசல் முழுவதும் மஞ்சள் நீர் தெளித்து குற்றம் குறை நீக்கப்படும். அதேபோல் வயலிலும் நல்ல நாள் பார்த்து நெற்கதிர்கள் அறுவடை செய்யப்பட்டு கற்றை கற்றையாக கட்டப்படும். இதனைப் புதிர்க் கற்றை என்று சொல்வர். இவ்வாறு கட்டப்பட்ட கதிர்க்கற்றை அல்லது புதுநெல்லை கொண்டுவந்து வேலிக்கடப்படியில் நல்ல நேரம் வரும் வரை வைத்திருப்பர். கணவனும், மனைவியும் நீராடி தூய ஆடையணிந்து வீட்டுக்குள் பாய்விரித்து அதன்மேல் வெள்ளை விரித்து நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி வைத்திருப்பர்.

வீட்டுத்தலைவி புதுப்பெட்டியில் பழைய நெல், தங்கம், வெள்ளி, சில்லறை நாணயம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூ என்பவற்றை தவத்து வெள்ளைத் துணியால் மூடி, தலைக்கு மேல் வைத்து எடுத்துச் செல்ல கணவன் செம்பில் மஞ்சள் நீரை எடுத்துச் செல்வார். வேலிக்கடப்படிலை அடைந்ததும் தூப, தீபம் காட்டி இறைவனை வழிபட்டு சந்தனம், குங்குமம், திருநீறு சாற்றி, புதிய நெல்லை அல்லது கதிர்க்கற்றையை பெட்டிக்குள் பக்குவமாக வைத்து பயபக்தியோடு தலையில் சுமந்து கொண்டு வந்து வீட்டுக்குள் ஏற்கனவே விரிக்கப்பட்டிருக்கும் பாயில் வைத்து குடும்பத்தினர் எல்லோரும் வழிபடுவர். காலம் முழுவதும் தமது இல்லத்தில் செல்வம் கொழிக்க வேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்வர்.

போடிமார் என்பது அதிகளவு நெல் வாயல்களுக்கு சொந்தக்காரரைக் குறிக்கும். பெரும் விவசாயக் கிராமங்களில் அந்த ஊரில் இருக்கும் பிரசித்தி பெற்ற ஆலயநிர்வாகமே புதிரெடுக்கும் நாளைக் குறிக்கும். அந்த ஆலயத்திற்கு புதிர் கொண்டு வந்த பின்பே ஏனையோர் புதிரெடுக்கும் வழக்கம் உண்டு.

மட்டக்களப்பு தமிழகத்தில் உள்ள பல பெரிய பிரச்சித்தி பெற்ற ஆலயங்களுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல் சொந்தமாக உண்டு. இந்த வயல்கள் வருடம்தோறும் குத்தகைக்கு கொடுக்கப்படும். குத்தகைக்கு வயல் எடுப்பவர்களில் கூடுதலான வயலைக் குத்தகைக்கு எடுத்தவர் புதிருக்கு என ஒதுக்கப்பட்ட மூன்று அல்லது ஐந்து ஏக்கர் வயலை செய்கை பண்ணி அந்த வயலில் விளையும் நெல்லை அறுவடை செய்து, புதிரெடுப்பதற்கு வழங்க வேண்டும் என்பது நியதி. பொதுவாக தைப்பூச நாளன்று புதிரெடுப்பதற்கு ஏதுவாக வயல் செய்கை பண்ணப்பட்டு அறுவடை செய்யப்படும். புதிர் எடுப்பது தொடர்பாக ஊர்மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கப்படும். இவ்வறிவிப்பை ஏற்றுக் கொண்டு மக்கள் புதிரெடுக்கத் தயாராகுவர்.

புதிரெடுக்கும் நாளன்று மேளதாள வாத்தியங்கள் சகிதம், கோயில் குருக்களுடன் வயலுக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகள் செய்து மாட்டு வண்டில்களில் நெல் மூட்டைகளையும் உப்படிக்கட்டுகளையும் ஏற்றிக் கொண்டு மங்கல வாத்தியங்கள் முழங்க அடியார்கள் புடைசூழ கோலாகலமாக புதிரெடுத்து வந்து, பூசை வழிபாடுகளுடன் கோயிலுக்குள் கொண்டு சென்று வைக்கப்படும். அங்கிருந்து ஊரில் உள்ள சிறிய ஆலயங்களுக்கு நேரில் சென்று புதிர் வழங்கப்படும். ஊர்மக்களும் நீராடித் தூய ஆடையணிந்த ஒருதட்டில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூ என்பவற்றுடன் பழையநெல்லையும் எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று கொடுத்து விட்டு பயபக்தியோடு வாங்கிவந்து வீட்டுக்குள் வைப்பர்.

அன்றைய தினமே புதுநெல்லைக் காயவைத்து குற்றி அரிசியாக்கி பொங்கிப் படைத்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்வர். அன்றைய தினமே சிறிய ஆலயங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படும்.

புதிரெடுத்தலில் மற்றுமொரு பாரம்பரிய நடைமுறையும் உண்டு. போடிமாரும் ஏனைய சிறியளவில் விவசாயம் செய்வோரும் அறுவடை செய்த புதுநெல்லை கோட்டை கட்டி மேளதாள வாத்தியங்களுடன் காத்தடியில் காவிக் கொண்டுவந்து வீட்டுக்குள் வைப்பர். புதிர்க்கோட்டை என்பது வைக்கோலைத் துப்பரவு செய்து அதில் நெல்லைச் சொரிந்து உருளை வடிவில் வைக்கால் புரியினால் கட்டி தயார் செய்வதாகும். இவ்வாறு கொண்டு வரப்படும் புதிர்க்கோட்டை அடுத்தவருடம் புதிர் எடுக்கும் வரை சுவாமி அறையிலே கட்டித் தொங்கவிடப்படும்.

புதிருண்ணல்

புதிரெடுக்கும் நிகழ்வு எவ்வளவு பக்தி உணர்வோடு மேற்கொள்ளப்படுகின்றதோ, அதேபோல்தான் புதிருண்ணும் பாரம்பரியமும் முக்கியமானதாகும். புதிருண்ணல் என்பது வானத்து மழையை நம்பி செய்கை பண்ணி புதுவருடத்தில் முதன்முதலாக அறுவடை செய்து அந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி சோறும் கறியும் சமைத்து சுற்றம் சூழ நல்ல நாள் பார்த்து உண்பதாகும்.

புதிருண்பதற்கான நல்லநாள் நேரம் தீர்மானிக்கப்பட்டபின் புதுப்பாயில் பச்சை நெல்லும் புழுங்கல் நெல்லும் காயவிடப்படும். காய்ந்த நெல்லை அயலவர், சுற்றதாதருடன் உரலில் குற்றி அரிசியாக்கி எடுப்பார். புதிருண்பதற்கு முதல்நாள் பச்சை அரிசியை நீரில் ஊற வைத்து மாவிடித்து வறுத்து வைத்துக் கொள்வர்.

புதிருண்ணும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு சுற்றத்தாருக்கும், அயலவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும். புதிருண்ணும் நாளன்று அனைவரும் ஒன்று கூடுவது. சமூக உறவுக்கு எடுத்துக்காட்டாகும்.

புதிருண்ணும் நாளன்று சுபநேரத்தில் நீராடித் தூயஆடையணிந்து வீட்டுத் தலைவி சுத்தமான புதுப்பானையில் தண்ணீரெடுத்து உலை வைத்து பதமாக சோறு சமைப்பார். வீட்டுத் தலைவன் முற்றத்தில் அடுப்பு மூட்டி புதுப்பானையில் புதிர்ப்பொங்கல் பொங்குவார்.

அரிசி மாவும், சர்க்கரை, பயறு, தேங்காய்ப்பால் அல்லது பசும்பால் சேர்த்து கூழ்காய்ச்சுவர். புத்தரிசிமாவில் பலகாரம், முறுக்கு, வாரப்பம், மோதகம், கொழுக்கட்டை என்பனவும் சமைக்கப்படும். புதிருண்பதற்காக மச்சம், மாமிசம் இல்லாத விசேட கறிவகைகளும் தயார் செய்யப்படும்.

சுரக்காய், கத்தரிக்காய், வெள்ளைக்கறி, பலாக்காய், கீரைச்சுண்டல், வாழைக்காய், கத்தரிக்காய் பொரியல், வெண்டிக்காய் குழம்பு முதலான கறிவகைகளும் எருமைத் தயிர், பாயாசம், வடை முதலானவைகளும் சமைக்கப்படும்.

சமையல் யாவும் முடிவடைந்தபின் வீட்டுத்தலைவி தூயநீராடி, தூயஆடை அணிந்து விளக்கிற்கு சோறுகூட்டுவார். வீட்டுக்குள் நிறைகுடத்திற்கு அருகில் எரிந்து கொண்டிருக்கும் குத்து விளக்கில் மூன்று அல்லது ஐந்து திரிபோட்டு தீபமேற்றி வாழைப்பழம், புதிர்ச்சோறு, பால் என்பவற்றைப் பிசைந்து மூன்று முறை விளக்கைச் சுற்றி தீபங்களில் வைப்பார். எஞ்சி இருக்கும் கலவையை எடுத்துக் கொண்டுபோய் அடுப்பை மூன்றுமுறை சுற்றி அடுப்பில் போடுவார்.

அதன்பின் பாய்விரித்து அதன்மேல் வெள்ளை விரித்து அனைவரையும் அமரச் செய்து வாழை இலைபோட்டு நீர்தெளித்து முதலில் கணவனுக்கும் தொடர்ந்து ஏனையோருக்கும் முதலில் கறியுடன் உணவு பரிமாறப்பட்டு இறுதியாக கூழ், தயிர், பலகாரம், வாழைப்பழம் என்பவற்றுடன் புதிருண்பர். இவ்வாறு செய்யும்போது சமூக உறவு விருத்தியடைவதுடன் தமது பாரம்பரியமும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவது முக்கிய விடயமாகும்.

இரவு வேளையில் தமது குலதெய்வத்திற்கு புதிர்ப்பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடுவோரும் உண்டு. பூசைப் பொருட்களுடன் புத்தரிசியை ஆலயங்களில் அர்ப்பணித்து வழிபடுவோரும் உண்டு.

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட டயகம சந்திரிகாமம் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டட திறப்பு விழா பாடசாலை அதிபர் என்.கருணாநிதி தலைமையில் இடம்பெற்றது. மேற்படி புதிய கட்டிட தொகுதியை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், கோட்டம் 3ற்கான கல்வி பணிப்பாளர் வடிவேல் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

படம்: க.கிஷாந்தன்

அரசாங்கத்தின் மூலம் 260 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட யட்டியாந்தோட்டை ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆரம்ப பிரிவு பாடசாலையின் இரண்டு மாடி கட்டிடத்தொகுதி திறந்து வைக்கப்பட்டது.மேற்படி பாடசாலையில் 350 மாணவர்கள் கல்வி கற்பதோடு 12 ஆசிரியர்கள் சேவையாற்றுகிறனர். சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் மொழியிலான ஆரம்பம் பிரிவு பாடசாலைகளில் யட்டியாந்தோட்டை ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆரம்ப பிரிவு பாடசாலை சிறந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

படம்: இரத்தினபுரி நிருபர்

துரித கிராமிய வசந்தம்-2020 திட்டத்தின் மூலம் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர்களான கௌரவ நவ்பர்,கௌரவ பைரூஸ் ஆகியோரின் வேண்டுகோளுக்கினங்க வெள்ளைமணல் வட்டாரத்துக்கு உட்பட்ட 13 விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், 1ல்வி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினருமான கௌரள இம்றான் மகரூப் அவர்களும் பட்டினமும் சூழலும் இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி நியாஸ், சாதிக் ஆசிரியர், பிரதேச ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

படம்: மூதூர் நிருபர்

மூதூர் ஆலிம் நகர், ஜின்னா நகர் ஜும்ஆப் பள்ளியை மையப்படுத்தி, கிராமத்தில் கல்வி ரீதியான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள அல் - மதார் பாலர் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான முன்பள்ளி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எச்.எம். ஹாரிஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகள், பெற்றோர்கள், பொதுமக்கள், பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

படம்: எம்.எஸ்.எம்.ஸாகிர்

வத்தளை ஹூனுபிடிய கவிதாயினி ரிம்ஸா டீன் எழுதிய 'மொழிபெயர்க்கப்படாத மௌனம்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் சஞ்சிகை ஆசிரியர் திரு.அமீன் தலைமையில் ஹூனுபிடிய ஸாஹிரா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும்,தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக முன்னேற்ற இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதித் தலைவரும்,முன்னால் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி ஜெமீல் ஆகியோர் கலந்து கொண்டார்.

படம்: காத்தான்குடி நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.